# உதயன்




www.onlineuthayan.com

62 பக்கங்கள் சுடர் 28 கதிர் 020 வள்ளுவர் ஆண்டு 2043 மார்கழி 01 ஞாயிற்றுக்கிழமை (16/12/2012) UTHAYAN - A Lively National Tamil Daily விலை ரூபா: 30.00

# ஐ.நாவை சமாளிக்கவே கூட்டமைப்புடன் பேச்சு

## அரசைச் சாடுகிறார் விநாயகமூர்த்தி எம்.பி.

யாழ்ப்பாணம், டிசெம்பர் 16

எதிர்வரும் மார்ச் மாதம் ஜெனிவாவில் நடைபெறவுள்ள கூட்டத் தொடரில் ஐ.நாவைச் சமாளிப்பதற்காகவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் மீண்டும் பேச்சை ஆரம்பிக்க அவசரப்படுகிறார் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ.

கூட்டமைப்புடன் பேச்சை ஆரம்பித்துள்ளோம் என்று கூறி ஜெனிவாவில் தப்பிக்க வழிதேடுகிறது இலங்கை அரசு. இவ்வாறு குற்றஞ்சாட்டியுள்ளார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் அப்பாத்துரை விநாயகமூர்த்தி.

**தமிழ் மக்களின் சாதாரண பிரச்சினைகள் கூட இன்னும் அரசினால் தீர்க்கப்படாமல் உள்ளன. இந்த நிலையில் அரசுடன் தொடர்ந்து பேசி என்னபயன் கிடைக்கப் போகிறது.**



யாழ்ப்பாணத்தில் தனது அலுவலகத்தில் நேற்று நடத்திய செய்தியாளர் மாநாட்டிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

ஜெனிவாவில் எதிர்வரும் மார்ச் மாதம் நடைபெறவுள்ள கூட்டத் தொடரில் ஐ.நா. சபையையும் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாள

பார்க்க பக்கம் 4

# இந்திய மீனவர்களின் அத்துமீறலால் பதற்றம்

## கோத்தபாய கூறுகிறார்

கொழும்பு, டிசெ.16

தென்னிந்திய மீனவர்களின் அத்துமீறல் நாட்டில் பதற்றத்தை தோற்றுவிக்கின்றது. இந்த அத்துமீறல் நடவடிக்கைகள் இந்திய - இலங்கை அரசுகள் எதிர் கொள்ள வேண்டிய பிரச்சினை என்று பாதுகாப்பு அமைச்சின் செயலர்ளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

காலியில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே பாதுகாப்பு செயலாளர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஒரு நாட்டின் எல்லையை மீறிப்போய் மீன் பிடித்தல், கடற்றொழிலாளர்களின் வாழ்வாதாரத்துக்கு கேடாகவும், கடற்றொழில் செய்யும் சமூகத்தினிடையே பதற்றத்தை தோற்றுவிப்பதாகவும் உள்ளது.

தென்னிந்தியாவிலிருந்து பெருந்தொகையான மீன் பிடிப் படகுகள் இலங்கைக் கடலில்மீன்பிடிப்பது,இலங்கை - இந்திய அரசுகள் எதிர் கொள்ளும் பிரச்சினையாக உள்ளது.

இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு இரண்டு நாட்டு அரசுகளும் பல நடவடிக்கைகளை எடுத்துள்ளன. ஆனால்,

பார்க்க பக்கம் 4

# சுயாதீனக்குழுவில் நம்பிக்கையில்லை

## ஐ.தே.கட்சி கூறுகிறது

கொழும்பு, டிசெ. 16

பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கவுக்கு எதிரான குற்றப்பிரேரணையை விசாரிப்பதற்கு உள்நாட்டு நீதியரசர்கள் தலைமையில் நியமிக்கப்படும் சுயாதீனக் குழுவில் எங்களுக்கு நம்பிக்கையில்லை. பொதுநலவாய சபையின் நீதியரசர்கள் குழுவை தவிர இதற்கு வேறு மாற்று ஏற்பாடுகள் எதுவுமே இல்லை என்று பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக்கட்சி தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் அந்தக் கட்சியின் பொதுச்செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான திஸ்ஸ அத்தநாயக்க மேலும் தெரிவிக்கையில்,

குற்றப்பிரேரணையை விசாரிப்பதற்காக உள்நாட்டு நீதியரசர்கள் தலைமையில் நியமிக்கப்படும் சுயாதீன குழு மீது எங்களுக்கு நம்பிக்கையில்லை.

அதனால், பொதுநலவாயச் சபையின் சிரேஷ்ட நீதியரசர்கள் மூவர் அடங்கிய குழுவின் ஊடாக பிரதம நீதியர

பார்க்க பக்கம் 4

# மாணவர் மீதான தாக்குதலால் யாழ்ப்பாணத்தில் பதற்ற நிலை

## நோர்வேத் தூதுவர் அதிருப்தி

**பல்கலையில் இடம்பெற்ற சம்பவங்கள், தொடர்பில் அதிக கவனம் செலுத்தி வருகின்றோம். இது தொடர்பில் யாழ். மாவட்ட அரச அதிபரிடம் நேரடியாக எமது அதிருப்தியை தெரிவித்துள்ளோம்.**



கொழும்பு, நவ. 16

யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலால் யாழ்ப்பாணத்தில் பற்றமான நிலை ஏற்பட்டுள்ளதாக இலங்கைக்கான நோர்வேத் தூதுவர் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் தனது அதிருப்தியை வெளியிட்டுள்ளார்.

வடக்குக்கான பயணத்தை கடந்த 12 ஆம் திகதி மேற்கொண்ட, இலங்கைக்கான நோர்வேத் தூதுவர் கிரீட் லொட்சன் யாழ்ப்பாணத்துக்கும் வந்திருந்தார்.

இதன்போது யாழ்ப்பாணத்தில் யாழ். மாவட்ட அரச அதிபர் மற்றும் யாழ். பல்கலைக்கழக நிர்வாகத்

பார்க்க பக்கம் 4

# 10 ரூபாவால் பெற்றோல் விலை உயர்வு

கொழும்பு, டிசெ. 16

இலங்கைப் பெற்றோலிய கூட்டுத்தாபனம் மற்றும் லங்கா இந்தியன் ஒயில் நிறுவனம் ஆகியன பெற்றோலின் விலையை 10 ரூபாவினால் அதிகரித்துள்ளன. இந்த விலை அதிகரிப்பு நேற்று முதல் நடை

பார்க்க பக்கம் 4

# அரசுடன் இணைந்து நடிக்கிறது ஐ.தே.க.

## சாடுகிறது ஜே.வி.பி.

கொழும்பு, டிசெ. 16

பிரதம நீதியரசருக்கு எதிரான குற்றப் பிரேரணை சமர்பிக்கப்பட்டத்தில் இருந்து ஐக்கிய தேசியக் கட்சியின் நடவடிக்கைகள் ஏற்றுக் கொள்ளக் கூடியனவாக இல்லை. இலங்கை அரசுக்கு ஆதரவளிக்கும் வகையிலேயே ஐ.தே.க செயற்படுவதாக மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி) குற்றம் சாட்டியுள்ளது.

இது தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் அனுர குமார திஸாநாயக்க வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது :

நாம் எந்தவொரு காரணத்துக்காகவும் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து செயற்படப் போவதில்லை. பிரதம நீதியரசருக்கு எதிரான குற்றப் பிரேரணை சமர்ப்பிக்கப்பட்ட ஆரம்பம் முதல் ஐக்கிய தேசியக் கட்சியின் நடவடிக்கைகள் ஏற்றுக்கொள்ளக் கூடிய வகையில் அமையவில்லை.

இதனால் ஐக்கிய தேசியக் கட்சிக்குத் தேவையான வகையில் பேச்சு நடத்தத் தயா

பார்க்க பக்கம் 4

# புதிய நீதியரசரை வரவேற்பதில்லை

## சட்டத்தரணிகள் கூட்டத்தில் தீர்மானம்

கொழும்பு, டிசெ. 16

குற்றப் பிரேரணை மூலம் பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கவைப் பதவி விலக்குவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அவ்வாறு அவர் பதவி விலக்கப்பட்டு புதிதாக பிரதம நீதியரசர் ஒருவர் நியமிக்கப்பட்டால் அவருக்கு வரவேற்பு அளிப்பதில்லை என்ற முக்கிய தீர்மானம் உட்பட 3 தீர்மானங்கள் நேற்று நிறைவேற்றப்பட்டுள்ளதாக சட்டதரணிகள் சங்கத் தலைவர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று சனிக்கிழமை சட்டத்தரணிகள் சங்கத்தின் விசேட பொதுக்கூட்டம் இடம்பெற்றது.

இந்தப் பொதுக்கூட்டத்தில் மூன்று தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

குற்றப்பிரேரணையின் மூலமாகப் பிரதம நீதியரசர் கலாநிதி ஷிராணி பண்டாரநாயக்கவை பதவி விலக்குவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அவ்வாறு அவர் பதவிவிலக்கப்பட்டுப் புதிய ஒருவர் பிரதம நீதியரசராக நியமிக்கப்பட்டால் அவருக்கு உத்தியோகபூர்வமான வரவேற்பு அளிப்பதில்லை எனவும், பிரதம நீதியரசர் தொடர்பிலான நாடாளுமன்ற தெரிவுக்குழுவின் அறிக்கை சுயாதீன குழுவால் ஆராயப்படும் என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கடந்த 11 ஆம் திகதி

பார்க்க பக்கம் 4

# புலிச் சந்தேக நபர்களை நாடுகடத்துகிறது கனடா

கொழும்பு, டிசெ. 16

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கச் சந்தேக நபர்களை அமெரிக்காவுக்கு நாடு கடத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக கனடா கூறியுள்ளது.

கனேடிய அரசின் இந்தச் செயற்பாடு கனடா வாழ் தமிழர்களிடையே, அதிருப்தியை தோற்றுவித்துள்ளது.

இலங்கையில் பிறந்து கனடாவில் வசித்துவரும் பிரதீபன் நடராஜா மற்றும் சுரேஸ் ஸ்ரீஸ்கந்தராஜா இருவரும் தமிழீழ விடுதலைப்

பார்க்க பக்கம் 4

# 13 ஆவது அரசமைப்புத் திருத்தத்தை நீக்குவதற்கு இடமளிக்க மாட்டோம்

## அடித்துக் கூறுகிறார் அமைச்சர் டியூ

கொழும்பு, டிசெ. 16

அரசமைப்பில் 13 ஆவது திருத்தச் சட்டத்தை இல்லாதொழிக்க ஒரு போதும் இடமளிக்கமாட்டோம். நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை வாக்குகளைப் பெறவும் விடமாட்டோம் என சிரேஷ்ட அமைச்சர் டி.யூ.குணசேகர உதயனுக்குத் தெரிவித்தார்.

நாட்டில் புரையோடிப் போயுள்ள இனப்பிரச்சினைக்கு நிரந்தரமான ஒரு அரசியல் தீர்வு காணப்படுவதற்கு முன் 13 ஆவது திருத்தச் சட்டத்தை நீக்குவதைப் பற்றியோ அல்லது திருத்துவது தொடர்பாகவோ சிந்திக்கக் கூடாது என

பார்க்க பக்கம் 4

மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.........

குகன் ஸ்ரோர்ஸ் (பிறைவேற்) லிமிட்டட்



★ மலிவான விலையில் மளிகைப் பொருள்களைப் பெற்றுக் கொள்ள.......

★ நத்தார்,புதுவருடத்தை முன்னிட்டு கேக்கிற்குரிய பொருள்களை மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம்.



★ வீட்டுக்குரிய பலசரக்கு பொருள்களை மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள......

★ தைப்பொங்கலுக்குரிய பொருள்களை மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

மொத்தமாக கொள்வனவு செய்யும் வர்த்தகர்களுக்கு விஷேட கழிவு வழங்கப்படும்.

குகன் ஸ்ரோர்ஸ் (பிறைவேற்) லிமிட்டட்

இல. 180,(380) ஆஸ்பத்திரி வீதி,யாழ்ப்பாணம்.

T.P.021 221 9469 சு.செ.ஆ.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சட்டத்தரணிகள் சங்கத்தின் பிரதித் தலைவர் பதவி விலகல்

கொழும்பு, டிசெ. 16

சட்டத்தரணிகள் சங்கத்தின் புதிய தீர்மானங்கள் பலவந்தமாக நிறைவேற்றப்பட்டுள்ளதாக தெரிவித்து, சங்கத்தின் பிரதித்தலைவர் அனோமா குணத்திலக்க தனது பதவியிலிருந்து நேற்று விலகினார்.

சட்டத்தரணிகள் சங்கத்தின் விசேட பொதுக்கூட்டம், உயர்நீதிமன்றில் உள்ள சட்டத்தரணிகள் சங்க கேட்போர்கூடத்தில் நேற்று மாலை நடைபெற்றது. பலத்த குழப்பத்தின் மத்தியில் நடைபெற்ற இந்தப் பொதுக் கூட்டத்தில், பிரதம நீதியரசருக்கு எதிரான குற்றப் பிரேரணை தொடர்பில் வாதப் பிரதிவாதங்கள் இடம்பெற்றன. இறுதியில் மூன்று தீர்மானங்கள் சட்டத்தரணிகள் சங்கத்தினால் நிறைவேற்றப்பட்டன.

குறித்த தீர்மானங்கள் பொதுக்கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்படவில்லை என்றும் சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர் விஜயதாஸ ராஜபக்ஷவினால் பலவந்தமாக நிறைவேற்றப்பட்டதாகவும் சுட்டிக்காட்டிய அனோமா குணத்திலக்க அதனால் தான் சங்கத்தின் பிரதித் தலைவர் பதவியிலிருந்து விலகுவதாக அறிவித்தார். (த-5)



யாழ்.நகரில் வைக்கப்பட்டிருந்த ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் 'கட் அவுட்' மீது நேற்றுமுன்தினம்இரவு கழிவு ஒயில் இனந்தெரியாதோரால் ஊற்றப்பட்டுள்ளது.

## எலும்புக்கூடுகள் குறித்து தீவிர விசாரணை

மாத்தளை வைத்திய சாலையின் வளாகத்திலிருந்து 49 மனித எலும்புக்கூடுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ள போதிலும் அவை எப்போது புதைக்கப்பட்டன என்பது தொடர்பில் விசாரணைகள் இடம்பெற்று வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

மாத்தளை வைத்திய சாலையில் புதிய கட்டமொன்றை அமைப்பதற்காகக் கடந்த இரண்டு வாரத்துக்கு முன்னர் பைக்கோ இயந்திரத்தின் உதவியுடன் பெரிய குழிகள் வெட்டப்பட்டன. அதன்போதே மேற்படி மனித எலும்புக் கூடுகள் மீட்கப்பட்டன.

இந்த நிலையில், இந்தப் புதைகுழி தொடர்பில் பல சந்தேகங்கள் எழுப்பப்பட்டுள்ளதால் அதிகாரிகள் தமது விசனத்தை வெளிப்படுத்தியுள்ளனர்.

1971 ஆம் ஆண்டு பயங்கரவாதத்தின் போது கொல்லப்பட்டவர்கள் அல்லது 1987 மற்றும் 1989 ஆம் ஆண்டுக் காலப்பகுதிகளில் நிலவிய பயங்கரவாத நடவடிக்கைளின் போது கொல்லப்பட்டவர்களின் எலும்புக் கூடுகளாக இவை இருக்கலாம் என சந்தேகம் தெரிவிக்கப்படுகிறது. (த -5)

## கலைவிழா

வலி. மேற்கு முன்பள்ளி ஆசிரியர் சங்கம் நடத்தும் 'சிறார்களின் வருடாந்தக் கலைவிழா நிகழ்வு' இன்று ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது.

வட்டுக்கோட்டை திருஞானசம்பந்தமூர்த்தி வித்தியாலய ஆரம்பப்பிரிவில் இன்று காலை 9 மணிக்கு வலி. மேற்கு முன்பள்ளி ஆசிரியர் சங்கத் தலைவர் க.சிவரஞ்சினி தலைமையில் இந்த நிகழ்வு நடைபெறும். இதில் பிரதம விருந்தினராக தேசிய கல்வியியற் கல்லூரி விரிவுரையாளர் பா.தனபாலனும், கௌரவ விருந்தினர்களாக வலி. மேற்கு பிரதேச செயலர் ஏ.சோதிநாதனும், வலிகாமம் வலய முன்பள்ளி உதவிக்கல்விப் பணிப்பாளர் சி.குகநேசனும் கலந்துகொள்வர். முன்பள்ளிச்சிறார்களின் பல்வேறுபட்ட கலைநிகழ்வுகளும் அரங்கேற உள்ளன. (ங)

# வரவு – செலவுத் திட்ட விவாதத்தில் பங்குபற்றாத அமைச்சர்களுக்கு ஆப்பு

கொழும்பு, டிசெ. 16

வரவு - செலவுத்திட்ட விவாதத்தின்போது விவாதத்தில் கலந்து கொள்ளாமல் 'டிமிக்கி' விட்ட அமைச்சர்களும் ஆளும் கட்சி உறுப்பினர்களும் வகையாக மாட்டிக் கொண்டனர். இவர்களிடம் விளக்கம் கோரப்பட்டுள்ளது.

2013 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்ட விவாதங்கள் இந்த முறை 24 நாள்கள் நடைபெற்றது. இந்த 24 நாள்களும் ஆக எட்டு அமைச்சர்கள் மட்டுமே விவாதங்களில் கலந்து கொண்டுள்ளனர்.

ஜனாதிபதி நாடாளுமன்றத்தில் 2013 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தைச் சமர்ப்பிப்பதற்கு முன் ஆளும் கட்சி உறுப்பினர்கள் அனைவரும் தினசரி விவாதங்களில் கலந்து கொள்ள வேண்டும் என அறிவித்திருந்தார்.

அமைச்சரவையில் சிரேஷ்ட அமைச்சர்கள் உட்பட60 அமைச்சரவை அந்தஸ்து அமைச்சர்கள் இருக்கின்றனர். இவர்களில் பலர் ஜனாதிபதியின் பணிப்புரையை உதாசீனம் செய்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஜனாதிபதியின் அறிவித்தல்களுக்கு அமைய சபாநாயகரின் பணிப்புரையின் பேரில் வரவு - செலவுத் திட்ட விவாத நாள்களில் விசேட கணிப்பீடுகள் மேற்கொள்ளப்பட்டன.

> 2013 ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்ட விவாதங்கள் இந்த முறை 24 நாள்கள் நடைபெற்றது. ஆக எட்டு அமைச்சர்கள் மட்டுமே விவாதங்களில் கலந்து கொண்டுள்ளனர்.

இந்தப் புள்ளிவிவரங்களின்படி 8 அமைச்சர்கள் 24 நாள்களும், 4 அமைச்சர்கள் 23 நாள்களும், ஒரு அமைச்சர் 9 நாள்களும், ஒரு அமைச்சர் எட்டு நாள்களும் விவாதங்களில் கலந்துகொண்டதாகப் பதிவாகியுள்ளது. ஒரு அமைச்சர் தன்து அமைச்சு தொடர்பான விவாதத்தில் கூடக்கலந்துகொள்ளவில்லை என்று தெரியவருகிறது.

இதேபோன்று ஆளும் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலரும் விவாதங்களில் கலந்துகொள்ளத் தவறி உள்ளனர். அமைச்சர்களினதும் ஆளும் கட்சி உறுப்பினர்களதும் ஒழுங்கீனம் தொடர்பாக விளக்கம் கோரப்பட்டுள்ளதாகப் பெயர் குறிப்பிட விரும்பாத அமைச்சர் ஒருவர் கூறினார். (த-2)

## கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு ஒருவர் கொலை

தங்காலை, டிசெ. 16

தலையில் கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு நேற்றுக் காலை ஒருவர் கொலை செய்யப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவத்தில் தங்காலை, கபுகோணவல்ல பிரதேசத்தைச் சேர்ந்த 44 வயதான நபர் ஒருவரே உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவரின் மரண விசாரணைகள் தங்காலை நீதிவான் முன்னிலையில் இடம்பெற்றுள்ளது. சடலம் பிரேத பரிசோதனைகளுக்காக அம்பாந்தோட்டை வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

சந்தேகநபர் இதுவரை இனங்காணப்படாத நிலையில் தங்காலை பொலிஸார் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (த-5)

## பிறந்தநாள் கொண்டாட்டத்தில் துப்பாக்கிச் சூடு: ஒருவர் சாவு!

ராஜாங்கனை பிரதேசத்திலுள்ள வீடொன்றில் பிறந்தநாள் கொண்டாட்டத்தின் போது மோட்டார் சைக்கிளில் வந்த ஆயுததாரிகள் துப்பாக்கி பிரயோகம் மேற்கொண்டதில் ஒருவர் உயிரிழந்தார்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் நள்ளிரவு இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

ராஜங்கனைப் பிரதேசத்திலுள்ள வீடொன்றில் பெரும் எடுப்பில் பிறந்தநாள் கொண்டாட்டம் இடம்பெற்றுக் கொண்டிருந்தது. அந்த வேளையில் திடீரென அங்கு மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் துப்பாக்கி பிரயோகம் மேற்கொண்டனர்.

இந்த துப்பாக்கிச்சூட்டுக்கு இலக்காகி சம்பவ இடத்திலேயே 35 வயதுடைய நபர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

சம்பவம் குறித்து தம்புத்தேகம பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (த-5)

## வானத்தில் இருந்து விழுந்த மர்மப்பொருள் தீப்பற்றியது

வானிலிருந்து வீழ்ந்த மர்மப் பொருளால் பலாமரம் தீப்பிடித்து எரிந்துள்ளதாக தேசிய வானியல் ஆய்வு நிலையம் அறிவித்துள்ளது.

வலஸ்முல்ல தெற்கு கனுமுல்தெனியப் பகுதியிலேயே நேற்றுமுன்தினம் இரவு இந்தச் சம்பவம் இடம்பெற்றதாக வானியல் ஆய்வு நிலையம் குறிப்பிட்டுள்ளது.

வானத்திலிருந்து பாரிய வெளிச்சத்துடன் பூமியை நோக்கி நேற்றுமுன்தினம் இரவு 9 மணியளவில் மிக வேகமாக வந்த மர்மப்பொருளொன்று பலாமரத்தில் சுமார் 25 அடி உயரத்தில்.விழுந்து சாம்பலாகியுள்ளது. அந்த மரமும் 25 அடி உயரத்தில் தீப்பிடித்து எரிந்துள்ளது.

இதனையடுத்து பிரதேசவாசிகள் பாதுகாப்பான இடங்களை நோக்கி இடம்பெயர்ந்துள்ளனர். திம்புலாகல மற்றும் கம்பஹா பிரதேசங்களிலும் இவ்வாறான மர்மப் பொருள்கள் கடந்த வியாழக்கிழமை விழுந்தமை குறிப்பிடத்தக்கதாகும். (த-5)

## கடல் எல்லைகள் குறித்து கூட்டு ஒப்பந்தம் விரைவில்

கடல் எல்லை தொடர்பிலான அதிகாரப் பிரச்சினைக்கு தீர்வுகாண்பதற்கு ஏதுவாக இலங்கை, இந்தியா மற்றும் மாலைத்தீவு ஆகிய நாடுகளுக்கு இடையில் புரிந்துணர்வு கூட்டு ஒப்பந்தம் ஒன்று விரைவில் கைச்சாத்திடப்படவுள்ளது.

இந்த ஒப்பந்த அறிவித்தலைப் பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ விடுத்துள்ளார்.

சட்டவிரோத நடவடிக்கைகளை தடுப்பதற்காக இலங்கை, இந்தியா மற்றும் மாலைத்தீவு ஆகிய நாடுகள் ஒன்றிணைந்து செயற்பட்டு வருவதாகச் சுட்டிக்காட்டிய அவர், ஒப்பந்தம் கைச்சாத்திடுவது குறித்து அமைச்சு மட்டத்திலும் தொழிநுட்ப மட்டத்திலும் பேச்சுக்கள் நடந்து முடிந்துள்ளன என்றும் கூறினார்.

வலய மட்டத்தில் எதிர்கொண்டுவரும் கடல் எல்லை அதிகார பிரச்சினைக்கு தீர்வு காண, இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏதுவாக அமையும் என்று அவர் மேலும் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

## 9 மாதங்களில் மட்டும் 2,704 பேர் தற்கொலை

கடந்த ஒன்பது மாதங்களில் மட்டும் 2 ஆயிரத்து 704 பேர் இலங்கையில் தற்கொலை செய்து கொண்டுள்ளதாகவும் இதில் அதிகமானோர் ஆண்கள் என்றும் பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

இலங்கையில் கடந்த மார்ச் மாதம் முதல் நவம்பர் மாதம் வரை 2 ஆயிரத்து 704 பேர் தற்கொலை செய்து கொண்டுள்ளனர். இவர்களில் 2 ஆயிரத்து 92 பேர் ஆண்களும், 612 பேர் பெண்களும் காணப்படுகின்றனர்.

தற்கொலைச் சம்பவங்களில் தூக்கில் தொங்குதல் மற்றும் விஷம் அருந்தி உயிர் நீத்தல் போன்ற சம்பவங்கள் அதிகமாகப் பதிவாகியுள்ளது. குறிப்பாக கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் இவ்வருடம் தற்கொலை செய்வோர் வீதம் அதிகரித்துள்ளது.

இவர்களின் அதிகமானோர் மன அழுத்தம், சமூகத்தொடர்பின்மை மற்றும் அறியாமை போன்ற காரணிகளாலேயே தற்கொலை செய்துகொண்டுள்ளதாகப் பொலிஸ் தலைமையகம் குறிப்பிட்டுள்ளது. (த-5)

## சட்டவிரோத மது விற்பனை நான்கு பேருக்கு அபராதம்

சட்டவிரோதமாக மது விற்பனை செய்த நான்கு பேருக்கு நீதிமன்றினால் 50 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. இந்தக் குற்றச்சாட்டில் நான்குபேர் கைது செய்யப்பட்டுள்ளனர். ஒருவருக்கு பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

வடமராட்சி செம்பியன் பற்றைச் சேர்ந்த ஒருவருக்கு சட்டவிரோதமாகச் சாராயம் விற்ற குற்றத்துக்காக 25 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. உடுத்துறை வடக்கில் கசிப்பு வைத்திருந்த குற்றத்துக்காக 5 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

ஊர்காவற்றுறையில் சட்டவிரோதமாக சாராய விற்பனை செய்த குற்றத்துக்காக 10 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. உடுத்துறை தாளையடியில் சட்டவிரோதமாக சாராயம் வைத்திருந்த குற்றத்துக்காக அதே இடத்தைச் சேர்ந்த ஒருவருக்கு 10 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

இது தவிர மணற்காடு, குடத்தனை, கோப்பாய், யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் சட்டவிரோதமாக மது வைத்திருந்த, மதுவிற்பனை செய்த குற்றச்சாட்டில் நான்கு பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். இதே குற்றச்சாட்டில் கொடிகாமத்தைச் சேர்ந்த ஒருவருக்கு நீதிமன்றம் பிடியாணை பிறப்பித்துள்ளது.

ஊர்காவற்றுறை பொலிஸ் பிரிவில் சட்டவிரோதமாக மணல் ஏற்றிச் சென்றவரை குற்றவாளியாக இனங்கண்ட ஊர்காவற்றுறை நீதிமன்றம் 50 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டுள்ளது. (த-4)

# பட்டத்துடன் பறந்த சிறுவன் படுகாயம்

### பருத்தித்துறையில் சம்பவம்

யாழ்ப்பாணம், டிசெ. 16

பட்டத்துடன் பறந்த சிறுவன் கீழே விழுந்து படுகாயமடைந்தான். இந்தச் சம்பவம் நேற்றுப் பிற்பகல் பருத்தித்துறையில் இடம்பெற்றது. பருத்தித்துறைப் பகுதியைச் சேர்ந்த பி.விஷ்ணுகாந் (வயது-14) என்ற சிறுவனே படுகாயமடைந்தவராவார்.

பருத்தித்துறைப் பகுதியில் பாரம்பரியமாக ஆளளவுப் பட்டம் கட்டிப் பறக்கவிடுவது வழமை. நேற்று இவ்வாறு தனது நண்பர்களுடன் பட்டம் பறக்கவிட்டுக் கொண்டிருந்த இந்தச் சிறுவனை பட்டம் இழுத்துச் சென்றது.

பதற்றமடைந்த சிறுவன் தவறி நிலத்தில் விழுந்து படுகாயமடைந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது. சிறுவன் தற்போது கால்முறிந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறான். (16)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கில் சுற்றுலாத்துறை பின்தங்க முக்கிய காரணம் மிதிவெடி அபாயமே

## சுற்றுலாத்துறை ஒன்றியத் தலைவர் கூறுகிறார்

யாழ்ப்பாணம், டிசெ.16

வட மாகாணத்தில் சுற்றுலாத்துறை பின்தங்கிய நிலையில் இருப்பதற்கு ஓமந்தை சோதனைச் சாவடி மற்றும் போர் நடை பெற்ற பல இடங்களில் மிதிவெடி அபாயம் இருப்பதே முக்கிய காரணிகள் ஆகும்.




வடமாகாண சுற்றுலாத் துறை ஒன்றியத் தலைவர் ரி.வை.சுந்தரேசன் இவ்வாறு கூறினார்.

வடமாகாண சுற்றுலாத் துறை ஒன்றியத்தின் எதிர் கால நடவடிக்கைகளை விவரிக்கும் செய்தியாளர் மாநாடு நேற்று ஒன்றிய அலுவலகத்தில் நடைபெற்றது. இதன் போது ஒன்றியச் செயற்திட்டங்கள் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கையில் சுற்றுலாத் துறையில் வடமாகாணம் பின்தங்கிய நிலையில் உள்ளது. இதனால் சுற்றுலாத் துறையில் கிடைக்கக் கூடிய நன்மைகளைப் பெறமுடியாத நிலையில் உள்ளனர். வடமாகாணத்தில் சுற்றுலாத்துறைக்கு உகந்த இடங்கள் அதிகமாக உள்ளன. அவற்றை மீள அபிவிருத்தி செய்ய வேண்டிய தேவையுள்ளது.

சுற்றுலாத்துறையை பிரபல்யப்படுத்தக் கூடிய விடயங்களை உள்ளடக்கியதாக எதிர்வரும் ஜனவரி மாதம் புதிய இணையத்தளம் ஆரம்பிக்கப்படவுள்ளது.

அத்துடன் பயிற்சிப் பட்டறைகளை நடத்தி படிப்படியாகத் துறையை அபிவிருத்தி செய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

யாழ்ப்பாணத்தில் சுற்றுலாத்துறை சம்பந்தப்பட்ட தொழில் புரிபவர்கள் இல்லாத காரணத்தால் தொழில் பயிற்சிகளை வழங்கி தொழில் முயற்சியாளர்களை உருவாக்க வேண்டியுள்ளது.

குறிப்பாக சுற்றுலாத் துறையை அபிவிருத்தி செய்வதற்கு முதலீட்டாளர்கள் தேவையாகவுள்ளனர். தரகர்கள் எவரும் இல்லாமல் நேரடியாக ஒன்றியத்துடன் தொடர்பு கொண்டு அங்கத்தவர்களாக இணையலாம்.

வடமாகாணத்தில் ஒன்று, இரண்டு நட்சத்திர விடுதிகள் மட்டுமே உள்ளன. இவற்றைப் பயன்படுத்தி விடுதிகளைத் தரம் உயர்த்தவும் முடியும்

வடமாகாணத்தில் தற்போது இராணுவச் சோதனைச் சாவடி, மிதிவெடி அபாயம் எனக் குறிப்பிடப்பட்டுள்ள இடங்கள் சுற்றுலாத்துறையினர் வருகை தருவதற்கு இடையூறாக உள்ளன.

இதனைவிட பலாலி விமான நிலையம், ரயில் நிலையங்கள் என்பவற்றை மக்கள் பயன்பாட்டுக்கு கொண்டு வர வேண்டியுள்ளது.

இது தொடர்பான கோரிக்கைகளும் முன்வைக்கப்பட்டுள்ளன.

சுற்றுப்புறச் சூழலை மெருகூட்டல் செய்வதன் மூலமே சுற்றுலாப் பயணிகளின் வருகையை அதிகரிக்கச் செய்ய முடியும்.

அத்துடன் சுற்றுலாப் பயணிகள் பயன்பாட்டுக்கு வடமாகாணத்தில் உற்பத்தி செய்யப்படும் உற்பத்திப் பொருள்களைச் சந்தைப் படுத்தவும் ஒன்றியம் நடவடிக்கை எடுக்கவுள்ளது.- என்றார். (ம-14)

# கடலுணவு பதனிடும் பிரிவை அமைச்சர் பார்வையிட்டார்



குருநகரில் அமைந்துள்ள ''லங்கா நொதேர்ன்'' ஐஸ் உற்பத்தி நிறுவனத்தின் கடலுணவு பதனிடும் பிரிவை நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணம் வருகை தந்த கடற்றொழில் நீரியல்வளத்துறை அமைச்சர் ராஜித சேனரட்ண பார்வையிட்டார். இந்த நிறுவனத்தின் கடலுணவு பதனிடும் பிரிவில் நூற்றுக்கும் மேற்பட்ட பெண்கள் பணியாற்றி வருகின்றனர்.

இந்த நிறுவனத்தில் பதப்படுத்தப்படும் கடலுணவுகள் பொதி செய்யப்பட்டு ஏற்றுமதி செய்யப்படுகின்றன. அமைச்சர் தலைமையிலான குழுவினர் கடலுணவு பதனிடும் நடவடிக்கைகளை பார்வையிட்டனர். நண்டு, கணவாய், இறால் ஆகியனவே இங்கு அதிக அளவில் பதனிடப்பட்டு வருகின்றன. (த-13-17)

# நயினாதீவுக்கு புதிய பஸ்

யாழ்ப்பாணம், டிசெ. 16

நயினாதீவு மக்களின் போக்குவரத்து வசதிக்காக புதிய பஸ் ஒன்றை வடபிராந்திய போக்குவரத்து சபை அங்கு அனுப்பி வைத்துள்ளது.

இந்தப் பிரதேசத்தில் ஏற்கனவே சேவையில் ஈடுபட்ட பஸ் திடீர் திடீரெனப் பழுதடைவதால் மக்களின் போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளது. இதனை அடுத்து விசேட கடற்பாதை சேவையூடாக புதிய பஸ் ஒன்று அங்கு அனுப்பிவைக்கப்பட்டது.

இந்த புதிய பஸ் தற்போது நயினாதீவில் சேவையில் ஈடுபட்டு வருகின்றது. (ம-17)

# 144 பேர் கடந்த வாரம் யாழ். மாவட்டத்தில் கைது!

## குற்றச் செயல்களுடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தில்

யாழ்ப்பாணம், டிசெ. 16

பல்வேறு குற்றச் செயல்களுடன் தொடர்புடையவர்கள் என்ற குற்றச்சாட்டில் யாழ். மாவட்டத்தில் கடந்தவாரம் 144 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று யாழ். பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் எம்.எம்.ஜிப்றி தெரிவித்தார்.

அவரது அலுவலகத்தில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற வாராந்த ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு :-

பிறருக்கு அடித்துக் காயப்படுத்திய குற்றச்சாட்டில் யாழ். மாவட்டத்தில் 33 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். இவ்வாறு அதிகளவாகக் கோப்பாய் பொலிஸ் பிரிவில் 10 பேரும், சுன்னாகம் பொலிஸ் பிரிவில் 6 பேரும், வட்டுக்கோட்டைப் பொலிஸ் பிரிவில் 5 பேரும் கைதுசெய்யப்பட்டுள்ளனர். நீதிமன்றங்களினால் பிடியாணை பிறப்பிக்கப்பட்ட குற்றச்சாட்டில் 40 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மதுபோதையில் கலகம் விளைவித்த குற்றச்சாட்டில் 14 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். களவு மற்றும் வீடு உடைத்துக் களவு எடுத்த குற்றச்சாட்டில் 13 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். சந்தேகத்தின் பேரில் 15 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

வீதி விபத்தை ஏற்படுத்தும் வகையில் செயற்பட்ட குற்றச்சாட்டில் 6 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். சூழல் மாசு உட்பட டெங்கு பரவும் வகையில் சூழலை வைத்திருந்த குற்றச்சாட்டில் 8 பேரும் பணமோசடி செய்த குற்றச்சாட்டில் 3 பேரும் பொது இடத்தில் மது அருந்திய குற்றச்சாட்டில் 4 பேரும் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

ஒவ்வொருவரும் குற்றச்சாட்டுக்களின் தன்மைக்கு ஏற்ப பிணையில் விடுவிக்கப்பட்டும், விளக்கமறியலில் வைக்கப்பட்டும் உள்ளனர். - என்றார். (த-4-86)

# மட்டுவிலில் நடமாடும் சேவை

சாவகச்சேரி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மட்டுவில் நுணாவில் பிரதேசங்களைச் சேர்ந்த மக்களுக்கான நடமாடும் சேவை நேற்று சாவகச்சேரி பொலிஸாரால் மட்டுவில் வளர்மதி விளையாட்டுக் கழக மைதானத்தில் நடத்தப்பட்டது.

நடமாடும்சேவையில் தொலைந்த வாகன சாரதி அனுமதிப் பத்திரம், தேசிய அடையாள அட்டை, பிறப்புச் சான்றிதழ் தொடர்பான முறைப்பாடுகள் ஏற்றுக் கொள்ளப்பட்டு உடனுக்குடன் அறிக்கைகள் வழங்கப்பட்டன.

ஆயுள்வேத வைத்திய சிகிச்சையும் நடைபெற்று மருந்துகள் வழங்கப்பட்டன.

தொலைந்த காணி உறுதிகள் பெற்றுக் கொடுப்பதற்காக பதிவுகளும் மேற்கொள்ளப்பட்டன.

சாவகச்சேரி பொலிஸ் நிலைய தலைமை அலுவலக பொலிஸ் அத்தியட்சகர் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பொலிஸ் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

மட்டுவில்கிழக்கு, மட்டுவில் மத்தி, தென் மட்டுவில், கைதடி நுணாவில், மட்டுவில் வடக்கு, நுணாவில் மேற்கு உட்பட கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த பெருமளவு மக்கள் கலந்து கொண்டனர். (ம-9)

# நிகழ்வுகள் இன்று

**கூட்டம்**

நெல்லியடி கட்டைவேலி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் பொதுச் சபைக் கூட்டம் இன்று காலை சங்க அலுவலகத்தில் தலைவர் செ.செல்வராசா தலைமையில் நடைபெறும். இந்த நிகழ்வில் யாழ். பிராந் திய கூட்டுறவு உதவி ஆணையாளர் வி.கே.அருந்தவநாதன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். (ம-8)

* * *

யாழ். மாவட்ட சிக்கன கடனுதவி கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தின் பருத்தித்துறை பிராந்திய சபைக் கூட்டம் பிற்பகல் 3.30 மணிக்கு புலோலி சதாவதானி கதிரவேற்பிள்ளை சிக்கன கடனுதவி கூட்டுறவுச் சங்க மண்டபத்தில் சங்கத்தலைவர் பா.இரகுநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது. (ம-14)

**நாவலர் ஜனன தினம்**

நாவற்குழி அறிவொளி மன்றத்தின் ஏற்பாட்டில் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரின் 190 ஆவது ஆண்டு ஜனன தினம் காலை 9 மணிக்கு அறநெறிப்பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (ம-14)

**கலைவிழா**

நல்லூர் முத்தமிழ் முன்பள்ளியின் கலைவிழா காலை 9 மணிக்கு நல்லூர் திவ்விய ஜீவன சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (ம-14)

**மருத்துவமுகாம்**

வடபிராந்திய சாயி நிறுவனத்தின் ஏற்பாட்டில் இலவச மருத்துவ முகாம் பண்டத்தரிப்பு சாந்தைக் கிராமத்தில் பிற்பகல் 2.30 மணிக்கு நடைபெறவுள்ளது. (ம-14)

**வெளியீட்டு விழா**

'இப்படியும்' கவிதை தொகுப்பு கவிதை நூல் வெளியீட்டு விழா பிற்பகல் 3.30 மணிக்கு புத்தூர் மேற்கு கலைமதி மக்கள் மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (ம-14)

**நூல் வெளியீடு**

யாழ்.மாநகர சபையின் ஏற்பாட்டில் ''மாநகர சபையின் மக்கள் பங்களிப்புடனான அபிவிருத்தித் திட்டம்'' எனும் நூல் வெளியீடு முற்பகல் 10 மணிக்கு கே.கே.எஸ்.வீதி, பூநாறி மரத்தடியில் அமைந்துள்ள செல்வமஹால் மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (ம-14)

**குருதிக் கொடை**

தேசிய சுகாதார வாரத்தை முன்னிட்டு குருதிக் கொடை நிகழ்வு காலை 9 மணி தொடக்கம் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் இடம்பெறும். சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவின் ஏற்பாட்டில் நடத்தப்படும் குருதிக் கொடை நிகழ்வில் தென்மராட்சி பிரதேச பொது அமைப்புகள் விளையாட்டுக் கழகங்கள், படையினர், பொலிஸார் ஆகியோர் பங்கு பற்றவுள்ளதாகவும் குருதிக் கொடை வழங்க விரும்புவோர் பங்கு பற்றுமாறும் ஒலிபெருக்கி மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-9)

**நீரிழிவு பரிசோதனை**

தேசிய சுகாதார வாரத்தை முன்னிட்டு சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையின் நீரிழிவுபரிசோதனை முகாம் இன்று கச்சாயில் நடைபெறவுள்ளது.

கச்சாய் அ.த.க. பாடசாலையில் நடைபெறும் நீரிழிவு பரிசோதனை முகாமில் வைத்தியசாலை பொது வைத்திய நிபுணர் வைத்தியக் கலாநிதி தி.ஸ்ரீகரன் தலைமையிலான குழுவினர் [illegible] விக்கப்பட்டது. (ம-9)

எல் பி ஃபினான்ஸ் லீசிங் வாரம்
உங்களுக்குத் தேவையான வாகனங்களை விசேட சலுகைகளுடன் லீசிங் மூலம் பெற்றுக் கொள்ளலாம்.
டிசம்பர் மாதம்
17,18,19,20,21
இலகுவாகப் பெற்று... சுகமாகப் பயணியுங்கள்...
★ சிறு தொழில்களுக்கு !
★ வியாபார முன்னேற்றத்திற்கு !
★ குடும்ப பிரயாணங்கள், வாடகை வசதிகளுக்கு !
இலவச
★ சிறு பிரயாணங்களுக்கு !
★ நேர்த்தியாக வேலைக்குச் செல்வதற்கு !
இலவச மிக்ஸி
மற்றும் அனைத்து லீசிங் வசதிகளுக்கும் மதிப்புள்ள பரிசுப் பொருட்கள்..............
உடனே அழையுங்கள்
வவுனியா - 0244 925 127/36
யாழ்ப்பாணம் - 0214 920 310/11
சுன்னாகம் - 0214 920 331/39
மானிப்பாய் - 0214 923 356/57
நெல்லியடி - 0214 923 358/59
சாவகச்சேரி - 0214 923 360/61
கிளிநொச்சி - 0214 923 362/63
L B FINANCE
எல் பீ ஃபினான்ஸ் பீ எல் சீ. இல.275/75, பேராசிரியர் ஸ்ரான்லி விஜேசுந்தர மாவத்தை, கொழும்பு 07.
www.lbfinance.com தொலைபேசி 011 4 521000

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியாவுக்கு வழங்கிய குதங்களை மீளப் பெறுகின்றது இலங்கை அரசு

கொழும்பு, டிசெ. 16

திருகோணமலையில் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடத்தில் இந்தியாவுக்கு நீண்ட கால குத்தகைக்கு வழங்கப்பட்ட எண்ணெக் குதங்களை மீளப் பெற்றுக் கொள்வதற்கு இலங்கை அரசு நடவடிக்கை எடுத்துள்ளது.

இந்தக் குதங்கள் அரச விதிமுறைகளுக்கு அமைவாக குத்தகைக்கு விடப்படவில்லை என்று தெரிவித்தே இதனை மீளப் பெறும் முயற்சியில் அரசு களமிறங்கியுள்ளது. இதற்குரிய அமைச்சரவை பத்திரங்கள் விரைவில் சமர்பிக்கப் படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2002 ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்த ஐ.தே.க அரசினால், சீனக் குடா எண்ணெய்க் குதங்கள் இந்திய அரசுத்துறை நிறுவனமான இந்தியன் எண்ணெய் கூட்டுத்தாபனத்துக்கு நீண்டகாலக் குத்தகைக்கு வழங்கப்பட்டது.

இது அரச நடைமுறைகளின் படி வழங்கப்படவில்லை என்று தற்போதைய அரசு தெரிவித்துள்ளது.

இந்திய நிறுவனம் குத்தகைக்கு எடுத்துள்ள 850 ஏக்கர் வளாகத்தில், தலா 12,100 மெற்றிக் தொன் கொள்ளளவு கொண்ட 99 எண்ணெய்க் குதங்கள் உள்ளன.

கேந்திர முக்கியத்துவம் மிக்க திருகோணமலைத் துறைமுகத்துடன் இணைந்துள்ள இது, மத்திய கிழக்குக்கும் சிங்கப்பூருக்கும் இடையில் அமைந்துள்ள மிகப்பெரிய எண்ணெய் குத வளாகமாகும். (த-5)

## பரீட்சை பொறுப்பதிகாரிகள் இருவர் இடைநிறுத்தம்

கொழும்பு, டிசெ. 16

ஜி.சி.ஈ. சாதாரணதர விடைத் தாள்களைப் பரீட்சை மத்திய நிலையத்துக்கு அனுப்புவதில் ஏற்பட்ட தாமதத்துக்கு காரணமான பொறுப்பதிகாரிகள் இருவர் அவர்களது பதவிகளிலிருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளதாகப் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் எம்.என்.ஜே.புஸ்பகுமார தெரிவித்துள்ளார்.

பிலியந்தலை பகுதி பரீட்சை நிலையமொன்றின் பொறுப்பதிகாரி மற்றும் உதவிப் பொறுப்பதிகாரியாகக் கடமையாற்றிய இருவரே அந்தப் பொறுப்பிலிருந்து நிறுத்தப்பட்டுள்ளனர்.

விடைத்தாள்களைச் சம்பந்தப்பட்ட மத்திய நிலையத்துக்கு அனுப்புவதில் ஏற்பட்ட தாமதம் காரணமாக இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

சாதாரண தரப் பரீட்சைக்கு சிங்கள மொழிமூலம் தோற்றியுள்ள மூன்று மாணவர்களின் விடைத் தாள்களை உரிய மத்திய நிலையத்துக்கு அனுப்பிவைப்பதில் தாமதம் நிலவியுள்ளது.

பரீட்சை நிலையப் பொறுப்பதிகாரி மற்றும் உதவி பொறுப்பதிகாரி ஆகியோரின் தாமதத்தால் கடந்த 12 ஆம் திகதி இடம்பெற்ற பரீட்சைக்குரிய இந்த மூன்று மாணவர்களினதும் விடைத்தாள்களும் நேற்றுமுன்தினமே மத்திய நிலையத்துக்கு கிடைக்கப்பெற்றுள்ளன.

எனினும் இந்த தாமதம் காரணமாக மாணவர்களுக்கு எந்தவித பாதிப்பும் ஏற்படவில்லை என்று பரீட்சைகள் ஆணையாளர் மேலும் தெரிவித்துள்ளார். (த -5)

## அமெரிக்க துப்பாக்கிச் சூட்டில் குழந்தைகள் உட்பட 27 பேர் சாவு

கொழும்பு, டிசெ. 16

அமெரிக்காவில் ஆரம்பப் பாடசாலை ஒன்றுக்குள் புகுந்த இனந்தெரியாத நபர் மேற் கொண்ட துப்பாக்கிச் சூட்டில் 20 மாணவர்கள் உட்பட 27 பேர் உயிரிழந்தனர். பொலிஸாரால் பதிலுக்கு மேற்கொண்ட தாக்குதலில் மர்மநபரும் உயிரிழந்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்காவில் கனெக்டிகட் நகரில் உள்ள சான்டி ஹக் ஆரம்பப் பாடசாலையிலேயே இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்றுள்ளது.

5 வயது முதல் 10 வயது வரையிலான மாணவர்கள் பயிலும் பாடசாலையிலேயே இந்த துப்பாக்கிப் பிரயோகம் இடம்பெற்றது.

சம்பவம் அறிந்து பெற்றோர்கள் பாடசாலைக்குள் வந்தமையினால் அங்கு பெரும் பதற்றம் ஏற்பட்டது.

சம்பவத்துக்கு அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா இரங்கல் தெரிவித்துள்ளார். அதில் இந்த சம்பவம் மிகவும் மோசமானது. உயிரிழந்த குழந்தைகளின் பெற்றோருக்கு ஆறுதல் கூற வார்த்தைகள் இல்லை. குழந்தைகள் பலியான சம்பவம் தனது இதயத்தை சுக்குநூறாக உடைந்து விட்டதாக அவர் தெரிவித்துள்ளார். ( ஐ-5)

## விபத்தில் ஒருவர் படுகாயம்



தென்மராட்சி, டிசெ.16

காஸ் சிலிண்டர்களை ஏற்றி வந்த வாகனமும் ஹைஏஸ் வாகனமும் மோதியதில் ஹைஏஸ் சாரதி படுகாயமடைந்தார். இவர் உடனடியாக சாவகச்சேரி ஆதார வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டு அவசர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வருகிறார்.

இந்தச் சம்பவம் நேற்று இரவு 7.30 மணியளவில் நுணாவில் 19 ஆம் கட்டைப் பகுதியில் இடம் பெற்றது.

இந்தச் சம்பவத்தில் நுணாவில் மேற்கைச் சேர்ந்த சிவராஜா ரமணன் (வயது -31) என்பவரே படுகாயமடைந்தார்.

யாழ்ப்பாணத்தில் இருந்து காஸ் சிலிண்டர்களை ஏற்றிச் சென்ற வாகனத்துடன் நுணாவில் பகுதியில் இருந்து வந்த ஹைஏஸ் மோதி இந்த விபத்து இடம்பெற்றது.

எனினும் சிலிண்டர்களில் பாதிப்பு ஏற்படாததால் இழப்புக்கள் தவிர்க்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் சாவகச்சேரி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

(ஐ-16-9)

## டொலரில் தங்கியிருப்பவர்களே நாட்டைக் காட்டிக்கொடுக்கின்றனர்

கொழும்பு, டிசெ. 16

ஜெனிவா மனித உரிமைகள் மாநாட்டில் நாட்டுக்கு எதிராக நடவடிக்கை மேற்கொண்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் சில பிரதிநிதிகள் பிரதம நீதியரசருக்கு ஆதரவு தெரிவிக்கின்றனர் என்று அமெரிக்க விகாரையின் பிரதம சங்கநாயக்கர் தெரிவித்துள்ளார்.

இவர்கள் நாட்டில் பலதரப்பட்ட பிரச்சினைகளை உருவாக்கி வருகின்றனர். டொலரில் தங்கியிருப்பதே இவர்களின் முக்கிய நோக்கமாகும்.

இந்த பிரதிநிதிகள் தாய்நாடு சம்பந்தமாக எத்தகைய உணர்வுகளையும் கொண்டிராது நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றனர். ஜனநாயக நாடாளுமன்றம் செயல்படும் ஒரு நாட்டில் சட்டத்துறைக்கு முக்கிய இடம் உண்டு என்றும் அவர் குறிப்பிட்டார். (ஐ-5)

## சுயாதீனக்...

தொடர்ச்சி
முன்பக்கத்திலிருந்து...

சர் ஷிராணி பண்டாரநாயக்கவுக்கு எதிரான குற்றப்பிரேரணை விசாரிக்கப்படவேண்டும் - என்றார்.

( த-5)

## இந்திய...

தொடர்ச்சி
முன்பக்கத்திலிருந்து...

இன்னும் இந்த பிரச்சினை தொடர்ந்து காணப்படுகிறது.

வடக்கு, கிழக்கு தமிழ் கடற்றொழிலாளர்களின் பொருளாதாரத்தில் இதன் தாக்கம் பெரிதாக உள்ளது என்றார். ( த -5)

## புதிய...

தொடர்ச்சி
முன்பக்கத்திலிருந்து...

அறிவித்துள்ளார். அதன் பிரகாரம் குற்றப்பிரேரணையை மீள் பரிசீலனை செய்யுமாறு ஜனாதிபதிக்கு வலியுறுத்தும் எனவும்,

மீள்பரிசீலனை செய்யப்பட்ட பின்னரும் விசாரணைகள் தொடருமாயின் அந்த விசாரணைகளை நியாயமான முறையில் நடத்துவதற்கான சட்ட ஒழுங்குகளை மேற்கொள்ளுமாறு ஜனாதிபதி மற்றும் சபாநாயகரை கோருவது எனவும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டதாக அவர் மேலும் தெரிவித்தார்.

( த-5)

## மாணவர்...

தொடர்ச்சி
முன்பக்கத்திலிருந்து...

திணர், யாழ். ஆயர் ஆகியோரை அவர் சந்தித்துக் கலந்துரையாடியிருந்தார்.

பின்னர் கொழும்பு திரும்பிய நோர்வேத் தூதுவர் அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளார்.

அதில், யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் இடம்பெற்ற சம்பவங்கள், தொடர்பில் அதிக கவனம் செலுத்தி வருகின்றோம். இது தொடர்பில் யாழ். மாவட்ட அரச அதிபரிடம் நேரடியாக எமது அதிருப்தியை தெரிவித்துள்ளோம்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்கள் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் யாழ்ப்பாணத்தில் பதற்றநிலையை தோற்றுவித்துள்ளது என்று அவர் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.(த-5)

## புலிச்...

தொடர்ச்சி
முன்பக்கத்திலிருந்து...

புலிகள் இயக்கத்துக்காக கறுப்புச் சந்தையில் ஆயுதக் கொள்வனவு செய்ததாகக் குற்றம்சாட்டப்பட்டு கைது செய்யப்பட்டிருந்தனர். இவர்கள் மீதான விசாரணை முடிவில் இவர்களை அமெரிக்காவுக்கு நாடு கடத்த கனேடிய அரசு நடவடிக்கை எடுத்துள்ளது.

கனடாவின் இந்தத் திட்டத்துக்கு கனேடிய உயர் நீதிமன்றமும் அனுமதியளித்துள்ளது.

கனேடிய அரசு, இலங்கையில் நடைபெறும் பொதுநலவாய நாடுகளின் மாநாட்டில் பங்கெடுப்பதா இல்லையா என்று ஆலோசித்து வருகின்ற அதேவேளை விடுதலைப் புலிச் சந்தேக நபர்களை நாடு கடத்தும் செயற்பாட்டில் ஈடுபட்டமை, கனேடிய தமிழர்களிடத்தில் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது.

( த-5)

## அரசுடன்...

தொடர்ச்சி
முன்பக்கத்திலிருந்து...

ரில்லை. குற்றப் பிரேரணை நீதிமன்றத்துக்கும் அரசுக்கும் இடையிலான முரண்பாடு என்பதனை ஐக்கிய தேசியக் கட்சி மூடி மறைக்க முயற்சித்தது.

இந்த அரசுக்கு ஆதரவளிக்கும் வகையிலேயே ஐக்கிய தேசியக் கட்சி செயற்பட்டது. குற்றப் பிரேரணை தொடர்பிலான நடவடிக்கைகள் நாடாளுமன்றுக்கு மட்டும் வரையறுக்கப்பட வேண்டுமென கபடமாக ஐக்கிய தேசியக் கட்சி அறிவித்தது - என்றுள்ளது.

(த -5)

## ஐ.நாவை...

தொடர்ச்சி
முன்பக்கத்திலிருந்து...

ரையும் சமாளிப்பதற்காகவே கூட்டமைப்புடனான பேச்சை ஆரம்பிப்பதற்கு அவசரப்படுகிறது இலங்கை அரசு. ஜெனிவாவில் தனக்கு ஏற்படவுள்ள அழுத்தத்தை குறைத்துக் கொள்ள எண்ணுகிறது அரசு. அதற்காகத்தான் கூட்டமைப்புடனான இந்தப் பேச்சு நாடகம்.

அவசர அவசரமாக ஜனாதிபதி எம்மை பேச்சுக்கு அழைப்பதன் முக்கிய நோக்கம் இதுதான்.

வடக்கு, கிழக்கில் தற்போது நிலவும் இராணுவ ஆட்சி நீக்கப்பட்டு சிவில் நிர்வாகம் ஏற்படுத்தப்பட வேண்டும். அதனை நாம் தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றோம்.

வலி.வடக்கில் இருந்து இடம் பெயர்ந்த ஒரு இலட்சத்துக்கும் அதிகமான மக்களில் 28 ஆயிரம் பேர் வரை தற்காலிக முகாம்களிலேயே வசித்து வருகிறார்கள். அவர்களின் சொந்த இடங்கள் இராணுவத்தினர் வசம் உள்ளன. அதனை அவர்கள் விரைவில் விடுவிக்க வேண்டும். அங்கு மீளக்குடியமர்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாமைக்கு இராணுவத்தினரே காரணம்.

ஜனநாயக நாட்டில் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை நடத்துவதற்கு இடமுண்டு. அதனை அடக்குவதற்கு யாருக்கும் உரிமை கிடையாது.

தமிழ் மக்களின் சாதாரண பிரச்சினைகள் கூட இன்னும் அரசினால் தீர்க்கப்படாமல் உள்ளன. இந்நிலையில் அரசுடன் தொடர்ந்து பேசி என்னபலன் கிடைக்கப் போகிறது.- என்றார் விநாயக மூர்த்தி. (த-4)

## 13ஆவது...

தொடர்ச்சி
முன்பக்கத்திலிருந்து...

வும் அமைச்சர் டி.யூ.குணசேகர குறிப்பிட்டார்.

13 அவது திருத்தச் சட்டம் தொடர்பாக ஆளும் கட்சிக்குள் மாறுபட்ட அபிப்பிராயங்கள் நிலவுகின்றன.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் இதனை எதிர்ப்பதாகக் கூறி உள்ளபோதும் ஆளும் தரப்பின் பங்காளிகளான அமைச்சர் ரிஷாத் பதியுதீனும் அமைச்சர் அதாவுல்லாவும் மாற்றுக் கருத்தைக் கொண்டுள்ளனர்.

இப்படியான நிலையில் சிரேஷ்ட அமைச்சரான உங்களுடைய நிலைப்பாடு என்ன? என்று கேட்டபோது அமைச்சர் டி.யூ குணசேகர இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் [illegible] வது -

13 ஆவது திருத்தச்சட்டத்தில் பல குறைபாடுகள் இருக்கின்றன.

நிரந்தரமான தீர்வுக்கு இது வழி சமைக்காது.

ஆனால் நிரந்தரமான அரசியல் தீர்வு ஒன்றைக் காண்பதற்கு அடித்தளம் ஒன்றை இட்டுள்ளது 13 ஆவது திருத்தம். இதனைப் பின்பற்றி தீர்வு காண இடமுண்டு. எனவே நிரந்தரமான அரசியல் தீர்வு ஒன்றை ஏற்படுத்தும் வரை 13 ஆவது திருத்தச்சட்டத்தை இல்லாது ஒழிக்க முயற்சிக்கக் கூடாது. அமைச்சில் நானும் சில அமைச்சர்களும் ஜனாதிபதியை எதிர்த்து அதனைத் தெளிவாக விளக்கியுள்ளோம்.

அதேவேளை அரசமைப்பில் திருத்தம் ஒன்றைக் கொண்டு வரவேண்டுமானால் நீதிமன்றில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை யாவது அவசியம்.

அரசியல் தீர்வு ஒன்றைக் காண்பதற்கு முன் நாடாளுமன்றில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பெற இடமளிக்கமாட்டோம் - என்றார்.

(த-2)

## 10 ரூபாவால்...

தொடர்ச்சி
முன்பக்கத்திலிருந்து...

முறைக்கு வந்தது.

இதன் பிரகாரம் 90 ஒக்ரைன் பெற்றோல் லீற்றர் ஒன்றின் புதிய விலை 159 ரூபாவாகும்.

இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் நேற்று அதிகாலை நடைமுறைக்கு வரும் வகையில் பெற் றோல் விலை அதிகரிப்பை மேற்கொண்டது. அதனைத் தொடர்ந்து லங்கா இந்தியன் ஒயில் நிறுவனமும் (எல்.ஐ. ஓ.சி) நேற்று நள்ளிரவு முதல் பெற்றோல் விலையை அதிகரித்தது.( த-5-17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்

### திருமதி சிவயோகம் சண்முகராசா (ரூபி)



சரவணை கிழக்கைப் பிறப்பிடமாகவும், வவுனியா உக்கிளாங்குளத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிவயோகம் சண்முகராசா நேற்று (15.12.2012) சனிக் கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (17.12.2012) திங்கட்கிழமை மு.ப 10.00 மணியளவில் வவுனியாவில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று தட்சன்குளம் இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.
ரமேஸ் (வெற்றிலை வியாபாரி)

No.48, New Market,
Vavuniya.


# முல்லைத்தீவு கழகங்களுக்கு விளையாட்டு உபகரணங்கள்

யாழ்ப்பாணம், டிசெ.16

முல்லைத்தீவு மாவட்டத்துக்குக் கடந்த புதன்கிழமை சென்ற இலங்கைக்கான ஜேர்மன் தூதுவர் முல்லைத்தீவு மாவட்ட உதைபந்தாட்ட லீக்கில் அங்கம் வகிக்கும் விளையாட்டுக்கழகங்களுக்கு விளையாட்டு உபகரணங்களை வழங்கினார்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களுக்கான பயணத்தை மேற்கொண்ட ஜேர்மன் யங்கன் மொஹாட் கடந்த புதன்கிழமை முல்லைத்தீவுக்கு வருகை தந்தார்.


முல்லைத்தீவு மாவட்ட உதைபந்தாட்ட லீக்கின் உப தலைவர் டாக்டர் ஜெயக்குலராஜா தலைமையில் கரைத்துறைப்பற்று பிரதேச செயலக மைதானத்தில் விளையாட்டு உபகரணம் வழங்கும் நிகழ்வு இடம் பெற்றது.

இதில் முல்லைத்தீவு மாவட்ட உதைபந்தாட்ட லீக்கின் அங்கத்துவம் வகிக்கும் 20 விளையாட்டுக்கழகங்களுக்கு 50 ஆயிரம் ரூபா பெறுமதியான உதைபந்துகள் , மற்றும் காலணிகள் என்பன வழங்கப்பட்டன. இந்த நிகழ்வில் முல்லைத்தீவு மாவட்ட உதைபந்தாட்ட லீக்கின் நிர்வாக சபை உறுப்பினர்கள், மாவட்ட விளையாட்டுத்துறை அதிகாரி தனுராஜ் மற்றும் விளையாட்டுக்கழகங்களின் உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். (த-23)


## மரண அறிவித்தல்

### நவரெட்ணம் ஜீவரெட்ணம்(ஜீவா)

(யாழ். மாநகரசபை, பளைபச்சிலைப்பள்ளி பிரதேச சபை)



யாழ்ப்பாணம் கைலாசபிள்ளையார் கோயிலடியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட நவரெட்ணம் ஜீவரெட்ணம்(ஜீவா) நேற்று(15.12.2012) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நவரெட்ணம்-இராசம்மா தம்பதியரின் அன்பு மகனும், முருகையா-செல்லாச்சி தம்பதியரின் மருமகனும், மனோன்மணியின்(யாழ். வலயக் கல்வி அலுவலகம், பிரதம முகாமைத்துவ உதவியாளர்.) அன்புக் கணவரும், லக்ஷிநிவேத்தா(4 ஆம் வருட மாணவி, சித்தமருத்துவம். யாழ். பல்கலைக் கழகம்), தாக்ஷாயினி (தேசிய சேமிப்பு வங்கி, யாழ்.கிளை) ஆகியோரின் அன்புத் தந்தையும், உமாவதி(கனடா), விசாகரட்ணம்(பிரான்ஸ்), பஞ்சரட்ணம்(கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.12.2012) ஞாயிற்றுக்கிழமை பி.ப. 4.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனகிரியைக்காக செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.186, கோயில் வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்.



## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலை பழைய மாணவர் சங்க நிர்வாகசபை உறுப்பினரும், முன்னாள் உடற்கல்வி ஆசிரியரும், வலிகாமம் கல்வி வலய உடற்கல்விப் பணிப்பாளருமான மு.நடராஜா அவர்களின்

கனிஷ்ட புதல்வி

### சுஜானி நடராஜா

அவர்களின் அகாலமரணச் செய்தி கேட்டு துயரடைவதுடன், அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

மல்லாகம் மகாவித்தியாலயப் பாடசாலைச் சமூகம். (சி/2627)(9.14)


# இறுதி ஆட்டங்கள் இன்று

ஜனாதிபதி தங்கக்கிண்ணத்துக்கான யாழ்.மாவட்ட ரீதியிலான ஆண், பெண் இருபாலாருக்குமான கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் இறுதியாட்டங்கள் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் பன்னாலை கணேச விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெறவுள்ளன. ஆண்களுக்கான இரண்டு அரையிறுதியாட்டங்கள் முதலில் இடம்பெறவுள்ளன.


இதில் முதலாவது அரையிறுதியாட்டத்தில் ஆவரங்கால் மத்திய விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து அரியாலை ஐக்கிய விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது இரண்டாவது அரை இறுதியாட்டத்தில் பன்னாலை கணேச விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து மட்டுவில் ஐங்கரன் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.

அரையிறுதியாட்டத்தில் வெற்றி பெற்ற அணிகள் மாலை 6 மணியளவில் மின்னொளியில் இடம்பெறும் இறுதியாட்டத்தில் மோதவுள்ளன.

பெண்களுக்கான இறுதியாட்டத்தில் கோப்பாய் ஐக்கிய விளையாட்டுக்கழக அணியை எதிர்த்துக் காங்கேசன்துறை ஐக்கிய விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.


## லக்ஷ்மி இஞ்சினியரிங்

## Lukshmee Engineering



கணினி பழுதுபார்த்தல், வலையமைப்பு (Computer Repair, Net works, Computer Services)

*Computer Services - 350.00 * Windows Installation - 500.00
*Computer Repair - 500.00 * Software Installation - 100.00 (per one)

மின்இணைப்பு வேலைகள் (House & Industrial wiring)

*5APlug Point- 350.00 *Light Point - 350.00 *Fan Point -350.00
*15A Plug Point - 450.00 * D Box - 1500.00

மீளச்சுற்றுதல் (Rewinding Works)

பான், மோட்டார், கிறைண்டர், டைனமோ, ராண்ஸ்போமர்.

குழாய் பொருத்துதல் (Plumbing Works)

1 அடி – 30.00 தொடக்கம் 40.00

மின் ஒட்டுதல், கேற் ,கிறில், றஸ், றோலிங் சட்டர் வேலைகள் (Welding. Gate, Grill , Truss, Roller Shuter works)

கேற்–சாதாரணம் 10' – 25000.00 கிறில் – சதுரஅடிக்கு – 350.00
றோலிங் சட்டர் – சதுரஅடிக்கு– 525.00 றஸ் நீளஅடி – 1300.00

கடைச்சல் வேலைகள் (Lathe Works)

ஒவ்செற் அச்சு இயந்திரங்கள் பழுது பார்த்தலும் அதற்கான கடைச்சல் வேலைகளும் செய்து கொடுக்கப்படும்.

பேப்பர் கட்டர் கத்தி தீட்டிக்கொடுக்கப்படும். (இயந்திரம் மூலம்)

வாகன திருத்த வேலை (Vehicle Repair)

டீசல், பெற்றோல் வாகனங்கள் மற்றும், ஜெனறேற்றர்கள் திருத்தப்படும்.

TP.021 567 0256

105, இராஜ வீதி,
திருநெல்வேலி கிழக்கு,
யாழ்ப்பாணம்.



## மரண அறிவித்தல்

### திருமதி வீரசிங்கம் இராஜலக்சுமி



ஆலங்குழாய் சண்டிலிப்பாயைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி வீரசிங்கம் இராஜலக்சுமி நேற்று (15.12.2012) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சபாபதி – தங்கமுத்து தம்பதியரின் மகளும், காலஞ்சென்ற ஆறுமுகம் - வள்ளியம்பை தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற ஆறுமுகம் வீரசிங்கத்தின் அன்பு மனைவியும், வளர்மதி, கேதீஸ்வரி ஆகியோரின் அன்புத் தாயும், ரஞ்சன், சுரேஸ்வரன் ஆகியோரின் மாமியும், செந்தூரன், துளசிகா, ஆதித்ஜன், சர்மிலன், சிவானுஜா, தர்சிகன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.12.2012) ஞாயிற்றுக்கிழமை பி.ப 3.00 மணியளவில் இல.07, ஐயனார் கோயில் வீதி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்,என்னும் முகவரியில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினார், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.07, ஐயனார் கோயில் வீதி,
வண்ணார் பண்ணை,
யாழ்ப்பாணம்.

தகவல்:
கு.சுரேஸ்வரன் (மருமகன் கொமர்ஷல் வங்கி, யாழ்ப்பாணக்கிளை).
(28668)(3.14)



## HOTEL NOKIYA

வாடிக்கையாளர் நா சுவைத்திட புத்தம் புது பொலிவுடன் புதுமையான சுவைத் தேடலுடன்

மங்களகரமாக கடந்த 14.12.2012 வெள்ளிக்கிழமை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இன்றைய NOKIYA வின் SPECIAL

இந்தியன் மட்ன் றைஸ் அன் கறி



இன்னும் பல வகை உணவுகளுடன்

HOTEL NOKIYA

இல–110, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.

(26861)(9.14)



## கண்ணீர் அஞ்சலி

வலிகாமம் கல்வி வலய உடற்கல்விப் பணிப்பாளர் மு.நடராஜா அவர்களின் கனிஷ்ட புதல்வி

### சுஜானி நடராஜா

அவர்களின் அகாலமரணச் செய்திகேட்டு துயரடைவதுடன் அன்னாரது ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்

(வலிகாமம் உதைபந்தாட்ட லீக்கும் கழகங்களும்)



## கார் விற்பனைக்கு (Car for sale)



2012, Brand new, Montero Sport, Zero milage, Color - Quartz Brown metalic, Best Offer.

Contact - 0770853530

(சி/2628)(3.14)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர்க் காணிக்கை



யாழ்.மாவட்டச் செயலகத்தின் நிதிக் கிளையில் பிரதம பொது முகாமைத்துவ உதவியாளராகக் கடமையாற்றும்
ஐ.பரமேஸ்வரன்
அவர்களின் அன்புத் தந்தை
**குமாரசாமி ஐயாப்பிள்ளை**
அவர்கள் 14.12.2012 ஆம் திகதி இறைபதம் அடைந்ததையிட்டு எமது கண்ணீர் அஞ்சலியைத் தெரிவித்துக்கொள்வதுடன், அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

யாழ்.மாவட்டச் செயலக நலன்புரிக் கழகம்.

(சீ/2616)(7.5)

# மரண அறிவித்தல்கள்

## சாமிநாதர் வலன்ரைன் ஜெயரட்ணம்



மண்டைதீவைப் பிறப்பிடமாகவும், தற்போது கனடாவில் வசித்தவருமான சாமிநாதர் வலன்ரைன் ஜெயரட்ணம் 14.12. 2012 வெள்ளிக்கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மடுத்தீன் சாமிநாதர் - லூர்துமேரி பிரான்சிஸ்கம்மா (நல்லம்மா - கனடா) தம்பதியரின் அன்பு மகனும், இமாக்குலேற்யோகமதியின் அருமைக் கணவரும், றுபீனா, யூலினா ஆகியோரின் அன்புத் தந்தையும், பற்றிக்யோசவ் (ஜெயம் - மண்டைதீவு), ஜெயக்குமார் (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரனும், தேவசகாயம் - ஆகத்தம்மா (கனடா, இளைப்பாறிய ஆசிரியர்கள்) தம்பதியரின் மருமகனும், றீற்றா (மண்டைதீவு), கனடாவில் வசிக்கும் யோகராசா, யோகராணி, யோகநாதன், யோகநேசன், சூட்டி, யோதினி, யோகலா, றொபின்சி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிச்சடங்குகள் கனடாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

"ஜெயபதி"
3ஆம் வட்டாரம்,
மண்டைதீவு.

(26852)(3.14)

தகவல்:
சா.பற்றிக் யோசவ்
(ஜெயம் சகோதரன்).

## இராசதுரை நவராணி



சிறுப்பிட்டி தெற்கு நீர்வேலியைப் பிறப்பிடமாகவும், ஜேர்மனியை வசிப்பிடமாகவும் கொண்ட இராசதுரை நவராணி கடந்த (12.12.2012) புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் இராசதுரையின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான முத்து -உத்தமி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான மயிலு - சின்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும், ஜேர்மனியில் வசிக்கும் மதிறோசன், சுஜீவா, சுனித்தா, சுவர்ணா ஆகியோரின் அன்புத் தாயும், செந்தூர் ராஜன், கோமளா, ருதன், உதயன், கோமதி, சர்மிலி ஆகியோரின் அன்பு மாமியும், சிவலிங்கராஜா, சிவனேஸ்வரன், நிஷாகரன், சுகந்தினி ஆகியோரின் சிறியதாயும், நவராஜா, நவரூபவதி, காலஞ்சென்ற நவஜீவன் மற்றும் நவமலர், குணதாசன் (சவுதி), இரத்தினாவதி, உதயகுமார் (ஜேர்மனி), செல்வராஜா, செல்வகுமார் ஆகியோரின் அன்புச் சகோதரியும், பாக்கியம் (நல்லூர்) நவநந்தினி (சவுதி), சுமதி (ஜேர்மனி), கிருஷ்ணபிள்ளை, கணபதிப்பிள்ளை, பரமசாமி (அஞ்சலகம் - கைதடி), சேதுராஜா, இராஜேஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை திங்கட்கிழமை (17.12.2012) ஜேர்மனியில் நடைபெறும். (அன்னாரது இறுதி நிகழ்வு சிறுப்பிட்டியிலுள்ள அவரது சகோதரியின் இல்லத்தில் நடைபெறும்)

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(26859)(9.14)

தகவல்:
"ஜீவகம்" சிறுப்பிட்டி தெற்கு, நீர்வேலி.
குடும்பத்தினர்.

## வேலுப்பிள்ளை தியாகராஜா



கரவெட்டி மத்தியைப் பிறப்பிடமாகவும், வரணி வடக்கு வரணியை வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை தியாகராஜா நேற்றுமுன்தினம் (14.12.2012) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - வள்ளியம்மை தம்பதியரின் கனிஷ்ட புத்திரனும், காலஞ்சென்றவர்களான விசாலாட்சி, புவனேஸ்வரி, சிவபாக்கியம் மற்றும் மங்கையர்க்கரசி, குணசிங்கம் ஆகியோரின் பாசமிகு சகோதரனும், சிவபாக்கியத்தின் (செல்வம்) அன்புக் கணவரும், தயாநிதி (ஆசிரியை, கிளி/புனித அந்தோனியார் றோ.க. வித்தியாலயம்), தயாகரன் (பிரான்ஸ்), சத்தியநிதி (யா/அச்சுவேலி மத்திய கல்லூரி) ஆகியோரின் அன்புத் தந்தையும், அரங்கநாதன் (உள்ளகக் கணக்காய்வாளர், இ.போ.ச. கோண்டாவில்), பாஸ்கரன் ஆகியோரின் அன்பு மாமனும், அட்சயா, ஆர்னிகன், நிருபன், மலரவன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (15.12.2012) சனிக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் முள்ளி இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கும்பிட்டான் கோவிலடி,
வரணி வடக்கு, வரணி.

(26858)(3.14)

தகவல்:
அரங்கநாதன், பாஸ்கரன்
(மருமகன்கள்)

# நீக்கிலஸை எதிர்த்து ஞானமுருகன் மோதல்

யாழ்ப்பாணம், டிசெ 16

யாழ். உதைபந்தாட்ட லீக் தனது அங்கத்துவக் கழகங்களுக்கிடையே நடத்திய 11 பேர் பங்கு பற்றிய விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் இறுதியாட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 3 மணிக்கு குருநகர் பாடும்மீன் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

இறுதியாட்டத்தில் நாவாந்துறை சென். நீக்கிலஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.

பிரதம விருந்தினராக இலங்கை வங்கியின் வடக்கு உதவிப் பொது முகாமையாளர் கே.டி.சுமணசிறி, சிறப்பு விருந்தினராக லண்டன் தமிழ் பாடசாலை விளையாட்டுக் கழகத்தின் இணைப்பாளர் கெங்காதரன் கலந்து கொள்வார். (த-23)


## பதவி வெற்றிடம்

பல் தேசிய நிறுவனத்துக்கு Education Technologies கீழ்க்காணும் பதவி வெற்றிடங்களுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

- Trainee marketing executive
- Marketing executive
- அலுவலக உதவியாளார்(G.C.E.O/L PASS)
- க.பொ.த.உயர்தரப் பரீட்சையில் சித்தி
- 30வயதுக்கு உட்பட்ட ஆண்,பெண் இருபாலாரும்

நேர்முகப் பரீட்சைகள் 15Dec முதல் 22Dec வரை நடைபெறவுள்ளன தகைமை உடையோர் நேரில்வரவும்
can earn more than R.s 40,000/- With in 3months and overseas Trips& many more
Education Technologies, No.1002 ,2nd Floor Manipay road, Jaffna.
Contact : Mr.Anthany(0773434823)

## ஆட்டோ விற்பனைக்கு

YZ-XXXX, YU-XXXX இலக்க ஆட்டோக்கள் விற்பனைக்குண்டு
(லீசிங்குடன்)
தொடர்பு : 0779184620

## தேவை

O/L,A/L கற்ற உங்களுக்கு ஓர் அரியவாய்ப்பு! நீங்கள் முகாமைத்துவத்துறையினை சிறந்ததுறையாக தேர்ந்தெடுத்துள்ளீர்களா? அப்படியானால் புதிதாகத் திறக்கப்பட்டுள்ள எமது நிறுவனக் கிளைகளுக்கு பயிற்சியுடன்கூடிய மட்டுப்படுத்கப்பட்ட 20 புதிய வெற்றிடங்கள்,

- பயிற்சியின்போது 15,000/=பின் 40,000/= மேல் பெறமுடியும்
- அனுபவம் தெவையில்லை
- வயதெல்லை 18-28

அழைக்கவும் : 0778213839,0773999100

## காணி உடன் விற்பனைக்கு

மல்லாகம் சந்திக்கும் தெல்லிப்பழை துர்க்கையம்மன் கோயிலுக்கும் இடையில் கோணப்புலம் லேன், மல்லாகம் வடக்கு K.K.S வீதிக்கு மிக அண்மையில் 5¾ பரப்புக் காணி கிணற்றுப் பங்குடன் உடன் விற்பனைக்குண்டு.
தொடர்பு : 0773058033

## வேலை வாய்ப்பு

எமது நிறுவனத்துக்கு ஆளணி தேவை. விருப்பமுடையோர்(19.12.2012)புதன்கிழமை ஒரு மணி முதல் 3மணி வரை நேரில் வரவும்.

யாழ் கொழும்பு பிறிண்டேஸ்
K.K.S வீதி (யாழ்.இந்துக்கல்லூரி அருகில்)

## REALMATRIMONY யின் மணப்பந்தல்

- 1979, பூசம்,Bank Officer,Sri Lanka, மணமகனுக்கு மணமகள் தேவை.
- 1980,அனுஷம்,Accountant Australian PR, மணமகனுக்கு மணமகள் தேவை
- 1980,திருவோணம்,Doctor,Sri Lanka, மணமகனுக்கு மணமகள் தேவை,
- 1982,அனுஷம்,Engineer,USA PR, மணமகனுக்கு மணமகள் தேவை
- 1981,ஆயிலியம்,Quantity Surveyor, Australia PR, மணமகனுக்கு மணமகள் தேவை
- 1976,கார்த்திகை2ம்,Lecturer,Sri Lanka, மணமகனுக்கு மணமகள் தேவை
- 1983,பூராடம் BSc,Sri Lanka, மணமகனுக்கு மணமகள் தேவை
- 1983,பரணி,Doctor,Sri Lanka மணமகளுக்கு மணமகன் தேவை
- 1980,சதயம்,B.Com,Sri Lanka, மணமகளுக்கு மணமகன் தேவை
- 1987,பூரம்,Dental,Doctor Sri Lanka, மணமகளுக்கு மணமகன் தேவை
- 1982,உத்தராடம்2 ம்,Engineer,Sri Lanka மணமகளுக்கு மணமகன் தேவை
- 1980,ஆயிலியம்,Accountant, Australia PR, மணமகளுக்கு மணமகன் தேவை

Real Matrimony(Pvt)Ltd
இல.05, ஸ்டேம்மன் றோட்,நல்லூர்,யாழ்ப்பாணம்.
Tel : 021 4923 739 / 864 / 738

## ASTON INTERNATIONAL COLLEGE
(Primary Section)
ஆசிரியைகளுக்கான வெற்றிடம்

எமது சர்வதேச பாடசாலையின் ஆரம்பப்பிரிவிற்கு (Montessori) தகுதியும், ஆங்கில அறிவும், அனுபவமுடைய ஆசிரியைகள் தேவைப்படுகின்றனர்.

தங்களது சுயவிபரக்கோவையை அனுப்பவேண்டிய முகவரி :

Principal,
Aston International College,
K.K.S. Road, Inuvil.

2013 இற்கான மாணவர் அனுமதிகளும் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன.


# மரண அறிவித்தல்கள்

## செல்வி சுஜானி நடராஜா



யாழ்ப்பாணம், சுன்னாம், ஐயனார் வீதியை வசிப்பிடமாகக் கொண்டவரும், யாழ்.பல்கலைக் கழகத்தின் இராமநாதன் நுண்கலைப்பீட முதலாம் வருட மாணவியுமான செல்வி சுஜானி நடராஜா கடந்த (13.12.2012) வியாழக்கிழமை அகால மரணமடைந்தார்.

அன்னார் நடராசா (வலிகாமம் கல்வி வலய உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர்) - மனோரஞ்சிதமலர் தம்பதியரின் அன்பு மகளும், கர்ஜினி, கஜீவ் (சூட்டி) ஆகியோரின் சகோதரியும், சுதர்சனின் மைத்துனியும், காலஞ்சென்றவர்களான கந்தையா - தங்கம்மா தம்பதியர், முருகர் - சின்னப்பிள்ளை தம்பதியர் ஆகியோரின் பேர்த்தியும், அனுஷ்கா, ஆருஷன் ஆகியோரின் அன்புச் சித்தியும், காலஞ்சென்ற நாகேந்திரம் (அதிபர்), மற்றும் ஞானதேவகி, காலஞ்சென்ற வேலாயுதம் (அதிபர்), மற்றும் திருமதி கமலாதேவி (ஆசிரியை) ஆகியோரின் பாசமிகு பெறாமகளும், காலஞ்சென்றவர்களான திரு.திருமதி மயில்வாகனம், திரு.திருமதி கதிரவேல், திரு.திருமதி நரசிங்கம், மற்றும் திரு.திருமதி தர்மலிங்கம் (ஓய்வுபெற்ற ஆசிரியர்கள்), திரு.திருமதி அழகரட்ணம் ஆகியோரின் அன்பு மருமகளும், திரு.திருமதி தர்மலிங்கம் (கனடா), திரு.திருமதி மனோரஞ்சிதலிங்கம் (UK), திரு.திருமதி பூபாலகிருஷ்ணலிங்கம் (ஜேர்மனி), திருமதி சற்குணேஸ்வரன் (கனடா) ஆகியோரின் மருமகளும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (16.12.2012) ஞாயிற்றுக்கிழமை பி.ப 2.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சுன்னாகம் கொத்தியாலடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஐயனார் வீதி,
சுன்னாகம்.

(சீ/2624)(3.14)

தகவல்:
மு.நடராஜா (தந்தை உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர், வலிகாமம் கல்வி வலயம்).

## நவரத்தினம் முத்துலஷ்மி



புத்தூர் கிழக்கு குமாரசாமி வீதியைப் பிறப்பிடமாகவும், நுணாவில் மத்தி கல்வயல் றோட், சாவகச்சேரியை வசிப்பிடமாகவும் கொண்ட நவரத்தினம் முத்துலஷ்மி நேற்று (15.12.2012) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் வல்லிபுரம் நவரத்தினத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான முத்துக்குமாரு- அப்பாத்தை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான வல்லிபுரம்-தங்கம்மா தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற செல்வரத்தினம் சரோஜினியின் மைத்துனியும், மணியம்லஷ்மி, திருகுமாரவேலு, காலஞ்சென்றவர்களான முத்துவேலு, அன்னப்பிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரியும், செல்வக் குமார்(லண்டன்), செல்வரஞ்ஜினி (லண்டன்) ,செல்வரஞ்சன்(லண்டன்) ,செல்வஜேந்தினி(பிரான்ஸ்), செல்வநந்தன்(லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயாரும், துஸ்யந்தினி(லண்டன்), ஜெயந்திரபாலா (லண்டன்), காயத்திரி (லண்டன்), பவானந்தன்(பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமியும், வனோஜன், தர்சஷானி, நிஷாலினி, சஞ்சேய், சஞ்சிவித், சாம்பவி, கபிலினி ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரிகைகள் நாளை(17.12.2012) திங்கட்கிழமை பி.ப 2.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

நுணாவில் மத்தி,
கல்வயல் றோட் ,சாவகச்சேரி.

தகவல்:
திரு. வல்லிபுரம்
நவரத்தினம்(கணவர்),
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

## இராமுப்பிள்ளை - ஞானதீரன் (R.M.P)
அச்சுவேலி



ஊரெழுவைப் பிறப்பிடமாகவும், அச்சுவேலியை வசிப்பிடமாகவும் கொண்ட Dr.இராமுப்பிள்ளை ஞானதீரன் நேற்று (15.12.2012) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற இராமுப்பிள்ளை - தங்கமணி (ஆசிரியத் தம்பதிகள்) தம்பதியரின் அருமை மகனும், காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - சிவக்கொழுந்து தம்பதியரின் அன்பு மருமகனும், திருமதி ஞானம்பிகையின் அன்புக் கணவரும், சுகுணதீரன் (கணக்காளர்), திருமதி கமலவேணி, திருமதி ஞானவேணி, திருமதி பாலவேணி ஆகியோரின் அருமைச் சகோதரரும், பாலசுப்பிரமணியம் (சட்டத்தரணி - கனடா), முத்துக்குமாரசாமி (தபால் அதிபர்), மகேந்திரநாதன் (தொழில்நுட்ப உத்தியோகத்தர்), கணநாதன் (கனடா), வசந்தாதேவி ஆகியோரின் அன்பு மைத்துனரும், திருமதி யாழினி (ஆசிரியை, யா/அல்லைப்பிட்டி பராசக்தி வித்தியாலயம்) திருமதி யகனி (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும், தவபாக்கியராஜா (Serendib Flour Mill (pvt)Ltd), வேல்சிவன் (கனடா) ஆகியோரின் அருமை மாமனும், சாயகி (புனித யோன் பொஸ்கோ மாணவி), வாரணி, கனன், தரன் (கனடா) ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.12.2012) ஞாயிற்றுக்கிழமை மு.ப 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று அச்சுவேலி தெற்கு இந்துமயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

உலவிக்குளப் பிள்ளையார் கோவிலடி,
அச்சுவேலி வடக்கு, அச்சுவேலி.

(26865)(8.14)

தகவல்:
குடும்பத்தினர்.
0212058631

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# இணங்கிப் போக முனைந்தால் அது நம்மை நாமே ஏமாற்றுவதாகும்!

இலங்கையில்- இந்த நாட்டில் - எந்தக் காரணத்தைக் கொண்டும், எப்போதுமே பிரிவினைக்கு இடமில்லை என்ற முடிந்த முடிவுடனும் உணர்வு மற்றும் ஓர்மத்துடனும் செயற்படுகிறது இன்றைய அரசாங்கம்.

பெரும்பான்மை இனத் தலைவர்களும் சிறுபான்மை இனங்களின் தலைவர்களும், பிரிட்டிஷாரிடம் இருந்து நாட்டுக்குச் சுதந்திரம் வேண்டிப் போராடி, அதனைக் கையில் பெற்ற ஒரு சில வருடங்களிலேயே இந்த நாட்டின் ஆட்சித் தலைமைத்துவம் எப்போதும் பெரும்பான்மை இன மக்களுக்கே சொந்தம் என்ற 'விதி' எழுதப்படலாயிற்று.

இந்தச் சரித்திரம், வரலாறு எல்லோருக்கும் தெரிந்த ஒன்றுதானே; இப்போது அது குறித்து 'இரை மீட்பது' எதற்காக என்று மிக மிகப் பலரும் எண்ணலாம்.

இலங்கைத் தேசத்தில் பிரிவினை வாதம் எழுந்ததற்கு தென்னிலங்கையின் இனவாதிகளே காரணம் என்று யாழ்ப்பாணத்தில் நின்று திருவாய்மலர்ந்துள்ளார் அமைச்சர் ராஜித சேனரத்ன. இது அமைச்சரைப் பொறுத்தவரையில் புதிய 'கண்டுபிடிப்பாக' இருக்கலாம்.

ஆனால், தமிழ்ப் பிரதேசங்களில் வாழும் எட்டாம் வகுப்பு மாணவனுக்கும் இது 'அத்துப்படி' எனலாம்.

தத்தமது அரசியல் இருப்புகளை உறுதி செய்து கொண்டு அதிகாரத் தரப்பில், ஆட்சித் தரப்பில் தொடர்ந்து வீற்றிருக்க இன வாதத்தைக் கையிலெடுத்து சிங்கள மக்களை உசுப்பிவிட்டவர்கள், உசுப்பி வருபவர்கள் சிங்கள அரசியல் தலைவர்களே. இது விடயத்தில் தெற்கின் பிரதான அரசியல் கட்சிகள் மிகப் பலவும் ஒரே குட்டையில் ஊறிய மட்டைகளே.

நாட்டில் பிரிவினை வாதக் கோட்பாடு முகிழ்க்கவும், அதுவரையும் வழி சமைத்தவர்கள், தமிழ் மக்கள் அல்லர். அவர்களை அந்த வழித் தடத்துக்கு சிங்கள அரசாங்கங்களின் பேரினவாதப் போக்கே இழுத்துச் சென்றது. இது இப்போது அனைத்துலகத்துக்கும் தெரிந்த சுத்தமான உண்மை; பேருண்மை.

எனினும், இந்தப் பேருண்மை இன்னமும் தென்னிலங்கையின் அரசியல் தலைவர்களுக்கும் மாறிமாறி ஆட்சிக் கட்டிலில் அமர்வோருக்கும் அவர்களின் கைகளைச் சுட்டதாக இல்லை!

தமிழ் மக்களுடன், தமிழ் பேசும் மக்களுடன் அதிகாரத்தைப் பகிர்ந்து கொள்வதற்குக் கிஞ்சித்தும் விருப்பமில்லை. அதற்குப் பதிலாக, தாமே தமிழர்களை ஆள்பவர்களாகவும், சிறுபான்மையினர் என்ற ஒரே ஒரு காரணத்தால் அவர்கள் காலாதி காலத்துக்கும் ஆளப்படுபவர்களாகவும் இரண்டாந்தரப் பிரஜைகளாகவும் இருக்க வேண்டும் என்பதே தென்னிலங்கை அரசியல் தலைவர்களின் உள்நோக்கமும் உயர் சூக்குமமும் ஆகும்.

தமது சொல்லொன்று; செயல் வேறொன்று என்ற கபடத்தனத்தை அரங்கேற்றிக் கொண்டு, சர்வதேச சமூகத்துக்கு தாம் தமிழ் மக்களை இரண்டாம் தரப் பிரஜைகளாகக் கருதாது அரச கருமத் தொடர்புகளில் தமிழ் மொழிக்கும் உரிய இடமளிக்கிறோம் எனக் காட்டிக்கொள்ளும் இலட்சணம் ஒன்றே இதற்கு நல்ல உதாரணம்.

தேசிய மொழிகள் அமுலாக்கல் அமைச்சு என்ற பெயரில் ஒரு புதிய அரச கூறை சுமார் ஒரு வருடத்துக்கு முன்னர் அரசு உருவாக்கி இருந்தது.

ஒரு காலத்தில் சிங்களத்துக்கும் தமிழுக்கும் சம அந்தஸ்துக் கோரிய இடது சாரிக் கட்சிகளில் ஒன்றான சமசமாஜக் கட்சியின் முன்னாள் உறுப்பினரான வாசுதேவ நாணயக்காரவை அமைச்சராகக் கொண்டு அந்த அமைச்சு இயங்குகிறது.

இன்னும் இரண்டு ஆண்டுகளில் நாட்டில் இரு மொழிக்கொள்கை முழுமையாக நடைமுறைப்படுத்தப்படும் என அவர் அறிவித்து ஓராண்டுக்கு மேலாகியும்-

இன்றும் தமிழர் பகுதிகளின் அரச அலுவலகங்களுக்கு தலைமை அலுவலகங்களிலிருந்து அனுப்பப்படும் கடிதங்கள் சிங்கள மொழியிலேயே அனுப்பப்படுகின்றன. அவற்றை வாசித்துப் புரிந்து கொண்டு உரிய நடவடிக்கைகளை விரைந்து மேற்கொள்ள இயலாத அளவுக்கு அரச தமிழ் ஊழியர்கள் தடுமாறி வருகின்றனர்.

மொத்தத்தில் அரச தரப்பு அரசியல்வாதிகளின் இத்தகைய பசப்பு வார்த்தைகள் 'பேச்சுப் பல்லக்கு; தம்பி கால்நடை' என்ற வகையிலேயே உள்ளடங்குகிறது.

நாட்டுக்குச் சுதந்திரம் கிடைத்து ஆண்டுகள் அறுபத்தி நான்கு கழிந்து சென்ற போதிலும், தமிழ் மக்களுக்குரிய, அவர்களிடமிருந்து பிரிக்க முடியாத அரசியல் உரிமைகளை வழங்க தென்னிலங்கையின் எந்த அரசாங்கமும் முன்வரவில்லை. தமிழர்களை இரண்டாந் தரப் பிரஜைகளாகவே எப்போதும் வைத்திருக்க வேண்டும் என்பது தெற்கின் பிரதான அரசியல் கட்சிகளின் அழிக்கவொண்ணாச் சித்தாந்தம்.

இது விடயம் தமிழ் மக்களுக்குத் தெரியும், புரியும் என்பதனையும் அந்தத் தரப்புகள் முழுமையாகவே, நன்றாகவே அறிந்து வைத்திருக்கின்றன. எனினும் தமிழர்கள் தம்மைத் தாமே ஆள்வதற்குத் தானும் இடமளிக்க அவர்களது நச்சு மனங்கள் விரும்புவதாக இல்லை.

இலங்கை இனப்பிரச்சினை இடறுண்டு, இடர்பட்டு இழி நிலை கண்டுள்ளமைக்கு பிரதான காரணம் இதுவே. ஆட்சி அதிகாரத்தில் இருந்தால்- இருக்கும் போது- எதனையும் எப்படியும் செய்யலாம், சொல்லலாம் என்பது தெற்கின் அரசியல் தலைவர்களுக்குக் கைவந்த கலையாகிவிட்டது!

இத்தகைய ஒரு பின்புலத்தில், தமிழ் மக்களோ அன்றி அவர்களின் அரசியல் தலைவர்களோ சிங்கள அரசியல் தரப்புகளுடன், அவை எதுவாக இருந்தாலும் அவற்றுடன் இணைந்து இணங்கிப் போகும் வாய்ப்பு அருகிக் கொண்டே வருகிறது; இல்லை, இல்லை அருகிவிட்டது என்றும் சொல்லலாம், கொள்ளலாம்.

இந்தக் கருத்து நிலையை தமிழர் தரப்பு நேர்மையுடன் உள்வாங்காவிடில் அதன் பலன் தங்களையும் தமது மக்களையும் ஏமாற்றுவதாகவே முடியும். நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளைச் செயற்படுத்த வேண்டும் என்று ஐக்கிய நாடுகள் சபை வரை தமிழ் மக்களின் விவகாரம் சென்றிருக்கும் இவ் வேளையில், அரசாங்கத்துடன் நெருங்கிச் செல்வது உகந்ததல்ல; உசிதமானதல்ல. ஒருவகையில் தமிழ் மக்கள் தம்மைத் தாமே ஏமாற்றிக் கொள்வதற்கு அது ஒப்பாகும்.



# வடமாகாண ஆசிரியர்களின் இடமாற்றம் இடைநிறுத்தம்

## முறைகேடுகள் இடம்பெற்றதாக முறைப்பாடு

யாழ்ப்பாணம், டிசெ. 16

வடமாகாண ஆசிரியர் இடமாற்றத்தில் முறைகேடுகள் இடம்பெற்றுள்ளதென முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதால் அந்த இடமாற்றங்கள் இடைநிறுத்தப்பட்டுள்ளதாக இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்ராலின் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு :-

வடமாகாணத்தில் தற்போது ஆசிரியர் இடமாற்றங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. சில வலயங்களில் பெயர்ப்பட்டியல்கள் ஒட்டப்பட்டுள்ளன. ஆனால் இடமாற்றச் சபைக்குக் கொண்டுவரப்பட்டவர்களின் பெயர் விவரப் பட்டியலைத் தயாரித்தமை உட்படப் பல முறைகேடுகள் நடைபெற்றுள்ளதாக முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

இதனை அடுத்து அது தொடர்பில் ஆராய்ந்து நடவடிக்கை எடுக்க வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது. இதுபற்றி வடமாகாண ஆளுநர் ஜீ.ஏ.சந்திரசிறியின் கவனத்துக்கும் கொண்டுசெல்லப்பட்டுள்ளது.

இதனையடுத்தே தற்போது இடமாற்ற சபைத் தெரிவு நடவடிக்கைகளை இடைநிறுத்த உத்தரவிட்டுள்ள ஆளுநர், அது தொடர்பான கலந்துரையாடல் ஒன்றை எதிர்வரும் 22 ஆம் திகதி நடத்தவுள்ளதாகவும் அறிவித்துள்ளார்.

வன்னியில் பயிலும் மாணவர்களின் கல்வி பாதிக்கப்படக்கூடாது. வன்னியில் கற்பிக்கும் ஆசிரியர்களும் பாதிக்கப்படக் கூடாது. இந்த வகையிலேயே இடமாற்றங்கள் செய்யப்பட வேண்டும்.

யாழ்ப்பாணத்தில் இருந்து இடமாற்றம் பெறவுள்ள ஆசிரியர்களின் பெயர்ப்பட்டியல் தயாரிக்கப்பட்டது. அது இடமாற்ற சபை மூலமாகவே உறுதிப்படுத்தப்பட வேண்டும். அவ்வாறிருக்க அந்தப் பட்டியலைத் தயாரித்தது யார் என்பது தெரிவிக்கப்படவில்லை.

அந்தப் பட்டியலில் குறிப்பிடப்பட்ட ஆசிரியர்களில் அரைவாசிப் பேர் மேன்முறையீடு செய்து தமது இடமாற்றத்தைத் தவிர்த்துள்ளனர். அவர்கள் அண்மையிலேயே கஷ்டப் பிரதேசத்திலிருந்து தற்போதைய இடங்களுக்கு இடமாற்றம் பெற்று வந்துள்ளனர். இதுவே மேன்முறையீட்டிலும் இடமாற்றத்தைத் தடுக்கக் கோரும் விண்ணப்பத்தை ஏற்க வேண்டிய நிலைக்குக் காரணம்.

அப்படியாயின் இடமாற்றம் பெறத் தகுதியில்லாத பல ஆசிரியர்களின் பெயர் விவரங்கள் எந்த அடிப்படையில் இடமாற்றப் பட்டியலில் சேர்க்கப்பட்டன.

இவை தொடர்பான உரிய விசாரணைக்காகவே எதிர்வரும் 22 ஆம் திகதி தொழிற்சங்கங்களுடன் இணைந்து இதுபற்றிக் கலந்துரையாடவுள்ளோம். - என்றார். (த-4)

# குடாநாட்டு மக்களின் பிரச்சினைக்கு உடனடித் தீர்வு மிகவும் அவசியம்

## ஜனாதிபதியிடம் கடிதம் மூலம் கோரிக்கை

வலி. வடக்கு, டிசெ. 16

மின் வெட்டாலும், வீதி அகலிப்பாலும் அவதியுறும் யாழ். குடாநாட்டு மக்களின் பிரச்சினைகள் சம்பந்தமாகவும் மற்றும் பல்வேறு வழிகளிலும் பாதிக்கப்படுவது சம்பந்தமாகவும் இலங்கை ஜனநாயக தொழிலாளர் கட்சி ஜனாதிபதியின் கவனத்துக்குக் கொண்டு சென்றுள்ளது.

கட்சித் தலைவர் சத்தியேந்திரா இது சம்பந்தமாக ஊடகங்களுக்கு அறிக்கை ஒன்றையும் வெளியிட்டுள்ளார்.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

யாழ்ப்பாணத்தில் நேர காலமின்றி நடைமுறைப்படுத்தப்படும் மின் வெட்டு, ஜனாதிபதியின் உடனடிக் கவனத்தை வேண்டி நிற்கும் பிரச்சினையாக உள்ளது.

யாழ்ப்பாணத்தில் பகலிலும், இரவு வேளைகளிலும் நேர காலமற்ற இந்த மின்வெட்டுக்களால் விவசாயிகளும் தோட்டச்செய்கையாளர்கள், சிறுதொழில் முயற்சியாளர்கள் மட்டுமன்றி தற்போது சாதாரண தரப் பரீட்சை எழுதிக் கொண்டிருக்கும் பாடசாலை மாணவர்களும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

விவசாயிகள் தோட்டச் செய்கையாளர்கள் தங்கள் புகையிலை மரக்கறி வகைகள் மற்றும் ஏனைய பயிர்கள் போன்றவற்றுக்கு நீரிறைப்பதற்கு மின் பம்பினை உபயோகிக்க முடியாது சிரமப்படுகின்றனர்.

யாழ். மக்கள் எதிர்நோக்கும் மற்றுமொரு பிரச்சினை, வீதி அகலிப்பு நடவடிக்கைகள். யாழ்- காங்கேசன்துறை வீதி மற்றும் பருத்தித்துறை வீதி, பலாலி வீதி மற்றும் உள் வீதிகளும் அகலிக்கப்பட்டு வருகின்றன.

வீதிகள் அகலிக்கப்பட வேண்டிய தேவை இருப்பதை ஒப்புக் கொள்ளும் அதேவேளை வீதியின் இரு மருங்கிலும் உள்ள வீடுகள் உடைக்கப்படுவது உடனடிக் கவனத்தில் கொள்ளப்பட வேண்டியது.

யாழ்ப்பாணத்தில் மலசல கூடங்கள் வீடுகளுக்கே வெளியே அமைக்கப்படுவது வழக்கம். அனேக சந்தர்ப்பங்களில் இந்த வீதி அகலிப்புப் பணிகளுக்காக வீடுகளின் சுற்று மதில்கள் மட்டும் உடைக்கப்படுவதில்லை. மாறாக இந்த மலசல கூடங்களும் உடைக்கப்படும் சந்தர்ப்பங்கள் அதிகம்.

இவ்வாறு வீதி அகலிப்புப் பணிகளால் பாதிக்கப்படுபவர்கள் அனேகம் பேர் ஏழைகள். அவ்வாறு மலசல கூடங்கள் உடைக்கப்படும் சந்தர்ப்பங்களில், புதிய மலசல கூடங்களைக் கட்டுவதற்கான வசதிகள் அவர்களிடம் இல்லை.

எனவே அவர்களுக்கான மலசல கூடங்களை அமைப்பதற்கான உதவிகள் உடனடியாக வழங்கப்படுவது அவசியமானது.- என்றுள்ளது.

(ம-86)

### வீட்டுத்திட்ட பயனாளிகளுடன் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், டிசெ.16

இந்திய அரசின் உதவியுடனான வீட்டுத்திட்டம் குறித்து பயனாளிகளுடனான கலந்துரையாடல் நாளையும், நாளை மறுதினமும் இடம்பெறவுள்ளது என்று வேலணை பிரதேச செயலர் திருமதி சதீசன் மஞ்சுளாதேவி தெரிவித்தார்.

மண்டைதீவு கிழக்கு, மேற்கு, தெற்கு பகுதிகளுக்கு நாளை திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கும் அல்லைப்பிட்டி மண்கும்பான் பிரதேசங்களுக்கு பிற்பகல் 2.30 மணிக்கும்-

நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு வேலணை கிழக்கு - தெற்கு பிரதேசத்திற்கும் புங்குடுதீவு தெற்கு பகுதிக்கு பிற்பகல் 2 மணிக்கும் இடம்பெறவுள்ளது. (ம-50)

# வாழ்வாதார கடன் வழங்கல்

தென்மராட்சி, டிசெ. 16

சாவகச்சேரி நகர் மாதர் கிராம அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள் ஒன்பது பேருக்கு நேற்று 4 இலட்சத்து 90 ஆயிரம் ரூபா வாழ்வாதார கடனாக வழங்கப்பட்டது.

சாவகச்சேரி புவேந்தன் முன்பள்ளி வளாகத்தில் உள்ள சங்க அலுவலகத்தில் சங்கத் தலைவி ம.கீர்த்திநாதன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் சங்க உறுப்பினர்கள் ஆறு பேருக்கு தலா 60 ஆயிரம் ரூபா வீதமும் இருவருக்கு தலா 50 ஆயிரம் ரூபா வீதமும் ஒருவருக்கு 30 ஆயிரம் ரூபாவும் வழங்கப்பட்டது.

யாழ். மாவட்ட வாழ்வாதார கடன் முகாமைத்துவ சேவைகள் நிலைய உதவிப் பணிப்பாளர் ஸ்ரீ.கயாதரன் முன்னிலையில் பயனாளிகளுக்கு கடன்கள் வழங்கப்பட்டன. சங்கத்துக்கு வாழ்வாதார கடனாக நிலையத்தால் இதுவரை கட்டம் கட்டமாக 18 இலட்சத்து 55 ஆயிரம் ரூபா கடனாக வழங்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (ம-9)

### ஒழுங்கைகளுக்கு புதிய பெயர்கள்

சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட பகுதியில் மேற்கொள்ளப்பட்ட ஆதனங்கள் மதிப்பீட்டின் போது இனங்காணப்பட்ட பல ஒழுங்கைகளுக்கு புதிய பெயர்கள் சூட்டப்படவுள்ளன.

ஏற்கனவே காணப்பட்ட வீதிகளிலிருந்து பிரிந்து உப வீதிகளாக பயன்படுத்தப்பட்டுவரும் ஒழுங்கைகளுக்கே புதிய பெயர்கள் சூட்டப்படல் வேண்டுமென சாவகச்சேரி நகரசபை மாதாந்தக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

இது தொடர்பாக அந்த ஒழுங்கையில் வதியும் மக்களிடம் ஆலோசனை கேட்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ம-9)

# 3670 கிராம அலுவலர் வெற்றிடம் ஆள்சேர்ப்புக்கு ஏற்பாடு

யாழ்ப்பாணம், டிசெ. 16

நாடு தழுவிய ரீதியில் 3670 கிராம அலுவலர் பதவிக்கான வெற்றிடங்கள் நிரப்பப்படவுள்ளன.

பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சர் ஜோன் செனிவிரட்ண இதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளார்.

நாடு தழுவிய ரீதியில் கிடைக்கப்பெற்ற விண்ணப்பதாரிகளுக்கு பரீட்சை மற்றும் நேர்முகப் பரீட்சை மூலம் ஆள்சேர்ப்பு செய்யப்படவுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

பிரதேச செயலக மட்டத்தில் அதிகூடிய வெட்டுப்புள்ளிகளை பெறுபவர்கள் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டு அந்தந்த பிரதேச வெற்றிடங்களுக்கு ஆள்சேர்ப்பு இடம்பெறும்.

கடந்த 5 ஆண்டு காலமாக கிராம அலுவலர் பதவி வெற்றிடம் நிரப்பப்படாமல் உள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-50)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முல்லைத்தீவு கரையோர மக்கள் தொழில் ரீதியில் பெரும் நெருக்கடி

## உபகரண வசதியின்மை மட்டுமன்றி ஆக்கிரமிப்பு வேறு

கிளிநொச்சி,டிசெ.16

முல்லைத்தீவு மாவட்டத்தின் கரையோரப் பகுதிகளில் 18 கடற்றொழில் சங்கங்களின் கீழ் 4500 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் பல்வேறு நெருக்கடிகளுக்கும் மத்தியில் தொழிலில் ஈடுபட்டு வருகின்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

சுண்டிக்குளத்தில் இருந்து கொக்கிளாய் வரையான 84 கிலோ மீற்றர் நீளமான கரையோரப் பகுதியில் 18 கடற்றொழில் சங்கங்களைச் சேர்ந்தவர்கள் கடற்றொழிலில் ஈடுபட்டு வருகின்றனர்.

**திருகோணமலை மற்றும் தென்பகுதியில் இருந்து முல்லைத்தீவுக் கடலில் தொழிலில் ஈடுபடுவோரின் அச்சுறுத்தலுக்கும் இந்த மீனவர்கள் ஆளாகி வருகின்றனர். அதனால் தாம் சுதந்திரமாகத் தொழில் செய்யமுடியாதுள்ளதாகவும் தமது வலைகள் நடுக்கடலில் நாசம் செய்யப்படுவதாகவும் பாதிக்கப்பட்ட மீனவர்கள் குற்றம் சாட்டுகின்றனர்.**

கொக்கிளாய், கருநாட்டுக்கேணி, செம்மலை, அளம்பில், உப்புமாவெளி, பியோநகர், சிலாவத்தை தெற்கு, சிலாவத்தை வடக்கு, கள்ளப்பாடு தெற்கு, கள்ளப்பாடு வடக்கு, தீர்த்தக்கரை வடக்கு, வண்ணாங்குளம், மணற்குடியிருப்பு, கோயில் குடியிருப்பு, செல்வபுரம், வட்டுவாகல், மாத்தளன், இரணைப்பாலை ஆகிய 18 கடற்றொழில் சங்கங்களைச் சேர்ந்தவர்களே பாதிக்கப்பட்டுள்ளனர்.

1990 இல் போர்ச் சூழலில் உடைமைகளை இழந்த இவர்கள் 2004 இல் சுனாமியின் போதும் 2009 இல் இறுதிப் போரின் போதும் தமது தொழில் உபகரணங்களை முற்றாக இழந்துள்ளனர்.

மீள்குடியேற்றம் இடம்பெற்று 3 வருடங்கள் கடந்த நிலையிலும் இவர்களுக்கான தொழில் உபகரணங்கள் வழங்கப்படவில்லை.

திருகோணமலை மற்றும் தென்பகுதியில் இருந்து முல்லைத்தீவுக் கடலில் தொழிலில் ஈடுபடுவோரின் அச்சுறுத்தலுக்கும் இந்த மீனவர்கள் ஆளாகி வருகின்றனர். இதனால் தாம் சுதந்திரமாகத் தொழில் செய்யமுடியாதுள்ளதாகவும் தமது வலைகள் நடுக்கடலில் நாசம் செய்யப்படுவதாகவும் பாதிக்கப்பட்ட மீனவர்கள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை வங்கிகளில் கடன்பெற்றே பெறுமதிமிக்க தொழில் உபகரணங்களைத் தாம் கொள்முதல் செய்து தொழிலில் ஈடுபடுவதாகவும், எனினும் தமக்குப் போதியளவு வருமானம் ஈட்டமுடியவில்லை எனவும் அவர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

சாலை, சுண்டிக்குளம், நந்திக்கடல், நாயாறு, குமுழமுனை, கொக்குத்தொடுவாய், கொக்குளாய் போன்ற சிறுகடல்களிலும் பாரம்பரிய மீன்பிடி முறைகளைப் பயன்படுத்துவோர், தாம் பாதிக்கப்பட்டுள்ளதாக கூறுகின்றனர்.

இந்தக் கடலில் சட்டவிரோத மீன்பிடிமுறை காரணமாக தொழில் பாதிக்கப்பட்டுள்ளதாகவும், விசனம் தெரிவிக்கின்றனர். (ஐ-6)

# குடிமனைக்குள் யானைகள் மாணவர் திண்டாட்டம்

## இம்முறை பரீட்சை எழுதுவோர் பாதிப்பு

மாங்குளம், டிசெ. 16

காட்டு யானைகள் படையெடுப்பால் தற்போது ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சை எழுதும் மாணவர்களின் கல்வியும் பாதிக்கப்பட்டுள்ளதாகப் பெற்றோர் தெரிவிக்கின்றனர்.

மாங்குளம், துணுக்காய், வவுனியா வடக்குப் பிரதேசங்களில் தினமும் இரவு வேளைகளில் காட்டு யானைகள் புகுந்து அட்டகாசம் புரிகின்றன. மாங்குளம் கிழவன்குளம், பனிக்கங்குளம் அரச உத்தியோகத்தர் குடியிருப்பு, துணுக்காய் வீதி, வவுனியா வடக்கு நெடுங்கேணி, கரப்புக்குத்தி, மாதர் பனிக்கர் மகிழங்குளம் போன்ற இடங்களில் காட்டு யானைகள் படையெடுத்து வருகின்றன.

இதனால் இரவு வேளைகளில் கல்வி கற்கும் மாணவர்கள் பெரும் அச்சத்துடன் படிக்க முடியாது திணறுகின்றனர்.

இந்தப் பகுதியிலுள்ள குடியிருப்பாளர்கள் தினமும் இரவு வேளைகளில் தூக்கத்தைத் தொலைத்து தீப்பந்தம் ஏற்றியும், தகரத்தில் தட்டி ஒலி எழுப்பியும் யானைகளைக் கலைக்க வேண்டியுள்ளதாகத் தெரிவிக்கின்றனர்.

மேலும் குடியிருப்புக்களுக்குள் அத்துமீறி வரும் யானைகள் பாதுகாப்புக்காக அமைக்கப்பட்ட முட்கம்பி வேலிகளையும் அறுத்து பலா, தென்னை, வாழை போன்ற பயன்தரு மரங்களையும் நாசமாக்கி வருவதாக மக்கள் தெரிவிக்கின்றனர். (ஐ-422)

# முள்ளியவளை ஆஸ்பத்திரியில் நோயாளர்கள் அதிகரிப்பு

## விடுதிகளில் இட நெருக்கடி

கிளிநொச்சி,டிசெ.16

முள்ளியவளை பொது வைத்தியசாலையில் நோயாளர் எண்ணிக்கை திடீரென அதிகரித்துள்ளதாக வைத்தியசாலைப் பொறுப்பதிகாரி தெரிவித்துள்ளார்.

தற்போது வெளிநோயாளர் பிரிவில் நாள் தோறும் அதிக எண்ணிக்கையானோர் சிகிச்சை பெற வருகின்றனர் என்றும் 100 முதல் 110 பேர் வரையில் விடுதிகளில் தங்கிச் சிகிச்சை பெறுகின்றனர் என்றும் அவர் தெரிவித்தார்.

பாம்புக் கடி, நாய்க் கடி, வயிற்றோட்டம், வைரஸ் வகைக் காய்ச்சல் என்பவற்றால் பீடிக்கப்பட்ட நோயாளர்களின் எண்ணிக்கை சடுதியாக அதிகரித்திருப்பதாக வைத்தியசாலைப் புள்ளி விவரங்கள் மூலம் தெரிய வருகிறது.

இதன் காரணமாக விடுதிகளில் இடப்பற்றாக்குறை நிலவுவதாகவும், ஆளணிப் பற்றாக்குறை காணப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை வைத்தியசாலைக்கென அமைக்கப்பட்டு வரும் கட்டடம் எதிர்வரும் 20 ஆம் திகதி ஒப்படைக்கப்படவுள்ளதாகவும், ஜனவரி ஆரம்பத்தில் புதிய கட்டடத்தின் வேலைகள் ஆரம்பிக்கும் எனவும் மாவட்ட பொறுப்பு வைத்திய அதிகாரி எஸ்.சண்முகராஜா தெரிவித்தார். (ஐ-6)

# வீதிகள் சேதம்; கவனிப்பது யார்?



அக்கராயன்,டிசெ.16

மாந்தை கிழக்குப் பிரதேச செயலர் பிரிவில் உள்ள வீதிகள் அனைத்தும் பாவனைக்கு உதவாத முறையில் குன்றும் குழியுமாக சேதமடைந்து காணப்படுகின்றன.

வீதிகளைத் திருத்தித் தருமாறு மக்கள் கோரிக்கை விடுத்தபோதும், இன்று வரை எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

சில வீதிகள் இராணுவத்தினரின் உதவியுடன் புனரமைக்கப்பட்ட போதிலும் அவை அண்மையில் பெய்த மழையால் சேதமடைந்துள்ளன. இதனால் மக்கள் பல்வேறு அசௌகரியங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

குறிப்பாகப் பாடசாலை மாணவர்கள், அலுவலக ஊழியர்கள் தினமும் பயண நெருக்கடியை எதிர்கொண்டுள்ளனர்.

எனவே இதனைக் கவனத்தில் எடுத்து சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இந்த வீதிகளைத் திருத்தித்தருமாறு மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (ஐ-18)

# மரமுந்திரிகை செய்கை ஆரம்ப நிகழ்வு

முல்லைத்தீவு, டிசெ.16

முல்லைத்தீவு மாவட்டத்தில் மரமுந்திரிகைச் செய்கையை ஆரம்பிக்கும் முகமாக மாவட்ட செயலகத்தில் ஆரம்ப நிகழ்வு கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்றுள்ளது.

நிகழ்வில் சிறுகைத் தொழில் ஏற்றுமதி பயிர் அபிவிருத்தி அமைச்சர் றெஜினோல்ட் கூரே கலந்து கொண்டு 100 பயனாளிகளுக்கு 100 மரமுந்திரிகைக் கன்றுகளை வழங்கி வைத்தார்.

நிகழ்வில் மரமுந்திரிகைக் கூட்டுத்தாபனச் சங்கத்தின் பொது முகாமையாளர் கி.பி. ஜெயக்கொடி ஆராய்ச்சி, மரமுந்திரிகைக் கூட்டுத்தாபனத்தைச் சேர்ந்த சுரேந்திரா ஆகியோரால் மரமுந்திரிகைச் செய்கை தொடர்பான கருத்துரைகளும் வழங்கப்பட்டன. (ஐ-435)

# முதியோர் நிகழ்வு

யாழ்ப்பாணம், டிசெ.16

கரைச்சி பிரதேச செயலகப் பிரிவின் ஏற்பாட்டில் சர்வதேச முதியோர் மாற்று வலுவுள்ளோர் தினம் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமைபிற்பகல் 2.30 மணிக்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கரைச்சி பிரதேச செயலர் கோபாலபிள்ளை நாகேஸ்வரன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில், கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் திருமதி ரூபாவதி கேதீஸ்வரன் பிரதம விருந்தினராகவும், கிளிநொச்சி மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் செ.சிறிநிவாசன் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்ளவுள்ளனர். (ம-13)

# மண் அணையை அகற்றி வீதியைப் புனரமையுங்கள்

## கிளிநொச்சி மக்கள் கோரிக்கை

கிளிநொச்சி, டிசெ. 16

கிளிநொச்சி கரடிப்போக்குச் சந்தியில் இருந்து பரந்தன் செல்லும் ஏ-9 வீதிக்கு சமாந்தரமான உள் வீதி நீண்டகாலமாகப் புனரமைக்கப்படாது காணப்படுகிறது.

1996 காலப்பகுதியில் இந்தப் பகுதியில் அமைக்கப்பட்ட மண் அணையும் அகற்றப்படாததால் வீதிப் போக்குவரத்தில் பல்வேறு சிரமம் ஏற்பட்டுள்ளதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

கரடிப்போக்குச் சந்தியில் இருந்து புனித பெண்கள் திரேசா கல்லூரி, டொன்பொஸ்கோ நிறுவனம் உள்ளிட்டவற்றுக்கான போக்குவரத்துப் பாதையாகவும் ரயில் பாதைக்குச் சமாந்தரமாகவும் செல்லும் இந்த வீதியை நூற்றுக்கும் மேற்பட்ட குடும்பங்கள் பயன்படுத்தி வருகின்றன.

தற்போது குறித்த வீதி கரடிப் போக்குச் சந்தியில் இருந்து புனித பெண்கள் திரேசா கல்லூரி வரையும் புனரமைக்கப்பட்டு இடை நடுவில் பணிகள் கைவிடப்பட்டுள்ளன. மண் அணைகளும் அகற்றப்படவில்லை. இவர்கள் மாற்றுப்பாதையாக ரயில் பாதையையே பயன்படுத்தி வந்தனர்.

தற்போது ரயில் பாதை புனரமைப்புப் பணிகள் நடைபெற்று வருவதால் அதனூடாகவும் போக்குவரத்து செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

எனவே குறித்த வீதியின் இராணுவ மண் அணையை அகற்றி வீதியைப் புனரமைத்துத் தருமாறு பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஐ-6)

# விசர்நாய்க் கடி தடுப்பூசி இல்லை

வன்னி மாவட்டத்திலுள்ள பல வைத்தியசாலைகளில் விசர் நாய்க்கடிக்கான தடுப்பூசி மருந்து இல்லாமையால் மக்கள் பெரும் அவதியுறுகின்றனர்.

வன்னிப் பகுதியில் தற்போது கட்டாக்காலி நாய்களின் பெருக்கம் அதிகரித்துள்ளது. இதனால் வீதிகளில் திரியும் நாய்கள் பல விசர் பிடித்து மக்களையும் பதம் பார்க்கின்றன.

இதற்கு தடுப்பூசி ஏற்றுவதற்கு கிராமங்களுக்கு அருகிலுள்ள வைத்தியசாலையில் இந்த வசதியின்மையால் மக்கள் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலைக்கும், வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலைக்குமாக அலைந்து திரிகின்றனர். நட்டாங்கண்டல், மல்லாவி, துணுக்காய், மாங்குளம், ஒட்டுசுட்டான் உட்பட பல வைத்தியசாலைகளில் தடுப்பூசி இல்லாததாலேயே மக்கள் அவதியுறுகின்றனர்.

போர் நடைபெற்ற காலத்தில் கூட இந்த வைத்தியசாலைகளில் சிகிச்சைகளை குறைவின்றி பெற்ற இந்தப் பகுதி மக்கள் தற்போது மருந்துகள் இல்லாமல் அலைந்து திரிய வேண்டியுள்ளதாகக் கூறப்படுகிறது. (த-422)

# தேசிய சுகாதார வார நிகழ்வு அக்கராயன் மருத்துவமனையில்



அக்கராயன், டிசெ. 16

கிளிநொச்சி அக்கராயன் பிரதேச மருத்துவமனையில் சுகாதார வார நிகழ்வுகள் கடந்த திங்கட்கிழமை ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றன.

இந்த நிகழ்வை கிளிநொச்சி மாவட்ட தாய், சேய் நல மருத்துவர் எஸ்.முரளிதரன் தொடக்கி வைத்தார்.

மருத்துவமனை ஊழியர்கள் மருத்துவமனை வளாகத்தில் சிரமதானப் பணியிலும் ஈடுபட்டனர். அக்கராயன் மருத்துவமனை சூழல் பிரதேசம், மீள்குடியேற்றத் தொடக்கத்தில் இருந்து பெரும் புதர்கள் நிறைந்து காணப்பட்டது. மருத்துவமனை ஊழியர்களின் தொடர்ச்சியான பணி காரணமாக தூய்மையான சூழலாக மாற்றப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ-18)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சபரிச ஐயப்பனுக்கு இன்று தீர்த்தம்

யாழ்ப்பாணம், டிசெ.16

யாழ். கோண்டாவில் சபரிச ஐயப்பன் ஆலயத்தின் வருடாந்த பெருந்திருவிழா கடந்த 7ஆம் திகதி வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.

தொடர்ந்து 12 நாள்கள் நடைபெறும் இந்தத் திருவிழாவில் நாளை ஞாயிற்றுக்கிழமை 10 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் மறுநாள் திங்கட்கிழமை மாலை 5 மணிக்கு பூங்காவனத் திருவிழாவும் நடைபெறவுள்ளன. (3-13)

## சிரமதானப் பணி

யாழ்ப்பாணம், டிசெ.16

தேசிய சுகாதார வாரத்தை முன்னிட்டு மானிப்பாய் பொலிஸ் பிரிவின் ஏற்பாட்டில் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு சங்கானை பிரதேச வைத்தியசாலையில் சிரமதானப் பணிகள் இடம்பெறவுள்ளன.

இந்த சிரமதானப் பணிகளில் வைத்தியசாலையின் விடுதிகளுக்கு வர்ணம் தீட்டுதல், வைத்தியசாலைச் சுற் றாடலைச் சுத்தம் செய்தல் நட வடிக்கைகள் இடம்பெறும். (ம-14)

## சுகாதார வார அனுட்டானமும் இரத்த தானமும்

யாழ்ப்பாணம், டிசெ.16

தேசிய சுகாதார வாரத்தின் ஏழாவது தினமான இன்று ஞாயிற்றுக்கிழமை சமய அனுட்டானங்களும், இரத்ததான நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன.

இந்த தினத்தை முன்னிட்டு யாழ்.போதனா வைத்தியசாலை, பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை, தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை, சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை ஆகிய இடங்களில் இரத்ததான நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன. (ம-14-36)

# தீவகத்தின் அபிவிருத்திக்கு 300 கோடி ரூபா நிதி ஒதுக்கீடு

யாழ்ப்பாணம்,டிசெ.16

தீவுப் பகுதியில் உள்ள மூன்று பிரதேச சபைகளினால் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தித் திட்டங்களுக்கென 300 கோடி ரூபா நிதியை பொருளாதார அபிவிருத்தி அமைச்சு ஒதுக்கியுள்ளது.

**வேலணை, நெடுந்தீவு, ஊர்காவற்றுறை ஆகிய மூன்று பிரதேச சபைகளுக்கு தலா 100 கோடி ரூபா வீதம் இந்த நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

வேலணை, நெடுந்தீவு, ஊர்காவற்றுறை ஆகிய மூன்று பிரதேச சபைகளுக்கு தலா 100 கோடி ரூபா வீதம் இந்த நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக வேலணை பிரதேச சபையின் உறுப்பினர் சி. ந.கருணாகரகுருமூர்த்தி தெரிவித்தார்.

2013ஆம் ஆண்டு 'கம நெகும' திட்டத்தின் கீழ் இந்த நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இந்த நிதி மூலம் மேற்கொள்ளப்படவேண்டிய அபிவிருத்தித் திட்டங்கள் குறித்த மதிப்பீட்டுப் பணிகளை பிரதேச சபைகள் ஆரம்பித்துள்ளன. (த-17-41)

## ஓட்டோ—மோ.சைக்கிள் விபத்தில் இளைஞர் கால் முறிவு

தென்மராட்சி,டிசெ.16

சாவகச்சேரி பிரதேச செயலகத்துக்கு முன்பாக ஏ-9 வீதியில் நேற்று காலை இடம்பெற்ற ஓட்டோ-மோட்டார் சைக்கிள் விபத்தில் மோட்டார் சைக்கிளில் சென்றவருக்கு கால் முறிந்ததுடன் பலத்த காயமேற்பட்டது. ஓட்டோ சாரதியும் காயமடைந்தார்.

விபத்தில் மோட்டார் சைக்கிளில் சென்ற கிளிநொச்சி உருத்திரபுரத்தைச் சேர்ந்த அருமைராசா பிரதீபன் (வயது-25) என்பவருக்கு கால் முறிந்ததுடன் காயங்களும் ஏற்பட்டன.

இவர் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டார்.

ஓட்டோ சாரதியான மந்துவில் வடக்கைச் சேர்ந்த திருநாவுக்கரசு நேசன் (வயது-41) என்பவர் சாவகச்சேரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். சாவகச்சேரி பொலிஸார் விசாரணைகளை மேற் கொண்டு வருவதுடன் விபத்தில் சிக் கிய இரண்டு வாகனங்களை யும் பொலிஸ் நிலையத்துக்கு எடுத்துச் சென்றனர். (ம-9)

## விநாயகர் விரதம்

யாழ்ப்பாணம்,டிசெ.16

யாழ்ப்பாணம் நீராவியடி ஸ்ரீ ஜெய நீராவி வீரகத்தி விநாயகர் ஆலயத்தில் விநாயக சஷ்டி விரதம் இடம்பெற்று வருகிறது.

அத்துடன் தினமும் காலைப் பூசையின் பின்னர் பிள்ளையார் கதை படிப்பும் இடம்பெற்று வருகிறது.

இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிமுதல் கணபதி ஹோமம் ஆரம்பமாகி நடைபெறவுள்ளது. (ம-14)

## சொற்பொழிவு

வடமராட்சி,டிசெ.16

வடமராட்சி ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் சுவாமி கோயில் சுற்றாடலில் அமைந்துள்ள பெரியாழ்வார் ஆச்சிரமத்தில் பிரதி ஞாயிறு தோறும் நடைபெற்றுவரும் வாராந்த நிகழ்வு வரிசையில் இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணிக்கு மகாபாரதம் தொடர் சொற்பொழிவு இடம்பெறும்.

இந்தச் சொற்பொழிவை பண்டிதர் பொன்.சுகந்தன் நிகழ்த்துவார். (ம-8)

## தொழில் வாய்ப்பு பதிவு நடவடிக்கை

யாழ்ப்பாணம்,டிசெ.16

அரச, தனியார் துறைகளில் தொழில் வாய்ப்பு வழங்கல் மற்றும் தடை தாண்டல் பரீட்சைகளை தவிர்க்கும் பொருட்டு கணினிசார் தொழில்நுட்பத்துறையில் தேசிய தொழில் தகைமைச் சான்றிதழ் உள்ளவர்களைப் பதிவு செய்யும் நடவடிக்கை இன்று ஞாயிற்றுக்கிழமை யாழ். வீரசிங்கம் மண்டபம் முதலாம் மாடியில் உள்ள இலங்கை தொழிற் பயிற்சி அதிகார சபை அலுவலகத்தில் நடைபெறவுள்ளது. (ம-14)

## ஏகமனதாக ஏற்கப்பட்டது சாவகச்சேரி நகரசபை 'பட்ஜெட்'

தென்மராட்சி, டிசெ.16

சாவகச்சேரி நகரசபையின் அடுத்த வருடத்துக்கான உத்தேச வரவு-செலவுத் திட்டம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

நகரசபைத் தலைவர் இ.தேவசகாயம்பிள்ளை சபையின் 2013ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தை நேற்றுமுன்தினம் நடைபெற்ற மாதாந்தக் கூட்டத்தில் சமர்ப்பித்து உரையாற்றும்போது:-

சபை பொறுப்பேற்ற பின்னர் சமர்ப்பிக்கப்படும் இரண்டாவது வரவு செலவுத் திட்ட உத்தேச மதிப்பீடு இதுவாகும்.

கடந்த வருடம் சமர்ப்பிக்கப்பட்ட இந்த வருடத்துக்கான வரவு செலவுத் திட்டத்தில் விவரிக்கப்பட்ட அனைத்து அபி விருத்தி வேலைகளும் உப தலைவர், உறுப்பினர்கள், உத்தியோகத்தர்கள் ஆகியோரின் ஒத்துழைப்புடன் செய்து முடிக்கப்பட்டன.

அடுத்த வருட வரவு, செலவுத் திட்ட மதிப்பீடுகளுக்கு அபிவிருத்தி வேலைகளுடன் நகரசபை மக்களுக்கு வழங்க வேண்டிய தேவைகள் தொடர்பாக அனைவரும் வழங்கிய ஒத்துழைப்பின் பிரகாரம் உத்தேச வரவு செலவுத் திட்டம் தயாரிக்கப்பட்டு சபையில் சமர்ப்பிக்கப்படுகிறது.- என்றார்.

அடுத்த வருடத்துக்கான உத்தேச மொத்த வருமானமான 14 கோடியே 28 லட்சத்து 65 ஆயிரம் ரூபாவும் உத்தேச மொத்த செலவினமாக 14 கோடியே 28 லட்சத்து 45 ஆயிரம் ரூபாவும் மதிப்பிடப்பட்டு மிகையாக 20 ஆயிரம் ரூபா உள்ளது.

அபிவிருத்தி வேலைகளுக்காக சபை உறுப்பினர்களால் வழங்கப்பட்ட 23 வீதிகளும் குறித்தொதுக்கப்பட்ட மாகாண அபிவிருத்தி நன்கொடை நிதியில் 7 வேலைகளும் வடக்கு, கிழக்கு உள்ளூராட்சி சேவை மேம்பாட்டுத் திட்டத்தில் ஐந்து வீதிகளும் அரச நன்கொடையில் ஒரு வேலையும் மேற்கொள்வதாகவும் தெரிவித்தார். 2013ஆம் ஆண்டுக்குரிய உத்தேச வரவு, செலவுத் திட்டத்தை ஏகமனதாக ஏற்றுக்கொள்வதாகத் தெரிவிக்கப்பட்டது. (ம-9)

## நடப்பட்ட மரங்களின் நிலையை நேரடியாகப் பார்வையிட ஏற்பாடு

யாழ்ப்பாணம், டிசெ.16

ஜனாதிபதியின் பிறந்த தினத்தை முன்னிட்டு அரச செயலகங்களில் 2011 இல் நடப்பட்ட மரங்களின் முன்னேற்ற விவரம் நேரடியாகச் சென்று பார்வையிடப்படவுள்ளது.

யாழ்.அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் இதற்கான அவசர நடவடிக்கையை எடுத்துள்ளார்.

ஜனாதிபதியின் பிறந்த தினத்தை முன்னிட்டு யாழ். மாவட்டத்தில் உள்ளூராட்சி சபைகள், பிரதேச செயலகங்கள், மாகாண அமைச்சுக்கள், அரசாங்க செயலகங்களில் 3 ஆயிரத்து 200 இற்கும் மேற்பட்ட பயன்தரு மரங்கள் நடப்பட்டன.

இவ்வாறு நடப்பட்ட மரங்களினதும் 2012 இல் நடப்பட்ட மரங்களினதும் முன்னேற்ற விவரங்கள் ஆராயப்படவுள்ளன.

இதற்கென யாழ்.செயலகத்தில் அரசாங்க அதிபரால் நியமிக்கப்பட்ட பட்டதாரி பயிலுநர் குழு ஆராயவுள்ளது என்று தெரிய வருகின்றது. இதேவேளை நடப்பட்ட மரங்களுக்கு சம்பந்தப்பட்ட அரச செயலகம் எவ்வாறான பாதுகாப்பு நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளது என்பது குறித்தும் விவரமான அறிக்கை தயாரிக்கப்படவுள்ளது. இதற்காக அரச திணைக்கள தலைவர்கள் பூரண ஒத்துழைப்பு வழங்குமாறு கோரப்பட்டுள்ளது. (ம-41)

# 4 சிறுமிகள் துஷ்பிரயோகம்

## காரைநகர், ஏழாலை, இருபாலை வாசிகள் பொலிஸாரிடம் சிக்கி விசாரணையில்

யாழ்ப்பாணம், டிசெ. 16

யாழ். மாவட்டத்தில் கடந்தவாரம் மட்டும் நான்கு சிறுமிகள் பாலியல் துஷ்பிரயோகம் செய்யப்பட்டுள்ளனர். இவற்றுடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் 5 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று யாழ். பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் எம்.எம்.ஜிப்றி தெரிவித்தார்.

அவரது அலுவலகத்தில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை நடைபெற்ற வாராந்த ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு :-

வவுனியா இளைஞர் கைதானார்

யாழ். பஸ் நிலையத்தில் நின்றிருந்த பதின்ம வயதுச் சிறுமியை ஒருவர் பஸ்ஸில் ஏற்றிச் சுன்னாகம் அழைத்துச் சென்று கடந்த 7 ஆம் திகதி அங்கு வைத்துப் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தியுள்ளார்.

வவுனியா தரணிக்குளத்தைச் சேர்ந்த ஒருவரே இந்தச் சம்பவம் தொடர்பில் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

ஊர்காவற்றுறைப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியைச் சேர்ந்த பதின்ம வயதுச் சிறுமி ஒருவர் பாலியல் துஷ்பிரயோகம் செய்யப்பட்டுள்ளார். இந்தச் சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தில் காரைநகரைச் சேர்ந்த 21, 61 வயதுகளை உடைய இரண்டு சந்தேகநபர்கள் கைதுசெய்யப்பட்டு நீதிமன்றில் முற்படுத்தப்பட்டுள்ளனர்.

கடந்த ஒக்ரோபர் மாதம் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. எனினும் சிறுமி அதுபற்றி வெளியே எவருக்கும் கூறவில்லை. கடந்த வாரம் கொடிகாமம் செல்வதற்காகப் புறப்பட்ட இந்தச் சிறுமி வழி தெரியாமல் மானிப்பாயில் இறங்கிவிட்டார். அங்கு சந்தேகத்துக்கிடமான முறையில் நின்ற அவரை மானிப்பாய் பொலிஸார் சிறுவர் நன்னடத்தைப் பிரிவினரிடம் ஒப்படைத்துள்ளனர்.

மேற்கொண்ட விசாரணையின் மூலமாகவே சிறுமி துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தப்பட்ட சம்பவம் தெரிய வந்தது. அதனடிப்படையிலேயே இரண்டு சந்தேக நபர்களும் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

சுன்னாகம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் பதின்ம வயதுச் சிறுமியைக் காதலித்துத் திருமணம் செய்வதாகக்கூறி, அவரைப் பாலியல் துஷ்பிரயோகம் செய்த குற்றச்சாட்டில் ஏழாலை, மயிலங்காடு பகுதியைச் சேர்ந்த 22 வயது இளைஞர் ஒருவர் கைதுசெய்யப்பட்டு, நீதிமன்றில் முற்படுத்தப்பட்டுள்ளார்.

அச்சுவேலி பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் பதின்ம வயதுச் சிறுமியைக் கடத்திச் சென்று பாலியல் துஷ்பிரயோகம் செய்த குற்றச்சாட்டில் இருபாலையைச் சேர்ந்த 21 வயதுடைய இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். அவர் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டுள்ளார். - என்றார். (த-4-86)

## மண்டைதீவு வீதிகளுக்கு சோலர் மூலம் மின்சாரம்

யாழ்ப்பாணம், டிசெ.16

மண்டைதீவில் மின்சாரம் இல்லாத வீதிகளுக்கு சோலர் மூலம் மின்சாரம் வழங்கப்பட்டுள்ளது.

இதற்காக அரசு 10 இலட்சம் ரூபா நிதியைச் செலவிட்டுள்ளது என்று கூறப்பட்டது.

எனவே, வீதிகளில் பொருத்தப்பட்ட வீதி விளக்குகளை அந்தப் பிரதேச மக்களே முழுப்பொறுப்புடன் பாதுகாக்க முன்வரவேண்டும்.

வேலணை பிரதேச சபை தலைவர் சி.சிவராசா இவ்வாறு தெரிவித்துள்ளார்.

**புங்குடுதீவில் கடந்த காலங்களில் பொருத் தப் பட்ட சோலர் மின்விளக்குகள் திருடப்பட் டுள்ளன.**

புங்குடுதீவில் கடந்த காலங்களில் பொருத்தப்பட்ட சோலர் மின்விளக்குகள் திருடப்பட்டுள்ளன.

இதனால் கடற்கரைப் பகுதி இப்பொழுது இருளில் மூழ்கியுள்ளது.

அதே போல் 10 இலட்சம் ரூபா செலவில் மண்டைதீவில் 9 சோலர் மின்விளக்குகளும், அல்லைப்பிட்டியில் ஒரு [illegible] விளக்குமாக 10 விளக்குகள் பொருத்தப்பட்டுள்ளன.

இந்த விளக்குகளை பாதுகாக்கும் பொறுப்பு அந்தப் பகுதி மக்களையும், அந்தப் பிரதேச தொண்டு நிறுவனங்களையுமே சாரும்.

எமது பிரதேசத்துக்கு மேலதிகமான சோலர் லைற் வழங்குவதற்கு 15 இலட்சம் ரூபா ஒதுக்குவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே சோலர் லைற் விடயங்களில் மக்கள் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும் என சபைத் தலைவர் மேலும் கூறினார். (ம-50)

## கிராமத்துக்கு மக்கள் பங்களிப்புடனான திட்டம்

யாழ்ப்பாணம், டிசெ.16

கிராமத்துக்கு மக்கள் பங்களிப்புடனான அபிவிருத்தித் திட்டம் விரைவில் தயாரிக்கப்படவுள்ளது.

ஆசிய மன்றத்தின் அனுசரணையுடன் வடக்கில் உள்ள 34 உள்ளூராட்சி சபைகளிலும் இந்தத் திட்டம் விரைந்து முன்னெடுக்கப்படவுள்ளது.

இதற்கான முன்னேற்பாட்டுக் கூட்டம் நேற்று முன்தினம் உள்ளூராட்சித் திணைக்களத்தில் சகல உள்ளூராட்சி மன்ற செயலாளர் மற்றும் அலுவலர்களுக்கும் இடம்பெற்றது.

விரைவில் சபைகளின் தலைவர், செயலாளர்களுக்கான விளக்கமளிக்கும் கூட்டம் இடம்பெறவுள்ளது.

ஒவ்வொரு கிராம அலுவலர் பிரிவுக்கும் ஒவ்வொரு மக்கள் பங்கேற்புத் திட்டம் ஊடான அபிவிருத்தித் திட்டமும் அதற்கான வரவு, செலவுத் திட்டமும் தயாரிக்கப்படும். (ம-41)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லண்டன் / கனடா / அமெரிக்கா / சுவிஸ் / ஜேர்மன் / பிரான்ஸ் / இத்தாலி / டென்மார்க் / அவுஸ்திரேலியா / நியூஸ்லாந்து ஆகிய நாடுகளுக்கு செல்ல இருப்பவர்களுக்கு

## வங்கியில் பணவைப்பு

அரச வங்கியில் 12, 6, 3 மாதங்களுக்கான முன் பின் வங்கியில் பணவைப்பு
**Saving Book - FD- Statement**

விசா பெற்றுக் கொள்வதற்கு தேவையான சகல உதவிகளும் எம்பசி வேலைகள் செய்து தரப்படும்.

**077 4789289**
**077 9122334**

**No. 52 Davidson Road, Colombo 04.**
நேரத்தை முன்கூட்டியே பதிவு செய்துவிட்டு வரவும்.

FLEX Graphic

## வீடு விற்பனைக்கு

மானிப்பாய் - இணுவில் வீதியில் மானிப்பாயில் இருந்து 200m தூரத்தில் இணுவில் வீதிக்கு சற்று அருகில் 2½ பரப்புக்காணியில் அமைந்த வீடு விற்பனைக்குண்டு.
தொடர்பு : 077 656 9911 (28841)(6.11)

## இலவச திருமணசேவை

பல்லாயிரம் உள்நாட்டு, வெளிநாட்டு மணமக்கள் பதிவுகள் தொடர்புகள் முற்றிலும் இலவசம்.
www.mailgroom.com or
www.subamangalam.com

## காணி விற்பனைக்கு

சாவகச்சேரியில் ஹென்ஸ்மென் வீதியில் நீதிமன்றத்துக்கு அருகில் 6½ பரப்புக் காணி விற்பனைக்குண்டு.
தொடர்பு:077 041 6187

## கணித வகுப்புக்கள்

* A/L மாணவர்களுக்கான இணைந்த கணிதம்.
தரம் 9,10,11 மாணவர்களுக்கான கணிதம்
* (தமிழ், ஆங்கில மொழி மூலம்)
பட்டதாரி ஆசிரியரால் கற்பிக்கப்படும்.

இடம்:
யாழ். இந்துக் கல்லூரிக்கு அண்மையில்
தரம் 9,10,11 வகுப்புகளுக்கு ஒவ்வோர் அலகுக்கும் சுயகற்றல் கையேடு இலவசமாக வழங்கப்படும்.
மாணவர்களின் வசதிகளுக்கேற்ப நேர ஒழுங்குகள் செய்யப்படும்.
தொடர்பு:077 086 9315

## கடை வாடகைக்கு

கோண்டாவில் கிழக்குச் சந்தியில், இருபாலை/பலாலி றோட்டில் புதிதாக திருத்தி அமைக்கப்பட்ட 2 கடைகள் வாடகைக்குண்டு.
தொடர்பு : 077 669 7463, 077 438 2566 (26749)(6.11)

## விற்பனைக்கு

Englandலிருந்து கொண்டு வரப்பட்ட லேத் மெஷின், மிலின் மெஷின், செப்பர் மெஷின், Colchestor/Harrison/ Bridgport பாவித்த நல்ல நிலையில் உள்ளது. உடனடி விற்பனைக்குண்டு. தொடர்பு 0714 246060 (பியந்தலை)

## காணி விற்பனைக்கு

பலாலி வீதி, கோண்டாவில் சந்தியிலிருந்து இருபாலை வீதியில் 100 மீற்றர் தூரத்தில் உள்ள வன்னியசிங்கம் வீதியில் 2 பரப்புத் துண்டுகளாக பிரிக்கப்பட்டுள்ள 14 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.
தொடர்பு : 077 900 7481 (c/2600)(6.11)

## CHINA வில் அரசாங்கப் பல்கலைக்கழகங்களில் பட்டப் படிப்பு

(All Universities are recognized by the University Grants Commission of Sri Lanka)

**Degrees in English Medium :**
- MBBS
- Aeronautical Engineering
- Telecommunication Engineering
- Mechatronics Engineering
- International Economics & Trade
- Business Management
- Fashion Designing
- Textile Engineering
- Marine Engineering
- Software Engineering
- Music

Free Consultancy and VISA Assistance
March Intake
Affordable Course Fee with Installments
*Able to Apply with Pending Results

**Win Lanka Educations**
No.38, Madiwela Road, Nugegoda.
Hotline - 077 514 9965 / 0777 813 450
www.winlankaworld.com winlankaworld@gmail.com

## பம்பலப்பிட்டியில்
## Courier Service at your door step
**24 Hours Service**



மிகவும் விரைவில் மிகவும் குறைந்த செலவில் உங்கள் பொதிகள் மற்றும் ஆவணங்கள் உங்கள் வீட்டு வாசலிலே வந்து எமது ஊழியர்களால் பொறுப்பேற்கப்பட்டு உலகின் எந்த ஒரு மூலைக்கும் அனுப்பி வைக்கப்படும்

**X Logistics (Pvt) Ltd**
Tel/Fax : 0094 112593503 / www.xlogistics.biz
**Hotline : 0094773732033 / 0094777759289**
Room No. 10, Community Centre Hall, Bambalapitiya Flats, Colombo - 04.


## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

மண்ணில் 13.02.1926 விண்ணில் 16.11.2012



அமரர்
## முத்தம்மா ஜயாத்துரை

கடந்த 16.11.2012 வெள்ளிக்கிழமை அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவியின் வீட்டுக் கிருத்திய கிரியைகள் இன்று (16.12.2012) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறவுள்ளது. இந்த நிகழ்வில் தாங்களும் தங்கள் குடும்பத்தாரும் வருகை தந்து அவரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அழைக்கின்றோம். அத்துடன் அன்னாரின் இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்டோருக்கும் அனுதாபச் செய்தி தெரிவித்தோருக்கும் நன்றி நவில்கின்றோம்.

கற்பகப்பிள்ளையார் கோயில் வீதி,
உரும்பிராய் வடக்கு,
உரும்பிராய்.

குடும்பத்தினர். (20750) (16.6.7)


## காணி விற்பனைக்கு

கரணவாய் தெற்கில் மூத்த விநாயகர் கோயிலில் இருந்து ஒரு கிலோ மீற்றர் தூரத்தில் 5½ பரப்பு வீடு கட்டக்கூடிய காணி உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு:077 612 6089

## காணி விற்பனைக்கு

தொண்டமானாறு, செல்வச் சந்நிதி ஆகிய சூழலில் 3,4 பரப்பு காணித் துண்டுகள் விற்பனைக்கு உண்டு. யாத்திரிகர்கள், விடுதி, மடம் அமைக்கப் பொருத்தமானது.
தொடர்பு:071 843 4576

## வீடு வாடகைக்கு

நல்லூர், செல்லர் வீதியில் கல்விக் கந்தோருக்கு அருகில் வீடு வாடகைக்கு உண்டு.
தொடர்பு:V.வாமதேவன் தொ.பே.:031 222 7322

## விசா

★ STUDENT விசா - அமெரிக்கா, மோல்டோவா, பிரான்ஸ் (தகமை O/L, A/L, Spoken English).
★ STUDENT விசா - கனடா, அவுஸ்திரேலியா, நியூசிலாந்து (O/L, A/L, IELTS 6.0).
★ UK STUDENT விசா - (O/L, A/L, IELTS 4.0).
★ விசிட் விசா - அவுஸ்திரேலியா (22லட்சம்), கனடா (40லட்சம்), லண்டன் (20லட்சம்), பிரான்ஸ், இத்தலி, ஜேர்மனி, சுவிஸ், கொலண்ட (20லட்சம்), சேர்பியா, உக்ரேன் (8லட்சம்), கியூபா (125000), இஸ்ரேல் (8லட்சம்).
★ போலண்ட் Work Permit விசா - (22லட்சம்)
★ 1 வருட துவரிமை விசா - ஐரோப்பா (மோல்டோவா)-10லட்சம், லித்துவேனியா - 12லட்சம்

வங்கி பணவைப்பு
**Student, Visit, Business**
விசாக்களிற்கான பணவைப்பு
Galaxy International (Pvt) Ltd
198/A/1/1, காலி வீதி, தெகிவளை.
சாரங்கன்:Tel : 0112 721 072, 0774 740 040, 0774 050 690

## Study - Work - Live

Australia, UK, U.S.A, New Zealand, Canada Swiss, Germany, France, Cyprus, Malaysia, Singapore

**Truly Exceptional**
* Pre University Programmes
* Allied Health Science
* Art & Design
* Biotechnology & Life Science
* Business
* Computing & IT
* Engineering
* Hospitality Management
* Law
* Mass Communication
* Post Graduate Studies

**Entry Requirements**
* G.C.E O/L or A/L
* IELTS Not required **
* Free Accommodation **
* Scholarship Available **

**Conditions Apply

Next Intake Feb / Sep 2013

ICS Study Overseas
தொடர்புகளுக்கு
77, Clock Tower Road, Jaffna
021 7306000 , 077 3013060
www.icslanka.com


## கண்ணீர் அஞ்சலி

யா/அல்லைப்பிட்டி பராசக்தி வித்தியாலய ஆசிரியை திருமதி யாழினி தனபாக்கியராசா அவர்களின் அன்புத் தந்தையார் அச்சுவேலி வடக்கு, அச்சுவேலியைச் சேர்ந்த இராமுப்பிள்ளை ஞானதிரன் (R.M.O) அவர்களின் மரணச் செய்தி கேட்டு மிகவும் துயரடைந்துள்ளோம். அவர்களின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர் ஆசிரிய, நலன்புரி கழகம்.
யா/ அல்லைப்பிட்டி பராசக்தி வித்தியாலயம். (26743)(2.6.7)


University of Bedfordshire

## Study in the UK

**Great location:** 30 minutes from London
* Scholarships Available
www.beds.ac.uk

- Top 10 University for International Students
- Honorary Doctorate given to Actor Shah Rukh Khan
- Queen's Award for Enterprise : International Trade 2011
- Award: International Student Recruitment Team of the Year 2009

**Admissions Available for February 2013 / April 2013 Intakes**

**Postgraduate / Undergraduate Courses**
MBA, Business & Management, Computing, Marketing, Information Systems, Finance & Accounting, Law, Media, Art & Design, Education, Nursing, Biotech, Public Health, Psychology, Pharmacology, Tourism.

**Overseas Education Centre**
No: 102 A Horton Place
Colombo 7
**Contact No:** 072 222 3600, 011 763 2000, 011 268 2727

**Mr. Loho (Loho Group)**
Lucky Plaza Building. 4/7, 4th Floor, St. Anthony's, Mawatha, Kollupitiya
**Contact No:** 0777 917929, 0773 498660


## SRI LANKAN-GERMAN DEVELOPMENT COOPERATION
# FINANCE VACANCIES

giz Deutsche Gesellschaft für Internationale Zusammenarbeit (GIZ) GmbH

The Deutsche Gesellschaft für Internationale Zusammenarbeit (GIZ) is an international cooperation enterprise for sustainable development with worldwide operations. As a federally owned enterprise, we support the German Government in achieving its objectives in the field of international cooperation for sustainable development. GIZ drives projects that support Sri Lanka's development objectives and works with stakeholders from across the spectrum in the government, public and private sectors. GIZ ensures that its solutions are innovative, humanitarian and economically viable and sustainable in the long term.

The programme Education for Social Cohesion (ESC) is jointly carried out by the Ministry of Education (MoE), the Ministry of Health (MoH) and the National Institute of Education (NIE) with the Deutsche Gesellschaft für Internationale Zusammenarbeit (GIZ). The overall objective of the ESC programme is to support measures in education and psycho-social care which enable children, youths, their families and communities to live together peacefully in a multi-ethnic and multi-lingual society.

**GIZ- ESC** project invites applications from committed professionals for the position of **Project Finance Officer (Trincomalee)** and **Project Finance Assistant (Colombo)** for immediate recruitment.

### PROJECT FINANCE OFFICER (TRINCOMALEE)

A. **Required qualifications, competences /skills and experience**
- CIMA / ICA / ACCA part qualification;
- 5+ years of professional experience with International Organizations or non-Governmental sector;
- Work with a high degree of independence and excellent interpersonal skills and customer service skills;
- Strong computer Skills (Ms office);
- Ability and willingness to travel frequently to workshop venues in the North & East;
- High level of fluency in English and Tamil both verbally and in writing (knowledge of Sinhala advantageous).

B. The detailed job description can be obtained from **giz-hrsrilanka@giz.de**

### JUNIOR PROJECT FINANCE OFFICER (COLOMBO)

A **Required qualifications, competences /skills and experience**
- CIMA / ICA / ACCA part qualification;
- 3+ years of professional experience with International Organizations or non-Governmental sector;
- Work with a high degree of independence and excellent interpersonal skills and customer service skills;
- Strong computer Skills (Ms office);
- Ability and willingness to travel frequently to workshop venues in the North & East;
- High level of fluency in English and Tamil both verbally and in writing (knowledge of Sinhala advantageous).

B. The detailed job description can be obtained from **giz-hrsrilanka@giz.de**

Qualified applicants must submit a cover letter and an updated CV including email & telephone contacts of two professional referees to **giz-hrsrilanka@giz.de** or mail to the Human Resource Unit, GIZ-Colombo, No.6, Jawatte Avenue, Colombo 5, before cob 22 December 2012.

We thank all applicants but only the candidates who meet all the listed criteria will be invited for an interview/test.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## நவீன கோழிப்பண்ணை விற்பனை

நவாலி வடக்கில் 2000 கோழிகள் சுகாதாரமாக வளர்ப்பதற்கும், நவீன முறையில் கோழிப்பண்ணையை நடத்துவதற்கும் ஏற்ற வகையில் அமைந்த கோழிப்பண்ணை விற்பனைக்குண்டு.

தொடர்பு: 077 8350 478, 077 905 0213

(26838) (43,6,7)



## AAT புதிய பிரிவுகள் ஆரம்பம்

**கணக்கியல் துறையில் சிறந்த வேலைவாய்ப்பை பெற விரும்புகிறீர்களா!**

Spectra skills இல் AAT கற்கை நெறியை பூர்த்தி செய்யும் அனைத்து மாணவர்களுக்குத் தொழில் பெறுவதற்கான வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்கிறோம்.

uØ@£õx |v¯ ¤IÄPÐ UPõÚ £vÄPò |ehõ£ÖQ® Óx. O/L பரீட்சையில் 6 பாடங்களில் சித்தியடைந்த அனைத்து மாணவர்களும் இக் கற்கை நெறியை தொடரலாம்.

**Spectra Skills**
19, Stanley Road, (People's Bank, 2nd Floor), Jaffna.

Tel: 021 222 1422, 021 222 1423.

(26835) (6,7,20)


## மரண அறிவித்தல்

### முத்துக்குமாரு நடராஜா



(இளைப்பாறிய தபால் அதிபர்)

தொட்டிலடி, சங்கானையை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட இளைப்பாறிய தபால் அதிபர் முத்துக்குமாரு நடராஜா 11.12.2012 காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற முத்துக்குமாரு-பார்வதிப்பிள்ளையின் மூத்த மகனும், இராஜ ராஜேஸ்வரியின் (சோதி) அன்புக் கணவரும், சத்தியபாமா, கேமலதன் ஆகியோரின் அன்புத் தந்தையும், ஞானசந்திரன், சுபாசினி ஆகியோரின் அன்பு மாமனாரும், நிவியா, மதீசன் ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்ற தேவராஜா, ஞானேஸ்வரி ஆகியோரின் சகோதரனும், காலஞ்சென்ற கோபாலசிங்கம், வரதம், சண்முக லிங்கம், சரஸ்வதி, காலஞ்சென்ற பொன்னம்பலம், யோகேஸ்வரி, கனகபாலன், அழகேஸ்வரி, தவபூசனி, மதியாபரணம் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 11.12.2012 அன்று நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
தொட்டிலடி, சங்கானை. (C/2601) (10,6,7) குடும்பத்தினர்.

## மாணவர் கௌரவிப்பு

பருத்தித்துறை இலங்கை வங்கிக் கிளையில் சிறுவர் கணக்கைப் பேணிவரும், 5 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த 41 மாணவர்கள் கௌரவிக்கப்பட்டனர்.

வங்கிக் கிளை முகாமையாளர் எஸ்.தர்மராஜா தலைமையில் அண்மையில்நடைபெற்ற இந்தக் கௌரவிப்பு நிகழ்வில் இலங்கையின் வடமாகாண உதவிப் பொது முகாமையாளர் எஸ்.சுமண சிறி பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு மாணவர்களைக் கௌரவித்தார்.

இந்த நிகழ்வில் பருத்தித்துறை வர்த்தகர் சங்கத் தலைவரும், நகரசபை உபதலைவருமான சி.பத்மநாதன், வர்த்தகர் க.தங்கராசா உட்பட பலர் கலந்துகொண்டனர். (ம-8)

## பட்டம் விடும் சீசன் ஆரம்பம்

வடமராட்சி பிரதேசத்தில் பட்டம் விடும் சீசன் ஆரம்பமாகியுள்ளது.

சிறுவர்கள் முதல் பெரியோர்கள் வரை விதம் விதமான வடிவங்களைக் கொண்ட பட்டங்களைக் கட்டி பறக்க விடுவதில் ஆர்வம் காட்டி வருகின்றனர்.பட்டம்விடும் சீசன் எதிர்வரும்தைப்பொங்கல் தினம் வரை நீடிக்கும் இச் சீசன் காலத்தில் சில அமைப்புக்களால் பட்டம் விடும் போட்டியும் நடத்தப்படுவதுண்டு. (ம-8)


# VACANCIES @



ESOFT The Leader in Professional ICT Education

Join Srilanka's #1
Northern Region

VACANCIES @ ESOFT

**LECTURER in IT**
Should possess degree or higer Diploma in relevent field. Experience in lecturing for atleast one year is essential. ability to on weekends is must.

**ASS . LECTURER in IT – Kilinochchi**
Should possess degree or higer Diploma in relevent field. Conducting the Programming or Hardware & networking moduels. Able to work in Jaffna, Kilinochchi.

**LECTURER in ENGLISH**
Able to conducting Diploma in English, IELTS & City& guilds Courses.

**MARKETING EXCUTIVIES**
With or without part qulifications in marketing. Must have a pleasant, outlooking personallity. shoud be have a motor bike.(commission basics)

**NETWORK & HARDWARE ADMINISTRATOR**
Should be qualified in the relevant field and have the ability to conduct classes and also coordinate the programs and maintain the labs.

**HOW TO APPLY**
Send your CV **within 10 Days** to reach The Manager. mark the position that you are applyng for on the top left corner of the Envelope.

(C/2606) (2,6)

ESOFT The Leader in Professional ICT Education
ESOFT Metro Campus -Jaffna
137 K K S Road Jaffna.
Hotline:077 3099308 Tel:021 222 4142
Mail : jaffna@esoft.lk Web : www.esoft.lk


## மரண அறிவித்தல்

### N.R.தம்பிராசா பத்தர் லீலாவதி



மட்டக்களப்பு, ஆரயம்பதியை பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம், நாச்சிமார் கோயிலடியை வசிப்பிடமாகவும் தற்போது உடுப்பிட்டி, செல்வம் மில் வீதியை வதிவிடமாகவும் கொண்ட தம்பிராசா பத்தர் லீலாவதி 12.12.2012 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னையா பத்தர்-சந்தனம் தம்பதியரின் செல்வப் புதல்வியும், காலஞ்சென்றவர்களான இராமகுட்டி-சின்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும், தம்பிராசா பத்தரின் அன்பு மனைவியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (16.12.2012) ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 11 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் உடுப்பிட்டி வல்லை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
த.பாலசுந்தரர்(சிட்டிபாலா)-077 5012728,
த.நாராயணசுந்தரர்(சுந்தரம்) 077 694 8555,
த.தியாகராசா (வேலன்-சுவிஸ்)
த.சிவஞானசுந்தரர்(காந்தி-பிரான்ஸ்).

செல்வம் மில் வீதி,
இமையாணன் மேற்கு,
உடுப்பிட்டி. (25564)(5 6 7)

## மரண அறிவித்தல்

### திருமதி அப்புத்துரை இராசம்மா

புத்தூர் கிழக்கு, புத்தூரை பிறப்பிட மாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அப்புத்துரை- இராசம்மா நேற்று முன்தினம் (14.12.2012) வெள்ளிக்கிழமை சிவபதமடைந்து விட்டார்.



அன்னார் காலஞ்சென்றவர்களான இராமலிங்கம்-பொன்னம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான பொன்னர்-ஆச்சிப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற பொன்னர் அப்புத்துரை அவர்களின் அன்பு மனைவியும், புஸ்பராணி, கருணாகரன் (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும், இராசையா அவர்களின் அன்புச் சகோதரியும், நாகலிங்கம் தேவானந்தன் (இளைப்பாறிய உத்தியோகத்தர், கரவெட்டி பிரதேச செயலகம்), கருணாகரன் விமலநாயகி (கனடா), சத்தியபாமினி, விஷ்ணுகரன் (கனடா), சதீஸ்கரன் (கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும், சிவக்கொழுந்து, காலஞ்சென்ற சின்னத்துரை மற்றும் செல்லையா, காலஞ்சென்ற பரமு பரமேஸ்வரி ஆகியோரின் மைத்துனியும், தர்ஷாஜினி, துலக்சன், சிந்து கோபன் (கனடா), கிர்ஷோக் (கனடா) ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.12.2012) ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் அந்திரான் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
புத்தூர் கிழக்கு, புத்தூர். (26833) (10,6,7) குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

## வைத்திலிங்கம் தியாகராசா

[இளைப்பாறிய ஆசிரியர்,யா/ஸ்ரீ சோமஸ்கந்தா கல்லூரி,புத்தூர்.]



காரைநகர்,பலகாட்டை பிறப்பிடமாகவும் புத்தூர் மேற்கு புத்தூரை வசிப்பிடமாகவும் கொண்ட வைத்திலிங்கம் தியாகராஜா 10.12.2012 காலமாகிவிட்டார்.

அன்னார் காரைநகர், பலகாட்டைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம்-தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், புத்தூர் மேற்கு புத்தூரைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான மலாயன் பென்சனியர் ராமலிங்கம்-பொன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற அன்னம்மாவின் அன்புக் கணவரும், சத்தியபாமா (வலயக் கல்வி அலுவலகம்- யாழ்ப்பாணம்), சிவானந்தராஜா (சுவிஸ்), பாஸ்கரராஜா(கனடா), சிவசோதிராஜா (பிரான்ஸ்), சிவனேசராஜா(ஆசிரியர்,தம்பசிட்டி தமிழ்க்கலவன் பாடசாலை), ரவீந்திரராஜா(கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும், ஸ்ரீகரன்(நிர்வாக உத்தியோகத்தர் சமூக சேவைகள் திணைக்களம்-கைதடி), உமா(சுவிஸ்), கேதீஸ்வரி(கனடா), அனுஷா (பிரான்ஸ்),சுவர்ணாதேவி(யா/சிறுப்பிட்டி இ.த.க.பாடசாலை), சுகுணா(கனடா) ஆகியோரின் அன்பு மாமனும், பாக்கியம், பொன்னம்மா, காலஞ்சென்ற நமசிவாயம் மற்றும் சிவசம்பு, தர்மலிங்கம், கந்தசாமி, பரமசாமி, தம்பிராசா, தம்பிஜயா, பரஞ்சோதி ஆகியோரின் அன்புச் சகோதரனும், புத்தூர் மேற்கு புத்தூரைச் சேர்ந்த தவமணி, காலஞ்சென்ற கந்தசாமி ஆகியோரின் மைத்துனரும், தருசன், விஜிதரன், கோபிதன், கபிலா, ஹரனி, பிருத்திகா, பிரவிணன், வினோதன், துவாரகன், பவிதன், நிசானி, கவிஷ்னா, யசினா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் புத்தூர் மேற்கு, புத்தூரில் உள்ள அவரது இல்லத்தில் நாளை(17.12.2012) திங்கட்கிழமை காலை 9.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக புத்தூர் கிந்து சிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

9 ஆம் கட்டை,
புத்தூர் மேற்கு, புத்தூர். (26822)(5-6-7)

தகவல்:
பிள்ளைகள்.

## புகையிலை செய்கையில் ஆர்வம்

வடமராட்சி, டிசெ.16

வலிகாமம், தென்மராட்சி, தீவகப் பிரதேசங்களில் புகையிலைச் செய்கையில் ஈடுபடும் விவசாயிகள் வடமராட்சி பிரதேசத்தில் புகையிலை நாற்றுக்களைக் கொள்வனவு செய்து வருகின்றனர்.

புகையிலை நாற்று உற்பத்தியில் பிரபல்யம் பெற்ற பொலிகண்டி, புலோலி ஆகிய இடங்களில் விவசாயிகளால் அமைக்கப்பட்ட நாற்று மேடைகளில் இருந்து குறிப்பிட்ட பிரதேச விவசாயிகள் புகையிலை நாற்றுக்களைப் பெற்று வருகின்றனர்.

தற்போது புகையிலை நாற்று 3 ரூபா தொடக்கம் 4 ரூபா வரை விற்பனை செய்யப்பட்டு வருகின்றது. (ம-8)

உதயன் விளம்பரத் தொடர்புக்கு
advt@uthayan.com
0215671111

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
25.12.1942

மறைவு
28.12.2011

திதி:- 16.12.2012

அமரர்

## செல்லர் குணபாலசிங்கம்

[குணம்]

நேசத்துடனும் பாசத்துடனும்
எமை வளர்த்து
நேர்வழியில் வாழ வைத்து
இதயக் கனவுகளை அகிலத்தில்
நிறைவேற்றிய எங்கள்
அன்புத் தெய்வத்தை
எம் உள்ளங்களில் இருத்தி
எந்நாளும் வணங்குகின்றோம்.

உரும்பிராய் மேற்கு,
உரும்பிராய். (C/2183)(2.6.7)

குடும்பத்தினர்.



## வீடு விற்பனைக்கு

விளையாட்டரங்க வீதி, கல்வியங்காட்டில்
4½ பரப்புக் காணியுடன் கூடிய வீடு
விற்பனைக்குண்டு.
(தரகர் தேவையில்லை)
தொடர்பு: 077 6454 980
(28827)(45.6.7)

## வேலையாள்கள் தேவை

25,000/= சம்பளத்திற்கு எங்களுடைய க்ளவுஸ் உற்பத்தி செய்யும் கம்பனிக்கு 16-55 வரை ஆண்கள், பெண்கள் தேவை. சாப்பாடு, தங்குமிட வசதி உண்டு. குழுக்களாகவும் வரலாம். வரும் அன்றே வேலைக்கு சேர்த்துக் கொள்ளப்படுவர்.
தொடர்பு : 077 3032004, அனுராதபுரம்.
(24365)(6.11)

## வீடு வாடகைக்கு

கட்டப்பிராய், பருத்தித்துறை வீதியில் 7 அறைகள், 2 சமையலறை கொண்ட வீடுவாடகைக்குண்டு. (நிறுவனங்கள், களஞ்சியங் களுக்கு உகந்தது).
தொடர்பு : பிள்ளையார் குவார்ஸ்,கட்டப்பிராய், கோப்பாய் தெற்கு, கோப்பாய்.
077 376 7985
(26709)(6.11)

## வீடு வாடகைக்கு

தொழில் நுட்பக் கல்லூரிக்கு முன்பாக பிறவுண் வீதியில் சகல வசதிகளுடன் கூடிய வீடு முதலாம் மாடியில் வாடகைக்கு உள்ளது.
நிறுவனங்களுக்கு மட்டும்.
தொடர்பு : 077 233 6238
(26774)(6.11)

## விற்பனைக்கு

மாருதி கார் 800CC,
சாப்பாட்டுக் கண்ணாடி
மேசை, கறுப்பு Pleasure
விற்பனைக்குண்டு.
தொடர்பு : 175, பருத்தித்துறை வீதி,
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்,
(26803)(6.11)

## வீடு விற்பனைக்கு

மானிப்பாய் வீதி, ஓட்டுமடம் சந்தியில் இருந்து யாழ் கோக்கி 50 மீற்றர் தொலைவில் 3 பரப்புக் காணியில் 6 அறைகள் கொண்ட சகல வசதிகளுடன் கூடிய வீடு விற்பனைக்குண்டு.
விலை: 1, 30 இலட்சம்
தரகர் தேவை இல்லை.
தொடர்பு : 077 312 7083
(26807)(6.11)

## வாகன விற்பனை

வெள்ளை நிற ரொயாட்டா, முதல் பதிவு 1998, ருவல்ரசி இல - 252 XXXX, DX சொற் மொடல் (1994) டொல்பின் விலை லீஸ் இல்லாமல் 31 75000/ ரூபா, லீசுடன் (NTB Bank) 23, 75 000/ ரூபா டிசெம்பர் மாதம் 2012 மட்டும்.
தொடர்பு : 077 667 9617, வவுனியா.

## பணியாள்கள் தேவை

15,000/ , 20,000/ , 25,000/ வரை சம்பளத்திற்கு எங்களுடைய பிரதான காரியாலயத்தில் வேலை வாய்ப்பு கிளாக், சுப்பவைசர், ஸ்ரோகீப்பர், எக்கவுண்டர் 18- 40 வயது வரை, O/L, A/L படித்த ஆண்கள் பெண்கள் தேவை. அனுபவம் தேவையில்லை.
உணவு, தங்குமிடம் உண்டு.
தொடர்பு : 071 3460295, அனுராதபுரம்.
(24369)(6.11)

## வீடு வாடகைக்கு தேவை

சங்கத்தானை இந்துக் கல்லூரியில் கல்வி கற்பிக்கும் ரீச்சருக்கு இரண்டு அறைகள், ஒரு விறாந்தையுடன் கூடிய வீடு நுணாவில் சந்தியிலிருந்து சங்கத்தானை வரை A9 வீதிக்கு அண்மையாகவும் அதே சந்தியிலிருந்து மட்டுவில் தெற்கு பாடசாலை வரை வீதியருகிலும் வீடு தேவை.
(26828)(6.11) தொடர்பு : 077 687 2679

## வவுனியாவில் கடை வாடகைக்கு

93 அடி நீளமும், 11 அடி அகலமும் கொண்ட கடை (ஆதி விநாயகர் முன்பாக ) வாடகைக்கு விடப்படும்.
* ஹோட்டல்கள் தவிர்க்கப்படும்.
* தரகர் தேவையில்லை.
முகவரி: இல 66, மதகுவைத்த குளம் வீதி, வைரவபுளியங்குளம் வவுனியா. (24362) (6.7.4)
தொடர்பு: 024 2220112

## காணி விற்பனை

பழைய பொலிஸ் நிலைய ஒழுங்கை, சுன்னாகத்தில் (நாகம்ஸ் திரை அரங்குக்கு அருகில்) பிரதான வீதியில் இருந்து 150 மீற்றர் தூரத்தில் அமைந்துள்ள ஆறு பரப்பு காணி உடனடியாக விற்பனைக்குண்டு.
தொடர்பு:
0777 222 468, 0777 222
(26396)

## கல்வி

தரம் 6 முதல் O/L வரை கணிதம் புதிய ஆண்டுக்கான வகுப்புகள் பல்வருட அனுபவமுடைய ஆசிரியரால் வீடு வந்து தனி/குழு வகுப்புகள் மாணவர் தரத்துக்கேற்ப சிறந்த முறையில் கற்பிக்கப்படும்.
தொடர்பு: 077 9370 228
(28664) (45.6.7)

## வேலையாள்கள் தேவை

சம்பளம் 18,000/ , 25,000/ , 30,000/ வரை எங்கள் தனியார் விமான நிலையத்துக்கு கிளீனர், பாதுகாப்பு, உத்தியோகத்தர் [illegible]
18 வயது [illegible] 50 வயது வரை
[illegible]
தொடர்பு: 077 4568 264



# முதலாமாண்டு நினைவஞ்சலி

திருமதி

## பொன்னையா அன்னலட்சுமி



தாய்மடி
12.06.1932

இறையடி
28.12.2011

திதி: சதுர்த்தி

மாண்டழிந்து போனாலும்
மறக்க மாட்டோம் எம் அன்னையே!
ஆண்டு ஒன்று ஆனாலும்
ஆறாது எம் கவலை
எம் கவலை சொல்லியழ
புவி தன்னில் யாருமில்லை
என்றும் நினைவுடன்

மடத்தடி வீதி,
கொடிகாமம்.

(சீ/2190)(45-6-7)

வே. பொன்னையா (கணவர்)
பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2013 இற்கான புதிய அனுமதிகள்

## BBC ஆங்கில மொழி மூல பாலர் பாடசாலை

11 வது வருடத்தில்

| வயது 2+ முதல் வயது 3+ வரை | வயது 3+ முதல் வயது 4+ வரை | வயது 4+ முதல் வயது 5+ வரை |
| --- | --- | --- |
| Play Group | Montessori | Pre School |

இப்பொழுது பெற்றோர்களின் வசதி கருதி எமது சில வளாகங்கள் இடமாற்றப்பட்டுள்ளன.

கற்பித்தல் முறை:

- ★ சர்வதேச ரீதியாக அங்கிகரிக்கப்பட்ட Dr. Maria Montessori + Canadian ECE Method
- ★ தமிழ் கட்டாய பாடம்.
- ★ ஆங்கில மொழி மூல கற்பித்தல்
- ★ சிறார்களின் திறமைகளை வெளிக் கொணரும் நிகழ்ச்சிகளில் சகலரும் பங்கு பெறுவார்.
- ★ விளையாட்டுப் போட்டி. English Concert, முத்தமிழ் விழா. சித்திரக்கைவேலைக் கண்காட்சி. Graduation Ceremony.

பாலர் பாடசாலை வளாகங்கள்

தலைமைக் காரியாலயம் → யாழ்ப்பாணம் 64, கோயில் வீதி, யாழ்ப்பாணம்

| | |
| --- | --- |
| யாழ்ப்பாணம் | நீர்வேலி |
| கொக்குவில் | சாவகச்சேரி Hindu College Primary School அருகாமை |
| மானிப்பாய் 1 | அச்சுவேலி ஆதார வைத்தியசாலை அருகாமை |
| மானிப்பாய் 2 | சங்கானை |
| சுன்னாகம் Dr. சபாரத்தினம் வீதி சுன்னாகம் | வடமராட்சி |

## சனி, ஞாயிறு மற்றும் வார நாட்களில் ஆங்கில வகுப்புகள்

- Certificate in English
- Diploma in English — G.C.E (O/L), (A/L)
- ESOL A1, A2 — Sponsor Scheme
- IELTS

பாடசாலை மாணவர்களுக்கான ஆங்கில வகுப்புகள்

- ★ Pre Foundation
- ★ Foundation
- ★ Level 1,2,3,4

பாடசாலை பாடத்திட்டத்திற்கமைய ஆங்கில பாடநெறிகள்

British Business College

## BRITISH BUSINESS COLLEGE

64, கோயில் வீதி, யாழ்ப்பாணம்.

Tel:021 222 5796, 077 362 7055

British Council இனால் அங்கிகரிக்கப்பட்ட பரிட்சை பதிவு நிலையம்.

Registered as an Education & Training Company with the Registrar of Companies - Sri Lanka. Reg. No: P 9718


# பாராட்டி வாழ்த்துகின்றோம்

பேராசிரியர் டாக்டர்

## நவரத்தினலிங்கம் விவேகானந்தா

MOPHD




பண்டார நாயக்கா ஞாபகார்த்த மண்டபத்தில்
25.11.2012 இல் 50ஆவது உலக வைத்திய மாநாட்டில்
Sir John GRAND MASTER அவர்களால்
Sir Dr.Kein Sir Dr. INDIRABALA,
(இலங்கை திறந்த பல்கலைக்கழகம்) காலஞ்சென்ற
ஸ்தாபகர் Anton Jaya Sooriya Grand Master ஆசியுடன்
இன்னும் 40 இற்கு மேற்பட்ட Sir பட்ட நிபுணர்கள் முன்னிலையில்
Sir பட்டம் இவருக்கு வழங்கப்பட்டது.
இவர் இறுப்பிட்டி, புங்குடுதீவு 4ஆம் வட்டாரம்
திருவாளர் நல்லதம்பி நவரத்தினலிங்கம்,வேலணை மேற்கு
தலையாட்டி,8ஆம் வட்டாரம் அருளம்பலம் சரஸ்வதி தம்பதியரின்
தவப்புதல்வரும் ஆவார். இவர் மேன்மேலும் பல பட்டங்களைப்
பெற்று சிறப்புடன் வாழ வேண்டும்
என இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

இவரை வாழ்த்துவோர்:
மனைவி திருமதி தவமணி விவேகானந்தா,
பிள்ளைகள் சாய்,சாய்நாத், வ.ஆ.தங்கமயில்(சித்தர் குழு)
தமிழ்ச்செல்வி (ஆசிரியர்), சித்தப்பா கருணா குடும்பத்தினர்
(ஓய்வுபெற்ற கிராம உத்தியோகத்தர்)சுவிஸ் சித்தர் குழு.
வேலணை.

(25561)(5.6.7)

# பாராட்டி வாழ்த்துகின்றோம்

தென்மராட்சியில் ஆரம்பக் கல்வியில் அறிவொளி பரப்பும் அன்பொளி கல்வி நிலையத்தில் கல்விகற்று புலமைப்பரிசில் பரீட்சை – 2012 இல் சித்தியடைந்த மாணவர்களுக்கான பரிசளிப்பு விழா

16.12.2012 ஞாயிற்றுக்கிழமை பி.ப 2.00 மணிக்கு ஐங்கரன் மணிமண்டபத்தில் நடைபெறவிருக்கும் பரிசில் விழாவில் பதக்கங்களையும் பரிசில்களையும் பெறும் மாணவச் செல்வங்கள்.



ம. கோபிதன் புள்ளி - 188 | சி. அபிசன் புள்ளி - 179 | ஜெ.ஜெயமதுரா புள்ளி - 175 | ப. சுகுணதாஸ் புள்ளி - 168 | உ. மிதிலா புள்ளி - 165 | சி. கதம்பவி புள்ளி - 164 | ம. ஆரணி புள்ளி - 164 | சி.ஆதிரை புள்ளி - 162 | இ. பிரணவி புள்ளி - 162 | ம. மரியயூட்நிக்ஷன் புள்ளி - 161



ம. ஷபரினி புள்ளி - 160 | சு. ஆஞ்சிகன் புள்ளி - 159 | ர. மதுசனா புள்ளி - 158 | ஜெ. ஜெகதீஸ்வரன் புள்ளி - 157 | பி. துஷாந் புள்ளி - 156 | கெ. மதுசங்கர் புள்ளி - 151 | அ. கபிலன் புள்ளி - 150 | த. கனிஸ்ரன் புள்ளி - 150 | சு. வித்தகன் புள்ளி - 150 | மு. அபிஷேக் புள்ளி - 149



ம. கஜானி புள்ளி - 149 | சு. ஜெசீபன் புள்ளி - 148 | இ. சினேக்கா புள்ளி - 148

இம் மாணவர்களைப் பாராட்டி வாழ்த்துகின்றோம். இவர்களுடன் தென்மராட்சியில் சித்தியடைந்த ஏனைய மாணவர்களையும், உயர்வான புள்ளிகளைப் பெற்றும், வெட்டுப்புள்ளியால் சித்தியடையத் தவறிய ஏனைய மாணவச் செல்வங்களையும் வருங்காலத்தில் முயற்சியுடன் படித்து கல்விப் பாதையில் வெற்றிகள் பெற்றிட பாராட்டி வாழ்த்துகின்றோம்.

பெற்றோர்கள், ஆசிரியர்கள்

அன்பழகன் ஆசிரியரிடம் அன்பொளி கல்வியகம் யாழ்ப்பாணத்தில் கற்ற மாணவர்களில் உயர் புள்ளி பெற்றவர்களையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்!



பா. அபிராம்-193 யாழ். மா.நிலை-1 | க. கீர்த்திகன் -191 யாழ். மா.நிலை-2 | லோ.வைஷ்ணவி-191 யாழ்.மா.நிலை- 2 | ஸ்ரீ. ஆரணி -190 யாழ். மா.நிலை-5 | உ. வரஜித்-189 யாழ்.மா. நிலை-6



ர. கீர்த்திகா-189 [illegible] | ம. கோபிதன்-188 [illegible] | கே. கார்த்திபன்-187 யாழ். மா.நிலை-11 | ந. சிவமைந்தன்-187 யாழ். மா. நிலை-11 | த. வைஸ்ணவி-187 யாழ். மா.நிலை-11

அன்பொளி கல்வி நிலையம்
தபாற்கந்தோர் வீதி,
சாவகச்சேரி.

"சின்ன விழி அசைத்து சிரித்துவரும் சித்திரங்களை
அள்ளி அணைத்து அரிய கல்வி ஊட்டிடுவோம்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## A/L, O/L முடிவடைந்ததா? உங்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம்

18 - 30 வயதுக்குட்பட்ட ஆண்கள், பெண்கள் எமது சிறந்த தொழிற்பட்டறைகள் பலவற்றுக்கு பொதி செய்தல், மேற்பார்வை செய்தல், களஞ்சியப்படுத்தல் போன்ற பிரிவுகளுக்கு ஆள் சேர்ப்பு செய்யப்பட இருக்கின்றார்கள்.
சம்பளம்: 18,000/ - 25,000/ வரை
முகவரி: புதிய பஸ்தரிப்பிடம், அனுராதபுரம். தொடர்பு: 077 3032 004

## வாடகைக்கு

முல்லைத்தீவு நகரின் மத்தியில் Show room அமைப்பதற்கு 10,000 சதுர அடி இடம் வாடகைக்குண்டு.
தொடர்பு: 077 723 8378

## கணக்காளர் தேவை

கணக்காளர் கம்பனி ஒன்றுக்கு ஓய்வுபெற்ற கணக்காளர் ஒருவர் தேவை. வயதெல்லை 55இற்கு உட்பட்டவராக இருத்தல் வேண்டும்.
தொடர்புகளுக்கு:
maswin 555@vrt-group.com
T.P. 077 3017 994

## காணி குத்தகைக்கு

நெல்லியடி சந்திக்கும் NSB வங்கிக்கு அருகில் வங்கி அலுவலகங்களுக்கு உகந்த கட்டடம் அமைக்கக் கூடிய காணித்துண்டு குத்தகையாக வழங்கப்பட உள்ளது. தேவைக்கு தகுந்த மாதிரி கட்டடம் அமைத்துக் கொடுக்கப்படும்.
தொடர்பு: 077 7778 587

## முன்னைய இடத்துக்கு மாற்றப்பட்டுள்ளது

யாழ் கலாலயா பயிற்சியகம்
Yaarl Kalaalayah Academy Jaffna

பெருமாள் கோயிலுக்கு அண்மையாக இயங்கி வந்த மேற்படி பயிற்சி நிலையம் தனது ஆரம்ப கால இடமாகிய **யாழ். போதனா வைத்தியசாலைக்கு பின்புறமாகவுள்ள விக்ரோறியா வீதியில்** தற்போது இயங்க ஆரம்பித்துள்ளது என்பதை அறியத் தருகின்றேன்.

- இயக்குநர் -

## குழந்தையின்மையா? கவலை வேண்டாம்

உயிரணுக்கள் உற்பத்தியின்மை/ குறைவு- முழுமையாக குணமடைய

### உலகிலேயே NO:1 வைத்தியம்



**குழந்தையின்மை:** குழந்தையின்மைக்கு ஆண், பெண் இருவரும் காரணமாகின்றார்கள். பெண்கள் 50 சதம் காரணம் என்றால் 40 சதம் ஆண்களே காரணமாகின்றார்கள். 10 சதம் இருவரும் குழந்தை வேண்டாம் என்று இருப்பது. இதில் கணவன்,மனைவி இருவரும் ஒரு நாளைக்கு பலமுறை முழுமையான தாம்பத்திய உறவில் ஈடுபட்டு வந்தாலும் ஆண்களிடமிருந்து வெளியாகும் விந்துவில் 60%க்கும் மேல் உயிரணுக்கள் இருந்தால் மட்டுமே ஒரு பெண்ணை கருத்தரிக்கச் செய்ய முடியும். ஆனால் 60%க்கும் குறைவாக இருந்தால் கருத்தரிக்கச் செய்ய முடியாது. இப்படிப்பட்ட ஆண்களுக்கு உயிரணுக்கள் உற்பத்தியின்மை/குறைவு போன்ற பிரச்சினைகளுக்கு 100 சதம் உத்தரவாதத்துடன் குணமடைய சிகிச்சையளிக்கப்படுகின்றது. இது போன்று பெண்களுக்கு ஏற்படும் கர்ப்பப்பை பிரச்சினை மாதப்பிரச்சனைகளிலிருந்தும் முழுமையாக குணமடைந்து குழந்தை பாக்கியம் பெறுவது உறுதி. பல நடிகைகள் எங்களிடம் சிகிச்சை பெற்று அழகான, இயற்கையான, கட்டுக்கோப்பான உடலமைப்பைப் பெற்றுள்ளனர். இந்த மருந்துகள் அனைத்தும் அரசு ஆய்வுகூடத்தில் பரிசோதனை செய்த பின்பே சிகிச்சைக்குத் தரப்படுகின்றன. எனவே 100 சதம் பக்கவிளைவுகள் கிடையாது. சிறப்புச் சிகிச்சைக்கு அரசு பதிவு பெற்ற சித்த மருத்துவர் Dr. G. ஜெகதீஸ்குமார் அவர்களைத் தொடர்பு கொள்ளவும்.

பெண்களுக்கு ஏற்படும் குழந்தையின்மை மற்றும் சகல பிரச்சனைகளிற்கும் டொக்டர்.டி.தேவி அவர்களை தொலைபேசியில் தொடர்பு கொள்ளலாம் (பெண்கள் மட்டும்). 0091 9600336009

**தொடர்பு : 0091 9842457673**

**இலங்கையில் தொடர்பு : 075 4154346**

**ஸ்ரீதேவி சித்த ஆயுர்வேத வைத்தியசாலை**
இராமாபுரம், சென்னை-89, இந்தியா.
E-mail: sridevisiddha@gmail.com (சி/2579) (6.7)

## தென்னிந்திய புகழ் அர்ச்சனா அக்கடமியின் ஆடைகளில் அச்சுக்கலை பயிற்சி - யாழில்

### Fabric Printing Training



சாரி, சுடிதார், ரீ-சேட் ஆடைகள் மற்றும் துணிகளில் பல வர்ணங்களில் டிசைன்களை வீட்டிலிருந்தே இலகு முறையில் குறைந்த முதலீட்டில் தென்னிந்திய தொழில் நுட்பத்துக்கமைய பிரிண்டிங் செய்யும் நுட்பங்கள் தொடர்பான விரிவுரைகளும், முழு நேர செய்முறை பயிற்சிகளும் 2 நாள்கள் நடை பெறவுள்ளன.

பயிற்சி நிறைவில் தென்னிந்திய அர்ச்சனா அக்கடமியின் சான்றிதழ் வழங்கப்படும்.
பயிற்சியின் போது மாணவர்கள் பொருள்கள் எதுவும் கொண்டுவரத் தேவையில்லை.
வயது வேறுபாடின்றி இருபாலாரும் கற்கலாம்.
டிசெம்பர் மாதம் 22,23 (சனி, ஞாயிறு) மு.ப. 10 மணி முதல் மாலை 4 மணி வரை
பதிவுகள், விபரங்களுக்கு: 0715863151, 077 728 3192, 077 890 4131

**CHA நிறுவன மண்டபம்.**
**90, பாங்ஸால் வீதி, (Bankshall Street)**
**யாழ்ப்பாணம்.**

விஜய் ரீவியில் திங்கள் காலை 9.50 இந்த நிகழ்ச்சியை பார்க்கலாம்.
குறிப்பு- யாழில் எமக்கு வேறு கிளைகள் இல்லை. (25992)(6.11)

# JAFFNA ELECTRICALS

**DEALERS IN QUALITY ELECTRICAL & ELECTRONIC ITEMS**

ஆரம்பம் 1969

LG Authorized Dealer for Abans Ltd.
Sole Distributor for KML Cables & Pipes




நத்தார் புதுவருடத்தை முன்னிட்டு மாபெரும் விலைக்கழிவும்
இலவச மின் உபகரணங்களும்

கீழ் குறிப்பிட்ட பொருள்களுக்கு மட்டும் இலவச மின் உபகரணங்கள் வழங்கப்படும்
குறிப்பு: கையிருப்பு உள்ள வரை மட்டும்

சகல விதமான மின்சார இலத்திரனியல் உபகரணப்பொருட்கள் pvc நீர்குழாய்கள்,நீர்பம்பிகள் முதலியன கூடிய விலைக்கழிவுடனும் இலவச விநியோக சேவையுடனும் பெற்றுக்கொள்ளலாம்.

15.12.2012 தொடக்கம் 31.12.2012 வரை




(சி/2137) (6.7)

(சி/2137)

No: 94(6) Stanley Road Jaffna
Tel: 021 222 2353
Fax: 021 222 4302
Email:- jaffnaelectricals@yhaoo.com
Web:- www.jaffnaelectricals.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நித்தியசுகத்தை நோக்கி... உதயன் வைத்தியமலர் 94

# எமது பழக்கங்களும் உணவு முறைகளுமே வாய்ப் புற்று நோய்க்குக் காரணங்கள்

மருத்துவர் வ.தேவானந்தம்
பல் மருத்துவர்,
யாழ்.போதனா வைத்தியசாலை.

*''பாலொடு தேன் கலந்தற்றே பனி மொழி வாலெயிறு ஊறிய நீர்''*

என்றான் வள்ளுவன்.


பனிபோன்று குளிர்ச்சியான சொற்களைப் பேசுகின்ற என் காதலியின் பற்களிலிருந்து வருகின்ற நீர் பாலும் தேனும் கலந்தது போன்று இனிமையானது என்பது இதன் பொருள். காதலியின் எச்சில் அமுதம் என்று இலக்கியங்கள் விளிக்கின்றன. எச்சில் அமுதமோ இல்லையோ அது நாற்றமில்லாமல் வாயில் புற்றுநோய் இல்லாமல் இருக்க வாய்ச் சுகாதாரமும் மிகவும் முக்கியமானதாகும்.

புற்றுநோயில் புற்றுநோய்க்கலங்கள் பரவியிருக்கும் போது அக்கலங்களில் ஒட்டுமொத்த வெளிப்புறத் தோற்றம் கால்களை விரித்திருக்கும் நண்டின் தோற்றத்தை ஒத்திருப்பதால் அதற்கு கான்சர் (Can-cer) என மருத்துவ ஆய்வாளர்கள் பெயரிட்டார்கள்.

உலக சுகாதார ஸ்தாபனம் மனித உயிர்களைப் பலி கொள்ளும் முக்கிய பத்துக் காரணிகளில் புற்று நோயும் முக்கியமானது என இனங்காட்டியுள்ளது. யாழ்ப்பாணத்தில் ஆண் புற்று நோயாளர்களில் வாய்ப்புற்று நோயே அதிகமாக காணப்படுகின்றது. இலங்கையில் கூடுதலாக 50 வயதுக்கு மேற்பட்டவர்களில் ஆண்களில் 29.45% பெண்களில் 10% காணப்படுவதாக அண்மைத் தரவுகள் சுட்டிக் காட்டுகின்றன.

புற்றுநோய் என்றால் என்னவென்று விளக்க முற்படுவோமானால் ஒரு காயம் மாறும் போது அந்தக் காயத்தின் இடை வெளி மூட தோலின் இரு பக்கங்களிலுமுள்ள இழைய கலங்கள் (Cells) இரண்டு, நான்கு, எட்டு என்ற பெருக்கங்களில் இடை வெளி மூடும் வரை பிரிகின்றது. காய இடை வெளி மூடப்பட்டதும் சட்டென்ப் பிரிவடைவது நின்று விடும் அடிப்படையாக இழையக் கலங்களிலுள்ள குரோமசோம்களில் எந்த அளவில் கலங்கள் இரட்டிப்படைவது நிறுத்தப்பட வேண்டும் என்ற பதிவிருக்கும். ஆனால் இந்தக் காயம் ஆறிய பின் கலங்கள் இரட்டிப்படைவது நிறுத்தப்படாவிட்டால் என்ன நடைபெறும்? அந்த இடம் தொடர்ந்து வளர்ந்து பெரிதாகிக் கொண்டே போகும். புற்றுநோயில் ஏதாவதொரு காரணியின் (Carcinogen) தூண்டுகை ஓர் இழையத்தின் கலங்களின் DNA யில் மாற்றத்தை ஏற்படுத்தி அல்லது பாதித்து அதில் விகாரத்தை (Mutation) தோற்றுவித்து புற்றுநோய்க் கலங்களாக மாற்றுகின்றது. இவை அசாதாரண அமைப்புடைய கலங்களாகும்.

இக்கலங்கள் தேவையில்லாமல் இரட்டிப்படைந்து புற்றுநோயாக மாறுகின்றது. இக்கலங்கள் இரத்த ஓட்டத்தினூடாகவும், நிணநீரினூடாகவும், இழைய இடை வெளிகளினூடாகவும் ஓரிடத்திலிருந்து இன்னோர் இடத்துக்கு பரவி அங்கும் வளரக் கூடியவை. (Metastasis).




எமது பழக்க வழக்கங்களும், உணவு முறையுமே வாய்ப்புற்று நோய்க்கு காரணிகளாக அமைகின்றன. இந்தப் பாதகமான காரணிகள் ஒன்று அல்லது பலவோ சேர்ந்து செயற்படுவதன் பிரதிபலனாக வாய்ப்புற்று நோய் ஏற்படுகின்றது. புகையிலை, சிகரெட், பீடி, சுருட்டு என்ற வகையிலோ அல்லது வெற்றிலையுடன் சேர்த்து பாவித்தல், வெற்றிலையை பாக்கு சுண்ணாம்புடன் சேர்த்துப் பாவித்தல், வாசனைப் பாக்கை தனியாகப் பாவித்தல், சாராயம், கள்ளு, கசிப்பு என்பன குடித்தல். H.I.V தொற்றுள்ள பெண்களுடன் தொடர்புவைத்திருத்தல், கூரான பாதிப்படைந்த ஆயுதங்களால் பல்லை காயப்படுத்துதல், நீண்ட காலமாகவுள்ள மாறாத புண், விற்றமின் A, விற்றமின் C குறைபாடு, போசாக்கின்மை வாய்ச் சுகாதாரமின்மை போன்றவை முக்கியமாகும்.

புற்று நோய்க்கான எச்சரிக்கை அறிகுறிகள் எவையெனப் பார்ப்போமாயின் வாய் உள்ளக மேலணி நாக்கு அல்லது உதட்டில் உள்ள மாறாத புண், புற்றுநோய் முன்னிலைகளான உரிக்க முடியாத வெண்படலம் அல்லது சிவப்பு படலம் அல்லது சிவப்பு வெள்ளை மாறி மாறி அமைந்த படலம், உணவு விழுங்குவதில் அல்லது அரைத்தலில் கடினமாக இருப்பது, வாய்திறப்பது அல்லது நாக்கை வெளியில் நீட்டுவது படிப்படியாக குறைவடைதல், வாய் அல்லது கன்னத்தில் குறுகிய காலத்தில் அசாதாரண வளர்ச்சியடையும் கட்டி வாயிலிருந்து இரத்தம் வடிதல், வாய்ப் பகுதியில் உணர்ச்சி அற்றுப்போதல், உறைப்பு உண்ணும் போது அதிக எரிவு போன்ற தன்மைகளாகும்.

புற்றுநோயை எவ்வாறு தவிர்க்கலாம் என நோக்கினால் மேற் கூறப்பட்ட பாதகமான காரணிகளை அறிந்து கொண்டு உங்கள் பழக்கவழக்கங்களை மாற்றி அப்பாதகமான காரணிகளைத் தவிர்க்க வேண்டும். உணவுப் பழக்கத்தை கருத்திற் கொண்டால் நாம் பாரம்பரிய உணவு முறைகளைத் தவிர்த்து மேலைத்தேய உணவு முறைகளுக்கு பழக்கப்பட்டு எண்ணெய் கூடிய ஆகாரம், இறைச்சி போன்றவற்றை அதிகமாக உண்டு. கொழுப்புச் சத்துக் கூடி உடல் பருமனும் கூடுகின்றது. அதிக கொழுப்பு அடங்கிய உணவு, அதிக உப்பிட்ட உணவு, அதிக உறைப்புச் சேர்த்த உணவு, பொரித்த கருகிய உணவு, பொரித்த எண்ணெயைத் திரும்பத் திரும்ப உபயோகிப்பது, நிறமூட்டிய உணவு, இறைச்சி வகைகளை திரும்பத் திரும்ப சூடாக்கி உண்ணும் பழக்கம் போன்றவையும் சில வகைப் புற்றுநோய்க்கு காரணமாக அமைகின்றது.

புற்றுநோயைத் தவிர்க்க நார்த்தன்மை கூடிய தானிய வகைகள், பச்சையிலை கறிவகைகள், மஞ்சள் பழவகைகளை அதிகமாக உண்ண வேண்டும். பச்சையிலைக் கறி, மஞ்சள் பழங்களில் விற்றமின் A,C அதிகமாக காணப்படுகின்றது.

விற்றமின் A மேலணிக்கலங்கள் (Ephithelial Cells) ஒன்றுடன் ஒன்று இறுக்கமாகவும் அதன் இயற்கையான தன்மையைப் பேணவும் உதவுகின்றது. விற்றமின் C தொகுப்பிழைய (Connective Tissue) உருவாக்கத்துக்கும் அதன் இயற்கையான தன்மையை பேணவும் உதவுகின்றது. இவற்றின் இயற்கைத் தன்மை பேணப்படும் போது புற்றுநோய்க் காரணிகள் கலங்களில் மாற்றத்தை ஏற்படுத்துவது தவிர்க்கப்படுகின்றது. அத்துடன் எச்சரிக்கை அறிகுறிகளை அறிந்து சந்தேகத்துக்கிடமான வகையில் ஏற்படும் மாற்றங்களை உடனுக்குடன் பல் மருத்துவரிடம் காட்டுவதனால் கண்டறிய முடியும். இதனால் உங்களுக்கு குணமடையும் நோக்கிலான சிகிச்சையை வழங்க முடியும்.

புற்றுநோயை ஆரம்பத்தில் கண்டுபிடித்தால் முற்றாக குணப்படுத்தலாம். புற்றுநோய்ச் சிகிச்சை முறைகளை ஆராய்வோமானால் மூன்று வகை சிகிச்சை முறைகள் கையாளப்படுகின்றன.

அறுவைச் சிகிச்சை முறை (Surgery), கதிர் வீச்சு முறை (Radiation), புற்றுநோய் எதிர்ப்பு மருந்து (Chemo therapy), புற்றுநோய் குறிப்பிட்ட இடத்தில் மட்டும் இருக்குமானால் அறுவைச் சிகிச்சை மூலம் அப்பகுதியை வெட்டி அகற்றிவிடலாம்.

கதிர் வீச்சு முறையில் புற்றுநோய்க் கலங்கள் கொல்லப்படுகின்றன. அல்லது செயலழிக்கப்படுகின்றன. இதனால் புற்றுநோய்க் கலங்கள் மேலும் பிரிவது தடுக்கப்படுகின்றது. கதிர்வீச்சு மருத்துவம் ஆரம்ப நிலையிலுள்ள புற்றுநோயை முற்றாக குணப்படுத்துவதோடு இறுதி நிலையில் கட்டுப்படுத்தவும் செய்கின்றது. புற்றுநோய் எதிர்ப்பு மருந்துகளிலுள்ள கல நச்சு புற்றுநோய் கலங்களைக் கொல்லும் அல்லது செயலிழக்கச் செய்யும்.

புற்றுநோய் எதிர்ப்பு மருந்துகள் வாயால் அல்லது ஊசியால் வழங்கப்படுவதால் இரத்தத்தில் கலந்து வெவ்வேறு பகுதிகளுக்கு எடுத்துச் செல்லப்படக் கூடியவை. இவை இரத்தப் புற்றுநோய் அல்லது பரவும் தன்மையுள்ள புற்றுநோய்களுக்கு அதிகம் பாவிக்கப்படுகின்றது.

வெவ்வேறு வகையான புற்றுநோய்கள் இச்சிகிச்சை முறையில் ஏதாவதொன்றிற்கு அதிகமாக அழிக்கப்படும் தன்மை வாய்ந்தது. சில வகைப் புற்றுநோய்கள் இச்சிகிச்சை முறைகளை இணைத்துச் செய்யும் போது விரைவாக அழிக்கப் படக் கூடியவை.

புற்றுநோய்க்கும் மனதுக்கும் சம்பந்தமுண்டு. புற்றுநோய் என்று கண்டுபிடித்து வெளிப்படுத்துவதிலிருந்து சிகிச்சை முறைகள் கையாளப்படும் வரைக்கும் நோய் மனதைப் பாதித்து மனச்சிதைவுக்கு ஆளாகாமலிருக்க ஆலோசனை முறைகளும் மனநல மருத்துவமும் உள்ளன. புற்றுநோயிலிருந்து மீள வெறும் சிகிச்சை மட்டும் போதாது. அன்பும் அரவணைப்பும் அவசியம்.

புற்றுநோயை ஆரம்பத்தில் இனம் காணுமிடத்து பூரணமாக குணமாக்கும் சிகிச்சை வழங்க முடியும். ★

> **சாட்டி என்ற கிராமம் தவிர்ந்த யாழ்ப்பாணத்திலுள்ள கிணற்று நீரில் நைதரசன் அளவு கூடுதலாக உள்ளதாக தற்போதைய ஆய்வுகள் கூறுகின்றன. இதற்கு முக்கிய காரணமாக அதிகளவு செயற்கை உரங்களை இங்குள்ள விவசாயிகள் பாவிப்பதும், மலசலகூட சேமிப்புத் தாங்கி [Septic tank] கசிவு அடைதலுமே என்று ஆய்வாளர்கள் கருதுகின்றார்கள். செயற்கை உரங்களையும், பீடை நாசினிகளையும் அதிகளவில் பாவித்து பயிராக்கப்படும் மரக்கறி, தானிய வகைகளும் புற்றுநோய் அதிகளவில் யாழ்ப்பாணத்தில் உருவாக காரணமாயிருக்கலாம். இதைத் தவிர்ப்பதற்கு வீட்டுத் தோட்டத்தில் உருவாக்கப்படும் மரக்கறிகளைப் பாவிப்பது நல்லதாகும்.**

உதயனின் இந்த வைத்தியமலர் யாழ்.போதனா வைத்தியசாலையின் நீரிழிவுச் சிகிச்சைப் பிரிவால் தொகுத்து வழங்கப்படுகிறது. மலர் சம்பந்தமான உங்கள் அபிப்பிராயங்களையும் மருத்துவம் சம்பந்தமான உங்கள் சந்தேகங்களையும் - **நித்திய சுகத்தை நோக்கி..., நீரிழிவு சிகிச்சை நிலையம், போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்.** என்ற முகவரிக்கு அனுப்பி வையுங்கள். உங்கள் வினாக்களும் அதற்கான பதில்களும் இந்தப் பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயங்கரவாதத் தடைச்சட்டத்தையும் நீக்கினால்தான் தமிழருக்கு நன்மை

## சட்டத்துறை விரிவுரையாளர் குருபரன்

யாழ்ப்பாணம், டிசெ. 16

அவசரகாலச்சட்டம் நாட்டில் இருந்து நீக்கப்பட்டதற்குரிய நன்மைகளை தமிழ் மக்கள் அனுபவிக்கவில்லை என்பதற்கு யாழ்ப்பாணத்தில் அண்மை நாள்களில் இடம்பெற்றுவரும் சம்பவங்கள் உதாரணங்கள் ஆகும். பயங்கரவாதத் தடைச்சட்டம் நீக்கப்பட்டால் மாத்திரமே அவசரகாலச்சட்டம் நீக்கப்பட்டதற்குரிய நன்மைகளை தமிழ் மக்கள் பெறமுடியும்.

இவ்வாறு யாழ்.பல்கலைக் கழக சட்டவிரிவுரையாளர் கு.குருபரன் தெரிவித்தார்.

மனித உரிமைகள் தினத்தன்று யாழ். திருமறைக்கலாமன்ற கலைத்தூது மண்டபத்தில் இடம்பெற்ற நிகழ்வில் சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் என்னும் தலைப்பில் கைதும் தடுத்துவைத்தலும் மற்றும் சித்திரவதை எனும் விடயம் தொடர்பில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இலங்கைக்கு வழங்கப்பட்ட அழுத்தத்தின் காரணமாக அவசரகாலச்சட்டம் கடந்தவருடம் ஓகஸ்ட் மாதம் 30 ஆம் திகதி நீக்கப்பட்டது. இருப்பினும் சட்டம் நடைமுறையில் இருந்த காலத்தில் குறித்த சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் ஒருவர் தவறு இழைத்திருந்தால் அவருக்கும் இப்போதும் குறித்த சட்ட ஏற்பாடுகளின் கீழ் தண்டனை வழங்க முடியும்.

ஒரு நாட்டில் ஒரே மாதிரியான பல சட்டங்கள் இருக்கின்றன. இவை நிறைவேற்றுத் துறைக்கு இசைவாக இருக்க வேண்டும் என்பதால் அவ்வாறு உள்ளன.

இலங்கையில் அவசரகாலச் சட்டம் நீக்கப்பட்டாலும் அதனை விட மோசமான பயங்கரவாதத் தடைச்சட்டம் இருக் கின்றது. அவசரகாலச்சட்டம் நீக்கப்பட்டதற்குரிய நன்மைகளை தமிழ் மக்கள் பெறவேண்டுமாக இருந்தால் பயங்கரவாதத் தடைச்சட்டமும் நீக்கப்பட வேண்டும். அவசரகாலச்சட்டம் நீக்கப்படுவதற்கு முதல் நாள் இரண்டு வர்த்தமானி அறிவித்தல்கள் விடுக்கப்பட்டன.

அதன்மூலம் அவசரகாலச் சட்ட விதிகளில் இருந்த சில விடயங்கள் பயங்கரவாதத் தடைச் சட்டத்துடன் சேர்க்கப்பட்டன. அவசரகாலச் சட்டத்தில் கைது செய்யப்பட்டவர்களை தொடர்ந்தும் வைத்திருப்பதற்கு வர்த்தமானி 1721/4 வழி செய்கின்றது.

சரணடைந்தவர்களை பாதுகாப்பதற்கும் புனர்வாழ்வு அளிப்பதற்குமான ஏற்பாடுகள் 2005 ஆம் ஆண்டு அவசரகால ஒழுங்குவிதிகளின் கீழ் இருந்ததை 1721/5 வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிட்டிருக்கின்றார்கள்.

இதன் 3 ஆவது பிரிவின் 2 ஆவது உப பிரிவு, குற்றம் இழைத்திருப்பதாக தாங்கள் கருதினால், பயங்கரவாத நடவடிக்கையால் பாதிக்கப்படக்கூடியவர்கள் என்று கருதுபவர்கள் தாங்கள் விரும்பினால் அவர்களாக வந்து ஒப்படைத்துக்கொள்ள முடியும்.

இதன் அடிப்படையிலேயே யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் விவகாரம் நோக்கப்பட வேண்டியுள்ளது. இந்த ஏற்பாடுகளின் கீழ் கைது செய்யப்பட்டவர்களை புனர்வாழ்வுக்கு அனுப்ப முடியும்.

அவ சரகாலச் சட்டத்தில் இருந்த பாதுகாப்புக்கூட இந்தப் புதிய ஒழுங்கு விதிகளின் கீழ் இல்லை. அவசரகாலச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்படுப வரை மாதம் ஒரு முறை நீதிமன்றுக்கு கொண்டு வேண் டும். ஆனால் இதில் அவ்வாறு இல்லை. எனவே அவசரகாலச்சட்டம் நீக்கப்பட்டால் எந்த நன்மைகளும் இல்லை - என்றார். (த-5)

# மதுப்பிரியரின் அட்டகாசம் இளம் குடும்பஸ்தர் படுகாயம்

தென்மராட்சி,டிசெ 16

மது போதையில் நின்ற கும்பலைச் சேர்ந்தவர்கள் வீதியில் சைக்கிளில் சென்றவரை வழிமறித்து அட்டகாசம் செய்ததுடன் மதுப் போத்தலை உடைத்து அவரின் வயிற்றில் குத்தி காயப்படுத்தியும் உள்ளனர்.

இந்தச் சம்பவம் கடந்த புதன்கிழமை சாவகச்சேரி டச்சு வீதியிலிருந்து தபாலக வீதிக்குச் செல்லும் கண்டுவில் இரண்டாம் ஒழுங்கையில் இடம்பெற்றது.

சாவகச்சேரி நகர்ப் பகுதியில் பொலிஸாரின் நடமாட்டம் அதிகரித்துள்ளதால் தோட்ட வெளியுடன் குடியிருப்பு இல்லாத பகுதியில் மதுப்பிரியர்களின் நடமாட்டம் அதிகரித்துள்ளது.

போத்தலை உடைத்து குத்தியதில் வயிற்றில் படுகாயமடைந்ததுடன் இவர்களின் தாக்குதல்களுக்கும் இலக்கான இளம் குடும்பஸ்தரான கல்வயலைச் சேர்ந்த சோமபாலன் குணதீபன் (வயது 31) என்பவர் சாவச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை அன்றைய தினம் இரவு சாவகச்சேரி காளிகோயில் பகுதியில் அநாதரவான நிலையில் காணப்பட்ட பஷன் மோட்டார் சைக்கிள் பொலிஸாரால் மீட்கப்பட்டு பொலிஸ் நிலையத்துக்குக் கொண்டு செல்லப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது. (3-9)

# சுகாதார வாரத்தை முன்னிட்டு விழிப்புணர்வு செயற்பாடுகள்

தேசிய சுகாதார வாரத்தினை முன்னிட்டு வலி. கிழக்குப் பிரதேசத்தில் சுகாதார நடவடிக்கைகள் தீவிரபடுத்தப்பட்டுள்ளன.

இப்பிரதேசத்தில் மக்களின் குடியிருப்புக்ள் மற்றும் பொது இடங்கள் போன்றவற்றை சுகாதார முறைப்படி கையாள்வதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

சுகாதார பகுதி பணியாளர்கள் இதற்கென வீடு வீடாகச் சென்று சுகாதார வசதிகளை எவ்வாறு கையாள்வது மற்றும் டெங்கு நோய்க்கான விழிப்புணர்வு போன்ற பிரசார நடவடிக்கையில் ஈடுபட்டும் வருகின்றனர். அதனை விட குடியிருப்பு பகுதிகள் மற்றும் பொது இடங்களையும் சுகாதார பகுதியினர் பார்வையிட்டு வருகின்றனர். தேங்கிக் கிடக்கும் குப்பைகள் மற்றும் கழிவு பொருள்களை உடன் அகற்றுமாறும் சம்பந்தப்பட்டவர்களுக்குப் பணித்தும் வருகின்றனர்.

அதனை விட பிரதேசத்தில் வீதியோரங்களில் அண்மையில் பெய்த மழையினால் படர்ந்து வளர்ந்திருக்கும் புற்கள் மற்றும் பற்றைகளை உடனடியாக சிரமதானம் மூலம் துப்புரவு செய்யும் பணிகளும் இடம்பெற்று வருகின்றன. (3-17)

# உலக உணவுத் திட்டவேலை; உதவிப்பொருள்கள் விரைவில்

யாழ்ப்பாணம், டிசெ.16

யாழ்.மாவட்டத்தில் முடிவடைந்த உலக உணவுத் திட்ட வேலைகளுக்கான உணவுக் கொடுப்பனவுகள் விரைவில் வழங்கப்படவுள்ளன.

யாழ்.மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் இதற்கான நடவடிக்கையை எடுத்துள்ளார்.

மாவட்ட மட்டத்தில் 16 உள்ளூராட்சி சபைகளுக்கு ஊடாக வழங்கப்பட்ட வேலைத்திட்டங்கள் முடிவுறுத்தப்பட்டு அதன் முன்னேற்ற விவரங்கள் அரச அதிபர் காரியாலயத்தில் ஆராயப்பட்டு வருகின்றன.

இதேபோல ஏனைய பிரதேச செயலக மற்றும் கல்வித் திணைக்களம் ஊடாக முன்னெடுக்கப்பட்ட உலக உணவுத் திட்ட வேலைத்திட்டங்களில் நடைபெற்று முடிந்தவற்றை உடன் அனுப்பி வைக்குமாறு யாழ்.அரச அதிபர் கேட்டுள்ளார்.

கடந்த இரண்டு வருடங்களுக்குப் பின்னர் ஐ.நா உலக உணவுத் திட்ட வேலைகள் யாழ்.மாவட்டத்தில் இடம்பெறுகின்றன. (3-50)

தருவது வித்தியா

## இன்றைய நாள்

### உங்களுக்கு எப்படி?

**மேஷம்:** கடந்த இரண்டு தினங்களாக இருந்த மனக்குழப்பம் நீங்கி எதிலும் ஒரு தெளிவு பிறக்கும். ஆரோக்கியம் சீராகும். உறவினர்களிடம் எதிர்பார்த்த உதவி கிட்டும். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் ஒத்துழைப்பார்கள்.

**ரிஷபம்:** ஒருவித படபடப்பு வந்துபோகும். குடும்பத்தில் சிறிய வார்த்தைகள் கூட பெரிய தகராறில் போய் முடியும். வியாபாரத்தில் ரகசியங்களை வெளியிட வேண்டாம். உத்தியோகத்தில் உங்களை பற்றி வதந்திகள் வரும்.

**மிதுனம்:** கடினமான காரியங்களையும் எளிதாக முடிப்பீர்கள். விரும்பிய பொருள்களை வாங்கி மகிழ்வீர்கள். மனைவி வழியில் நல்ல செய்தி உண்டு. உத்தியோகத்தில் உங்களின் திறமைகள் வெளிப்படும். தன்னம்பிக்கை துளிர்விடும்.

**கடகம்:** குடும்பத்தில் உள்ளவர்களின் உணர்வுகளை புரிந்து கொண்டு அதற்கேற்ப உங்களை மாற்றி கொள்வீர்கள். வழக்கில் சாதகமான தீர்ப்பு வரும். உத்தியோகத்தில் மேலதிகாரிக்கு நெருக்கமாவீர்கள்.

**சிம்மம்:** புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள். உறவினர்களில் உண்மையானவர்களை கண்டறிவீர்கள். ஆடம்பர செலவுகளைக் குறைத்து சேமிக்கத் தொடங்குவீர்கள். அயல் வீட்டாரின் அன்புத் தொல்லை குறையும். உத்தியோகத்தில் திருப்தி உண்டாகும்.

**கன்னி:** நட்பு வட்டம் விரியும். அரச அதிகாரிகளின் உதவியால் சில காரியங்களை முடிப்பீர்கள். வெளி வட்டாரத் தொடர்புகள் அதிகரிக்கும். வியாபாரத்தில் பங்குதாரர்களின் பிரச்சினை தீரும். உத்தியோகத்தில் விமர்சனங்களையும் தாண்டி முன்னேறுவீர்கள்.

நாளை

மார்கழி- 02 திங்கட் கிழமை 17.12.2012

திதி: சதுர்த்தி கா. 6.55 வரை

நட்சத்திரம்: திருவோணம் பி.ப 02.04 வரை

சுபநேரம்: 12.23- 01.53 வரை

ராகுகாலம்: 07.53- 09.23 வரை

**துலாம்:** உங்கள் பேச்சில் அனுபவ அறிவு வெளிப்படும். உடன் பிறந்தவர்கள் உங்களிடம் முக்கிய விடயங்களைப் பகிர்ந்து கொள்வார்கள். பிரபலங்கள் அறிமுகமாவார்கள். உத்தியோகத்தில் அதிகாரிகள் முன்வைத்த கோரிக்கைகள் நிறைவேறும்.

**விருச்சிகம்:** கடந்த இரண்டு தினங்களாக கணவன் - மனைவிக்குள் இருந்த பிணக்குகள் நீங்கும். வியாபாரத்தில் புதிய சலுகைகளை அறிவிப்பீர்கள். உத்தியோகத்தில் இழந்த உரிமையைப் பெறுவீர்கள். மனநிறைவு கிடைக்கும்.

**தனுசு:** உறவினர், நண்பர்களால் செலவினங்கள் அதிகரிக்கும். உங்கள் மீது சிலர் வீண் பழி சுமத்துவார்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களின் சொந்த விடயங்களில் தலையிடாதீர்கள். வேலைச் சுமை அதிகரிக்கும்.

**மகரம்:** சில காரியங்களை அலைந்து, திரிந்து முடிக்க வேண்டி வரும். வியாபாரத்தில் போட்டிகளை சமாளிப்பீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களால் சங்கடங்கள் வரும். தடைகளைத் தாண்டி முன்னேறுவீர்கள்.

**கும்பம்:** எதையும் சாதிக்கும் துணிச்சல் வரும். சகோதர, சகோதரிகளால் பயனடைவீர்கள். உங்களால் வளர்ச்சியடைந்த சிலரை இப்பொழுது சந்திக்க நேரிடும். வேற்று மதத்தவர் உதவுவார். உத்தியோகத்தில் முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள்.

**மீனம்:** புதிய கோணத்தில் சிந்தித்து பழைய சிக்கலை தீர்ப்பீர்கள். பழுதான [illegible] சாதனங்களை மாற்றுவீர்கள். உத்தியோகத்தில் சில சூட்சுமங்களை கற்றுக் கொள்வீர்கள். திட்டங்கள் நிறைவேறும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுடோக்கு

## எண் விளையாட்டு


| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | 2 | | 4 | 5 | 8 | |
| 4 | | 8 | 3 | | | | 1 | 9 |
| 9 | | | | | 8 | | 3 | 2 |
| | | 7 | | 3 | | 2 | 9 | |
| | | | 4 | | 2 | | | |
| | 5 | 2 | | 6 | | 8 | | |
| 7 | 8 | | 1 | | | | | 4 |
| 2 | 1 | | | | 9 | 7 | | 8 |
| | 9 | 4 | 7 | | 6 | | | |

## சுடோக்கின் நேற்றைய விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 8 | 5 | 7 | 6 | 1 | 4 | 2 | 3 | 9 |
| 2 | 9 | 6 | 5 | 7 | 3 | 8 | 1 | 4 |
| 1 | 4 | 3 | 2 | 8 | 9 | 5 | 6 | 7 |
| 4 | 6 | 5 | 7 | 9 | 2 | 3 | 8 | 1 |
| 9 | 8 | 2 | 1 | 3 | 6 | 7 | 4 | 5 |
| 3 | 7 | 1 | 8 | 4 | 5 | 9 | 2 | 6 |
| 6 | 2 | 9 | 3 | 5 | 1 | 4 | 7 | 8 |
| 7 | 1 | 4 | 9 | 2 | 8 | 6 | 5 | 3 |
| 5 | 3 | 8 | 4 | 6 | 7 | 1 | 9 | 2 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1 - 9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3 ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1 - 9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள்பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1 - 9 இலக்கங்கள் இரட்டிப்பாகாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலியும் பிறந்த நாள் நினைவும்



அன்னை மடியில்
15.12.1949

இறைவனடியில்
16.12.2011

## அமரர் த.நா.போஜன்

(முன்னாள் சமாதான நீதிவான், உதவிப் பிரதம சாரண ஆணையாளர், இலங்கை முதலுதவிச் சங்க ஆணையாளர், சென்ஜோன்ஸ் அம்புலன்ஸ் மாவட்ட ஆணையாளர்)

காலத்தால் அழியாத காவியத் தலைவனாய்
எம் அனைவர் சிந்தையிலும் வாழ்கின்றீர்களே
செந்நாவின் சொல்வன்மையால் புகழ் பல பெற்றீர்களே
உம் முகத்தில் தினமும் புன்னகை தவழ்வதைத் தினம் கண்டு
இன்முகம் அடைந்தோமே
பண்பினால் இவ் வையகம் போற்ற வாழ்ந்தீர்களே
எம் குடும்பத்தின் ஒளி தீபமாய் சாரணியத்தின் தலைவராய்
பாசத்தின் உறைவிடமாய் கருணைச் சாகரமாக வாழ்ந்தீர்களே
நெஞ்சமதில் உம் உருவம் நேயமுற வாழ்கிறதே.
அடைக்கலம் அடைய பூமியில் இனி எமக்கு யாரும் இல்லை
தேசமெங்கும் தேடினாலும் உங்களைப் போல
தவ வடிவம் இன்னொருவர் கிடைப்பாரோ
ஓராண்டல்ல பல ஆண்டுகள் சென்றாலும்
உங்கள் நினைவில் எம்மருகில் இருந்து வழங்கும் ஆசியுடன்
என்றும் இப் பூமியில் வாழ்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!!

"பாலாலி", உரும்பிராய் வீதி, மருதனார்மடம்.
உல்லாசனன் (மகன்) குடும்பத்தினர்.

## விற்பனைக்குண்டு

அச்சுவேலி புனித திரேசா பாடசாலைக்கு அருகில் நல்ல நிலையில் உள்ள 6 ¾ பரப்பு காணியும், வீடும் உடன் விற்பனைக்குண்டு.
தொ.பே: 077 66 91216, 021 321 6675
(26721)(6.11)

## மணமகன் தேவை

இந்து கௌரவ குடும்பம், 1984 ஆம் ஆண்டு பிறந்த, 8 இல் செவ்வாயுடைய 5' 7" உயரமுடைய, பல்கலைக்கழக விரிவுரையாளருக்கு மணமகன் தேவை. (தரகர் தொடர்பு கொள்ள வேண்டாம்.)
தொ.பே: 077 340 5539
(26725)(6.11)

## வீடு வாடகைக்கு

யாழ்ப்பாணம் சுண்டுக்குளி, 3 rooms, toilet, உடன் வீடு வாடகைக்கு விடப்படும். Vechile parking உள்ளது.
தொ.பே:
No- 33,2nd Lane, Collumbuthurai Road,
Chundukulli, Jaffna.
(Chundukulli girls School அண்மையில்)
075 7131027
(26732)(6.11)

## Vacancy

Vacancy is existing for a post of confidential Secretary (Female)at the reputed Jaffna Company.
Required qualifications -
GCE (A/L), Age limit 22-55 years, the applicant should be able to travel abroad.
**Advt. no- 4423**
**c/o - Uthayan,**
**No- 361, Kasthuriyar Road, Jaffna.**
(26804)(6.11)

## வீடு வாடகைக்கு

நல்லூர், கோயில் வீதியில் அமைந்துள்ள 16 அறைகள் கொண்ட மேல் மாடி வீடு அரச நிறுவனங்கள், அல்லது தனியார் நிறுவனங்களுக்கு வாடகைக்கு விடப்படும்.
தொ.பே. இல. 07777 91912
(26778) (6,7,4)

## Sanken construction (Pvt) Ltd

உங்கள் கட்டடங்கள் கட்டுவதற்கும், பழைய கட்டடங்கள் திருத்துவதற்கும், உங்கள் கட்டடங்கள் கட்டுவதற்குத் தேவையான கொங்கிரீட்களுக்கும் (Ready mixed Concrete) நாடவேண்டிய ஸ்தாபனம்.

**சங்கென் கொன்ஸ்ரக்ஸன் (பிரைவேட்)லிமிடெட்,**
இல.31, வைமன் றோட்,
நல்லூர், யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 0212224840/0718643636, 0212241185/ 0777732863
(26770) (6-7-10)

THE HALO TRUST

## கண்ணிவெடி அகற்றுநருக்கான பதவி வெற்றிடம்

ஹெலோ ரஸ்ட் ஆனது பிரித்தானியாவை தளமாகக் கொண்டு உலகளாவிய ரீதியில் 10 நாடுகளில் இயங்கிக் கொண்டிருக்கிறது. இலங்கையில் 2002 ஆம் ஆண்டு தொடக்கம் மிதிவெடிகள் மற்றும் வெடிக்கத்தக்க பொருள்களை அகற்றிக்கொண்டிருக்கின்றது.

ஹெலோ ரஸ்ட் இன் எதிர்கால வேலைக்கான மிதி வெடிப்பயிற்சிக்காக ஆண், பெண் இருபாலாரின் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பதாரர்கள் விளங்கிக்கொள்ள வேண்டியது கண்ணிவெடியகற்றல் துப்புரவற்றதும், தேகவலுவை அதிகம் பிரயோகிக்கும் கடினமான வேலையாகும். எமது தரமான நடவடிக்கைகள் கண்ணிவெடி அகற்றுதலிலுள்ள அபாயத்தை இயலுமான அளவு குறைத்துக்கொள்வதுடன் முற்றாக நீக்கமுடியாது. எனவே கருத்தில் கொள்ளப்படும் விண்ணப்பதாரிகளிடமிருந்து பலமான அர்ப்பணிப்பு உணர்வு எதிர்பார்க்கப்படுகின்றது.

ஆர்வமுள்ளவர்கள் உங்களுடைய சுயவிவரக்கோவை மற்றும் தொடர்பு கொள்ளவேண்டிய விவரங்கள் மற்றும் அனுபவமுள்ளவர்கள் விவரங்களை கீழ் உள்ள முகவரிக்கு எதிர்வரும் 04ஆம் திகதி தை மாதம் 2013 வெள்ளிக்கிழமைக்கு முன்னதாகச் சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

**ஹெலோ ரஸ்ட்**
**450, திருநகர் மேற்கு, கிளிநொச்சி.**
(26116) (10,6,7)

உ முருகன் துணை

# பழைய பட்டுப்புடைவை பணமாகிறது!

# ஸ்ரீ காஞ்சிபுரம் பட்டு சென்ரர்

# யாழ்ப்பாணம்

வாகன தரிப்பிட வசதியும் உண்டு

**தியாகி அறக்கொடை நிறுவன வளாகம், T.C.T. வணிக வளாகம்.**
**527, நாவலர் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.**

**Tel : 0752145355**

**17.12.2012 முதல் 23.12.2012 வரை**

07 தினங்கள் மட்டுமே!

**பழைய (கிழிந்த) பட்டுப்புடைவைகள்**
**பட்டு வேஷ்டிகள், பட்டுப்பாவாடைகள்,**
**பழைய கிழிந்த கூறைப்புடைவைகளும், எந்த நிலையில் இருந்தாலும் காஞ்சிபுரம் மில் விலைக்கே வாங்கிக் கொண்டு உடனே பணம் தரப்படும்.**



**பழைய டிஸ்யூ புடவைகள் ரூபா 5000/= முதல் ரூபா 20,000/= வரை வாங்கப்படும்.**

**பழைய காலத்து கல்வைத்த நகைகள் லாக்குடி, ஜடபில்லை, பவளம், பவள மாலைகள் நல்ல விலைக்கு வாங்கப்படும்**

குறிப்பு : எங்களுக்கு வேறு கிளைகள் கிடையாது. (26736) (2.6)

**வேலை நேரம் காலை 9.30 மணி முதல் இரவு 6.30 மணி வரை - ஞாயிற்றுக்கிழமை கடை உண்டு.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விற்பனைக்கு

**Panasonic 32" LED TV**

விற்பனைக்கு உண்டு.

தொடர்பு : 077 5092 737

## தேவை

Ms office, Desk Top Publishing தெரிந்த பெண்பிள்ளைகள் தேவை. அச்சக வேலை அறிவு உள்ளவர்களுக்கு முன்னுரிமை. வலிகாமம் பகுதி விரும்பத்தக்கது.

தொடர்பு : 075 0497 894

## வாகனம்

1) கார் - Mitsubishi Lancer GLX, Brand new, A/C Alloy wheel, **விலை-14.5 லட்சம்.**

2) மோட்டார் சைக்கிள் - CD 200, Road master, சிவப்பு (English Number).

தொடர்பு :

**0777 361862, 0775 067277**

## காணி விற்பனைக்கு

அரியாலை A9 வீதிக்கு அண்மியதாக, கோயில், பாடசாலை, சர்வதேச உதைபந்தாட்ட மைதானம் சர்வோதய வட மாகாண அலுவலகம் ஆகியவை அமைந்துள்ள சூழலில் 2 பரப்பு, 16 ¼ குளி விஸ்தீரணம் கொண்ட குடியிருப்புக் காணி உடன் விற்பனைக்குண்டு.

தொடர்பு : 077 454 9380, 077 4321482

## வாடகைக்கு

A9 பிரதான வீதி, பஸ்தியன் சந்தியில் 35 அடி நீளம், 13 அடி அகலம் உள்ள குளியலறை மற்றும் நீர் வசதி கொண்ட கீழ்ப் பகுதி கடையும் மேல் மாடி வீடும் வாடகைக்கு உண்டு.

தொடர்பு : 077 9789 182

## நிர்மாணம் மற்றும் இயந்திர தொழில் பயிற்சி நெறிக்காக (Course) மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள்

| | |
|---|---|
| ★ போபிளிட்ஸ் | - 16,000/= |
| ★ பைமுவா | - 17,000/= |
| ★ வெகோலோடர் | - 30,000/= |
| ★ எங்கவேட்டர் | - 40250/= |
| ★ வீல்லேடர் | - 38,000/= |
| ★ மோட்டார் ரேடர் | - 40,250/= |
| ★ ரக்டர்ஸ் | - 5,000/= |

வெளிநாட்டுக்குச் செல்லும் உங்களுக்குக் குறுகிய காலத்தில் கற்கை நெறியை முடிக்கும் ஒரு அரிய சந்தர்ப்பம்

★ கிழமை நாள்களில் காலை 8.00 மணிமுதல் மாலை 4.00 மணி வரை அழையுங்கள்.

★ உணவு, தங்குமிட வசதிகள் குறைந்த கட்டணத்தில் அநுராதபுரத்தில் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள்.

**தொடர்பு: 077 1632806, மெயின் வீதி, அநுராதபுரம்.**

## வாகன விற்பனை



No-LJ-xxxx (ISUZU 350) 14 ½ நீள Body கொண்ட JAPAN கூலர் மொடல் வாகனம் விற்பனைக்கு உண்டு.

தொடர்புக்கு: 077 5081793

## ALLIANCE FRANÇAISE DE JAFFNA

யாழ். பிரெஞ்சு நட்புறவுக் கழகம்

The Only Official Centre for French Language in Jaffna

பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக் கொள்ளுங்கள்

Alliance Française de Paris ஆலும் இலங்கையிலுள்ள French Embassy ஆலும் அங்கீகரிக்கப்பட்ட யாழ்ப்பாணத்திலுள்ள ஒரே ஒரு பிரெஞ்சு மொழிக் கல்வி நிறுவனம் "Alliance Française de Jaffna" மட்டுமே.

சர்வதேச தரம் வாய்ந்த Alliance Française de Jaffna இல் France மற்றும் (French) பிரெஞ் பேசப்படும் நாடுகளுக்கு செல்வோர், மாணவர்கள் மற்றும் மொழி ஆர்வமுள்ளோர் யாவரும் கற்றுக் கொள்கிறார்கள்.

வகுப்புக்கள்: சனி, ஞாயிறுகளில்

**புதிய பிரிவுகள் மிக விரைவில் ஆரம்பமாகின்றன. உடன் பதிவுகளை மேற்கொள்ளவும்.**

61, Kachcheri-Nallur Road, Jaffna TP.No: 021.2228093

E-mail: alliancejaffna@yahoo.com

(முக்கா வீதியும் கச்சேரி-நல்லூர் வீதியும் இணையும் சந்தியில் அமைந்துள்ள மாடிக்கட்டடம்)

## Sale for Water Well





**Sale for Water Well PRD RIG 500 & 450 with Air Compressor DENYO 150 PSI**

**Contact :**

**Amerasian (Pvt) Ltd,**

**071 6851526 / 071 8701040**

## வீட்டுக்கிருத்திய அழைப்பு



அமரர்

**செல்லப்பா ஐயாத்துரை**

மலர்வு 28.12.1932

உதிர்வு 17.11.2012

கடந்த 17.11.2012 அன்று சிவபதம் அடைந்த எமது குடும்பத் தலைவர் அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் நாளை (17.12.2012) திங்கட்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற இருப்பதால் அத்தருணம் தாங்களும் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**இல.26, தரவை வீதி, அரியாலை, யாழ்ப்பாணம்.** - குடும்பத்தினர்.

## காணி உடன் விற்பனைக்கு

நல்லூர் கந்தசுவாமி கோயிலுக்கு மிக அண்மையில், கோயில் வீதியில்,

★. 1½ பரப்பு சதுர வடிவான காணி இருபக்க மதிலுடன் உடன் விற்பனைக்குண்டு (67' நீளம் 65' அகலம்)

★ அத்துடன் 1 பரப்பு 2 குளி காணியும் உடன் விற்பனைக்கு உண்டு (67' நீளம் 45' அகலம்) தரகர்கள் தேவையில்லை

தொடர்பு: 0755546000 / 072 8586931 நல்லூர்.

## ஏலவிற்பனை

30.11.2012 ஆம் திகதி சிவநகர் கமக்கார அமைப்பால் கட்டாக்காலியாகப் பிடிக்கப்பட்ட M.K. குறியுடையதும்

முன்னங்காலில் [அம்புக்குறி] பின்னங்காலில் [குறி]

அடையாளமுடைய மாவெள்ளை நிறமுடைய வெள்ளைப் பசு 18.12.2012 அன்று ஒட்டுசுட்டான் கால்நடை சேவை நிலையத்தில் முற்பகல் 10 மணிக்கு ஏலத்தில் விடப்படும். பெற விரும்புவோர் ஏலப்பணம் முழுவதையும் செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.

பெரும்பாக உத்தியோகத்தர்

கால்நடைச் சேவை நிலையம், ஒட்டுசுட்டான்.

## Christmas Dinner Party

Tuesday, December 25, 2012, 7 p.m,

Hotel Green Grass

* Buffet dinner with santa claus entertaiment & gifts
* kids games
* Childrens below 12 free of charge

**For more info. : 0212224385,0777807568**

## 4ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்

**நல்லையா தவகுலசிங்கம்**

[தவம் அண்ணை]



மலர்வு 25.02.1947

உதிர்வு 16.12.2008

பார்த்தோரைக் கவரும் கண்களும்
வசீகரமான முகமும்
அறிவுரை கூறும் பேச்சும்
வழிகாட்டும் உதவிக் கரங்களும்
சேவை நோக்கம் கொண்ட நெஞ்சமும்
கொண்ட எமது அன்புத் தந்தையே!

தந்தைக்கு இலக்கணமாக
விவசாயிகளுக்கு உற்ற நண்பனாக
தொழிலாளிகளின் பாசத்திற்குரிய
முதலாளியாக
ஊரார் போற்றும் உத்தமனாக
வாழ்ந்து வழிகாட்டிய தெய்வமே!
ஆண்டுகள் 4 சென்றாலும்
ஆறாது உங்கள் நினைவுகள்

*கோட்ரோட், மல்லாகம்.* *திருமதி த.சிவமலர் குடும்பத்தினர்.*

## முதலாம் ஆண்டு நினைவலைகள்

அமரர்

**இராஜரட்ணம் கதிர்காமநாதன்**

(இளைப்பாறிய களஞ்சிய பொறுப்பாளர்)



அன்னை மடியில் 17.08.1940

ஆண்டவன் அடியில் 26.12.2011

*அன்புடனும் பண்புடனும் வாழ்ந்து
பாசமுடன் எமை வழிநடத்திய எம் அப்பாவே!
ஆண்டொன்று ஆனது ஒரு கணம் கூட
நாம் நினைக்கவில்லை அன்று நாம்
உம்மை இழப்போமென்று
பாணர் வாழ்ந்துயர்ந்த யாழ்.மண்ணுதித்து
ஊர்போற்ற உத்தமனாய் வாழ்ந்து
இன்சொல் அன்றி வன்சொல்லே கூறாது
எங்கள் நல் வாழ்வுக்காய் உம்மை அர்ப்பணித்து
ஒற்றுமையே பலம் என்று எமை உணரவைத்து
உலகில் உத்தமராய் வாழ வழி சமைத்த எம் அப்பாவே
ஓங்காரக் கணபதியின் தாள் பணிந்து என்றும்
உங்கள் ஆத்மா சாந்தி பெறப்
பிரார்த்திக்கின்றோம்.* - குடும்பத்தினர்.





## You are invited

Santa will be loaded up & on his way so let's gather to Celebrate Christmas

THE GRAND KIDDIES PARTY

is here once again......

Date :- 22nd Dec (saturday)

Venue :- Tilko City Hotel - Jaffna

Time :-3.00 p.m onwards

Tickets :-

Rs. 750/= per kid

Rs.500/= per Parent

Contact

021 7200707/ 021 222 5669

BOSCO, YALINI, JEEVAN, JERINE

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செலான் வங்கியின் பரிசுகள்

SEYLAN BANK PLC
*The bank with a heart*

தென்மராட்சி,டிசெ.16

செலான் வங்கியினால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள பரிசுடனான கணக்குகள் தொடர்பான விவரங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

இந்த வங்கியில் வெளிநாடுகளிலிருந்து வரும் உண்டியலினை மாற்றுவோருக்கு வெளிநாட்டுப் பணத்துக்கு உள்நாட்டில் பரிசில்களும் திட்டத்தின் கீழ் முதல் பரிசாக பத்து லட்சம் ரூபாவும் தலா 15 ஆயிரம் ரூபா பெறுமதியான 100 ஆறுதல் பரிசுகள் வழங்கப்படவுள்ளன. இந்தத் திட்டம் டிசெம்பர் முதலாம் திகதி தொடக்கம் ஜனவரி 15 ஆம் திகதி வரை செயற்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

இதே காலப் பகுதியில் சிறுவர் சேமிப்புக் கணக்கினை ஆரம்பிப்போருக்கு குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்படும் முதல் அதிர்ஷ்டசாலிக்கு வைப்பிலிடும் தொகை அளவு வங்கியினால் வழங்கப்படும். அத்துடன் மேலும் இருபது பேருக்கு பரிசில்கள் வழங்கப்படும்.

மேலும் வங்கியில் நடைமுறைக் கணக்கு வைத்திருப்போருக்கு பல சலுகைகளையும் செலான் வங்கி அறிவித்துள்ளது.

இலவச டெபிட் அட்டை, இலவச இணைய வங்கிச் சேவை, நீர், மின்சார, தொலைபேசி பில்களைச் செலுத்தும் வசதி, பணப்பரிமாற்று நிலையத்தினூடாக (ஏரிஎம்) நாளொன்றுக்கு ஏழு லட்சத்து 50 ஆயிரம் ரூபா வரை மீளப்பெறும் வசதி, செலான் கணக்கொன்றுக்கு உடனடியாக பணப் பரிமாற்றம் செய்யும் வசதி, இலவச எஸ்.எம்.எஸ் வங்கி வசதிகள், கடன் அட்டைக்கு விசேட கழிவுகள் போன்ற சலுகைகள் வழங்கப்பட வுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

வங்கியின் சுவேர் கணக்கில் 20 ஆயிரம் ரூபாவுக்கு மேற்பட்ட தொகையினை 6 மாதங்களுக்கு மேல் பராமரிப்பவர்களுக்கு திருமணம், குழந்தை பிரசவம், சத்திரசிகிச்சை, 60 ஆவது பிறந்த தினம் ஆகியவற்றுக்கு கவர்ச்சிகரமான பரிசில்கள் வழங்கப்படுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (த-9)




A,B பரீட்சைகளில் 2011 ஆம், 2012 ஆம் ஆண்டுகளில் கூடுதலான மாணவர்களைப் பரீட்சைக்கு தோற்றுவித்து சித்தியடைய வைத்து City & Guilds தலைமை அலுவலகம் நடத்திய வைபவத்தில் BRITISH COLLEGE OF HIGHER STUDIES நிறுவனத்தின் ஸ்தாபகர்களான றொபின் செல்வகுமார், றஞ்சித் சீவரத்தினம் ஆகியோர் சிறந்த ஸ்தாபனத்துக்கான விருதைப் பெற்றுக் கொண்டனர். (த)

## கூட்டாண்மை விருது சி.ப.எல் நிறுவனத்துக்கு

இலங்கையின் முன்னணி கூட்டு நிறுவனங்கள் பங்கேற்கும் சிலோன் வர்த்தக சம்மேளனத்தின் (Ceylon Chamber of Commerce) வருடாந்த விருது வழங்கும் நிகழ்வில் தேசத்தின் சிறந்த கூட்டாண்மை விருதை (Best Corporate Citizen of year) சிபிஎல் நிறுவனம் வென்றுள்ளது.

சிபிஎல் நிறுவனமானது சமூக பொறுப்புணர்வுத் திட்டங்களில் வழங்கி வரும் பங்களிப்புக்காக 10 சிறந்த நிறுவனங்களில் இரண்டாவது ரன்னர் அப்பாக தெரிவு செய்யப்பட்டுள்ளது.

இவ்விருதை ஐந்தாவது தடவையாக சிபிஎல் நிறுவனம் வென்றுள்ளது. உட்கட்டமைப்பு அபவிருத்திகளை மேம்படுத்தும் சமூக பொறுப்புணர்வு திட்டமான கமட சரண நிகழ்ச்சித் திட்டத்திற்கு விசேட விருதும் வழங்கப்பட்டுள்ளது.

இலங்கையில் மிகவும் பின்தங்கிய பிரதேசங்களில் அடிப்படை வசதிகளின்றி வாழும் மக்களின் வாழ் வாதாரத்தில் மாற்றத்தை ஏற்படுத்தி அதன் மூலம் பயனடையச் செய்வது எமது கூட்டு சமூகப் பொறுப்புணர்வு திட்டங்களின் குறிக்கோளாக உள்ளது என சிபிஎல் நிறுவனத்தின் நிர்வாக பணிப்பாளர் சியாமளி விக்ரமசிங்க தெரிவித்தார். (த)



இலங்கை வங்கி சுன்னாகம் கிளையின் விரிவாக்க அலுவலகமாகவிருந்து முழுமையான கிளையாகத் தரமுயர்த்தப்பட்ட உருப்பிராய் கிளையின் சம்பிரதாயபூர்வமான அங்குரார்ப்பண நிகழ்வில் பிரதிப் பொது முகாமையாளர்கள் எச்.எம். முதியான்சே, ரீ. முத்துகல சந்தைப்படுத்தல் பிரிவு பிரதம அதிகாரி லியனகே ஓய்வு பெற்ற முகாமையாளர் எஸ்.நாகரத்தினம் ஆகியோர் நாடாவை வெட்டித் திறந்து வைக்கின்றனர். அருகில் கிளை முகாமையாளர் எஸ்.சந்தனு உள்ளார். (த)

## 45ஆவது வருடத்தை பூர்த்தி செய்தது SBL

சன்ஷைன்ஸ் குரூப்பின் முதலாவது வர்த்தக நிறுவனமும் இலங்கை சுகாதாரத் துறையின் முன்னணி நிறுவனமுமான சுவிஸ் பியோஜனிக்ஸ் லிமிட்டட் (SBL) தனது 45வது வருட பூர்த்தியை அண்மையில் மிக விமரிசையாகக் கொண்டாடியது.

1967 ஆம் ஆண்டு லங்கா மெடிக்கல்ஸ் என்ற பெயரில் சன்ஷைன்ஸ் குரூப்பின் ஸ்தாபகர் ஜி.சதாசிவத்தால் ஆரம்பிக்கப்பட்ட இவ்நிறுவனம் தனது வர்த்தக வலையமைப்பில் பல்வேறு வகையான வளர்ச்சியுடன் கடந்த 45 ஆண்டுகளாக தனது பணியை வெற்றிகரமாக முன்னெடுத்து வருகின்றது.

அத்துடன் இலங்கை மருத்துவ துறையில் சர்வதேச நிறுவனங்களின் நன்மதிப்பைப் பெற்ற இலங்கை நிறுவனமான SBL சுகாதாரத் துறைக்கு சேவை வழங்குவதற்காகவே விசேட திறமை கொண்ட ஊழியர் குழாமொன்றை தன்வசம் கொண்டுள்ளதுடன், விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் ஊழியர்கள் 300 பேரையும், விநியோக பிரிவு ஊழியர்கள் 200 பேரையும் கொண்டு செயற்படுகின்றது.

45வது வருட பூர்த்தியை முன்னிட்டு விஷன் 2020 கண்புரை (Cataract) ஒழிப் புத்திட்டத்திற்கு 500 Intraocular Lens களை நிறுவனம் அன்பளித்திருந்தது. சுகாதார அமைச்சின் வைத்தியப் பிரிவின் மேலதிக செயலாளர் டாக்டர் ப.ஜி.மஹிபால ஊடாகவே Lensகள் கையளிக்கப்பட்டன.

கண்புரை நோயாளர்களின் எண்ணிக்கையை குறைப்பதற்கான தேசிய திட்டத்திற்கு ஆதரவளிக்கும் நோக்கிலேயே இவை வழங்கப்பட்டன. (த)

"உலகம் 21 ஆம் திகதியுடன் அழியப்போகிறது". என்ற வதந்தியைக் கூடப் பின் தள்ளிவிட்டு, வடபகுதியின் வாய்கள் அத்தனையும் இந்த பேய்பிடிப்புக் கதைகளையே அதிகம் முணுமுணுத்துக் கொண்டன.

மறத்தால் புலியை விரட்டிய தமிழ்ப் பெண்களின் வீரத்தை காலம் காலமாகவே செவிவழிக்கதைகள், இலக்கியங்கள் என்பவற்றில் மட்டுமல்லாது நேரிலும் கண்டவர்கள் நாங்கள். தமிழர்களின் விடுதலைக்காக போராடப் புறப்பட்ட இளைஞர்களுக்கு சரிசமமாக, ஆயுதத்தை தமிழ்ப் பெண்களும் தூக்கினர்.

இரட்டைப் பின்னலைமடித்துக் கட்டிக்கொண்டு, வரிச்சீருடை யோடு களமாடிய மகளிர் படையணிகள் பறித்த வெற்றிகள் ஏராளம். தனியே மரபார்ந்த மற்றும் கெரில்லா முறை சண்டைகளில் மட்டுமல்லாமல் ஆண்களே செய்ய முடியாத துணிகர நடவடிக்கைகளையும் வெற்றிகரமாக இவர்கள் செய்து காட்டினர். அங்கயற்கண்ணி தொடக்கி வைத்த வழியினில் தம் உயிரையும் உடலையும் பிய்த்தெறிந்து, விடுதலைக்காக மடிந்த பெண் போராளிகள் பலர்.

இறுதியில் நமக்கான காலம் முடிந்துபோனது. தலைநிமிர்த்தி களமாடிய பெண் போராளிகளின் நிலை தலைகீழாக மாறிப் போனது. தடுப்புக்கு கொண்டு செல்லப்பட்டு புனர்வாழ்வின் பின் விடுவிக்கப்பட்ட முன்னாள் பெண் போராளிகளை தங்கள் குடும்பங்களுடன் இணைந்து வாழவே மிகுந்த சிரமங்களை எதிர்நோக்க வேண்டியிருந்தது.

"இயக்கத்துக்கு போட்டு வந்தவளை எங்கட பெடியனுக்கு எப்படி கட்டிக் குடுக்க முடியும்?" என்று வார்த்தை அம்புகள், அறம்புறமாகப் பாய்ந்து அவர்களின் எதிர்காலம் பற்றிய கனவுகளை குதறிப் போட்டன. கனவுகள் கண்ணீரில் நனைந்து கடுஞ்சொற்களின் ஒலியில் நொந்துகொண்டிருந்தன. நெருக்கணக்கில் குடும்பத்தோடு பிணைப்பில்லாத காரணத்தால் 'தம்மை வேண்டாத விருந்தாளிகளாக நடத்துகிறார்களோ?' என்ற எண்ணம் இந்த முன்னாள் போராளிகளிடம் முளைவிடத் தொடங்கியது. குடும்பத்தாருடன் இருக்க வேண்டிய பாசப்பிணைப்பில் நிரப்பமுடியாத இடைவெளிகள் உருவாகின.

குடும்ப அங்கத்தவர்களும் இந்தப் பெண்போராளிகளை விளங்கிக்கொள்ளத் தவறியிருந்தனர். "ஆயுதத்தைத் தூக்கியவள்"

"ஆமிக்காரர்களை சுட்டவள்" என்ற அழிவுற்றுப் போன பழைய விம்பங்களையே மீண்டும் தூசி தட்டி பெண் போராளிகளுக்குப் பதிலீடாக அந்த விம்பத்தையே இன்னமும் கண்களுக்குள் தேக்கி வைத்திருந்தனர்.

கசப்பின் தருணங்களை மறந்து பழையபடி தங்கள் குடும்பத்தோடு ஒட்டி உறவாட வேண்டும் என்ற தவிப்பு இந்தப் பெண்களிடம் பொங்கி எழவே செய்தது. ஆயினும் ஒருவித இடைவெளித்தன்மையோடே குடும்ப அங்கத்தவர்கள் உறவாட முற்பட்டதால் இந்தப் பெண்களுக்கும் குடும்பத்தவர்களுக்கும் இடையே மெல்லிய திரை விழுந்தது. திரையின் அடர்த்தி நாளுக்கு நாள் அதிகரித்தது. வேறு வேலை தேடமுடியவில்லை. இவர்கள் இயக்கத்தில் இருந்தவர்கள் என்ற காரணத்தினாலேயே பறிபோன பணிகள் ஏராளம். எல்லோருடைய கண்களுக்கும் இவர்களைப் பார்க்கும் போது மட்டும் சந்தேக நோய் தொற்றிக்கொள்ளத் தொடங்கியது.

வீட்டிலும் வறுமை. "நாங்கள் வன்னியை சிங்கப்பூராக்கி, அதிலே சகல வசதிகளோடும் மக்களை குடியேற்றி விட்டோம்." என்று மார் தட்டுகிறது அரசு. நிலவரம் உண்டானதை விட கீழ் மட்டத்திலேயே வன்னியின் உண்மையான வாழ்வு இருக்கிறது.

வீதியை அகலமாக்கி, காப்பெற் போட்டு, இருமருங்கிலும்

*(சூரியகாந்தி 23 ஆம் பக்கத் தொடர்ச்சி)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

■ வி.கே.எம்



‘எங்களுக்கு திருப்ப அந்த நினைவை வர வைக்காதேங்க அண்ண. அதை நினச்சாலே பயமா இருக்கு’

# மறைக்கும் மறுக்கும் கதைகள்

சில சம்பவங்கள் செய்திகளோடும் வாய்ப்பேச்சுக்களோடும் முடிந்து விடுகின்றன. அவற்றின் உருவாக்கங்கள் பற்றியோ காரணங்கள் பற்றியோ எந்த தெளிவுபடுத்தல்களும் முன்வைக்கப்படாது போய் விடுகின்றன. சில சம்பவங்களை தூக்கிப்பிடித்து பேசுபவர்கள் அதன் தாக்கங்கள் விளைவுகள் குறித்தும் பின்விளைவுகள் பற்றியும் பார்க்கத் தவறிவிடுகின்றனர்.

இந்த பிரித்தறிதல் இல்லாத தன்மை சிலரது செயற்பாடுகளுக்கு நல்ல வசதியாக இருக்கிறது. குரைக்கும் நாய் கடிக்காது என்பது போல அவர்கள் எண்ணிக் கொள்வார்கள். பத்திரிகைகளில் வரும் செய்தி அதன் விளக்கங்கள் அன்றன்றே முடிந்து போய் விடுகின்றன. அதனால் எந்தப் புரளியும் எழுந்துவிடப் போவதில்லை என்பதே திட்டம் தீட்டுபவர்களின் எண்ணம்.

வன்னியில் இறுதிப்போரில் ஆயிரக்கணக்கானோர் கொல்லப்பட்டனர். இவர்களது சாவு அவலம் நிறைந்தது. பிரிய மறுத்த உயிர்களை வலிந்து கொன்றது போர். சமய நம்பிக்கையாளர் மத்தியில் ஒரு உயிர் தனது வாழ் காலத்தின் அரைவாசியில் அவலமாக இறந்துபோயிற்றால் அதன் ஆவி அவர்கள் சார்ந்தவரை சுற்றித்திரியும் என்று நம்புகிறார்கள். மத வழிபாடுகளுக்கு அப்பால் பேய், பிசாசு, பில்லி, சூனியம் என்ற அம்சங்களையும் சமயவாதிகள் நம்புகின்றனர்.

மூடநம்பிக்கைகளை போராளிகள், குழந்தைகள், கிறிஸ்தவர்கள் நம்புவதில்லை என்று சொல்வார்கள். அதிலும் குறிப்பாக பில்லி சூனியத்தை இவர்கள் ஏற்றுக் கொள்வதில்லை. அதன் காரணமாகவே இந்த நம்பிக்கைகள் அவர்களிடத்தில் பலிப்பதில்லை. காரணம் போராளிகள் களத்தில் எதிரியை கொல்லும் தறுவாயில் இருப்பவர்கள் அவர்களிடத்தில் இவ்வாறான நம்பிக்கைகள் தோற்றுப்போய் விடுகின்றன. குழந்தைகள் விவரம் அறியாதவர்கள் அவர்களிடத்தில் இவ்வாறான நம்பிக்கையை ஏற்படுத்த முடியாது. உண்மைக் கிறிஸ்தவர்கள் பைபிளை அடிப்படையாகக் கொண்டவர்கள். இறைவனிடத்தே தாம் செய்யும் பாவங்களை அன்றன்றே மன்னிக்குமாறு கோருபவர்கள். எனவே அவ்வாறான ஒரு நம்பிக்கை, அவ்வாறானதொரு நெருக்கடி தமக்கு ஏற்படும் என்பதனை அவர்கள் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள்.

இவர்கள் தவிர்ந்த மற்றவர்களிடத்திலேயே மூட நம்பிக்கைக் கொள்கைகள் பரப்புவதற்கும் அவற்றினூடாகச் சில காரியங்களை நடத்துவதற்கும் ஏதுவாக இருக்கிறது.

கடந்த 11ஆம் திகதி இரவு கிளிநொச்சி கிருஷ்ணபுரம் பகுதியில் பேய்கள் நடமாடி இருக்கின்றன. இந்தப் பேய்கள் அண்மையில் இராணுவத்தில் இணைந்து கொண்ட தமிழ்ப் பெண்கள் முன்னிலையில் முற்பட்டிருக்கின்றன.

இரவு உணவு எடுக்க அருகிலுள்ள முகாமுக்குச் சென்ற பெண்களே பேய்களைக் கண்டதாகவும் அதன் பின்னர் அவர்கள் அலறியடித்து மயக்கமுற்றுள்ளனர். அன்றிரவே கிளிநொச்சி மருத்துவமனையின் உளநல மருத்துவப் பிரிவில் இருந்து இராணுவத்தினர் உதவி கோரியுள்ளனர். அதாவது, தமது முகாமுக்கு வந்து குறிப்பிட்ட பெண்களுக்கு ஏற்பட்டிருக்கக் கூடிய மனக் குழப்பம் தொடர்பில் பரிகாரம் செய்யுமாறு இராணுவத்தினரால் கோரப்பட்டது. ஆனாலும், வைத்தியசாலைத் தரப்பினர் முகாமுக்குச் செல்ல உடன்படவில்லை.

அவர்களை வைத்தியசாலையில் சேர்க்குமாறும் அங்கு வைத்து தாம் சிகிச்சை அளிப்பதாகவும் இராணுவத்தினரைக் கேட்டுள்ளனர்.

இதற்கு அமைவாகவே பதின்மூன்று தமிழ்ப் பெண்களும் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர்.

இராணுவத் தமிழ்ப் பெண்கள் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டது தொடர்பில் பல்வேறு ஊடகங்களிலும் பல்வேறு விதமான விதங்களில் செய்திகள் வெளிவந்திருக்கின்றன. இன்றளவும் அவை மாறி மாறிப் பேசப்படுகின்றன.

இந்தச் செய்திகளின் திரிபுக்கு இராணுவத்தினரின் செயற்பாடே காரணமாக இருக்கிறது. குறிப்பாக பெற்றோர் தவிர்ந்த ஏனையவர்களைப் பார்வையிட மறுத்தமை, வைத்தியசாலையின் சுற்றுப்புறங்களில் இராணுவத்தினரைக் காவலில் ஈடுபடுத்தியமை. சிவில் உடையில் புலனாய்வாளர்களை வைத்தியசாலை வளாகத்துக்குள் நடமாட விட்டமை, பொது மக்களுக்கும் ஊடகவியலாளர்களுக்கும் பெரும் சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது.

இவர்களது சந்தேகத்தை போக்குவதற்கு வைத்தியசாலை வட்டாரங்களும் முன்வரவில்லை. ஏற்கனவே இராணுவத்தில் இணைத்துக் கொள்ளும்போது இவர்களது உடற்தகுதி வைத்திய பரிசோதனை அறிக்கைகள் மூலம் உறுதிப்படுத்தப்பட்டது. இவர்கள் பதின்மூன்றுபேரும் ஒரே மாதிரியான பிரச்சினைக்கு ஆளாவதற்கு வேறு காரணங்கள் என்னவாக இருக்கலாம் என்பதே கேள்வி.

‘எங்களுக்கு திருப்ப அந்த நினைவை வர வைக்காதேங்க அண்ண. அதை நினச்சாலே பயமா இருக்கு’ என்கிறார்கள் பாதிக்கப்பட்ட பெண் பிள்ளைகள்.

அப்படியானால் எதற்காக பயப்பிடுகிறீர்கள், காரணத்தை ஏன் மறைக்கிறீர்கள் என்று கேட்டதற்கு, ‘எங்களுக்கு ஒண்ணும் நடக்கல, நாங்க இருந்த இடத்திலை முந்தி ஆக்கள் செத்தவையாம் அந்த ஆவியள்தான் எங்களைப் பிடிச்சிருக்கு, எங்களுக்கு பேய் பிடிச்சிருக்கு’ என்று விதண்டாவாதம் பேசினார் அந்தப் பெண்.

பேய்களை நீங்கள் கண்டீர்களா? என்றதற்கு ‘இல்ல அங்க பேய் இருக்கு’ என்றனர்.

இனி என்ன செய்யப் போறிங்க என்று கேட்டதற்கு இரண்டு கருத்துக்கள் வந்தன. ஒன்று ‘எங்களுக்கு அங்க போகப் பயமாக இருக்கு நாங்க வீட்ட போகப் போறம்’. மற்றையது எங்களுக்கு அங்க ஒரு பிரச்சினையும் இல்ல. நல்ல சாப்பாடு தாறாங்க, பயிற்சி தாறாங்க, கொம்பியூட்டர் பழகிறம். நாங்க விரும்பித் தான் ஆமிக்குப் போனனாங்க. திருப்பவும் முகாமுக்குத் தான் போக வேணும்.

இவர்களது இருநிலை கருத்துக்களுக்கு இடையிலும் யாராவது இருந்திருக்கக் கூடும். அது துலங்கவில்லை என்றாலும் அவர்கள் மன ரீதியாக எதற்கோ பயப்படுகிறார்கள். அந்தப் பயத்திலிருந்து விலகியிருக்க வீடு செல்ல விரும்புகிறார்கள் என்பது உள்வியல் ரீதியான உண்மை.

## தெரியாத உண்மை



கடந்த நவம்பர் மாதம் 18 ஆம் திகதி இராணுவத்துக்கு 109 தமிழ்ப் பெண்கள் இணைத்துக்கொள்ளப்பட்டார்கள். இது தொடர்பான நிகழ்வு கிளிநொச்சியில் பெரும் எடுப்பில் நடைபெற்றது. கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் இந்த நிகழ்வில் கலந்து கொண்டு இராணுவத்தில் தமது பிள்ளைகளை இணைத்ததற்கான உறுதிச் சான்றிதழையும் வழங்கி வைத்திருந்தார். ஆனால் உண்மையில் ஒரு உறுதிச் சான்றிதழ் உத்தியோக பூர்வமாகப் பெற்றோருக்கு இதுவரை வழங்கப்படவில்லை. விழாவுக்கு எனத் தயாரிக்கப்பட்ட ஒரு சில ஆவணக் கடிதம் சம்பிரதாய ரீதியாக மேடையில் வைத்து பெற்றோரிடம் வழங்கப்பட்டு,அவர்கள் கீழே இறங்கி வந்ததும் அது மீளப் பெறப்பட்டிருக்கிறது. தவிர சிவில் பாதுகாப்புப் படையில் யுவதிகளை இணைத்து அவர்களுக்கு அவர்களது பகுதியிலேயே வேலைவாய்ப்பு வழங்குவதாகவும் உடற்தகுதிகாண் பயிற்சி ஒன்று மூன்றுமாத காலத்துக்கு வழங்குவதாகவும் முன்னர் தெரிவிக்கப்பட்டிருந்தது. ஆனால் அவர்கள் முழுமையாக இராணுவத்தில் சேர்க்கப்பட்டுள்ளனர் என்பதே பின்னைய செய்தி. அதை இணைந்து கொண்ட பெண்களில் ஆறு பேர் தவிர 103 பேரும் ஏற்றுக் கொண்டுள்ளார்களா, இல்லையா என்பதை உறுதிப்படுத்திக்கொள்ள முடியவில்லை. ஆனாலும் பெற்றோர் தமது பிள்ளைகளுக்கு வேலை வாய்ப்புப் பெற்றுத் தருவதாகவே இணைத்தார்கள், ஆனால் இப்போது இராணுவத்தில் இணைக்கப்பட்டுள்ளனர் என்ற செய்தி வந்திருக்கிறது. இதனால் நாம் என்ன செய்வது என்று தெரியாமல் உள்ளோம் என்று கூறுகின்றார்கள். மல்லாவியைச் சேர்ந்த ஒரு குடும்பம் மட்டும் தமது பிள்ளையை ஒப்படைப்பதற்கான ஆவணத்தை இராணுவ அதிகாரியிடம் கோரிப் பெற்றிருக்கின்றது. இவை தவிர மற்ற எந்தப் பிள்ளைகளுக்கும் உறுதியான ஆவணங்கள் வழங்கப்படவில்லை என்பது மறைக்கப்பட்டிருக்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*விழுந்து நொருங்கிய விமானத்தைத் தேடும் பணியில் கடற்படை தீவிரமாக ஈடுபட்டுவருவதாகக் கூறப்பட்டது. ஆனால் இதுவரை அங்கு ஒரு உடைந்த ஆணி கூடக் கண்டுபிடிக்கப்படவில்லை. அவ்வாறே பள்ளிக்குடாவில் விமானப் பயணிகளின் எச்சங்களைத் தோண்டியெடுக்கும் பணி கனரக வாகனங்கள் மூலம் ஆரம்பிக்கப்பட்டது.*

# வாணவேடிக்கை

## கழுத்தை அறுக்கும் வஞ்சகம்




**ஞாயிறு காரம்**

சந்திரசேகர ஆஷாத்

வானில் வண்ணவாணங்களை விட்டு வேடிக்கை காட்டிக் கொண்டிருக்க அவற்றின் வினோதங்களில் மயங்கி தம்மை மறந்து அண்ணாந்து பார்த்துக் கொண்டிருக்க அப்படி அதனுடன் மனமொன்றிப் போயிருப்பவர்களின் கழுத்தை அறுக்கும் நயவஞ்சகம் மேற்கொள்ளப்பட்டால் எப்படியிருக்கும். இலங்கையில் தமிழ் மக்கள் மேல் இப்படியான நயவஞ்சகம் அரங்கேற்றப்படுவதை இப்போது அவதானிக்க முடிகிறது.

இலங்கையின் அரசியலமைப்பின் பதின்மூன்றாவது திருத்தச் சட்டம் நீக்கப்பட வேண்டும் என ஒரு சர்ப்பங்கலக்கி வாணத்தை இலங்கையின் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ கொளுத்தி ஏவிவிட்டார். அதன் சத்தத்திலும் வெளிச்சத்திலும் விமல் வீரவன்ச, சம்பிக ரணவக்க, எல்லாவல்ல மெத்தானந்த தேரர், தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் போன்ற சிங்களக் கடும் போக்காளர்கள் தூக்கித் தலையில் வைத்துக் கொண்டு கூத்தாடினர். அதேவேளையில் அரசில் இணைந்துள்ள இடதுசாரிகள் உட்படச் சில கட்சிகள் எதிர்க்குரல் எழுப்பின. ஒரே அரசின் கட்சிகள் எதிரும் புதிருமாக நின்று ஒரு கவர்ச்சிகரமான வாணவேடிக்கையை நிறைவேற்றின. இடையிடையே பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ நாட்டின் ஏனைய பகுதிகளைப் போல் வடக்குக் கிழக்கை அபிவிருத்தி செய்தால் 13 ஆவது திருத்தச் சட்டம் தேவையற்றுப் போய்விடும் எனவும் அந்தச் சட்டத்தை நீக்குவதா இல்லையா என்பதை நாடாளுமன்றத் தெரிவுக்குழுவே முடிவு செய்யும் எனவும் 'அவுட்' வாணங்களை விட்டுக் கொண்டிருக்கிறார். அமைச்சர் ஜோன் செனவிரத்தினவோ 13 ஆவது திருத்தச் சட்டத்தை நீக்குவது சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் கொள்கை அல்ல என்று கூறி ஒரு வெள்ளி விறிசைக் கொளுத்திப் பிடிக்கிறார். இந்தச் சட்டம் இனப்பிரச்சினைக்கு ஒரு நியாயமான தீர்வை வழங்கும் அளவுக்கு இல்லை என்ற போதிலும் இது அதிகாரப் பரவலாக்கத்தின் ஒரு சில அம்சங்களைக் கொண்டிருப்பதால் தமிழ் மக்களும் இதை நீக்குவதற்கு எதிராகக் குரலெழுப்பி வருகின்றனர்.

இவ்வாறு தமிழ் மக்களும் இந்தியா உட்பட சர்வதேசமும் இந்த வாணவேடிக்கையில் அக்கறை காட்டிக் கொண்டிருக்க அரசபடைகள் தமிழ் இளைஞர்களை வேட்டையாடத் தொடங்கியுள்ளன.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்கள் தங்கள் விடுதிகளில் மாவீரர்களுக்கு அஞ்சலி செய்ய முயற்சிகள் மேற்கொண்ட போது பொலிஸாரும் படையினரும் விடுதிகளுக்குள் புகுந்து வன்முறைகளை மேற்கொண்டதைக் கண்டித்து மாணவர்கள் ஆர்ப்பாட்டம் நடத்தியமையும் மாணவர்கள் மீது தடியடி நடத்தப்பட்டு காயமடைந்த மாணவர்கள் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டதும் ஏற்கனவே இடம்பெற்ற சம்பவங்கள். அதையடுத்து மாணவர்கள் உட்பட 25 இற்கு மேற்பட்டோர் யாழ். குடாநாட்டில் கைது செய்யப்பட்டனர். அது மட்டுமன்றி அவர் எப்போது கைது செய்யப்படுவர் என்று தெரியாதளவுக்கு படையினரால் ஒரு பயங்கர நிலைமை கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளது. தமிழ் இளைஞர்களுக்கு எவ்வித பாதுகாப்பும் இல்லை என்பது பிரகடனப்படுத்தப்படாத நடைமுறையாகி அதுமட்டுமன்றி கைது செய்யப்பட்ட மாணவர்களில் மூவர் எந்தவித நீதிமன்ற விசாரணையுமின்றி வெலிகந்தை இராணுவ முகாம் தடுப்புக் காவலுக்கு அனுப்பப்பட்டு விட்டனர். அத்துடன் மனித உரிமைகள் ஆணைக்குழுவினர் கைது செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கையைத் திட்டவட்டமாகத் தெரிவிக்க முடியாத அளவுக்கு தினமும் கைதுகள் அதிகரிக்கின்றன. ஏற்கனவே புனர்வாழ்வு பெற்று வெளிவந்த முன்னாள் போராளிகளும் மீண்டும் அச்சுறுத்தலுக்கு உள்ளாகியுள்ளனர். வெலிகந்தையில் தடுத்து வைக்கப்பட்ட மாணவர்களும் செய்த குற்றம் மாவீரர் தினம் கொண்டாடியமையே என்று கூறப்படுகிறது.

ஆனால் உபவேந்தர் உட்பட பல்கலைக்கழக நிர்வாகத்தினர் மாணவர்களை விடுவிக்க எந்த முயற்சியும் எடுக்கவில்லை எனவும் இந்தக் கைதுகள் தொடர்பாகக் கண்டனங்களை வெளியிடவில்லையெனவும் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் குற்றம் சுமத்தியுள்ளனர். இந்த நிலைமை மாணவர்களின் எதிர்காலத்தைச் சிதைப்பதில் படையினருக்கு பல்கலைக்கழக நிர்வாகமும் ஆதரவு வழங்குகிறது என்ற கேள்வியை எழுப்பியுள்ளது.

மாவீரர் தினத்தை கொண்டாடுவதோ மாவீரர்களுக்கு அஞ்சலி செய்வதோ சட்டப்படி குற்றமல்ல. அவர்களை நீதிமன்றத்தில் நிறுத்தினால் அவர்கள் விடுதலை செய்யப்படுவர். எனவே அவர்கள் நீதிமன்றத்தில் நிறுத்தப்படாமலே தடுப்புக்கு அனுப்பப்பட்டுவிட்டனர் என்பது தெளிவாகிறது.

அடிப்படையில் மாணவர்கள் உட்பட தமிழ் இளைஞர்களை வேட்டையாடுவதே உண்மையான நோக்கம் என்பதும் மாவீரர் அஞ்சலி ஒரு சாட்டாகப் பயன்படுத்தப்படுகிறது என்பதையும் நாம் புரிந்துகொள்ள முடியும்.

இப்படியான அப்பட்டமான மனித உரிமை மீறலைக் கண்டு தமிழ் மக்களும் சர்வதேசமும் கொதித்தெழுந்துவிடாமல் திசை திருப்புவதற்கு அடுத்ததொரு அதிர்வெடி வாணம் ஏவப்பட்டது. அதாவது 1998 இல் [illegible] லயன் எயார் விமானம் [illegible].

அண்மையில் தில்லைராஜ் என்பவர் ஒரு முன்னாள் போராளி எனவும் அவர் 1998 இல் பலாலியிலிருந்து புறப்பட்டு இரத்மலானை நோக்கிச் சென்ற 'லயன் எயர்' பயணிகள் விமானத்தைத் தானே சுட்டுவிழுத்தியதாகவும் அது இரணைதீவுக் கடலில் விழுந்து நொருங்கியதாகவும் அதில் கரையொதுங்கிய சடலங்கள் பூநகரி பள்ளிக்குடாவில் புதைக்கப்பட்டதாகவும் அவர் தெரிவித்ததாக அரச தரப்புச் செய்திகள் வெளிவந்தன. மேலும் அந்தப் பகுதியில் பணியாற்றிய கிராம சேவையாளராலேயே அவை அடக்கம் செய்யப்பட்டதாகவும் கூறப்பட்டது.

அதாவது விடுதலைப் புலிகள் தமிழர் பயணம் செய்த விமானத்தைச் சுட்டு விழுத்தி தமிழர்களைக் கொன்று புதைத்தனர் என்ற பிரசாரத்தைத் தமிழ் மக்கள் மத்தியிலும் சர்வதேச அளவிலும் பரப்புவதற்கான முயற்சியாகவே இது மேற்கொள்ளப்பட்டது.

ஏற்கனவே விழுந்து நொருங்கிய விமானத்தைத் தேடும் பணியில் கடற்படை தீவிரமாக ஈடுபட்டுவருவதாகக் கூறப்பட்டது. ஆனால் இதுவரை அங்கு ஒரு உடைந்த ஆணி கூடக் கண்டுபிடிக்கப்படவில்லை. அவ்வாறே பள்ளிக்குடாவில் விமானப் பயணிகளின் எச்சங்களைத் தோண்டியெடுக்கும் பணி கனரக வாகனங்கள் மூலம் ஆரம்பிக்கப்பட்டது. எதுவும் கண்டுபிடிக்கப்படாமலே முதற்கட்டம் முடிவடைந்தது. பின் இரண்டாம் கட்டம் ஆரம்பிக்கப்பட்டு அதில் ஒரேஒரு மேலாடை கண்டுபிடிக்கப்பட்டது. ஆனால் அது விமானப்பயணியுடையதா என உறுதி செய்யப்படாத நிலையில் அதுவும் நிறைவு பெற்றது. எனவேதான் விமானம் சுடப்பட்டது, பயணிகள் புதைக்கப்பட்டது போன்ற செய்திகள் திட்டமிட்டு விடுதலைப் புலிகள் மீது அவதூறு பரப்ப மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளா என்ற கேள்வி எழுகிறது. விடுதலைப் புலிகளைக் களங்கம் கற்பிப்பதன் மூலம் விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்கள் என்ற பேரில் இளைஞர்கள் கைது செய்யப்படுவதற்கு எதிரான தமிழ் மக்களின் உணர்வுகளைத் திசை திருப்ப முடியும் என நம்புவது போலவே தெரிகிறது.

ஆனால் தமிழ் மக்கள் 13 ஆவது திருத்தச் சட்டம் வேண்டுமா? வேண்டாமா? என்ற விவாதம் நாடாளுமன்றத் தெரிவுக் குழுவே இனப்பிரச்சினையைத் தீர்க்கும் ஒரே இடம் என்ற ஏமாற்று, லயன் எயார் விமானம் தொடர்பான விவாரம் போன்ற பல வாணவேடிக்கைகளைப் பார்த்துச் சலிப்படைந்துவிட்டனர். ஒருபுறம் இப்படியான வாணவேடிக்கைகளை நடத்திக் கொண்டே நிலங்களை அபகரித்தல், இராணுவக் குடியிருப்புக்கள் என்ற பேரில் சிங்கள குடியேற்றங்களை நிறுவல், வடக்குக் கிழக்கில் இராணுவ மேலாதிக்கத்தின் மூலம் அடக்குமுறையைக் கட்டவிழ்த்தல், தமிழ் இளைஞர்களைக் கைது செய்தல் தொடர் கழுத்தறுப்புக்களை மேற்கொள்வதை அனுபவபூர்வமாக உணர்ந்து விட்டனர். யாழ்ப்பாணத்துக்கு குடிதண்ணீர் வழங்கல் என்ற பேரில் கிளிநொச்சியின் விவசாயத்தை அழித்தல், அபிவிருத்தி என்ற பேரில் சம்பூர், கொக்கிளாய், குச்சவெளி ஆகிய இடங்களில் மக்களின் பாரம்பரிய நிலங்களை அபகரித்தல், பாதுகாப்பு என்ற பேரில் எமது மீனவர்களின் தொழிலைக் கட்டுப்படுத்தி தென்னிலங்கை மீனவர்கள் எமது வளங்களை அள்ளிச் செல்ல வாய்ப்பேற்படுத்தல் போன்ற தமிழ் மக்களுக்கு நன்மை செய்வதாகக் காட்டி தமிழ் மக்களின் அடிப்படை வசதிகளை அழித்தல் போன்ற திருகுதாளங்களையும் எமது மக்கள் புரிந்துகொண்டு விட்டனர்.

எமது மக்கள் வேண்டுவதெல்லாம் இப்படியான வாணவேடிக்கைகளையல்ல. நாம் ஐக்கியப்பட்ட இலங்கையில் சுயநிர்ணய உரிமையுடன் கூடிய ஓர் அதிகாரப் பரவலாக்கத்தையே கோரி நிற்கிறோம். அதற்கு இன்று ஆட்சியிலிருக்கும் அரசு நியாயபூர்வமாகத் தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவம் செய்யும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் பேசி ஓர் இணக்கப்பாட்டுக்கு வரவேண்டும். நாடாளுமன்றத் தெரிவுக் குழுவினால் எவ்வித முடிவையும் எட்ட முடியாது என்பதை தமிழ் மக்கள் நன்கறிவர்.

பிரதம நீதியரசர் மீதான நாடாளுமன்றத் தெரிவுக்குழுவினரின் விசாரணை தொடர்பாகவும் அதில் அரச தரப்பினர் நடந்து கொண்ட முறைமை பற்றியும் பல விமர்சனங்கள் எழுந்தன. இடையில் எதிர்க்கட்சியினர் மேற்படி விசாரணை தொடர்பான திருப்தியீனத்தை வெளியிட்டு அதைவிட்டு வெளியேறினர். இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பான தெரிவுக் குழுவில் கூட இப்படியான ஒரு நிலையேற்பட இறுதியில் ஒருதலைப்பட்சமான தீர்வே முன்வைக்கப்படும் என எதிர்பார்க்கலாம்.

எனவே வாணவேடிக்கைகளைக் காட்டி தமிழ் மக்களை ஏமாற்றிக் கொண்டு சர்வதேச அழுத்தங்களையும் சமாளித்துக் கொண்டு தமிழ் மக்களின் கழுத்துக்களை அறுக்கும் நயவஞ்சகம் மிகத் தந்திரமாகவே அரங்கேற்றப்படுகிறது. ஆனால் தமிழ் மக்கள் இவை பற்றிய உண்மைகளை அனுபவபூர்வமாகக் கண்டறிந்துள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தெரிவுக்குழுவை எப்படி நம்புவது?

■ அதிரன்

பிரதம நீதியரசரை விசாரிப்பதற்காக நியமிக்கப்பட்ட தெரிவுக்குழுவின் நடவடிக்கைகள் எப்படி அமைந்தன என்பது எல்லோருக்கும் தெரிந்த விடயம். இதனை வைத்துக் கொண்டு இனப்பிரச்சினைத் தீர்வுக்காக அரசு அமைக்கவுள்ள தெரிவுக்குழுவின் நடவடிக்கைகள் எவ்வாறு அமையும் என்பதை இப்போதே எதிர்வு கூறிவிட முடியும்.

இந்த இரண்டு தெரிவுக்குழுக்களுக்கும் இடையில் எந்தத் தொடர்பும் இல்லாதபோதும், அரசின் நிலைப்பாட்டையும் நேர்மைத்தன்மையையும் எடுத்துக்காட்டுவனவாக இவை அமைந்துவிட்டன. பிரதம நீதியரசருக்கு எதிரான 14 குற்றச்சாட்டுகளை விசாரிக்க நியமிக்கப்பட்ட 11 பேர் கொண்ட நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் அரசதரப்பில் 7 பேரும், எதிர்க் கட்சிகள் தரப்பில் 4 பேரும் இடம்பெற்றிருந்தனர்.

இந்தத் தெரிவுக்குழுவின் விசாரணைகள் பிரதம நீதியரசரைப் பதவியிலிருந்து தூக்கிவிட வேண்டும் என்ற முனைப்புடனேயே மேற்கொள்ளப்பட்டன.

இதனால்தான், தெரிவுக்குழுவின் விசாரணைகள் நியாயமற்ற வகையில் முன்னெடுக்கப்படுமானால், தாம் அதிலிருந்து விலகிக் கொள்வோம் என்று எதிர்க்கட்சி உறுப்பினர்கள் எச்சரித்திருந்தனர். அதுவும் அரசுக்கு வாய்ப்பாக அமைந்துவிட்டது.

“பிரதம நீதியரசர் விடயத்தில் செயற்பட்டது போன்றே இனப்பிரச்சினை விடயத்திலும் உத்தேச நாடாளுமன்ற தெரிவுக்குழு செயற்படும் என்பது அப்பட்டமான உண்மை. இதனை பிரதம நீதியரசர் மீதான விசாரணை மூலம் நிரூபித்துக் காட்டியிருக்கிறது மஹிந்த தலைமையிலான அரசு.

தெரிவுக்குழுவின் விசாரணைகளில் இருந்து பிரதம நீதியரசர் வெளிநடப்புச் செய்ய, எதிர்க் கட்சி உறுப்பினர்கள் தாமும் அதில் அங்கம் வகிக்கப்போவதில்லை என்று முடிவு செய்து வெளியேறினர்.

பிரதம நீதியரசர் இனிமேல் தெரிவுக்குழுவின் முன்னால் முன்னிலையாகப் போவதில்லை என்று அறிவித்த நிலையில், திடீரென அரசதரப்பு உறுப்பினர்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட தெரிவுக்குழு, ஓர் அறிக்கையைத் தயார் செய்து நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்தது.

பிரதம நீதியரசர் மீது சுமத்தப்பட்ட 14 குற்றச்சாட்டுகளில் 5 குற்றச்சாட்டுகள் குறித்து தெரிவுக்குழு விசாரித்தது. அவற்றில் மூன்று குற்றச்சாட்டுகள் உண்மையானவை என்று அறிவிக்கப்பட்டன. ஏனைய இரண்டும் கைவிடப்பட்டுவிட்டன.

மூன்று குற்றச்சாட்டுகள் உறுதிப்படுத்தப்பட்டுவிட்டதால், இதை வைத்துக் கொண்டே, பிரதம நீதியரசரைப் பதவிநீக்கம் செய்துவிடலாம் என்று தெரிவுக்குழு சபாநாயகருக்கு அறிக்கை கொடுத்தது.

விசாரணைகள் முற்றிலும் மேற்கொள்ளப்படாத நிலையில் - தான் குற்றமற்றவர் என்பதை நிரூபிப்பதற்குப் பிரதம நீதியரசருக்குப் போதிய கால அவகாசம் வழங்கப்படாமல் அவசர அவசரமாக - அரசதரப்பு உறுப்பினர்களை மட்டும் கொண்ட தெரிவுக்குழு இந்த அறிக்கையை சமர்ப்பித்தது அனைவரையும் ஆச்சரியப்பட வைத்தது.

பிரதம நீதியரசர் அவரது நியாயத்தை நிரூபிப்பதற்கான வாய்ப்பை வழங்காமலேயே அரசதரப்பு அவரைக் குற்றவாளியாக்கியது.

பிரதம நீதியரசரை எப்படியாவது பதவிநீக்கிவிட வேண்டும் என்ற குறியுடன் விசாரணை மேற்கொள்ளப்பட்டதாலேயே தான், அரச தரப்பினால் இவ்வாறு நடந்து கொள்ள முடிந்துள்ளது. அதுமட்டுமன்றி, அரச தரப்பின் இந்த நடவடிக்கைகளுக்கு எதிராகக் கடுமையான விமர்சனங்கள் வந்துள்ள நிலையில், இன்னொரு சுதந்திரமான குழுவின் மூலம் தெரிவுக்குழுவின் அறிக்கையை ஆராயப் போவதாக அறிவித்துள்ளார் ஜனாதிபதி மஹிந்த. இது மற்றொரு வேடம் எனலாம். இந்தக் குழுவினால் பிரதம நீதியரசருக்கு எதுவும் கிடைக்கப் போவதில்லை.

தெரிவுக்குழுவின் அறிக்கையை ஆராய இன்னொரு குழு நியமிக்கப்படவுள்ளதாக வெளியாகியுள்ள அறிக்கை, தெரிவுக்குழுவின் நம்பிக்கைத் தன்மையைக் கேள்விக்குள்ளாக்கியுள்ளது. பிரதம நீதியரசர் விவகாரத்தில் அமைக்கப்பட்ட தெரிவுக்குழு நியாயமாகச் செயற்படவில்லை என்று குற்றச்சாட்டுகள் எழுந்துள்ள நிலையில், இனி நாம் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான தெரிவுக்குழுவைப் பற்றிப் பார்ப்போம்.

இனப்பிரச்சினைக்குத் தெரிவுக்குழு மூலமே தீர்வு காணப்படும் என்று அரசு அடம்பிடிக்கிறது. [illegible]
[illegible] கிறது.

இந்த தெரிவுக்குழு முன்மொழியப்பட்டு பல காலமாகிவிட்டது. ஆனால், இன்னமும் இயங்கு நிலைக்கு வரவில்லை. காரணம், எதிர்க் கட்சிகள் எதுவும் இந்தத் தெரிவுக்குழுவில் இடம்பெறும் தமது பிரதிநிதிகளின் பெயர்களை அறிவிக்கவில்லை. இதற்கு முக்கிய காரணம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு.

தெரிவுக்குழுவின் மூலம் இனப்பிரச்சினைக்கு நியாயமான தீர்வு ஒன்றை எட்ட முடியாது என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நம்புகிறது. 31 பேர் கொண்ட தெரிவுக்குழுவில் அரசதரப்பில் மட்டும் 19 பேர் இடம்பெறுகின்றனர். அவர்களின் பெயர்கள் எல்லாம் ஏற்கனவே அறிவிக்கப்பட்டுவிட்டது. எதிர்க்கட்சிகளுக்கு இந்தத் தெரிவுக்குழுவில் 11 இடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. அதில் 4 இடங்கள் மட்டும் தான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு வழங்கப்படவுள்ளது.

எப்படிப் பார்த்தாலும், அரச மற்றும் எதிர்க் கட்சிகளின் தரப்பில் சிறுபான்மையினரைப் பிரதிநிதித்துவம் செய்யும் 10 உறுப்பினர்கள் கூட தெரிவுக்குழுவில் இடம்பெறமாட்டார்கள். இந்தநிலையில், தமிழர்களின் நியாயமான அரசியல் எதிர்பார்ப்புகளைத் தெரிவுக்குழு எந்தளவுக்கு ஏற்றுக்கொள்ளும் என்பதும், அதன் மூலம் நியாயமான தீர்வு ஒன்று கிடைக்குமா என்பதும் மிகப் பெரிய சந்தேகமே.

அரசின் அரசியல் நிகழ்ச்சி நிரலுக்கேற்பவே இந்தத் தெரிவுக்குழு அமைப்பும் இடம்பெற்றுள்ளது.


நாடாளுமன்றத் தெரிவுக்குழு என்பது அரசியல் நிகழ்ச்சிநிரலுக்கு அப்பாற்பட்டதாக, நியாயமாகவும் சுதந்திரமாகவும் செயற்படத் தக்கதொன்றாக இருக்கும்போது தான், அதன் மீது நம்பிக்கை ஏற்படும்.

இதனைவிட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தெரிவுக்குழுவில் இணைந்து கொண்டாலும், அவர்கள் விரும்புகின்ற ஒரு தீர்வைக் கொண்டு வரவோ, அவர்கள் விரும்பாத ஒரு தீர்வை தடுத்து விடவோ முடியாது. ஏனெனில் பெரும்பான்மையாக உள்ள அரசதரப்பு உறுப்பினர்கள், பிரதம நீதியரசருக்கு எதிரான ஓர் அறிக்கையை எவ்வாறு சமர்ப்பித்தனரோ, அதுபோன்றே இங்கேயும் சமர்ப்பிக்கப்படுவதற்கு வாய்ப்புள்ளது.

எனவே பிரதம நீதியரசர் விடயத்தில் செயற்பட்டது போன்றே இனப்பிரச்சினை விடயத்திலும் உத்தேச நாடாளுமன்ற தெரிவுக்குழுவும் செயற்படும் என்பது அப்பட்டமான உண்மை. இதனை பிரதம நீதியரசர் மீதான விசாரணை மூலம் நிரூபித்துக் காட்டியிருக்கிறது மஹிந்த தலைமையிலான அரசு.

இவற்றையெல்லாம் பட்டுத் தெளிந்த பின்னர் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான தெரிவுக் குழுவை நம்பிக் கூட்டமைப்பு அதில் இடம்பெறுவது எந்த வகையிலும் பொருத்தமில்லை. ஒட்டு மொத்தத்தில் இந்தத் தெரிவுக்குழுக்கள் எல்லாம் வெறும் பூச்சாண்டி விளையாட்டுக்களே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




"என்ன..... கல்.... பூமி .... ஆபத்தா .... அழியப் போகிறதா? ஆண்டவா இது என்ன சோதனை. ஏன் இப்படி "கல்" வடிவில் சோதிக்கிறாய். உலக ஆசைகளைத் துறந்து நிம்மதியாய் வாழத்தானே இந்த வேடத்தைப் புனைந்தேன்.... முன்பு இல்வாழ்க்கை வாழும் காலத்தில் மிகவும் குடித்ததில் "கல்"லீரல் பழுதென்றார்கள், அடுத்து சிறுநீர்ப்பிரச்சினையில் சிறுநீரில் "கல்" என்றார்கள். நிம்மதியாய் பாடல் கேக்கலாம் என்று போனால் ஒரு "கல்" ஒரு கண்ணாடி உடையாமல் மோதிக்கொண்டால் காதல் எண்டது. .... இவையெல்லாவற்றையும் துறந்து வாழ வந்தால் .... மறுபடியும் "கல்"லா?

# மறுபடியும் கல்லா....?

**தொல்புரம்**
**சி.கதிர்காமநாதன்**

யாழ். குடாநாடு எப்போதும் நிம்மதியாக இருந்ததில்லை. நிம்மதியாய் இருக்க நினைத்தாலும் இருப்பவர்களும் நிம்மதியாய் இருக்க விடப்போவதுமில்லை. சமீப காலத்தில் பரவலாக அடிபட்டுக்கொண்டிருக்கும் வதந்தி, கதைகள் எல்லாம் மக்களை மேலும் குழப்பத்துக்கு உள்ளாக்கிக் கொண்டு இருக்கின்றன. 'இது உண்மையா? பொய்யா? அப்படி நடந்து விடுமா?' என்று சிறுவர் முதல் அனைத்துத் தரப்பினரும் யோசித்தபடியே உள்ளனர். இப்படியான யோசனைகளில் சிக்கியவர்களுள், உங்களைப் போல் நானும் ஒருவன்.

21-12-2012 இல் மாயன் நாட்காட்டியில் உள்ளபடி-இந்த உலகம் அழியப் போகிறதா? எங்கேயாவது யாரையும் சந்திக்கும் வேளையில் இதனைக் கேட்டுத் தொலைத்து விடுகிறார்கள். என்ன பதில் தான் சொல்வது? நானென்ன "நாசா" விஞ்ஞானியா? அல்லது மிகப் பெரிய அறிவு மேதையா? எப்படிப் பதில் சொல்வது? அழியப் போகின்றதா? அல்லது அழியாமல் இருந்துவிடுமா? யாரிடம் இதுபற்றிக் கேட்டால் விடை தெரியும்? உலகில் வேகமாகப் பரவிவரும் "டெங்கு" நோயைவிட இந்த அழியும் விடயம் இன்னும் வேகமாகப் பரவிவிட்டது.

எப்படி இதனைத் தடுக்க முடியும்? நகரமெங்கும் திரிந்து "புகையடித்து டெங்கினைக் கட்டுப்படுத்துவது போல்" இதனைக் கட்டுப்படுத்தித் தடுத்து விட முடியுமா? என்ன செய்வது? யாழில் முன்பு சண்டை நடந்துகொண்டிருந்த போது, மக்களும் ஒரு பகுதியாக இடம் பெயர்ந்து கொண்டிருந்த வேளையில், பிள்ளையார் பால் குடிக்கிறார் என்ற செய்தி வேகமாய்ப் பரவியது. அந்த நேரத்தில் பலரும் பெரிய விடயமாகக் கதைத்துக் கொண்டார்கள். நாங்களும் இதனைக் கேட்டுத்தான் இருந்தோம். தீவிரமாக யோசிக்கவில்லை.

"பாவம் பிள்ளையார்; பால் குடிக்கிறார்" இது நல்ல விடயம் தானே, பால்தானே குடிக்கிறார். தப்பில்லை.

சண்டையும் உக்கிரமடைய, இது பற்றிய செய்திகளும் காணாமல் போய்விட்டன. இப்போது நிலைமை அப்படியில்லை. அலையாமல் நிலையாக இருக்கத் தொடங்கி விட்டோம். போர் நடைபெறவில்லை. தகவல் தொடர்புச் சாதனங்கள் தாராளமாகச் செய்திகளை வாரிவழங்குகின்றன. உண்மையோ, பொய்யோ என அறிய முடியாதபடி "மாரி மழையைவிடச் செய்திகளைப் பொழிந்து தள்ளுகின்றன.

"உலகம் அழியப் போகின்றது" என்பது காதில் எப்போதும் கேட்டுக்கொண்டுதான் இருக்கின்றது. சரி எமது மக்களில் யார் இந்தச் செய்தியினை உண்மையென நம்புவார்கள்? யார் நம்பமாட்டார்கள்? "உது தேவையில்லாத கதை, உலகம் கடைசி வரைக்கும் அழியாது." என்பதே எனது நம்பிக்கை. ஆனால் நடக்கும் நிகழ்வுகள், இயற்கை நடைமுறையில் ஏற்பட்ட காலமாற்றங்கள், சுனாமி, கடும் மழை, வெள்ளப் பெருக்கு, அடிக்கடி தலையெடுக்கும் சூறாவளிகள், பனிமழை, கடும் வறட்சி, கடற்கரையில் இறந்து ஒதுங்கும் பெருவாரியான மீன்கள், சமீபத்தில் புத்தளப் பகுதியில் பெய்த "சிவப்பு மழை" இவையெல்லாம் என்னை நடுக்கமுறச் செய்கின்றன. மொத்தத்தில் இது நடக்குமோ? இல்லையோ? வியாபார உலகத்தில் பலர் இதனைச் சாதகமாக்கிக் கொண்டு பிழைக்கத் தொடங்கிவிட்டார்கள். மதவாதிகள் பிரசாரம் செய்யத் தொடங்கிவிட்டார்கள். குறுந்தகடுகள் இதுபற்றிய செய்திகளோடு வெளியே வந்துவிட்டன. மாயன் காலத்தைத் தெரியப்படுத்தும் பழைய வரலாறுகளை நாம் இப்போது படிக்கத் தொடங்கிவிட்டோம். இது போதாதென்று "சீனத் தயாரிப்பான கைத்தொலைபேசியின் "காமிராவினால் சூரியனைப் பார்க்கும் போது, இந்த உலகத்தை அழிக்க வரும் அந்தப் பெரிய கல் சூரியனுக்கு முன்னால் தெரிவதாகக் கதைகளும் அடிபடத் தொடங்கிவிட்டன. இத்தோடு "உலகம் அழிவதற்கு முன், மூன்று நாள்கள் இருளாகி பூமி இருக்கும்" என்றும் கதைவேறு உள்ளது.

கதைத்துக் கொண்டுதான் இருக்கிறார்கள். ஆனால் வேறு ஏதாவது மாற்றுவழிகள் பற்றி யோசித்து இருப்பார்களா? தம்மைப் பாதுகாத்துக் கொள்ள ஏதாவது "முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள்... ?"

எமது ஊரில் ஏழு குடும்பத்தினர் அனைவரும் திடீரென நியூஸிலாந்து போய்விட்டார்கள். இது இருப்பவர்களைத் தற்போதைய நிலையில் பலவாறு யோசிக்க வைத்தது. 'அவர்கள் தப்பித்துப் போய்விட்டார்கள்' என்று பலரும் புளுகித் தாளிக்க, சிலர் தலையில் அடித்து வயிறு நோகச் சிரித்தார்கள்.

"உங்கட தலையுக்கை என்ன கிடக்குது? (மறுபடியும் சனங்கள் நல்லதைத் தானே குழப்பப்படுத்துகிறார்கள்)

உலகம் எங்கை இருக்குது, நியூஸிலாந்து எங்கை இருக்குது; தலையை நல்லா விட்டு யோசித்துப் பாருங்கோ, உலகத்தில தானே நியூஸிலாந்தும் இருக்கு. உலகம் அழிஞ்சா நியூஸிலாந்தும் அழியும் தானே. மரமண்டையள்." என்று பரமண்ணை சொல்லிச் சிரித்தார்.

"உங்க வேற ஆக்கள் கதைக்கினம், நியூஸிலாந்து நாடு மட்டும் அழியாதாம்." எதிர்வாதம் புரிந்தார் கனகர்.

என்ன செய்வது, இறைவன் ஆட்டுவிக்கிறான், நாங்கள் ஆடுகின்றோம்.

இந்தச் சம்பவத்தைத் தவிர, மற்றவர்கள் அரக்கப் பரக்க ஓடித்திரிவது மாதிரித் தெரியவில்லை. பஸ்கள் அது பாட்டுக்கு சனங்களால் நிரம்பியபடி "விழாமலே இருக்க முடியுமா? விழுந்து விட்டேன் காதல் வலையிலே...." எனப் பாடலைப் போட்டபடி ஓடிக்கொண்டு இருக்கின்றன. புடைவைக் கடைகள், சாப்பாட்டுக் கடைகள், திருவிழாக்கள், கல்யாண நிகழ்வுகள், பாராட்டு விழாக்கள், கூட்டங்கள், மதுபானக் கடைகள் எல்லாம் எந்தவிதமான மாறுதல்களும் இல்லாமல் கூட்டமோ கூட்டமாக நடந்து கொண்டிருக்கின்றன. குடிப்பவர்களுக்கு எந்தக் கல்லையும் பற்றிக் கவலையில்லை. கல்லோயா இருந்தால் போதும். அப்படியாயின் இதற்கு விடை தான் என்ன? படிப்படியாகக் கதைத்து, கடைசியில் விழுகின்ற கல்லினால் ஆபத்து வந்துவிட்டால்...?

எனக்கு விடை சொல்ல இப்போது தெரியவில்லை. இதுபற்றி மக்களிடம் அவை சார்ந்த பிரதிநிதிகளிடம் கேட்டுப் பார்த்தால் என்ன? 'நாடி பிடித்துப் பார்த்தால் தெரியும்....' நகரத்தில் விஞ்ஞானம், கணிதம் கற்பிக்கும் ஆசிரியரிடம் இது பற்றிக் கேட்டேன்.

"பூமியை நோக்கி வரும் கல்லினால் ஆபத்தெண்டு சொல்லினம். சிலவேளை வரும் கல்லினால் பூமி அழியாது, "கல்" மட்டும் இருந்துவிட்டால், பிரயோசனமில்லை. இப்படிப் படிப்பிக்கேக்கை பிள்ளையளுக்கு என்ன சொல்லிப் படிப்பிக்கிறம்? உங்கட தலைக்குள்ள களிமண்ணோ, கல்லோ கிடக்குது? வெளியிலை எடுத்தால் "வீடு கட்டிப் போடலாம்" தலையுக்க ஒண்டும் ஏறுதில்லை. இந்த நிலையில தலைக்கு மேலே வேறு பெரிய "கல்" எண்டால் அநியாயமாய் இருக்கு.

இது பற்றிப் பழுத்த அரசியல்வாதியிடம் வினவினேன்.

"ஹி.....ஹி.....ஹி... உலகம் அழியப் போகிறதெண்டு யார் சொன்னது? எங்களை மீறி யார், எப்படிச் சொல்ல முடியும்? அரசியல் வாதிகள் உள்ளவரை இந்த உலகம் அழியாது. நாங்கள் அழியவிடமாட்டோம். உலகம் அழிந்தால் அரசியல் வாதிகள் உயிர் வாழ முடியாதே. இது மாதிரி எத்தனை கல்லுகளை நாங்கள் எத்தனை மேடைகளில் கண்டு இருக்கிறோம். எங்களை நோக்கி "எதிர்க்கட்சியினர் எவ்வளவு கல்லுகளை வீசி இருப்பார்கள். நாங்கள் மேடையை விட்டுப் பயந்தா ஓடிப்போனோம்? "கல்லை"க் கண்டு பயந்து சாபவர்கள் நாங்களல்ல. "தலைக்கு மேலே வரும் கல்லினால்" எம் கட்சியையும், தொண்டர்களையும் ஒண்டும் செய்துவிட முடியாது. இது எதிர்க்கட்சியினர் மக்களைக் குழப்புவதற்காக இப்படியான வதந்திகளைப் பரப்பி உள்ளனர். இதனை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம்" என்று முழங்கினார்.

ஊரைவிட்டு, குடும்பத்தை விட்டு ஒதுங்கி "இடையில்" சாமியாராக ஆக்கப்பட்ட ஒருவரைக் கண்டு இதுபற்றிக் கேட்டேன்.

"என்ன..... கல்....? பூமி....? ஆபத்தா....? அழியப் போகிறதா? ஆண்டவா இது என்ன சோதனை? (நடந்து கொண்டிருக்கும் சாதாரண தரப் பரீட்சை பற்றிக் கேக்கிறாரா) உனது விளையாட்டுக்கு அளவே இல்லையா? ஏன் இப்படி "கல்" வடிவில் சோதிக்கிறாய். உலக ஆசைகளைத் துறந்து நிம்மதியாய் வாழத்தானே இந்த வேடத்தைப் புனைந்தேன்.... முன்பு இல்வாழ்க்கை வாழும் காலத்தில் மிகவும் குடித்ததில் "கல்"லீரல் பழுதென்றார்கள், அடுத்து சிறுநீர்ப் பிரச்சினையில் சிறுநீரில் "கல்" என்றார்கள். இவையெல்லாவற்றையும் துறந்து வாழ வந்தால்.... மறுபடியும் கல்லா?" துறவறத்தையே துறந்தவராக புலம்பத் தொடங்கினார் சாமியார்.

கடைசியில் மாலை நேரத்தில் எப்போதும் கூட்டமாக இருக்கும் யாழ். குடாநாட்டுக்கு மிகப் பெரிய வருமானத்தையும், அதைவிடப் பெரிய துன்பத்தையும் ஈட்டிக் கொடுக்கும் .. மதுபானக் கடையில் மது அருந்தியதால், பூமிக்குப் போட்டியாக 'சுற்றத் தொடங்கியிருக்கும்'பாவனையாளரிடம் கஷ்டப்பட்டுக் கேள்வி கேட்டேன்.

"ஐயா... என்ன... பகிடி விடுகிறியள்?... உலகம் அழியப் போகுதோ?

"அட .... குடியைப் படைச்ச கடவுளே... நீயும் குடிக்கத் தொடங்கிட்டியோ?... ஐயா... நீங்கள் உள்ளுக்குள்ள... போடாமத்தானே நிக்கிறியள்... ஐயா... நான்.... நான்.... சொல்லுறன். என்னையா.... புதுசா.... உலகம் அழியக்கிடக்கு. இந்த பெரிய்ய... பூமி... எப்பவோ அழியத் தொடங்கிட்டுது.... இங்கை... என்னைப் பாருங்கோ... இங்கை குடிச்சுக் கொண்டு நிக்கிறன்.... உங்கை பாருங்கோ.... எத்தனை பேர்... உலகம் அழியப் போகிறது? தெரியாமல் குடிச்சுக் கொண்டு இருக்கிறாங்களே... உலகம் எப்பவோ அழியத் தொடங்கிட்டுது... தலைக்கு மேல வாற "கல்லை" விட ... தலைக்கு உள்ள இருக்கிற "கள்ளால தான் ஆபத்து. அழியத் தொடங்கிட்டுது."

நீங்கள் இப்போது என்ன விடை வைச்சு இருக்கிறியளோ.... அதுவே எனது விடையாகும்.

(இதில் அடங்கும் அனைத்து விடயங்களும் கற்பனையே)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**21.12.2012 இல் உலகம் அழிந்துவிடும் என்று மாயன் கலெண்டர் குறிப்பிடுவதாக சர்ச்சைகள் எழுந்துள்ளன. ஆயினும் அந்தத் தினத்தில் உலகம் அழிவதற்கான வாய்ப்பே இல்லை என்று தமிழ்ச் சோதிடம் சொல்கிறது.**

# அழியாது உலகம்

கோயில் சுடுகாடு கோல்புலித்தோல் நல்லாடை தாயுமிலி
தங்கையிலி தான்றனியன் ஆயிடினும்
காயில் உலகனைத்தும் கற்பொடிகாண் சாளேலோ

என நம்முன்னோர்கள் இறைசக்தியின் வலிமையை பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே தேவார வடிவில் ஆறு அறிவு படைத்த ஜீவராசிகளுக்கு நாயன்மார்கள் வடிவில் உணர்த்திச் சென்றுள்ளனர்.


எனவே உலகம் உய்வதை இறைவனுடைய மாபெரும் சக்தியிலேயே தங்கியுள்ளதை ஜீவாத்மாவாகிய மானிடர்கள் அறிந்து கொள்ள வேண்டும்.

சூரியனைச் சுற்றி வான வெளியில் இயங்கும் கோள்கள் ஏழு. இந்த ஏழு கோள்களும் ஒருங்கே சேர்ந்து பிராண சக்தி விளக்கும் வண்ணம் அமைந்து இறைவனுக்கு ஒரு சரீரம் போன்றவையாகும். இந்த ஏழு கோள்களும் இறைவன் சரீரத்தின் பல அங்கங்களாகவும் அவயவங்களாகவும் விளங்குகின்றன. ஒவ்வொரு கோள்களும் பிராண கலையான இறைவன் சக்தியினால் இயங்குகின்றன. இவை தான் பூமி, சந்திரன், புதன், சுக்கிரன், செவ்வாய், குரு, சனி என்னும் கிரக கோள்களாகும்.

வானவெளியில் நமக்கு பிரத்தியட்சமாய் தெரியும் கோள்கள் ஏழாயினும் கிரகண காலம் தவிர்ந்த ஏனைய காலங்களில் நமக்கு தென்படாது. அப்பிரத்தியட்சமாய் சாயை வடிவாகவுள்ள தமோ கிரகங்கள் என்னும் ராகு, கேதுக்களின் மண்டலங்கள் இரண்டையும் கூட்டி கிரகங்கள் ஒன்பதென கூறும் உண்மையை வேதாகம, புராண இதிகாசங்களும் சோதிட சாஸ்திரங்களும் எடுத்தியம்பியுள்ளன.

இத்தகைய நவக்கிரகங்களால் ஆளப்படும் இப்பூமியை முற்றாக அழித்துவிடக் கூடிய செயல் இறைவனுடைய இறைசக்தியிலேயே தங்கியுள்ளதை "காயில் உலகனைத்தும் கற்பொடிகாண் சாளேலோ" என நம்முன்னோர்கள் தேவார வாயிலாக உணர்த்தியுள்ளதை எமது இந்து மதம் தெரிவித்து நிற்கின்றது.

**21.12.2012 இல் உலகின் கிரகநிலை**




இதன் அடிப்படையில் 21-12-2012 மாயன் கலண்டர் தொடராத நிலையை உலகம் அழிவை எட்டிய நிலை எனப் பல ஊடகங்களும் பத்திரிகைகளும் தெரியப்படுத்தியுள்ள நிலையில் 21.12.2012 இல் கிரக நிலையை அடிப்படையாக வைத்து ஆராய்ந்து பார்த்தால் நவக்கிரகங்களில் சுகத்தைத் தரக்கூடிய "சுபர்" என்று சொல்லப்படும் கிரகங்கள் வியாழ, வெள்ளி, புதன், சந்திரன் என நான்கு கிரகங்களாகும். கெடுதியை விளைவிக்கக் கூடிய 'அசுபர்' என்று சொல்லப்படும் கிரகங்களாக சனி, செவ், சூரியன், ராகு, கேது என ஐந்து கிரகங்களாகும். எனவே சுபகிரகங்களை அசுபக் கிரகங்கள் பார்த்தாலும் சேர்ந்தாலும் அழிவை ஏற்படுத்தும். மேலும் அசுபக் கிரகங்கள் ஒன்றையொன்று பார்த்தாலும், சேர்ந்தாலும் அழிவு ஏற்படும். இந்த வகையில் 21-12-2012 இல் பூமியை நோக்கும் கிரகங்களில் பலத்தையும், பலவீனத்தையும் ஆராயும் போது பெரும் அழிவைத் தரக்கூடிய கிரகங்களில் மிகச் சக்தி வாய்ந்தது சனிக்கிரகம். மூன்று வட்ட வடிவிலான உருவமைப்புடைய சனிக்கிரகம் துலா ராசியில் உச்சமாக இருப்பதுடன் ராகுவுடன் சேர்ந்திருந்தாலும் பாதாசார அடிப்படையில் ராகுவுடன் முட்டபாது. மிகப்பிரகாசமாக இருப்பது உலகுக்கு கெடுதியை விளைவிக்கும் நிலையில் இல்லை. மேலும் சனிக்கிரகம் சலராசியான துலாத்தில் உச்சமாக இருப்பது எரியும் நெருப்பை நீரில் அமிழ்த்துவது போல நிலை இருப்பதால் சனியால் கெடுதியாக உலகிற்கு எதுவும் வர இடமில்லை.

இதேபோலவே சனிக்கிரகத்திற்கு அடுத்த மிக கெடுதியை விளைவிக்கக் கூடிய கிரகமாக இருப்பது செவ்வாய்க்கிரகமாகும். செவ்வாய்க் கிரகத்திற்கு செந்தழலோன் என்றும் பெயருண்டு. அத்தகைய செவ்வாய்க்கிரகம் 15.12.2012 மகரராசிக்கு சென்று அந்த ராசியில் உச்சம் பெறுகிறது. எனவே மிகக்கெடுதியை தரக்கூடிய மோதல்கிரகங்களாக சனி, செவ்வாய் அதன் செயல்பாடுகளை சுகப்பலன்தரும் நிலைக்கு மாற்றியுள்ளது. இதேபோல ராகு, கேதுக்களின் நிலையும் மேடம், துலாம், இராசிகளில் சனியுடன் முட்டி மோதாத நிலையில் இருப்பதால் பூமிக்கு கெடுதியாக அமையக்கூடிய நிலை இல்லை.

மேலே சொல்லப்பட்ட அசுபக் கிரகங்களில் 16/12/2012 இன் மேல் சூரியன் தனுராசியில் இருக்க அதை துலாராசியிலிருக்கும் சனி பகவான் 3 ஆவது பார்வையாக பார்ப்பதால் உலகின் சில பகுதிகளில் கடல்சீற்றம், சுனாமி, வெள்ளப்பெருக்கு போன்றவை நடக்க வாய்ப்புண்டு.

சனி சூரியனைப் பார்த்தாலும் சனி, சூரியன் ஒரு நேர்கோட்டில் இருந்தாலும் சனி, சூரியன் சேர்ந்திருந்தாலும் அனர்த்தங்கள் ஏற்பட வாய்ப்புண்டு. கடந்த காலத்தில் இந்தியா, இலங்கை, இந்தோனேசியா போன்ற நாடுகளில் பெரியளவில் சுனாமி ஏற்பட்டதும் சென்றவருடம் ஜப்பானில் ஏற்பட்ட சுனாமியும் சனி, சூரியனுடைய தாக்கமாகும்.

எனவே மேல் சொல்லப்பட்ட காரணங்களை [illegible] கிரகநிலையே 21-12-2012 இன் பூமியை நோக்கி இருக்கிறது. இந்த நிலையில் விஞ்ஞானரீதியாக விண்ணிலிருந்து பூமியைவிட பெரிய அளவிலான விண்கல்லொன்று பூமியை நோக்கி வருவதை சோதிட ரீதியாக ஏற்க மறுத்தாலும் விஞ்ஞான ஆற்றலை மறுத்தும் விடுவதற்கில்லை.

மேலும் பூமியின் ஆயுள் காலத்தை பல விஞ்ஞானிகளும், தீர்க்க தரிசிகளும் எடுத்தியம்பி இருப்பதையும் மறந்துவிட முடியாது. இதற்கு ஆதாரமாக 1568ஆம் ஆண்டில் அச்சிடப்பட்டு வெளியான தீர்க்கதரிசி நாஸ்ட்ராமஸின் சொன்னதெல்லாம் நடக்கிற என்ற THE CENTURIES என்ற நூல் உலகில் பைபிளுக்கு அடுத்த படியாக விற்பனையான நூலாகும். இதுவரை இந்த நூலை பல்வேறு மொழிகளில் பல நூறு பதிப்புகள் வந்து

கு.சண்முகரத்தினம்,
சோதிடர், சங்கானை.



கடந்த காலங்களில் நடந்தவை பற்றியும் வருங் காலத்தில் நடப்பவை பற்றியும் துல்லியமாகச் சொல்லப்பட்டிருப்பது குறிப்பிடக்கூடிய விடயமாகும்.

கடந்த காலத்தில் உலகில் கடந்த1ஆம், 2ஆம் உலகப்போரையும் அமெரிக்க நாட்டில் விமானங்கள் மூலம் அழித்தொழிக்கப்பட்ட வர்த்தக கோபுரம் மற்றும் இந்தியாவின் ரஜீவ் காந்தியின் கொலை பற்றியவையும் துல்லியமாகச் சொல்லப்பட்ட தீர்க்கதரிசனமாகும். மேலும் பல அற்புத தீர்க்க தரிசனங்களை கூறிய நாஸ்ட்டாமஸ் உலகம் எப்போ அழியும் என்பதையும் கூறத்தவறவில்லை.

சந்திரனின் ஏழாவது பெருஞ்சுற்று தொடங்கும் காலகட்டத்தில் (3659-3795) மக்கள் ஒருவரை யொருவர் கொன்று போடுவதில் சுறுசுறுப்பாய் இருப்பார்கள். அது குறித்து அவர்கள் மகிழவும் செய்வார்கள். ஏழாவது பெருஞ்சுற்று 3659 ஆம் ஆண்டு தொடக்கம் 4013 இடையில் நிகழும். ஆனால் மனிதகுலம் 3797 இன் முடிவில் அழியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பண்படுத்தாமல் பயிர் செய்யலாமா?

தமிழ் இலக்கியத்தை வளம்படுத்தியதில், வளம்படுத்துவதில் சஞ்சிகைகளுக்கு உள்ள இடம் தனித்துவமானது. நிறுவனமயமானதும் தனிநபர் முயற்சி மற்றும் குழுமுயற்சியானதுமான பல நிகழ்வுகளின் மலர்வில் தமிழ்த்தாய் மகிழ்வு கண்டிருக்கிறாள், காணுகிறாள்.

தமிழ் இலக்கியச் செல்நெறியில் புத்துணைப்புக்களை நிகழ்த்த கால்கோளிட்டது சஞ்சிகைகளே. தமிழகத்தில் மணிக்கொடி இதழ்தான் சிறுகதையின் உயிர்ப்பின் நாதமாய் நின்றது. ஈழத்தில் 'மறுமலர்ச்சி இதழ்' சிறுகதையின் புதிய பாதைகளைத் திறந்தது. 'எழுத்து' இதழ் கவிதையின் நவீன சாத்தியங்களை நிகழ்த்த வழி சமைத்தது.

சரஸ்வதி, கணையாழி, தாமரை இன்று காலச்சுவடு, உயிர்மை என்று தமிழகத்திலும், ஞானம், மல்லிகை, கலைமுகம், தாயகம், ஜீவநதி என்று ஈழத்திலும் சிற்றிதழ்கள் தோன்றி வந்து கொண்டிருக்கின்றன.

புதிது புதிதான சிற்றிதழ் முயற்சிகள் முளைவிட்டபடியே இருக்கின்றன. ஒவ்வொரு குழுவும் சிற்றிதழ்களை வெளியிட்டு தமது அடையாளத்தை, கருத்தைநிலைப்படுத்தநினைக்கின்றன. இன்னொரு குழுவினது அரசியலை கேலியாக்கி தம்மை புனித பீடத்தில் அமர்த்துகின்றன.

கருத்தால் ஒன்றித்தவர்களும் தனிநிலை சார்ந்து தனித்தனி இதழ்களை வெளியிடுகின்றார்கள். சந்தை வாய்ப்பும், விளம்பர அனுசரணையும், பொருளாதார இழப்பும் சேர்ந்து போக தாங்களும் சேர்ந்து போய் வந்த இதழ்கள் பட்டியலில் தமது இதழையும் சேர்த்து ஒருவகை மகிழ்வு காண்கின்றார்கள்.

**நிலத்தைப் பயன்படுத்தாமலேயே பயிர் செய்ய எண்ணிப் பயன் காணுதல் பகற்கனவே. முதலில் சூழலை உருவாக்குங்கள்.**

■ த.அஜந்தகுமார்

**ஒரு சோம்பேறியின் பக்கம்**



இன்று இதழ்களை வெளியிட நினைப்பவர்களுக்கு ஊக்கியாக அமைவன எவை என்று பார்த்தால்,

1) தமது படைப்புகளை இலகுவாக வெளியிட்டு விடலாம் என்ற 'பிரசுர மகிழ்வு'

2) இப்போது கைவசம் பணப்பிடிப்பு போதுமென்ற 'பொருளாதார இருப்பு'

3) கொஞ்சக் கதைகள், கவிதைகள், கட்டுரைகள், நேர்காணல் சேர்ந்தால் ஓர் இதழாகி விடுகிறது. இதில் என்ன கஷ்டம் என்ற 'படைப்புத் தொடுத்தல் புளகாங்கிதம்.

4) சந்திக்கும் சக எழுத்தாளர்களின் "வெளியிடு நாங்கள் இருக்கிறோம்" என்ற 'ஊக்க வார்த்தைகள்'

5) 'இதழாசிரியர்' என்று நாடும் ஏன் உலகமும் தன்னைக் கண்டு கொள்ளும் என்ற 'நாம விருப்பு'

ஆனால் இதில் 2,3 இதழ்களோடு இவை நின்று போகக் காரணங்கள் என்ன?

1) இலவசப் பிரதிகளை கொடுத்து பல்லிளித்ததுதான் மிச்சம். பிரதிகளைக் கரையேற்ற முடியாது ஏங்கும் பரிதாபம்.

2) படைப்புக்காக தவமிருந்தும் எழுத்தாளர்களின் 'எழுத்து வரம்' கை கூடாமை

3) பொருளாதார நலிவும் அலைவும் உலைவு தரும் எரிச்சலும்.

இலங்கையில் இருந்து பலமாவட்டங்கள், பிரதேசங்களில் இருந்து - இதழ்கள் புற்றீசல்கள் போல் முளைத்துக் கொண்டே இருப்பது நன்மையா என்றால் நன்மைதான். ஆனால் அடிக்கடி சந்திக்கும் நண்பர்களே தனித்தனி இதழாசிரியர்களாக இருப்பதும் தனித்தனி படைப்பு வேட்டையில் ஈடுபடுவதும் நன்மைதானா?

இல்லை என்பதே என் வாதம் என்றால்

1) வாசகர்கள் எண்ணிக்கை மிக நலிவான சூழலிலேயே அவை வருகின்றன.

2) அதிலும் இளம் வாசகர்களது அரிதான சூழலிலேயே வருகின்றன.

3) எழுதுகின்றவர்களே வாசகர்களாக இருக்கின்ற நிலை

4) எழுத்தாளர்களும் தமது படைப்பு வரும் இதழ்களையே படிக்கும் மனப்பாங்கு கொண்டிருக்கின்றனர்.

5) நவீன இலத்திரனியல் ஊடகக்கரங்களில் இருந்து தப்பியே பிறக்கின்றன.

இந்த இதழ்களை நடத்துகின்றவர்கள் ஒன்றுபட்டு இயங்க வேண்டும். நவீன இலத்திரனியல்களின் தாக்கத்தால் குறைந்திருக்கும் வாசிப்பை மேம்படுத்துவதற்காக மாணவர்களை நோக்கி நேரடியாக சென்று பட்டறைகள், வாசிப்பு நிகழ்வுகளை செய்து மாணவர்களையும் இணைக்கவேண்டும்.

'படைப்பு உருவாக்கம்' 'வாசிப்பு ஆற்றல்' என்பவற்றை அடிப்படையில் இருந்து தெரிவிக்க வேண்டும். கருத்தரங்கு என்று தமது புகழ் பாடாமல் மாணவர்கள், இளையவர்களின் மகிழ்வு ரீதியான பங்குபற்றலைச் சாத்தியமாக்க வேண்டும். இதழ் வெளியிடுபவர்களும் வெளியிட விரும்புபவர்களும் ஒன்றிணைந்து இலங்கையில் உள்ள எல்லா மாவட்டங்களிலும் ஓர் இயக்கமாக தொடர்ந்து இயங்கி, வாசிக்கும், படைக்கும் நல்ல சூழலை உருவாக்கி விட்டு இதழ்களை வெளியிடுங்கள். நிலத்தைப் பண்படுத்தாமலேயே பயிர்செய்ய எண்ணிப் பயன்காணுதல் பகற்கனவே. முதலில் சூழலை உருவாக்குங்கள். பிறகு இதழ்களைப் பூஷ்பியுங்கள்.

## கடலின் மடியினிலே...



கூடற்கரை மணலிலே
சிறு நண்டு
நர்த்தனத்தில்
பிக்காசோ ஓவியங்கள்
தோத்திடக் கூடும்

கரையோரத்
தென்னை மரங்கள்
கடல் அலையின்
முத்தத்தில்
தித்திக்கும்

தேசியம் பேசிவரும்
தென்றல்
கடல் மேனி தழுவி
ஊர் மனைக்கு
சேதி சொல்லிவரும்

மாலையிலே
அந்திவானம் சிவந்து
புன்னகைக்கையிலேயே
சூரியனும்
கடற்குளிப்பான்

காதல் ஜோடிகளின்
அரவணைப்பில்
அடம்பன் கொடியின்
பூக்கள் வெட்கப்பட்டு
நிலம் பார்க்கும்

வெண்ணிலாவின்
வருகை பார்த்து
கடல் வெளியினிலே
மீனினங்கள்
சுவாசப் பூக்களை
உதிர்க்கும்.


ஆ.முல்லை திவ்யன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏறி மிதிக்கப்படும் செம்மொழி

■ வினயன்

“ இன்று அதிகரித்துப் போயிருக்கின்ற தனியார் தொலைக்காட்சி நிறுவனங்களின் பல நிகழ்ச்சிகளின் உரையாடல்களில் அல்லது கருத்து வெளிப்பாடுகளில் தமிழும் ஆங்கிலமும் கலந்தே பேசப்பட்டு வருகிறது.



ஒரு கலாசாரத்தின் பெருங்கூறுகளுள் ஒன்றாக அமைவது மொழி. அந்த மொழியின் பழம் பெருமைகளைப் போலவே அதுவும் காலத்தின் பிரயோகம் சார்ந்த நெறிமுறைகளைக் கவனத்திற்கொள்ள வேண்டியுள்ளது.

செம்மொழிகளுள் ஒன்றெனப் பெருமை சூடிக் கொண்ட எமது தாய் மொழியாம் தமிழ் அதன் பிரயோக - உபயோக மட்டங்களில் எத்தகையதொரு நிலையில் உள்ளது என்பதை மொழியின் அபிமானிகளும் மொழியின் வளர்ச்சி குறித்த பிரக்ஞை உடையோரும் கவனம் கொள்ள வேண்டிய காலமிது.

நமது மண்ணில் தமிழ் மொழியின் உபயோகம்- பிரயோகம் இவற்றைக் கவனிக்க முனையும் போது தவிர்க்க இயலா வகையில் எமது நெருங்கிய அயல் நாடும் மொழி மற்றும் கலாசாரம் போன்ற துறைகளில் எம்மீது செல்வாக்குச் செலுத்துவதுமான இந்தியாவை - குறிப்பாகத் தென்னிந்தியாவை நாடி எமது அவதானப் பரப்பினுள் அடக்கிக்கொள்ள வேண்டிய தேவை இருக்கிறது.

நாமெல்லோருமே அறிந்திருக்கின்ற விரும்பியோ - விரும்பாமலோ அனுமதித்திருக்கின்ற ஒரு வகையில் ஆமோதித்திருக்கின்ற விடயங்களிலொன்று இன்றைய தொலைக்காட்சிப் பயன்பாடாகும். அதனூடாக தென்னிந்தியத் திரை மற்றும் சின்னத்திரை உட்பட தொலைக்காட்சி நிகழ்ச்சிகளும் முடிவுற்றுத் தொடர்கின்ற திரைப்பட ஒளிபரப்புகளும் தொலைக்காட்சித் தொடர்களும் எமது நேரத்தை விழுங்குகின்றன. அதேவேளை மிகத்தாக்கு வன்மையோடு எமது மொழிப் பயன்பாட்டு முறைகளிலும் மாற்றங்களையும் தாக்கங்களையும் அவை ஏற்படுத்தி வருவதைப் பலரும் கவனிக்கவில்லை. அல்லது கவனித்தும் மண்டையை உடைத்துக் கொள்ளத் தயாராக இல்லை.

திரைப்படங்களிலும், தொலைக்காட்சித் தொடர்களிலும் உபயோகிக்கப்படுகின்ற தமிழ் ஒரு 'வகை' யினதாக அமைந்திருப்பதைப் பலரும் கவனித்திருக்கக் கூடும். பிரதேசம் சார்ந்த பிரயோக முறையை முன்னிலைப்படுத்தும் வகையில், தமிழகத்தின் மதுரை, திருநெல்வேலி போன்ற பிரதேசங்களின் பிரத்தியேக முறையிலமையும் பேச்சு வழக்கைப் பயன்படுத்தி அமையும் திரைப்படங்கள் தவிர்ந்த ஏனைய திரைப்படங்களில் ஒருவகையான இடைநிலைத்தரமான மொழிப்பயன்பாடுதான் பொதுவாக நிலை கொண்டுள்ளது. இவை தவிரப் பொதுவான உரைகள், உரையாடல்கள் போன்றவற்றில் நாம் இனம் கண்டுள்ள தென்னிந்தியத் தமிழ் சார்ந்த மொழி பயன்பாடுமுள்ளது.

இந்த வகையில் முறையில் தற்போதெல்லாம் மிகவும் சாதாரணமான வகையில் உபயோகிக்கப்படும் மொழிப் பயன்பாட்டைப் பலரும் அவதானித்திருப்பீர்கள். தமிழும் ஆங்கிலமும் கலந்த ஒரு வகை நவீன 'தமிழ்' (?) மொழிப் பயன்பாடு சரளமாகப் புழங்கி வருவதை யாரும் அவதானிக்கத் தவறியிருக்கமாட்டார்கள்.

குறிப்பாக இன்று அதிகரித்துப் போயிருக்கின்ற வகையில் தமிழகத்தின் தனியார் தொலைக்காட்சி நிறுவனங்களின் பல நிகழ்ச்சிகளின் உரையாடல்களில் அல்லது கருத்து வெளிப்பாடுகளில் தமிழும் ஆங்கிலமும் கலந்தே பேசப்பட்டு வருகிறது. இலக்கியமோ கலையோ விஞ்ஞான தொழில் நுட்பத்துறையோ விவாதப் பொருளாக அல்லது அமைகின்ற அந்தக் கருத்து வெளிப்பாடுகளில் மிகவும் இயல்பாக தமிழையும் ஆங்கிலத்தையும் கலந்தே பலரும் பேசி வருகின்றார்கள்.

அண்மையில் விஜய் தொலைக் காட்சியில் ஒரு விவாதம் ஒளிபரப்பப்பட்டது. 'பொறிநுதுமம் பொறிதுகேள்' என்ற பாரதியின் புதிய ஆத்திசூடி வரி ஒன்றைத் தலைப்பாகக் கொண்ட இந்த விவாதத்தில் சங்க காலத்தில் 'கொல்லேறு தழுவுதல்' என்று வழங்கிவந்த வீரவிளையாட்டாகிய 'ஜல்லிக்கட்டு' என்னும் வீர விளையாட்டு இன்றைய சூழலில் தேவையா தேவையில்லையா என்பதே விவாதப் பொருள்.


இந்த விவாதத்தில் மதுரையின் மருத்துவக் கல்லூரி ஒன்றும் கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரி ஒன்றும் கலந்து கொண்டன. நடுவர்களாக கவிஞர் ஞாநி, நடனக் கலைஞரும் நடிகருமான சண்முகராஜா, எழுத்தாளர் இளங்கோ ஆகியோர் கலந்து கொண்டனர்.

மிகவும் ஆச்சரியகரமான விடயம் என்னவென்றால் விவாதத்தில் பங்கேற்ற இரு தரப்புக் கல்லூரி மாணவர்களும் ஆங்கிலம் (பெருமளவில்) கலந்த தமிழிலேயே பேசினார்கள்.

ஒரு தமிழ் மொழி சார்ந்த நிகழ்வில் மொழிசார் திறன் விருத்தியை அடையாளப்படுத்தும் ஒரு நிகழ்வில் உரையாடும் மொழி இவ்வாறு அமைந்திருந்தால் தமிழின் எதிர்காலம் என்னவாகும்? நல்லகாலம் கவிஞர் ஞாநி மற்றும் நடிகர் சண்முக ராஜா இருவரும் ஆங்கிலம் கலக்காத தமிழில் கருத்துக் களை முன் வைத்தார்கள். தென்னிந்தியத் தனியார் தொலைக்காட்சி நிகழ்வொன்றில் இடம்பெற்ற விடயம் தானே அதனைப் போய் நான் நாம் ஏன் அலட்டிக்கொள்ள வேண்டும் என்று சிலர் கேட்கக் கூடும்.

இப்போதெல்லாம் எமது மன்றில் பெரும்பாலான எம் மவர்கள் தமது முழு நேரத்தையும் இவ்விதமான தொலைக் காட்சி நிகழ்ச்சிகளைப் பார்வையிடுவதிலேயே செலவிடுகிறார்கள்.

அது மாத்திரமின்றி, எமது பிரதேச பேச்சு வழக்கு மிகவும் அருகிப் போய் தொலைக் காட்சி நிகழ்வுகளில் நிலவும் பேச்சு மொழியே எமது மக்களாலும் குறிப்பாக இளசுகளாலும் பின்பற்றப் படுகின்றது. போதாக் குறைக்கு எமது உள்ளூர் ஒளிபரப்பு நிலையங்களால் இது போன்ற தென்னிந்திய தனியார் ஒளிபரப்பு நிலையங்களின் நிகழ்வுகளே மறு ஒளிபரப்புச் செய்யப்படுகின்றன. இது ஓர் ஆரோக்கியமான போக்காகத் தென்படவில்லை. தென்னிந்தியத் தமிழில் இப்போதெல்லாம் 'இல்லை' என்ற தமிழ்ப் பதத்தை 'கிடையாது' என்ற சொல் மாற்றீடாக்கிக் கொண்டிருப்பதைப் பலரும் அவதானித்திருப்பார்கள். இவற்றைப் போல நிறையச் சொற்களை நம்மையறியாமல் நமது பிரதேச மொழித் தனித்துவத்துக்கு நாங்களே கேடு செய்கின்றோம். இதையெல்லாம் கண்டும் காணாமல் இருப்பது 'தமிழுக்கே' தீங்கு விளைவிக்கும் நிலையை உருவாக்கும் என்று யாராவது உணர்வார்களா? ★



## நம்மை நாம்...



## இதயச் சுமை

என்
விழிகளுக்குள்
தூக்கம்
தொலைத்தவள் (நான்)
என் விதி....?
ஆனால்
பாவம்
என் தலையணை கூட
என் கண்ணீரில்
மூழ்கி
உறக்கமின்றி
தவிக்கிறதே
வர்ணிக்க முடியவில்லை
என்னால்
தலையணைக்கு
மட்டும் தெரிந்த
உண்மை,
இன்னும்
எனக்கு தெரியவில்லை
தெரிந்தால்
காயங்களின்
கனங்களையாவது
குறைத்துவிடும்
என்ற –நப்பாசை
உனக்கு தெரியாமலே
எல்லோருக்கு
தெரிந்து விட்டாலும்
இதயச் சுமைதான்
குறைந்திடுமா?

- சா.ஜிந்துஜா, கோண்டாவில்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




உங்கள் நிறுவனம் உங்களுக்குப் பிடித்தமான துறைகளில் ஈடுபடலாம். அல்லது காலப்போக்கில் உங்களது ஆர்வம் மாறுபடலாம். எது வேலையில் ஆர்வம் குன்றச் செய்கிறது என்பதைக் கண்டறியுங்கள். அவ்வாறு செய்தால் அக்குறையைத் தீர்க்க என்ன செய்யலாம் என்பது தெரியும்.

ராகவன் அல்பி

28

உங்கள் வாழ்க்கையை மாற்றப்போகும் தொடர்....

**தூய்மையாக்குங்கள்** உங்கள் மனதில் விஷயங்கள் தேங்கி இருந்தால் படுக்கைக்குப் போவதற்கு முன் அவற்றைப் பற்றிச் சிந்தித்து மதிப்பிடுங்கள். நாளைக்கு செய்ய வேண்டிய வேலைகளின் முன்னுரிமைகளை அமைத்துக் கொள்ளுங்கள். இது கவலைகளைக் குறைக்கும்.

**தூய்மையான போர்வைகள்** தூய்மையான, பருத்தியால் ஆன போர்வைக்கு ஈடு எதுவும் கிடையாது. தூய்மையான படுக்கை விரிப்புகளை வைத்துக் கொள்வது நல்ல தூக்கத்தைக் கொடுக்கும்.

**கதவை மூடிக்கொள்ளுங்கள்** அமைதியாக இருக்கும் போது தூங்குவது எளிது. இரவில் வாஷிங் மிஷினும் ஓட வேண்டுமென்று நினைப்பீர்கள். ஆனால் அதேசமயம் தூக்கத்திலிருந்து விழித்துவிடவும் கூடாது என்றால் கதவைச் சாத்திக்கொள்ளுதல் தான் நல்லது.

**ஜன்னலைத் திறந்து வையுங்கள்** உடல் முழுவதையும் போர்வையால் போர்த்தியிருப்பீர்கள். ஆனால் முகத்துக்குக் குளிர்ந்த காற்று தேவை. கதவைத் திறந்து வைப்பதால் குளிர்ந்த காற்று வரும். ஆனால் பாதுகாப்பு? அதனால் ஜன்னலை எளிதில் தகர்க்க முடியாத அளவுக்குப் பாதுகாப்பானதாக இருக்கிறதா என்பதை உறுதிசெய்து கொள்ள வேண்டும்.

பயணம் செய்யும் போது குறிப்பாகத் தனியாகப் போகும் போது தூங்குவது என்பது கடினமானது என்பதைக் கவனித்திருப்பீர்கள். ஒரு புதிய இடத்தில் தூங்குவது கடினமானது தான். பாதுகாப்பாக இருக்கும் என்று உணரும் இடத்தில் தான் நாம் நன்கு தூங்குவோம்.

படுக்கைக்குச் செல்லும் போது நீங்கள் வழக்கமாகச் செய்யும் வேலை ஏதாவது இருந்தால் அதைச் செய்யுங்கள். அவ்வாறு செய்தால் உடனே தூக்கம் வரும். உங்களுக்குக் கரடி பொம்மை பிடிக்குமென்றால் அதை எடுத்துப் போவதில் தவறில்லை. உங்களுக்கு 30 வயது என்றாலும் இதில் ஒரு பிரச்சினையும் இல்லை.

மன அழுத்தம் உங்களைத் தூங்கவிடாமல் விழித்திருக்கச் செய்யும் என்றாலும், அது உங்களை அதிகமாக வேலை செய்கிறீர்கள் என்று எச்சரிக்கும் அறிகுறிதான். மன அழுத்தம் உங்கள் சக்தியை எளிதில் கரைத்துவிடும். அத்துடன் அழுத்தத்தைக் கட்டுப்பாட்டில் வைத்திருப்பது நீங்கள் இலக்கை நோக்கிச் சரியான பாதையில் செல்ல உதவும். ஒரு விஷயத்தை நினைவில் கொள்ளுங்கள். மன அழுத்தம் தீமை செய்ய வருகிறதா அல்லது நன்மை செய்ய வருகிறதா என்று கண்டுபிடிக்கும் திறன்தான் நமக்கு வேண்டும்.

### வேலை உலகம்

நாம் வாழ்வதற்கு வேலை செய்தாக வேண்டும். வாழ்க்கைத் திட்டத்தில் எந்த மாற்றம் செய்தாலும், அதில் வேலையும் உட்பட்டதாகவே இருக்கும். சில பேருக்கு யாரையும் நம்பியிருக்க வேண்டியிராத பொருளாதார வசதி இருக்கும். ஆனால் பெரும்பாலானோர் வேலைக்குப் போய்த்தான் ஆக வேண்டும். அதனால் நாம் வேலையை விரும்பவும் செய்வோம் வெறுக்கவும் செய்வோம்.

உங்கள் வாழ்க்கையின் பல்வேறு பகுதிகளைப் பற்றி நீங்கள் தனிமையில் சிந்தித்துப் பார்க்கும் போது, இப்புத்தகம் எந்த அளவுக்கு உங்களுக்குப் பொருத்தமாக இருக்கிறது என்பது புரியும். வேலை செய்வதற்கு ஆரோக்கியம் தேவை. பணம் சம்பாதிப்பதற்கு வேலை செய்தாக வேண்டும். அவ்வாறு சம்பாதித்த பணத்தை என்ன செய்வது என்பதை வாழ்க்கைத் திட்டத்தில் நாம் திட்டமிடும் விஷயங்கள் முடிவு செய்யும்.

வேலை என்பது உங்கள் வாழ்க்கையில் ஒரு நாளில் நீண்ட நேரம் எடுத்துக் கொள்ளக் கூடிய விஷயமாகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகவும் இருக்கிறது. அதனால் அதுபற்றி நன்கு தெரிந்து கொள்ள வேண்டும். வேலை செய்யுமிடத்தில் ஏற்படும் தொல்லைகள் என்ன, அவற்றைச் சமாளிப்பது எப்படி என்பது குறித்தெல்லாம் பின்வரும் அத்தியாயத்தில் விளக்கப்பட்டுள்ளது.

**மன நிறைவின்மை** நிறைவின்மை அதுதான் உங்களை இந்தப் புத்தகத்தை வாங்கத் தூண்டியிருக்கும். நீங்கள் பதவி உயர்வுக்கு முயற்சி செய்திருக்கிறீர்களா அல்லது நல்ல வேலைக்கு முயற்சி செய்திருக்கிறீர்களா?

**என் முதலாளி என்னைச் சாதாரணமாக எடுத்துக் கொள்கிறார்.** இந்த விஷயத்தில் உடனடியாக உங்களை முன்னிலைப்படுத்துவது என்பது கடினமானது. ஆனால் நீங்கள் சக பணியாளர்களிடம் நன்கு நடந்து கொள்வதன் மூலம் மதிப்பைப் பெற முடியும். அவர்களிடம் உங்கள் எண்ணங்களைச் சொல்லலாம். அவர்கள் உங்களைப் பற்றி சொல்லும் போது முதலாளி கவனமாகக் கேட்பார்.

**சிற்றுண்டிச்சாலை-** உங்கள் அலுவலக சிற்றுண்டிச் சாலை படுமட்டமாக இருக்கிறது என்றால் அனைவரையும் ஒன்று திரட்டி நல்ல சிற்றுண்டிச்சாலை வேண்டுமெனக் கோரிக்கை எழுப்புங்கள்.


**முதலாளியைக்குத்தூண்டுதலாக இல்லை-** ஒருவேளை உங்கள் முதலாளி தூண்டுதலாக அமைவதற்கு உங்களின் ஆதரவு தேவைப்படலாம். அவரை உற்சாகப்படுத்துங்கள். அவர் உங்கள் பக்கம் திரும்புவார். இது ஆர்வமூட்டுவதாக இருப்பதுடன் உங்கள் பதவி உயர்வுக்கும் உதவும்.

**மாற்றம்-** உங்கள் நிறுவனம் உங்களுக்குப் பிடித்தமான துறைகளில் ஈடுபடலாம். அல்லது காலப்போக்கில் உங்களது ஆர்வம் மாறுபடலாம். எது வேலையில் ஆர்வம் குன்றச் செய்கிறது என்பதைக் கண்டறியுங்கள். அவ்வாறு செய்தால் அக்குறையைத் தீர்க்க என்ன செய்யலாம் என்பது தெரியும்.

**வெளிப்படையான திட்டம்-** அனைவருக்கும் தெரிந்த திட்டமாக இருந்தால் அதை மாற்றுவது கடினமானது. அதனால் உங்கள் மேசையைத் தள்ளிப்போட்டுக் கொள்வது நல்லது. சுற்றுத் திரையிட்டுக் கொள்வது நீங்கள் தனித்துச் சுதந்திரமாக இருக்க உதவும்.

# கட்டிகளைக் கரைக்கும் சமுத்திரப் பச்சை

## நலம் தரும் தெய்வீக மூலிகைகள்



### சமுத்திரப்பச்சை

*வேறுபெயர்-கடற்பாலை, சமுத்திரசோகி, ஊதுபூ*
*தாவரவியற் பெயர்- Argyreia populiFolia (ஆகைரியா பொப்பியூலிபோலிய)*
*குடும்பம்-Convolvulaceae (கொன்வொல்வுசிலேயே)*
*சிங்களப் பெயர்- கிரிதில்ல*
*சமஸ்கிருதப் பெயர்- விருத்ததரு*
*ஆங்கிலப் பெயர்- Elephant creeper*

இது ஈரவலயத்துக்குரியது. இலங்கையில் பரவலாகக் காணப்படும் கொடி வகுப்புக்குரியது. பிறமரங்களில் சுற்றிப் படரும். தண்டு தடித்தது. தனி இலைகள் முட்டை வடிவானவை. பூக்கள் ஊதா நிறமானவை. குழாய் போன்றவை.

### கட்டிகளுக்கு

கடற்பாலை இலையின் அடிப்பாகத்தை நெருப்பில் இலேசாக வாட்டி, கட்டிகள், கட்டுகளின் மீது வைத்துக் கட்டிவர கட்டு உடைக்கும். அதன் பின்னர் இலையின் மேற்பாகத்தை அவ்விதம் கட்டிவர விரணம் மாறும்.

### வாதவீக்கங்களுக்கு

இதன் வேரைத் துவைத்து, பழங்கஞ்சியுடன் சேர்த்துக் கொதிக்கவைத்து மூட்டு வீக்கங்களுக்குக் கட்டிவர வீக்கம், வேதனை, வாய்வுப் பிடிப்பு என்பன தணிவடையும்.

வேரைக் குடிநீர் செய்தும் குடித்து வரலாம். இது பித்தம், நாவரட்சி, தொய்வு, சளி இருமல் என்பவற்றையும் நீக்கும்.

### கடல் தேங்காய்

*தாவரவியற் பெயர்- Lodojcea sechellarum (லோடோய்சியா செசிலேரம்)*
*குடும்பம்-Palmae (பாமே)*
*சமஸ்கிருதப் பெயர்- சமுத்திர நாளிகேர*
*ஆங்கிலப் பெயர்- Feather palm*

இது தென்னை மரத்தைப் போலத் தோற்றமளிக்கும் சில கட[illegible] தண்டு நேரானது. 80 அடி உயரம் வரை வளரக்கூடியது. இலைகள் பெரியவை. கனி தேங்காய் போல இருமடங்கு பெரியது. கடல்நீரில் விழுந்து பரவுகிறது.

### அரையாப்புக்கு

கடல் தேங்காய் 2 பங்கு, மான் கொம்பு 1 பங்கு, எடுத்து நீர் விட்டரைத்து கட்டிகள், அரையாப்பு முதலிய வீக்கங்களின் மீது கட்டிவர அவைவற்றும்.

### வாந்திக்கு

கடற்தேங்காயைத் தேன் விட்டரைத்து நாவிற் தடவ வாந்தி நிற்கும்.

### தக்கோலம்

*வேறுபெயர்-காட்டுக்கஸ்தூரி, தக்கோலப்பொட்டு, வெற்றிலைக் கஸ்தூரி, கஸ்தூரி வெண்டி*
*தாவரவியற் பெயர்- Hibiscus abeLmoschus (ஹிபிஸ்கஸ் அபெல்மோசஸ்)*
*குடும்பம்-Malvaceae (மல்வாசியே)*
*சிங்களப் பெயர்- கபுகின்னிச*
*சமஸ்கிருதப் பெயர்- லதா கஸ்தூரிகா*
*ஆங்கிலப் பெயர்- Musk MaLLow*

இது செடி வகுப்புக்குரியது. தனி இலைகள். அங்கையுருவானவை. பூக்கள் பெரியவை; மஞ்சள் நிறம், அடிப்பாகம் ஊதா நிறமாக இருக்கும். இதன் விதை வெற்றிலையுடன் சேர்த்து உண்ணப்படுவதால் வெற்றிலைக் கஸ்தூரி என அழைக்கப்படுகிறது. கஸ்தூரியின் மணம் வீசுவதால் காட்டுக்கஸ்தூரி என்றும் அழைக்கப்படுகிறது.

### நாச்சுவையின்மைக்கு

தக்கோலவித்தை உலர்த்திப் பொடிசெய்து காலை, மாலை சாப்பிட்டுவர நாச்சுவையின்மை, வாய்ப்புண் என்பன நீங்கும்.

### உடல் மெலிவுக்கு

தக்கோலத்தை வெற்றிலையுடன் சேர்த்துச் சப்பிச் சாப்பிட்டு வர உடல், மெலிவு, பலவீனம், வாய்த்துர்நாற்றம் என்பன நீங்கும்.


அடிக்கடி சிறுநீர் இளகிப் போகும் [illegible] உள்ளவர்களும் தக்கோலப்பொடியைத் தேன்விட்டுச் சாப்பிட்டு வரலாம்.

Dr. சே.சிவசண்முகராஜா M.D. (S),
சிரேஷ்ட விரிவுரையாளர், சித்தமருத்துவத்துறை,
யாழ்.பல்கலைக்கழகம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சொற்சிலம்பம் - போட்டி இல: 245



அனுப்புபவர் பெயர்:.................................................

விலாசம்:.................................................

.................................................

கையொப்பம்:.................................................

### இடமிருந்து வலம்

1. தந்தையின் சகோதரி
3. முதலிடம்
6. ஓவியம்
8. எலும்பு மற்றும் இரத்தத்தில் உள்ள மூலகங்கள்
10. தைரியம்/வீரம்
11. மதிப்பிற்குரியது
12. மாலை
13. காதில் சேரும் கழிவு
14. பல என்பதைக் குறிக்கும்
15. ஓடம்
16. முத்தமிழில் ஒன்று
17. மயிலின் இறகு
18. ஓர் இராசி
20. கீழ் அல்ல
21. வீட்டின் முன்புறம் அமைவது
22. கொண்டாட்ட தினம்

### மேலிருந்து கீழ்

1. தமிழ் மாதம் ஒன்று
2. நண்பன்
3. ஒரு மீன் வகை
4. தங்களது
5. களம்
7. உசத்தியானது
9. யானைக்குச் சிறப்பான அங்கம்
11. இது சிறியது ஆனால் காரம் மிக்கது
12. காந்திஜியின் ஆசிரமம்
13. சமிபாட்டுத் தொகுதியின் உறுப்பு
15. திகில்
16. இரட்டை
17. வெற்றியின் முதற்படி
19. விழி
20. மலை

* வாசகர்கள் மத்தியில் குறிப்பாக மாணவ, மாணவியர் மத்தியில் பொது உளச்சார்பு மற்றும் மொழி அறிவை வளர்த்து விடத் தூண்டுவதே இப்போட்டி நடத்தப்படுவதன் முக்கிய குறிக்கோள்.

* ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருவதால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிர்ஷ்டசாலிகள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப் படுகின்றனர்.

★ சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 243 க்கான சரியான விடைகள் வருமாறு:

**இடமிருந்து வலம்**

(1) மாசிகம் (4) கழுகு (7) மலர் (8) கடுகதி (9) கர்ப்பிணி (11) மரை (12) பறை (13) தின் (14) ஆம் (15) தரு (17) அறு (18) பார்ப்பான் (20) கதகளி (22) பன்றி (23) தில்லை (24) வெம்மை

**மேலிருந்து கீழ்**

(1) மாமகம் (2) சிலர் (3) கர்ப்பம் (4) கடு (5) முகமன் (6) குதிரை (8) கணி (10) பிறை (13) திருப்பம் (14) ஆறுதல் (15) துர் (16) நன்றி (17) அகதி (18) பாளி (19) பன்மை (21) கலை

★ சொற்சிலம்பம் போட்டி தொடர்பான வாசகர்களது ஆலோசனைகளும் கருத்தில் எடுக்கப்படும்.

## போட்டி விதிகள்

1. வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.
2. ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்
3. உதயனில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.
4. போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.
5. வெற்றி பெறும் முதல் ஐந்து அதிர்ஷ்ட சாலிகளுக்கு முறையே ரூபா 300/-, ரூபா 250/-, ரூபா 200-, ரூபா150/- ரூபா 100/- பணப் பரிசில்கள் வழங்கப்படும். அத்துடன் பாராட்டுப் பெறும் மூன்று அதிர்ஷ்டசாலிகளது பெயர் விபரங்களும் உதயனில் பிரசுரிக்கப்படும்.
6. பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள்,

**சொற்சிலம்பம் போட்டி இல. 245**
*நியூ உதயன் பப்ளிகேஷன் [பிறைவேற்]லிமிட்டெட், இலக்கம் 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.*
என்னும் முகவரிக்கு எதிர்வரும் புதன் கிழமைக்கு அடுத்து வரும் புதன் கிழமைக்கு முன்னர், (26.12.2012) ஆம் திகதிக்கு முன்னர்) கிடைக்கத் தக்கதாகத் தபாலட்டையில் ஒட்டி அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

7. சொற்சிலம்பம் போட்டி இல.245 இல் வெற்றி பெறுவோர்களது விபரம் 30.12.2012 ஞாயிறு உதயனில் பிரசுரிக்கப்படும்.

★ சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 243 இற்கான சரியான விடைகளை எழுதி அனுப்பியவர்களில் குலுக்கல் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் ஐந்து அதிர்ஷ்ட சாலிகளது பெயர் விபரங்கள் வருமாறு:

**1 ஆம் பரிசு**
பொ.சுபாஜினி,
செம்பாடு, நாதாவளை
கரணவாய், கரவெட்டி.

**2 ஆம் பரிசு**
க.தேனுகா,
கிளி/பளை மத்திய கல்லூரி, பளை

**3 ஆம் பரிசு**
மா.கிருபாகரன்,
வனிதா திரையரங்கு,
இல.02, பாடசாலை வீதி,
ஸ்கந்தபுரம், கிளிநொச்சி.

**4 ஆம் பரிசு**
அ.பெஞ்சமின்,
இல.269, வேளாங்கண்ணி வீதி,
சாவல்கட்டு, மன்னார்.

**5 ஆம் பரிசு**
த.துவாரகா,
யா/உடுப்பிட்டி மகளிர் கல்லூரி, வல்வெட்டித்துறை

**பாராட்டுப் பெறுவோர்**

**செல்வன் ஸ்ரீலக்ஷன்,**
யா/புனிதஜோன் பொஸ்கோ வித்தியாலயம், யாழ்ப்பாணம்.

**நா.பாலசுப்பிரமணியம்,**
இல.7/2 அம்மன் நகர், தோணிக்கல், வவுனியா.

**க.சுந்தரேஸ்வரன்,**
இல.109, விநாயக முதலியார் வீதி, பருத்தித்துறை.

*பரிசுக்கு உரியோராகத் தேர்ந்தெடுக்கப்படுவோர் ஒரு வாரத்தின் பின்னர் ஞாயிற்றுக்கிழமை தவிர்ந்த அலுவலக நாள்களில் காலை 9.00 மணிமுதல் பிற்பகல் 2.00 மணிவரை தமக்குரிய பணப் பரிசில்களைத் தமது அடையாளத்தைச் சரியான வகையில் உறுதிப்படுத்தி 'உதயன்' அலுவலகத்தில் நேரில் வந்து பெற்றுக்கொள்ளலாம். யாழ்.மாவட்டத்தைத் தவிர்ந்த ஏனைய மாவட்டங்களிலிருந்து பரிசுக்கு உரியோராகத் தேர்ந்தெடுக்கப்பட்டோருக்கான பணப்பரிசில்கள் காசோலை மூலம் காலக்கிரமத்தில் அவர்களது விலாசத்துக்குப் பதிவுத் தபால் ஊடாக அனுப்பிவைக்கப்படும்.*





## திரை விமர்சனம்

எப்போதும் முதல் படத்தில் வித்தியாசமான தளத்தில் தனது படைப்பை வெளிப்படுத்திய இயக்குநரின் அடுத்த படம் மிக ஆவலாக எதிர்பார்க்கப்படுவது வழமை! அந்த வரிசையில் கூடல்நகர், தென்மேற்குப் பருவக்காற்று போன்ற கலைநயமிக்க திரைப்படங்களை தந்து தன்னை ஒரு யதார்த்த சினிமாப் படைப்பாளியாக இனங்காட்டியவர் சீனு ராமசாமி. முந்தைய படங்களின் வீச்சால் நீர்ப்பறவையும் உயரே பறக்குமா என்று எதிர்பார்ப்பு நிலவியது. அந்த எதிர்பார்ப்பை ஏமாற்றாமல் வந்திருக்கிறது "நீர்ப்பறவை"...!

தமிழக மீனவர்களின் வாழ்வினை இலங்கைக் கடற்படை எப்படி சின்னாபின்னமாக்குகிறது என்பதை மிக இயல்பாகக் கூறிப்போகிறது நீர்ப்பறவை.படத்தின் கதை இதுதான்.

25 வருடங்களுக்கு முன்னால் காணாமல் போன தனது தந்தையின் எலும்புக்கூட்டை, தனது வீட்டிலேயே கண்டெடுக்கிறான் மகன். தனது தாயே இவ்வாறு தந்தையைக் கொன்று புதைத்திருக்கிறார் என்று முறைப்பாடு செய்கிறான் அவன். பொலிஸ் விசாரணையில் 25 வருடங்களுக்கு முந்திய வாழ்வினை விவரிக்க தொடங்குகிறாள்.

1960 களின் இறுதியில் தொடங்கும் கதை, தற்காலத்தில் முடிவடைகிறது...

சிறுவனாக இலங்கையில் இருந்து படகில் வரும் நாயகனின் தாய், தந்தையர் சுட்டுக் கொல்லப்படுகின்றனர்.எனினும் அதிலிருந்து தப்பித்துக் கரை சேரும் நாயகனை லூர்த்துசாமி என்னும் மீனவன் கண்டெடுக்கிறான்.

பின்பு அவனது வளர்ப்பு மகனாகி அருளப்பசாமியாகிறான் நாயகன் [விஷ்ணு]. கடலன்னையால் தாலாட்டி வளர்க்கப்பட்டவன், பிற்காலத்தில் சாராயத்தால் சீராட்டி வளர்க்கப்படுகிறான்..! என்ன படித்தான்..? எதற்காக குடிக்க ஆரம்பித்தான்..? ஏன் இந்த புதைகுழியில் விழுந்தான்? என்ற விடயங்களை ஏனோ சொல்ல மறந்திருக்கிறார் இயக்குநர்.



நடிகர் விஷ்ணு நீர்ப்பறவைக்காக நிரம்பவே உழைத்திருக்கிறார் .

அதென்னமோ தெரியவில்லை.. குடிகாரன் வேடத்தில் அத்தனை நடிகர்களுமே சிறப்பாகத்தான் நடிக்கிறார்கள். தெளிவாக இருக்கும்போதுதான் அனைவரின் அளவுகோலும் தெரிகிறது..!

தேவாலயத்தில் கன்னியாஸ்திரியாக இருப்பவரின் வளர்ப்பு மகள் எஸ்தர் [சுனைனா]. சுனைனாவைப் பார்த்துவிட்டு நாயகன் விஷ்ணுவுக்கு வழக்கமான தமிழ்ச் சினிமா பாணியில் காதல் பிறந்து விடுகிறது.கொஞ்சம் கொஞ்சமாக கதை காதலுக்குள் கரைகிறது. மது போதைக்கும் காதலுக்கும் நடுவே தவிக்கும் விஷ்ணு நடிப்பில் இன்னொரு பரிமாணத்தைக் காட்டியிருக்கிறார். எஸ்தராக நடித்திருக்கும் சுனைனாவும் தன் பங்கைக் குறைவில்லாமல் செய்திருக்கிறார்.முதல் முறையாக சுனைனாவின் நடிப்புக்கு கை தட்டல் கிடைத்திருக்கிறது என்றால் அது இந்தப் படத்தில்தான்.

சைத்தானே விலகிச் செல் என்று தேவாலயவாசலில் நின்று சுனைனா சொல்கின்ற அந்தக்காட்சி, சற்றும் எதிர்பாராதது. அந்த இடத்தில் அந்த வசனம் பேசப்படும் என்று யாருமே எதிர்பார்க்க மாட்டார்கள். பின்பு அவளுக்காகவே தானும் மாறி எதிர்ப்புகளையும் மீறி கடலுக்குச் செல்லும் மீனவனாக உருமாறிய விஷ்ணுவுக்கு ஏன் அந்தச் சோகம் என்று இயக்குநர்தான் சொல்ல வேண்டும்..! இந்த இடத்தில்தான் இந்தப் படம் ஒரு அழகான சிறுகதையாக உருமாறியிருக்கிறது...! ஆனால் இதற்காக நந்திதா தாஸ் சொல்லும் காரணம் ஏற்கக்கூடியதாக இல்லை... அவர் எங்கேயும் போக வேண்டாம்.. இங்கேயே இருக்கட்டும்... என்பதெல்லாம் கிறிஸ்தவத்தில் ஆழமான ஈடுபாடு கொண்டவர்கள் செய்வதுதான் என்றாலும், யதார்த்தத்தில் அது பைத்தியக்காரத்தனமான செயல் என்று அவர்களாலேயே சொல்லப்படுகிறது...!

(தொடர்ச்சி 16ஆம் பக்கம்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதன் முதல் கலண்டரைக் கண்டு பிடித்தவர்கள் எகிப்தியர்கள்



கலண்டர் தோன்றி பல ஆயிரம் ஆண்டு ஆகிறது. எகிப்தியர்கள் தான் முதல் முதலில் கலண்டரைக் கண்டு பிடித்தார்கள். சூரியன் உதயமாகும் ஒவ்வொரு நாளையும் அவர்கள் "ஒரு நாள்" என்று கணக்கிட்டுக் கொண்டார்கள்.

நைல் ஆற்றில் வெள்ளப்பெருக்கு வற்றிய பின்பு எகிப்தியர்கள் நெல் பயிரிட்டார்கள். ஒரு வெள்ளப்பெருக்குக்கும் அடுத்த வெள்ளப் பெருக்குக்கும் பயிரிட்டார்கள். ஒரு வெள்ளப் பெருக்குக்கும் அடுத்து வெள்ளப் பெருக்குக்கும் இடையில் எத்தனை நாள் ஆகின்றது என பலகாலமாக அவர்கள் கணக்கிட்டார்கள். ஒரு வெள்ளப் பெருக்குக்கும் அடுத்த வெள்ளப் பெருக்குக்கும் இடையில் 12 முறை நிலவு தேய்ந்து மறைவதை அவதானித்தனர். இதை 12 "மூன்த்" (moonth) என்றார்கள். அதுவே பின்னாளில் "மந்த்" (month) என ஆகிற்று.

வெள்ளம் வரும் நேரத்தில் சூரியன் உதிக்கும் பொழுது வெள்ளி (விடிவெள்ளி) தோன்றுவதையும் இவர்கள் கண்டார்கள். ஒருமுறை தோன்றிய வெள்ளி அடுத்து எப்போது தோன்றுகிறது என கணக்கிட்டார்கள். 365 நாள் ஆகிறது என்று தெரிந்தது. எனவே ஓர் ஆண்டில் 365 நாள் என கணக்கிட்டுக் கொண்டார்கள்.

இந்த 365 நாளை 12 ஆல் வகுத்து மாதத்துக்கு 30 நாள் என்று எகிப்தியர்கள் கணக்கிட்டார்கள். மீதி ஐந்து நாளை கடைசி மாதத்துடன் சேர்த்துக் கொண்டார்கள். இப்படியாக முதல் கலண்டர் தோன்றியது. பூமி தன்னைத்தானே சுற்றிக் கொண்டு சூரியனையும் ஒரு முறை சுற்றி வர 365 1/4 நாள் ஆகிறது என்பது பின்பு தெரிந்த உண்மை. அந்த கால் நாள் குழப்பம் உண்டாக்கிக் கொண்டே இருந்தது. இதற்கு ரோமாபுரி மன்னர் ஜூலியஸ் சீசர் ஒரு வழி கண்டு பிடித்தார்.

கி.மு.4 ஆம் ஆண்டுக்கு 445 நாள் என்று சீசர் அறிவித்தார். பின் ஒவ்வோர் ஆண்டுக்கும் 365 நாள் ஒவ்வொரு நான்கு ஆண்டுக்கும் 366 நாள் என்றும் சீசர் அறிவித்தார். அதற்கு "மீத ஆண்டு" (லீப் இயர்) என பெயர் வைத்தார். (முந்தைய ஆண்டுகளில் மீதமுள்ள கால் நாள் சேர்த்த ஆண்டு) அப்போதும் கூட கலண்டர் ஒழுங்காக இல்லை. விழா நாள்கள் ஆண்டுக்கு ஆண்டு மாறி வந்தன. இதை 1582 இல் கிரிகோரி என்ற போப் ஆண்டவர் சரி செய்தார்.

அந்த 1582 ஆம் ஆண்டுக்கு 355 நாள் தான் என்று அவர் அறிவித்தார். அதோடு 1700- 1800,1900 நூற்றாண்டுகளை நாலால் வகுக்கக் கூடாது 400 இல் வகுத்து "மீத் ஆண்டு" கணக்கிட வேண்டும் என கட்டளை இட்டார். (2000 ஆண்டு 'மீத் ஆண்டு' என கணக்கிடப்பட்டது)

போப்பாண்டவர் பெயரால் "கிரிகோரி கலண்டர்" என அழைக்கப்பட்டது. ஏறத்தாழ உலகம் முழுக்க இந்த கலண்டர் தான் வழக்கில் இருந்தது. ஆனாலும் திருவிழா, முகூர்த்த நாள் போன்றன கணக்கிட உள்ளூர் கலண்டர்களையே பயன்படுத்தினார்கள். நாமும் அப்படித்தானே? திருமண அழைப்பிதழில் மட்டும் தானே தமிழ் ஆண்டு, மாதம், திகதி, நாழிகை பயன்படுத்துகிறோம்.

தமிழர்களுக்கு மாதம், கிழமை, நாள் எல்லாம் இருந்தாலும் அவர்கள் தொடர்ச்சியான கலண்டர் (ஆண்டு முறை) பயன்படுத்தியதற்கான ஆதாரம் இதுவரை கிடைக்கவில்லை. ஆனால் தை மாதம் முதல் திகதியை புத்தாண்டு நாளாகத் தமிழர்கள் கொண்டாடியிருக்கிறார்கள்.

ஜேர்மன் நாட்டைச் சேர்ந்த சீகன் பால்கு என்ற கிறிஸ்தவ தந்தை (1707 ஆம் தரங்கம் பாடிக்கு) தஞ்சை மாவட்டம் (இந்தியா) வந்தார். அவர் "நற்செய்தி" யைத் தமிழில் அச்சிட்டு வெளியிட்டார். இவர் இதற்காக அச்சு வார்ப்புத் தொழிற்சாலை, காகித ஆலை, மை ஆலை என்பன அமைத்தார். தமிழில் முதல் நாள் காட்டி அச்சிட்டு சீகன் பால்கு தான் 1715 இல் வெளியிட்டார்.

நிலவுக்குத் திங்கள் என பெயர் உண்டு. அதை கொண்டு மாதத்தை தமிழில் திங்கள் என்றார்கள். "மந்த்" என்பது பின் மாதம் ஆயிற்று. இது நிலவை அடிப்படையாகக் கொண்டது.



நாள், கிழமை என்பன தமிழ் சொற்கள். வாரம் என்பது வடமொழிச் சொல் அது நாளைக் குறிக்கும். ஆனால் இப்போ ஏழு நாளைக் கொண்ட ஒரு வாரத்தையே வாரம் என்கிறோம். வாரத்தைத் தமிழில் கிழமை எனக் கூற வேண்டும். கிழமை என்பது நாளைக் குறிக்கிறது. "திதி" என்ற சொல்லில் இருந்து "டே" (day ) என்ற ஆங்கிலச் சொல் தோன்றியது அதனையே இன்று நாம் திகதி என அழைக்கிறோம்.

சி.ஹரிஹரன்
யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை.

# முட்செடி



தோட்டத்து முட்செடி ஒன்றில் காயப்பட்ட சிறுவன் ஒருவன் தந்தையிடம் முறையிட்டான்: "அழகான செடியில் முள் இருக்க வேண்டுமா? அது எதற்கு உதவுகிறது?"

தந்தை கூறினார்: "மகனே, நல்லவரிடையே கெட்டவர்களும் உள்ளனர். கெட்டவர்களுடன் சேரக் கூடாது. முன் எச்சரிக்கை வேண்டும். இதை நீ அறிந்து கொள்ள வேண்டுமல்லவா? அதற்காகத்தான் அது இருக்கிறது".

# நாள்



நாள் என்பது காலம் நமக்களித்த
நன்கொடையாகும் ஒவ்வொரு
மணியும் நாம் விரும்பிய விதத்தில்
இட்டு நிரப்புவதற்குக் காத்திருக்கிறது!

ஒவ்வொரு காலையும் உதித்தெழும் சூரியனுடன்
நம்பிக்கையையும் கொண்டு வருகிறது
ஒவ்வொரு மாலையும் நன்கு செய்யப்பட்ட
உழைப்பின் பலனைக் கொண்டு வருகிறது.

தெ.தனுஷிகா, தரம்-8எவ்,
சாவகச்சேரி இந்துக் கல்லூரி.

# பொன் மொழிகள்

1. முயற்சி செய்து கொண்டிருந்தால் முடிவில் வெற்றிதான்.
2. மனம் நம்பிக்கையை இழப்பது மரம் வேரை இழப்பது போன்றது.
3. பணம் என்பது பாம்பு; மகிழ்ச்சி என்பது கீரி.
இவை ஒருபோதும் ஒன்று சேரா
4. எல்லா மனிதர்களையும் நம்புவது ஆபத்து;
ஒருவரையும் நம்பாமல் இருப்பது பேராபத்து.
5. நல்லது ஒன்றே அறிவு; தீயதொன்றே அறிவின்மை.

சா.ஜிந்துஜா
கோண்டாவில்

# விடை தெரியுமா? 190

## உங்களுக்கும் பரிசில்கள்


1. 'கோலாலம்பூர்' எந்த நாட்டினுடைய தலை நகர்?
2. 'தங்கத்தாத்தா' என்று அழைக்கப்படும் ஈழத்துப் புலவர் யார்?
3. ஆசியாவிலிருந்து வட அமெரிக்காவைப் பிரிக்கும் நீரிணையின் பெயர் என்ன?
4. தொற்று நோய்க்கு உரிய உலகக் குறியீடு எது?
5. மிகப் பெரிய வாயுள்ள விலங்கு எது?

## விடைகள் 188

1. கணியன் பூங்குன்றனார்
2. நவாலியூர் சோமசுந்தரப் புலவர்
3. சிகிரியா
4. பேராதனை, ஹக்கல, கனேடபத்த
5. கல்லீரல்

## வெற்றி பெற்றோர் விவரம் (186)

* ப. ஆரணி, நெல்லியடி மெ.மி.த.க.பாடசாலை.
* தி.மயூரன், தரம் 10சி, ஹாட்லிக் கல்லூரி.
* தி.சுஜீவன், தரம் 7பி, ஹாட்லிக் கல்லூரி.



இறுவர் கதிருக்கு ஆக்கங்களை அனுப்ப விரும்பும் இறார்கள் "சிறுவர்கதிர்", உதயன், 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

### விடை தெரியுமா?

தெரிந்தால் 22 .12.2012 இற்கு முன்னர் சரியான விடைகளை அனுப்பும் 6 மாணவர்களுக்குப் பரிசில்கள் வழங்கப்படும். முதல் மூவருக்கும் முறையே ரூபா 150, ரூபா 125 மற்றும் ரூபா 100 வீதமும் ஏனைய மூவருக்கும் தலா ரூபா 75வீதமும் பரிசில்கள் நூல்களாக வழங்கப்படும்.


# கண்களைப் பாதுகாப்போம்

படிக்கும்போது நல்ல வெளிச்சம் இருக்குமாறு பார்த்துக்கொள்ள வேண்டும். பதினைந்து அடி தூரத்துக்கு அப்பால் அமர்ந்திருந்தே தொலைக் காட்சி பார்க்க வேண்டும்.

கத்தி, ஊசி போன்ற கூர்மையான பொருள்களைக் கண்களுக்கு அருகில் வைத்து விளையாடக் கூடாது. வாகனங்களில் செல்லும் போதும், குறைந்த வெளிச்சம் உள்ள போதும் புத்தகங்களைப் படிக்கக் கூடாது.

கரட், கீரை, அப்பிள், பப்பாளி போன்றவை கண்களுக்கு சிறந்த ஆரோக்கியத்தைக் கொடுப்பதால் அவற்றை விரும்பி உண்ண வேண்டும். பெற்றோர் கண்ணாடி அணிந்திருந்தால் பிள்ளைகளும் கண்ணாடி அணிய வேண்டி வரலாம் என்பதால் வருடத்துக்கு ஒரு முறையாவது மருத்துவப் பரிசோதனை செய்து கொள்வது சிறந்தது.


க.கீர்த்தன்,
யா/ஸ்ரீ சோமஸ்கந்த கல்லூரி, புத்தூர்



ஜெ.ஆர். ஜெனன்சி, தரம்-9 ஏ,
யா/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை



ஜெ.நர்மதன், தரம்-4,
யா/கைதடி குருசாமி வித்தி.



இ.லக்சனா, தரம்-3,
யா/சரசாலை ஸ்ரீ கணேச வித்தி.



[illegible], தரம்-7,
யா/யாழ்.சன்மார்க்க மகா வித்தி.



ஜெ.சாருமதி, தரம்-2,
யா/கைதடி குருசாமி வித்தி.



யோ.இந்துஜன், தரம்-4,
யா/கைதடி குருசாமி வித்தி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# படிப்பைப் பந்தாடும் பணம்

தானா



தற்போது இடம்பெற்று வரும் இவ்வாண்டுக்கான க.பொ.த. சாதாரணதரப் பரீட்சைக்கு நாடெங்கிலுமிருந்து ஏறக்குறைய ஐந்தரை லட்சம் மாணவ மாணவிகள் தோற்றுகின்றனர் என்பது செய்தி.

சுமார் ஐந்து தசாப்த காலத்துக்கு முன்னர் சிரேஷ்ட பாடசாலைத் தராதரப் பத்திரப் பரீட்சை என்ற பெயரில் இடம்பெற்ற பரீட்சையில் சித்தியடைவோரில் ஒரு சாரார் தமது கல்வியைத் தொடர்ந்து மேற்கொண்டு உயர்தர பாடசாலைத் தராதரப் பத்திரப் பரீட்சைக்குத் தோற்றி அதில் சித்திபெறுவதனூடாக பல்கலைக்கழக அனுமதி பெற்று பட்டதாரிகளாக வெளிவருவது வழக்கிலிருந்தது.

அரச தொழிற்றுறைகளில் இணைவதற்கான போட்டிப் பரீட்சைகளுக்கான அடிப்படைத் தகுதி சி.பொ.த. பத்திரப் பரீட்சையில் சித்தி பெற்றிருத்தல் என்ற தகுதி மட்டும் கணக்கொள்ளப்பட்ட அந்தக் காலகட்டத்தில் அந்தப் பரீட்சையில் சித்திபெற்றோர் பலர் போட்டிப் பரீட்சைகளூடாக அரச சேவையில் பலதரப்பட்ட வேலைவாய்ப்புக்களில் இணைந்து கொண்டமை வரலாறு.

உயர்தர பாடசாலை தராதரப் பரீட்சையில் அதிக புள்ளிகள் பெறுவதனூடாக, தமிழ் மாணவர்கள் அதிக எண்ணிக்கையில் பல்கலைக்கழக மருத்துவ மற்றும் பொறியியல் பீடங்களில் இணைந்து கொள்வதைத் தடுக்கும் நோக்கில் சிறிமாவோ பண்டாரநாயக்கா அரசால் அறிமுகப்படுத்தப்பட்ட விகிதாசார பல்கலைக்கழக அனுமதி நடைமுறை காரணமாக தமிழ் மாணவர்களது உயர் கல்வி வாய்ப்பு தடைப்பட்டமை, கட்டுப்படுத்தப்பட்டமை தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்ட துரோகம் எனக் கொள்ளப்பட்டது.

பொதுவாகவே நமது தமிழ்ப் பெற்றோர்கள் தமது பிள்ளைகளில் கல்வித் தர உயர்ச்சியின் கடும் அக்கறை, ஈடுபாடு கொண்டவர்கள் என்பது வெளிப்படையான உண்மை. இவ்விடயத்தில் அன்றும் சரி, இன்றும் சரி நிலைமை அதுவே. அதிலும் பிரபல்ய பாடசாலைகளெனக் கருதப்படும் அரச மற்றும் அரச உதவி பெறும் பாடசாலைகளில் தமது பிள்ளைகளை ஆரம்பக் கல்விக்கு, தரம் ஒன்று வகுப்பில் சேர்ப்பதற்கான அனுமதிபெற அவர்கள் எடுத்துக் கொள்ளும் முயற்சி, காட்டும் அக்கறை, எதிர்நோக்கும் சவால்கள் சொல்லுந்தரமன்று. அரசின் கல்வித் துறைசார் கட்டுப்பாடுகள், சட்டதிட்டங்களைத் தாண்டி தமது முயற்சியில் வெற்றிபெற அவர்கள் படும்பாடு போதும் போதும் என்றாகிவிடும்.

பாடசாலைகளில் பிள்ளைகளைச் சேர்த்துக் கொள்ள பாடசாலைகளுக்கு 'டொனேசன்' செலுத்தும் வழக்கத்தை முற்றாக ஒழித்துவிட கல்வி அமைச்சு தலையால் கிடங்கு கிண்டிய போதிலும் இற்றைவரை அது நடைமுறைச்சாத்தியமாக அமையவில்லை என்பதே யதார்த்த உண்மை. சட்டதிட்டங்களுக்குப் போக்குக் காட்டி பாடசாலை அபிவிருத்திச் சபையின் தலையில் பொறுப்புச் சாற்றி ஏதோவகையில் டொனேசன் கறந்துவிடுவதில் பாடசாலை நிர்வாகங்கள் படுகில்லாடிகள். வசதி படைத்தோர் தாமாக மனமுவந்து வழங்கும் நிதி உதவி அன்பளிப்பெனவும் வசதியற்ற வறிய பெற்றோரிடம் வற்புறுத்திப் பெறுவது டொனேசன் எனவும் கொள்ளத்தக்கது. இலவசக் கல்வி முறையின் தந்தையெனக் கருதப்படும் பெரியார் சீ.டபிள்யூ.டபிள்யூ. கன்னங்கரா இன்று உயிரோடிருந்தால் தமது குறிக்கோள் பிறழ்வுபட்டமை குறித்து நிச்சயம் மனம் வருந்தியிருப்பார்.

ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சைத் திட்டத்தின் நோக்கம், எதிர்பார்ப்பு என்னவென்பதை எம்மில் எத்தனை பேர் தெரிந்து வைத்துள்ளோம் என்பது இன்றும் கேள்விக்குறியாகவே தொக்கி நிற்கிறது.

தமது பிள்ளைகளுக்கு கற்றல் திறன் வாய்த்திருந்தும், தமது பொருளாதார நலிவு நிலை காரணமாகத் தமது பிள்ளைகளின் கற்றல் செயற்பாடுகளுக்கு அவசியமான பின்னூட்டலை வழங்க இயலாத பெற்றோர்களின் சிரமத்துக்கு குறிப்பிட்ட அளவிலான நிவாரண உதவியாக வறிய மாணவர்களது கற்றல் செயற்பாட்டுக்கான உதவுதொகை வழங்கும் திட்டத்தை உரிய வகையில் நடைமுறைப்படுத்தும் அரசின்- கல்வி அமைச்சின் நோக்கம் அப்பழுக்கின்றி முன்னெடுக்கப்பட - தகுதியான மாணவர்களை இனம் கண்டு அவர்களுக்கு உதவுவதற்கான, அரசின் திட்டமே ஐந்தாம் ஆண்டு மாணவர்களுக்கான புலமைப்பரிசில் திட்டம் என்று கல்வித் துறைசார் உயரதிகாரி யொருவர் மூலம் தெரிந்து கொள்ள முடிந்தது.

ஆனால் குறிப்பிட்ட பரீட்சையில் தமது பிள்ளைகளைச் சித்திபெற வைக்க எமது தமிழ்ப் பெற்றோர் எடுத்துக் கொள்ளும் முயற்சி, சொல்லுந்தரமன்று. அத்தகைய அவர்களது விருப்பு இன்று சமூக மத்தியில் ஒரு கௌரவப் பிரச்சினையாக உருவெடுத்துள்ளது. தமது பிள்ளைகள் குறிப்பிட்ட புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தாலும் கூட, தமது தொழில்சார் வருமான மட்டம் காரணமாகத் தமது பிள்ளைகளுக்கு அரச உதவு தொகை கிட்டாது என்பதைத் தெளிவாகத் தெரிந்திருக்கும் குறிப்பிட்ட மட்டத்துக்குக் கூடிய வருமானம், சம்பளம் பெறும் அரச, தனியார் துறை ஊழியர்கள், வர்த்தகர்கள் போன்ற தரப்பினர், தமது குடும்பத்துக் கௌரவமே தமது பிள்ளைகள் குறிப்பிட்ட பரீட்சையில் சித்தி பெறுவதில் தான் தங்கியிருப்பதாகக் கருதுவதையும் எம்மால் காண முடிகின்றது.

இதனால் சிறுவர் சிறுமியர் என்ற வயதெல்லையொன்றுக்குள் வைத்துக் கணிக்கப்படும் தமது பிள்ளைகளைக் கசக்கிப் பிழிந்து, தனியார் கல்வி நிறுவனங்களின் பயிற்சி வகுப்புக்களுக்கு விரட்டி, அவர்களது வயதுக்குரிய ஓய்வைத் தானும் அனுமதிக்காது உளரீதியாக மனக் களைப்பையும் உடல் ரீதியாக சோர்வையும் ஏற்படுத்தும் விதத்தில் பெற்றோர் தம் பிள்ளைகளைக் கையாள்வதாக விமர்சனங்கள் வெளிவந்துள்ளன.

**தமது பிள்ளைகளைக் கசக்கிப் பிழிந்து, தனியார் கல்வி நிறுவனங்களின் பயிற்சி வகுப்புக்களுக்கு விரட்டி, அவர்களது வயதுக்குரிய ஓய்வைத் தானும் அனுமதிக் காது உடல் , உளரீதியாக களைப்பையும், சோர்வையும் ஏற்படுத்தும் விதத்தில் பெற்றோர் தம் பிள்ளைகளைக் கையாள்வதாக விமர்சனங்கள் வெளிவந்துள்ளன.**

தமது பிள்ளைகளது கல்வித் திறன், புலமைப்பரிசில் போட்டிப் பரீட்சையூடாக வெளிப்படுத்தப்படுவது குறித்து பெற்றோர் மகிழ்ச்சியும் மனத் திருப்தியும் ஓர் அளவுக்குப் பெருமையும் அடைவது தவறல்ல, நியாயமானதே.

ஆயினும் தமது அந்தத் திருப்தியை [illegible] படுத்தி வெளிக்காட்டிக் கொள்வது நியாயமாகக் கொள்ளத்தக்கது. தமது மகிழ்ச்சியையும் பரீட்சையில் சித்தியடைந்ததன் மூலமாகத் தமது பிள்ளைகளின் மனதிலெழும் மகிழ்ச்சியையும் பத்திரிகை வாயிலான பாராட்டாக வெளிப்படுத்தித் தமது பிள்ளைகளை உற்சாகப்படுத்துவது நியாயமானதொன்று. பரீட்சையில் சித்தியடையத் தவறிய பிள்ளைகள் தோல்வி மனப்பான்மையால் துவண்டுவிடவும், அவர்களது பெற்றோரின் மனக் கவலை உயரவும் இது வழி வகுக்கும்.

ஆயினும் இந்தப் பரீட்சையைத் தமக்கொரு வாய்ப்பாகக் கருதி, தமது பொருளாதார நலனை மேம்படுத்திக் கொள்ளும் முனைப்புடன், பிள்ளைகளின் கல்வித் திறனைக் கூர்மையடையச் செய்து உதவுவதாகவும் அவர்களைப் பரீட்சையில் சித்திபெற வைத்துக் காட்டுவதாகவும் பெற்றோர்களுக்கு மூளைச் சலவை செய்து, குறிப்பிட்ட வயதுப் பிள்ளைகளின் சிந்திக்கும் திறன் அளவுக்கு மேற்பட்ட விதத்தில் அளவுக்கு மிஞ்சிய விதத்தில், அந்தப் பிள்ளைகளது மூளைக்குக் களைப்பை ஏற்படுத்தும் விதத்தில் தமது கற்பித்தல் புலமையைக் கூர் பார்க்கும் தரப்பினர், குறிப்பிட்டதொரு பிள்ளை பரீட்சையில் அதிக மதிப்பெண்கள் பெற்றுவிட்டால், அது தமது கற்பித்தல் மேதாவித்தனத்தால் ஈட்டப்பட்டதென உரிமை கொண்டாடுவதும் அதனூடாகத் தாம் பிரபல்யம் ஈட்டிக்கொள்ள முயல்வதையும் நாம் காண முடிகிறது. கல்வித்துறை உட்பட சகல வாழ்வியல் துறைகளிலும் வர்த்தகமயச் சிந்தனை விரவிப் போய் விட்டுள்ள இன்றைய நிலையில் குறிப்பிட்ட இந்தத் தரப்பினரின் செயற்பாடுகளில் பிழை காண முயல்வதும் நியாயமற்றதே. ஆயினும் பரீட்சையில் தோல்வி கண்ட ஏனைய மாணவச் செல்வங்களின் மனவெப்பியாரத்தை அதிகரிக்க வைக்கும் விதத்தில், தம்மிடம் பயிற்சி பெற்றுப் பரீட்சையில் சித்தி பெற்ற மாணவர்களைக் ஹீரோக்களாக ஆக்கி, ஏதோ ஒலிம்பிக் பதக்கத்தை வென்றெடுத்து விட்டார்கள் என்ற விதத்தில் அவர்களை உருவகப்படுத்தி அவர்களுக்குப் பாராட்டு விழா எடுத்து பட்டதாரித் தொப்பியும் சூட்டிக் கௌரவிப்பது என்ற போர்வையில் தமது பாடசாலையின், கல்வி நிறுவனத்தின் பிரபல்யத்தை உயர்த்திக் கொள்ள முயலும் குறுக்கு வழித் தந்திரத்தை இவர்கள் தவிர்த்துக் கொண்டாலென்ன?

இவர்களது சுயநலப் போக்குடனான இத்தகைய செயற்பாடுகள் முழு மாணவ சமுதாயத்துக்குமே உளவியல் ரீதியில் தாக்கத்தை ஏற்படுத்தும் என்பது உளவள ஆலோசகர் ஒருவர்

(14 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்களுக்கு இந்த வாரம் எப்படி...

16.12.2012 முதல் 22.12.2012 வரை

தருபவர் - வித்தியா

**மேஷம்** - மனதில் மகிழ்ச்சியும், செயல்களில் வெற்றியும் அதிகரிக்கும். பூர்வீக சொத்தில் அளவான பணவரவு கிடைக்கும். அரசு தொடர்பான சலுகை பெறுவதில் தாமதம் ஏற்படும். இல்லறத்துணை குடும்ப சூழ்நிலைகளை உணர்ந்து, தம் பிடிவாத குணத்தை குறைத்துக் கொள்வர். தொழில், வியாபாரத்தில் உற்பத்தி, விற்பனையை உயர்த்த அதிக முயற்சி செய்வீர்கள். பணவரவு அதிகரிக்கும். உத்தியோகத்தர் அதிக பொறுப்புணர்வுடன் செயற்பட்டு, நிர்வாகத்திடம் பாராட்டுப் பெறுவர். மாணவர்கள் படிப்பில் தனிக்கவனம் கொள்வதால் மட்டுமே முன்னேற்றம் அடைய முடியும்.

**ரிஷபம்** - இரக்க சுபாவத்தினால் நல்ல செயல்களைச் செய்து மனதில் பெருமிதமும், உரியவர்களிடம் வாழ்த்தும் பெறுவீர்கள். உடல் நல ஆரோக்கியம் சீராக இருக்கும். இல்லறத்துணையிடம் பேச்சில் நிதானம் கொள்வதால் குடும்பத்தில் ஒற்றுமை வளரும். பணப்பரிவர்த்தனைகளில் தகுந்த பாதுகாப்பு பின்பற்றுவது அவசியம். பணவரவு எதிர்பார்த்த அளவில் கிடைக்கும். உத்தியோகத்தர் தன் கண்காணிப்பு நடைமுறையில் புதிய மாற்றங்களை மேற்கொள்வர். மாணவர்கள் கல்வியில் கவனம் செலுத்தவேண்டும்.

**மிதுனம்** - நிறைவேற்ற வேண்டிய திட்டங்களை புதிய யுக்தியுடன் செயற்படுத்துவீர்கள். நன்மையும், பணவரவும் அதிகரிக்கும். சமூகத்தில் உங்கள் மீதான மதிப்பு, மரியாதை உயரும். வெளியூர் பயணம் மேற்கொள்வீர்கள். உடல் நல ஆரோக்கியம் நல்ல விதமாக இருக்கும். உறவினர்கள் முன்பு தந்த பணி ஒன்றை, நேரம் ஒதுக்கி நிறைவேற்றித் தருவீர்கள். இல்லறத்துணை சில விஷயங்களில் புரியாத தன்மையில் நடந்து கொள்வர். தொழில், வியாபாரத்தில் அளவான உற்பத்தி, விற்பனை இருக்கும். அரசியல்வாதிகளுக்கு அரசு தொடர்பான அனுகூலம் பெறுவது எளிதாகும். மாணவர்கள் ஞாபகத்திறன் வளர்ந்து படிப்பில் நல்ல தேர்ச்சி பெறுவர்.

**கடகம்** - சமூக நிகழ்வுகளை அறிவதில் உள்ள ஆர்வத்தைக் குறைத்து, சொந்தப் பணிகளில் கூடுதல் அக்கறை கொள்வீர்கள். உடல் நலத்திற்கு ஒவ்வாத உணவுகளை, விருந்து உபசரிப்புகளில் முன்யோசனையுடன் தவிர்த்துவிடுவீர்கள். இல்லறத்துணை குடும்ப நலனை பாதுகாக்க, தகுந்த அக்கறையுடன் செயற்படுவர். தொழில், வியாபாரத்தில் கூடுதல் உழைப்பினால் மட்டுமே திட்டமிட்ட இலக்கை அடைய இயலும். உத்தியோகத்தர் பணியாளர்களை அன்பு, ஊக்கம் தந்து வேலை வாங்குவது நல்லது. மாணவர்கள் கூடுதல் பயிற்சியினால் திட்டமிட்ட தேர்ச்சி பெறுவர்.

**சிங்கம்** - மனதில் புத்துணர்வும், செயல்களில் மிகுந்த நேர்த்தியும் உருவாகும். கடந்த நாட்களில் பிறகு பார்க்கலாம் என்று ஒதுக்கி வைத்த பணியை நினைவில் கொண்டு நிறைவேற்றுவீர்கள். எதிரி, உங்கள் வாழ்வின் சிறப்பு கண்டு வியந்து விலகுவர். இல்லறத்துணை கூடுதல் அன்பு, பாசத்துடன் நடந்து கொள்வர். குடும்பத்தில் மகிழ்ச்சி வளரும். தொழில், வியாபாரத்தில் தகுந்த மூலதனத்துடன் அபிவிருத்தி பணி செய்வீர்கள். உற்பத்தி, விற்பனை உயர்ந்து உபரி பணவரவைத்தரும். தனியார்துறை பணியாளர்கள் கூடுதல் வேலைவாய்ப்பு பெறுவர். மாணவர்கள், அக்கறையுடன் படித்து தர தேர்ச்சியில் முன்னேற்றம் காண்பர்.

**கன்னி** - நண்பர், உறவினருக்கு தேவையான உதவி செய்து பாராட்டு, கூடுதல் அன்பை பெறுவீர்கள். கடன் பிணி தொந்தரவு குறைந்து மனதில் நிம்மதி பெறுவீர்கள். இல்லறத்துணை, உங்களின் கருத்துக்களுக்கு உரிய முக்கியத்துவம் தருவர். குடும்பத்தின் நடைமுறைத்தேவை திருப்திகர வகையில் பூர்த்தியாகும். தொழில், வியாபாரத்தில் அரசு தொடர்பான விதிமுறைகளை தவறாமல் பின்பற்ற வேண்டும். பணியாளர்கள், நிர்வாகத்திடம் சலுகைப்பயன் கேட்பதில் நிதான அணுகுமுறை நல்லது. மாணவர்கள் போக்குவரத்தில் கவனம் மேற்கொள்வது நல்லது.

**துலாம்** - சொந்தப் பணிகளை நிறைவேற்ற பிறரிடம் இதம், பதமாகப் பேசி காரியம் சாதித்துக் கொள்வீர்கள். உங்களை அவமானப்படுத்த முயற்சித்தவர், மிரட்சி அடைகிற வகையில் உங்கள் வாழ்வியல் சூழ்நிலை சிறப்பாக உருவாகும். இல்லறத்துணை உங்களின் தொழில்நுட்ப அறிவு வளர சிறந்த ஆலோசனை வழங்குவர். தொழில், வியாபாரத்தில் குறுக்கிடுகிற இடையூறை மாற்று உபாயத்தால் சரிசெய்வீர்கள். பணியாளர்கள் அதிக உழைப்பால் அதிக சம்பளம் பெறுவர். மாணவர்கள் கல்வியில் சிறந்த கவனம் செலுத்துவர்.

**விருச்சிகம்** - உங்களுக்கு மிக அன்பானவர்களிடம் கூட நிதானித்துப் பேசுவது நல்லது. சமூகப்பார்வையில் உங்களின் யதார்த்த செயல்களும் பகட்டு நிறைந்ததாகத் தோன்றும். கவனம் தேவை. நிலுவை பணக்கடன் செலுத்துவீர்கள். தொழில், வியாபாரத்தில் கூடுதல் மூலதனம் செய்து உற்பத்தி, விற்பனையில் முன்னேற்றம் காண்பீர்கள். பணியாளர்கள் அதிக பொறுப்புணர்வுடன் செயற்பட்டு நன்மதிப்புப் பெறுவர். மாணவர்கள் கல்வியில் கவனக்குறைவை சரிசெய்து திட்டமிட்ட தேர்ச்சி இலக்கை அடைவர்.

**தனுசு** - அன்றாடப் பணிகளை நிறைவேற்றுவதில் பின்தங்கும் நிலை உருவாகும். தமக்குரிய பொறுப்புகளை உணர்ந்து செயற்படுவதால் மட்டுமே, தேவையற்ற சிரமம் அணுகாமல் தவிர்க்கலாம். இல்லறத்துணை, உங்கள் நடைமுறைக் கஷ்டங்களை உணர்ந்து ஆறுதல்தரும்விதமாக நடந்து கொள்வர். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி பெற கூடுதல் வாய்ப்பு வரும். தவறாமல் பயன்படுத்துவதால் பணவரவு அதிகம் பெறலாம். பெண்கள் தேவையான பணிகளை அக்கறையுடன் மேற்கொள்வர். மாணவர்கள் சக மாணவர்களின் உதவியால் படிப்பில் சிறந்து விளங்குவர்.

**மகரம்** - தன்னம்பிக்கையும் செயல்களில் நேர்த்தியும் நிறைந்திருக்கும். பிறர் நலனில் அதிக அக்கறையுடன் நடந்து கொள்வீர்கள். உடல்நலம் நல்ல ஆரோக்கியத்துடன் இருக்கும். இல்லறத்துணை, உங்களிடம் கூடுதல் பாசத்துடன் நடந்து குடும்பத்தில் மகிழ்ச்சியை உருவாக்குவர். தொழில், வியாபாரத்தில் சில நடைமுறை மாற்றங்களைப் பின்பற்றுவீர்கள். உத்தியோகத்தர் நிர்வாகத்தின் ஆலோசனைகளைப் பொறுப்புணர்வுடன் பின்பற்றிச் செயற்படுவர். மாணவர்கள், படிப்பில் சிறந்து நற்பெயர் பெறுவர்.

**கும்பம்** - மனதில் ஆன்மிக சிந்தனையும் நம்பிக்கையும் நிறைந்திருக்கும். சமூகப்பணியிலும் ஓரளவு ஈடுபடுவீர்கள். நிர்ப்பந்த பணக்கடனில் ஒருபகுதியைச் செலுத்துவீர்கள். இல்லறத்துணையின் மனதில் உங்கள் மீதான நம்பகத்தன்மை குறைவுபடாத வகையில் நடந்துகொள்வது குடும்ப நலனுக்கு உதவும். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சிபெற தேவையான உதவி அரசு மற்றும் எதிர்பார்த்த இடங்களில் கிடைக்கும். மாணவர்கள், பெற்றோரின் சூழ்நிலை உணர்ந்து தேவைகளை நிறைவேற்ற முயற்சிப்பது நல்லது.

**மீனம்** - ஆரம்பிக்கும் செயல்கள் தகுந்த வெற்றிபெற கூடுதல் முயற்சியுடன் அனுபவ அறிவையும் பயன்படுத்துவீர்கள். இதனால், எதிர்பார்த்த நன்மைபெற அனுகூலம் ஏற்படும். பொது இடங்களில் இடம்பெறும் விவகாரப் பேச்சுக்களைக் கவனிக்காமல் விலகுவது நேரத்தை மீதப்படுத்தும் மன அமைதியையும் பாதுகாக்கும். சொத்து ஆவணம் பேரில் பணக்கடன் பெறுபவர், நம்பகமானவர்களிடம் வாங்குவது நல்லது. [illegible] கஷ்ட நிலைமையைச் சரிசெய்ய அர்ப்பணிப்பு மனதுடன் [illegible] பேசுவதில் இனிய வார்த்தை பயன்படுத்துவது நன்மை பெற உதவும்.

# அனார் கவிதைகள்

## மூங்கில் நிலம்

துளிர்த்த வெண்குருத்துக்களின் பனிக்குள்
திறந்து கொள்ளும் கனவு

மஞ்சள் பாய்ந்து முற்றிய நெடுமரங்களாய்
மூங்கிற் புதர்கள்
பச்சை மூட்டங்கள் மூடிய நெடுஞ்சாலை
குளிர்மையும் வெயிலும் தாவுகின்ற
''கலேவெல'' ப் பாதை

கார்காலப் பனி ஈரலிப்புப் பரவிய
மெத்தென்ற சருகுகளின் மீதான நடை
பறப்பதற்குரிய மந்திரங்களை ஓதுகின்ற காற்று
காட்டின் தொலைவில்
பழங்குடிப் பெண்ணின் ஓங்காரக் குரலோசை

புள்ளிகள் கொண்டதும் சாம்பல் நிறமுமான
முட்டைகளின் கூடையொன்றுடன்
தோளில் கொழுவிய கைக்கோடரி
அசையாமல் நடக்கிறார் மரமேறி

புகையிலை வயல்களைத் தாண்டிவருகிற தாழ்நிலத்தில்
மூக்கில் வளையமிட்ட ரவிக்கை அணியாத
முதிர்ந்த பெண்கள் என்னை வரவேற்கின்றனர்

செம்புக் குவளையில்
துவர்ப்பும் காரமுமான பானமொன்றினை அருந்தினேன்
விதைப்புத் தானியங்கள் இட்ட
மண் கலயத்தை தருகிறாள் முதியவள்

நீண்ட கோடுகளாய் கூட்டிய மணல்வரிகளின்
முதலாம் வரிசையில்
என் வெறும் பாதங்களை வைத்து
தானியங்களை இரு திசைகளிலும் வீசத் தொடங்குகிறேன்

ஊலுல்லு... ஊலுல்லு... எனச்
சிதறும் பெண்களின் குரவை ஒலிகள்

உரி மட்டைகளின் மேல்
மண்பானைத் தலை கவிழ்த்து நிற்கிற
வெருட்டியை ஊடறுத்து மயில்கள் ஓடுகின்றன

துணுக்குற்றவாறு உடல் உதறி
இங்கும் அங்கும் குதிக்கின்றன.
தொழுவத்தில் அடைபட்ட வெண்ணிறப் பன்றிக்குட்டிகள்

* * *

## பொம்மைப் பௌர்ணமி

இரவு 8.30.......
அவன் சில மர்மக் குகைகளின் மலைகளுக்கப்பால்
தூக்கிப்போடும் பௌர்ணமி பொம்மையை
அவர் பிடித்துக்கொள்கிறார்

காதல் ததும்பியும்... அழுகைமுட்டியதுமான
பொம்மையின் கண்களை மறக்கமுடியாது

கடலைத்தாண்டி.... அவர் திருப்பி எறிந்த பொம்மையை
அவள் பிடித்திருப்பாளா ?

காதல் புகையும் சிகரெட்டினால்
தழும்புகளை....
சுட்டெரிக்கத் தொடங்குகிறார்

செல்மாவின் ஜிப்ரான்
ஈரப்பனிவிழும் பூப்பந்தலின் கீழ்
பித்தேறிய கண்களால்.....
பௌர்ணமிகளை குடித்துக் கொண்டிருக்கிறான்

பனிவாள் கீறலின் இசையென
ஒற்றை ஆண் குரல்
மீனவர் குடிசையிலிருந்து
தபேலாவின் தாளத்தைக் கிழித்து வருகிறது

பிற்பகல்
ஆற்றின் கருங்கல் குன்றுகளில் அமர்ந்து
தோணி விடுபவனை ரசிக்கையில்........
நெடிதான ஒற்றையடிப் பாதையில்
ஒன்றுக்குள் ஒன்று மறைந்து கொள்ளும்
காட்டு மரங்களின் பெயர்களை கேட்டு நடக்கையில்.......
அவரது வெறும் கைகளை
ஒருமுறை பற்றிக்கொள்ள வேண்டும் என நினைக்கிறேன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடிமைகளின் மீட்பர் 29

## ஆபிரஹாம் லிங்கன்



பா.உண்மை

ஐந்தாண்டுகளுக்கு அரசியல் பக்கமே போகாமல், வழக்கறிஞர் தொழிலில் மட்டுமே கவனம் செலுத்திவந்தார் லிங்கன். இதற்கிடையில் அமெரிக்காவில் நடந்த சில முக்கிய நிகழ்வுகள் லிங்கனின் வாழ்க்கையை அடுத்த கட்டத்துக்கு நகர்த்திச் சென்றன.

கான்சாஸ்-நப்ரஸ்கா சட்டம் நிறைவேற்றப்பட்டதால், பலர் அதிருப்தியடைந்தார்கள். விக் கட்சியில் பிளவு ஏற்பட்டது. ஜனநாயகக் கட்சியிலிருந்தும், அடிமை முறையை எதிர்த்த பல்லாயிரக்கணக்கானோர் வெளியேறினார்கள். அடிமை முறையை எதிர்ப்பவர்கள் ஒன்றுகூடி ஒரு புதிய கட்சியை நிறுவ முடிவு செய்தார்கள். அந்தக் கட்சியின் பெயர் 'குடியரசுக் கட்சி.' ஆனாலும் லிங்கனைப் போன்ற பல தலைவர்கள் விக் கட்சியை விட்டுவிலகத் தயாராக இல்லை. இல்லினாய்ஸில் இருந்த குடியரசுக்கட்சியில் ஆரம்பத்தில், அடிமை முறையை ஒழிக்க விரும்புபவர்கள் மட்டுமே இருந்தார்கள். 1854 ஜூலை 6 ஆம் திகதி மெக்சிகனில் உள்ள ஜேக்சன் என்ற இடத்தில் வெவ்வேறு கட்சிகளில் இருந்த அடிமை முறை எதிர்ப்பாளர்கள் ஒன்றுகூடி ஒரு பெரிய பொதுக் கூட்டத்தைக் கூட்டினார்கள். அந்தக் கூட்டத்தில்தான் புதிய கட்சிக்கு 'குடியரசுக் கட்சி' என்று பெயர் வைக்க முடிவு செய்யப்பட்டது.

ஜனநாயகக் கட்சியைச் சேர்ந்த ஜேம்ஸ் புக்கானன் 1857, மார்ச் 4 ஆம் திகதி அமெரிக்காவின் புதிய ஜனாதிபதியாகப் பதவியேற்றார். அடிமைப் பிரச்சினை பற்றி பேசவேண்டும் என்று அவர் உள்ளூர விரும்பினாலும், அது குறித்து அவர் வாயே திறக்கவில்லை.

அந்தச் சமயத்தில் உச்ச நீதிமன்றத்தில், ஒரு வழக்கு விசாரணையில் இருந்தது. அந்த வழக்கின் பெயர் 'டிரெட் ஸ்காட் எதிர் சான்ஃபோர்ட்' (Dred Scott Vs. Sandford). டிரெட் ஸ்காட் ஒரு கறுப்பின அடிமை. 1795 இல் வேர்ஜினியாவில் பிறந்தவர். 1830 ஆம் ஆண்டு மிசௌரியில் இருக்கும் செயிண்ட் லூயி என்ற இடத்துக்கு அவரது எஜமானரால் கொண்டு செல்லப்பட்டார்.

1831 க்கும் 1833 க்கும் இடைப்பட்ட காலத்தில் ஜோன் எமர்சன் என்பவருக்கு விற்கப்பட்டார். ஜோன் எமர்சன் ஓர் இராணுவ டொக்டர். ஊர் ஊராகப் பயணம் செய்துகொண்டே இருப்பவர். எனவே டிரெட் ஸ்காட்டும் எமர்சனுடன் பயணம் செய்ய வேண்டியிருந்தது. எமர்சன், இல்லினாய்ஸுக்கும் டிரெட் ஸ்காட்டை உடன் அழைத்துச் சென்றார். இல்லினாய்ஸில் அடிமை முறை கிடையாது. இல்லினாய்ஸில் இரண்டரை வருட காலங்கள் இருந்தபிறகு, எமர்சன் டிரெட் ஸ்காட்டை அழைத்துக் கொண்டு விஸ்கான்சின் (Wisconsin) பகுதியிலிருந்த ஒரு கோட்டைக்கு அழைத்துக்கொண்டு போனார்.

அங்கு டிரெட் ஸ்காட், ஒரு கறுப்பினப் பெண்ணைச் சந்தித்தார். பெயர் ஹரியட் ரொபின்ஸன் (Harriet Robinson). அவரும் ஓர் அடிமைதான். டிரெட் ஸ்காட், எமர்சனின் சம்மதத்துடன், ஹரியட்டைத் திருமணம் செய்துகொண்டார். திருமணத்துக்குப் பிறகு ஹரியட், எமர்சனின் அடிமையானார்.

சுதந்திரப் பிரதேசமான இல்லினாய்ஸில் இருந்தபோதும், அடிமை முறை தடை செய்யப்பட்டிருந்த விஸ்கான்சினில் இருந்தபோதும் டிரெட் தன்னைச் சுதந்திரமாக விடும்படி தன்னுடைய எஜமானர் எமர்சனிடம் கேட்கவில்லை. அவருக்கு அங்குள்ள சட்டம் பற்றித் தெரியாததும் அதற்கு ஒரு காரணமாக இருக்கலாம். இரண்டு வருடங்கள் கழித்து இராணுவம், எமர்சனைத் தென் பகுதிக்கு மாற்றியது. முதலில் செயிண்ட் லூயிஸுக்கும், பிறகு லூசியானாவுக்கும் மாற்றப்பட்டார் எமர்சன். எமர்சன் விஸ்கான்சினில் டிரெட்டையும் அவர் மனைவியையும் விட்டுவிட்டுத் தன் பயணத்தைத் தொடங்கினார்.

**நெடுந் தொடர்**

ஒருவருடம் கழித்து, எமர்சன் தன் அடிமைத் தம்பதிகளை வேலைக்கு வரச்சொல்லி அழைத்தார். அப்போது கூட, டிரெட் ஸ்காட் நினைத்திருந்தால், விஸ்கான்சின் பிரதேசத்திலேயே தங்கியிருக்கலாம். அல்லது இல்லினாய்ஸுக்கு ஓடிப்போயிருக்கலாம். அப்படிச் செய்திருந்தால் அடிமை வாழ்க்கையிலிருந்து அவர் விடுபட்டிருக்க முடியும். மாறாக ஆயிரக்கணக்கான மைல் பிரயாணம் செய்து, அவரும் அவரது மனைவியும் மிசிசிப்பி ஆறு வழியாக தங்கள் எஜமானரிடம் வந்து சேர்ந்தார்கள்.

1843 இல் எமர்சன் இறந்துபோனார். அப்போதும் டிரெட்டுக்கு விடுதலை கிடைக்கவில்லை. இப்போது அவரும் அவரது மனைவியும், எமர்சனின் மனைவிக்கு அடிமைகள், எமர்சனின் மனைவி, டிரெட்டை ஓர் இராணுவ அதிகாரிக்கு விற்பதற்கு முயன்றபோதுதான், பிரச்சினை வெடித்தது. டிரெட் ஸ்காட் சில நண்பர்களின் உதவியுடன் கோர்ட்படியேறினார்.

'மிசௌரி ஒப்பந்தத்தின் மூலம், அடிமை முறை சட்ட விரோதமாக்கப்பட்ட மாநிலத்தில் வாழ்ந்ததால், என்னை அடிமையாக நடத்த முடியாது' இது டிரெட் ஸ்காட்டின் வாதம். ஆனால் உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பு வேறு மாதிரியாக இருந்தது. 1847 இலிருந்து பல நீதிமன்றங்களுக்குச் சென்றும் நல்ல தீர்ப்புக் கிடைக்கவில்லை டிரெட் ஸ்காட்டுக்கு. இறுதியாக அமெரிக்க உச்ச நீதிமன்றத்தின் கதவுகளைத் தட்டினார் டிரெட் ஸ்காட்.

அமெரிக்க உச்ச நீதிமன்றத் தலைமை நீதிபதி ரோஜர் பி.டனே (Roger B. Teney), ஐந்து நீதிபதிகளின் சார்பில் தீர்ப்பை வாசித்தார்.

'டிரெட் ஸ்காட் ஒரு கறுப்பின மனிதர். எனவே, அவரை அமெரிக்காவின் குடிமக்களில் ஒருவராகக் கொள்ள முடியாது. அவருக்கு வழக்குப் போட எந்த உரிமையும் கிடையாது என்று அதிரடியாக ஆரம்பித்து, மனத்தை கனக்கச் செய்யும் ஒரு தீர்ப்பை வழங்கியது அந்த நீதிமன்றம்.

'அமெரிக்க அரசியல் சட்டம் நடைமுறைக்கு வருவதற்கு முன்பும், வந்த பிறகும் கறுப்பர்கள் தாழ்ந்த இனமாகத்தான் இருக்கிறார்கள். வெள்ளையர்களைப் போல, மரியாதைக்குரிய உரிமைகள் எவற்றையும் அவர்கள் பெற்றிருக்கவில்லை. விடுதலைப் பிரகடனத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் 'மனிதர்கள் அனைவரும் சமமாகப் பிறக்கிறார்கள்' என்ற கூற்று, கறுப்பர்களுக்குப் பொருந்தாது. கறுப்பர்கள் அமெரிக்காவின் குடிமக்கள் கிடையாது. வெள்ளையர்களுக்கு வீடு, நிலம்போல அடிமைகளும் ஒரு சொத்துதான். நாடாளுமன்றம், அடிமை என்ற சொத்தை ரத்துச்செய்ய முடியாது. மிசௌரி ஒப்பந்தம் சட்ட விரோதமானது' என்று சொன்ன உச்ச நீதிமன்றம் வழக்கைத் தள்ளுபடி செய்தது.

டிரெட் ஸ்காட் விவகாரத்தில் வழங்கப்பட்ட தீர்ப்பு, மக்கள் ஜனநாயகத்துக்கு விரோதமானது என்று கருதினார் லிங்கன். ஆனால் ஸ்டீபன் டக்ளஸோ வழக்குப்படி இந்தத் தீர்ப்புக்கும் ஆமாம் சாமிபோட ஆரம்பித்தார்.

1857 ஜூன் 7 ஆம் திகதி ஸ்பிரிங்ஃபீல்டில் பேசிய டக்ளஸ், உச்ச நீதிமன்றத் தீர்ப்பை புகழ்ந்து தள்ளினார். ஜூன் 26 ஆம் நாள் ஸ்பிரிங்ஃபீல்டில் லிங்கன் டக்ளஸின் பேச்சுக்குப் பதிலடி கொடுத்தார்.

லிங்கனுக்கு வயது கிட்டத்தட்ட ஐம்பதை நெருங்கிக் கொண்டிருந்தது. இத்தனை ஆண்டுகள் வாழ்ந்ததில் அவருக்குக் கிடைத்தது என்ன? வியாபாரத்தில் தோல்வி. நரகமயமான இல்லறைய வாழ்க்கை. சட்டத்தொழிலை விரும்பிச் செய்தாலும் அவ்வளவாக வெற்றியோ, புகழோ இல்லை. அரசியலில் நினைத்ததைச் சாதிக்க முடியவில்லை. லிங்கன் மனம் தளரவில்லை.

(மீட்பர் வருவார்)

## படிப்பைப் பந்தாடும்....

(12 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வெளியிட்ட கருத்து. அது எந்த அளவுக்கு சரியானது என்பது பெற்றோர் தரப்பு சிந்தித்துத் தெளிவுகாண வேண்டிய தொன்று.

ஆனால் மனதை இடறும் விடயமொன்று. இத்தனைக்கும் பிறகு பரீட்சையில் சித்திபெற்ற தமது பிள்ளை, ஆறாம் ஆண்டுக்கான கல்வியை அதே பாடசாலையில் தொடர வாய்ப்பில்லாததால் மற்றொரு பிரபல பாடசாலையில் தமது பிள்ளையைச் சேர்ப்பதற்கு விண்ணப்பித்த பெற்றோரிடம் இருந்து பாடசாலை அபிவிருத்திக்காக நிதிக் கொடை, அன்பளிப்பு அறவிடுவது சட்டப்படி தடை செய்யப்பட்டுள்ள நிலையிலும் பாடசாலை அபிவிருத்தி நிதி என்ற பெயரில் நிதித் தொகை கோருவதன் மூலம் வெளிப்புறம் இனிப்புத் தடவிய கசப்பு மிட்டாயை பாடசாலை நிர்வாகம் வழங்க முயல்வது எந்த அளவுக்கு நியாயம் என்பதையும் சிந்தித்துப் பார்க்க வேண்டியுள்ளது.

கடைசியாக ஒன்று; பரீட்சையில் சித்திபெறத் தவறிய வெட்டுப் புள்ளி, கூட்டத் தவறிய மாணவச் செல்வங்களுக்கும் அவர் தம் பெற்றோருக்கும் ஒரு 'ரொனிக்' என்றுதான் வைத்துக் கொள்ளுங்களேன். பரீட்சைக்குத் தோற்றிய இரண்டு பாடங்களிலும், தலா பாடமொன்றுக்கு 35 புள்ளிகளே சித்திபெறுவதற்கான உயர்புள்ளி மட்டமென நிர்ணயித்து, மொத்தமாக 70 புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாணவர்கள் குறிப்பிட்ட பரீட்சையில் சித்திபெற்றதாகக் கொண்டு அதனை உறுதிப்படுத்தும் ... ஒன்றை ... வெளியிடப்படுகிறது. அந்த வகையில் இது மனதுக்கு ஆறுதல் அளிப்பதொன்றே.

ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் போட்டிப் பரீட்சை என்பது ஒரு மாணவன் தனது கல்விச் செயற்பாடுகளில் முதலில் எதிர்கொள்ளும் ஒருதடை தாண்டல் போட்டியே. நீண்ட தனது கல்வி பயணத்தில் அவன் இன்னும் பல தடைகளைத் தாண்ட வேண்டியுள்ளது. இது யதார்த்தம்.

உங்களுக்கு ஒன்று தெரியுமா? பல்கலைக்கழகக் கல்வி வாய்ப்புப் பெற்று வைத்தியர்களாகவும் பொறியியலாளர்களாகவும் வெளியேறி இன்று எமது சமூகத்துக்கு அருந்தொண்டாற்றி வரும் எங்கள் இளையவர்களில் பலர் தமது ஆரம்ப கல்விப் பயணத்தில் ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் போட்டிப் பரீட்சையில் சித்திபெறத் தவறிக் கோட்டை விட்டவர்களாம். அந்த வகையில் கல்விப் புலத்தில் ஒரு மாணவனின் திறமையை நிர்ணயிப்பது ஐந்தாம் ஆண்டுப் புலமைப்பரிசில் பரீட்சை மட்டுமேயல்ல.★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துணிச்சல், தன்னம்பிக்கை இருந்தால் மட்டும் போதுமே...?



சு.சுபா
4ஆம் கட்டை,
மானிப்பாய்.

'பெண்கள் இப்போது மிகவும் முன்னேறி விட்டார்கள்'

இன்று பலராலும் முன்வைக்கக்கூடிய கூற்று இது. இக்கூற்று ஏற்றுக்கொள்ளப்பட வேண்டியது தான். ஆனாலும் இந்த முன்னேற்றம் எந்தளவுக்கு இருக்கின்றது என்பதும் சிந்திக்கப்பட வேண்டியதாகிறது. முன்னேற்றம் என்பது துணிச்சல், தன்னம்பிக்கை என்கின்ற இரண்டு விடயங்களில் தங்கியிருக்கின்றது. இந்த இரண்டு விடயங்களுமில்லாத பெண்கள் மட்டுமல்ல மனிதர்கள் யாருமே முன்னேற முடியாது.

எமது சமூகத்தில் பெண்கள் மிகவும் வேகமாக முன்னேற வேண்டிய தேவை இருக்கின்றது. ஏனென்றால் பாதிப்புகளும் பிரச்சினைகளும் மூடக்கொள்கைகளும் முரண்பாடுகளும் பெண்களிடமே அதிகம் காணப்படுகின்றன. இவை நிச்சயமாக முன்னேற்றத்திற்குதடையாகவே அமையும்.

இந்தத் தடைகளை உடைத்து அல்லது தகர்த்து முன்னேற வேண்டிய பெரும் பொறுப்பு பெண்களுக்குரியது. அப்பொழுது தான் பெண்கள் இலகுவில் முன்னேறமுடியும்.

பெண்கள் பல கோணங்களில் பிரச்சினைகளை எதிர்கொள்ள வேண்டியவர்களாக இருக்கின்றனர். பெண்ணின் ஒவ்வொரு திசையும் பயங்கரமானதாக, கரடு முரடானதாகவே பெரும்பாலும் இருக்கின்றது. இதை விட காலங்காலமாக பெண் பற்றி நிலவி வந்த உருவகங்களும் இன்றைய பெண்களின் முன்னேற்றங்களுக்கு முட்டுக்கட்டை போடுவனவாகவே இருப்பதைக் காண்கின்றோம்.

பெண்ணின் ஆற்றல், ஆளுமை என்பன பெரியளவில் விரும்பி ஏற்றுக்கொள்ளப்படாதவையாகவே இருப்பதை பல இடங்களில் பெண்ணின் ஆளுமை வெளிப்படுவதை அவள் சார்ந்தோர் விரும்பாத நிலையும் இருக்கின்றது. பல இடங்களில் பெண்தானே என்கின்ற அலட்சியம் அல்லது அக்கறையின்மையையும் காணக்கூடியதாக இருக்கின்றது. இப்படியான பார்வைகளையும், படிநிலைகளையும் தாண்டி முன்னேற வேண்டிய நிலையிலேயே இன்றைய சாதாரண பெண் இருக்கின்றாள்.

இன்று பெண் தன்னுடைய உரிமைகளை நிலைநாட்டவும் ஆற்றல்களை வெளிப்படுத்தவும் பல வழிகள் இருக்கின்றன. எமக்கு முந்தைய சந்ததியினரைப்போல பெண்கள் ஏக்கம் நிறைந்தவர்களாகவோ இன்னொருவரில் தங்கியிருக்க வேண்டியவர்களாகவோ இருக்கவேண்டிய நிர்ப்பந்தங்கள் அருகிவிட்டன. பாதைகள் பல முனைகளில் திறந்திருக்கின்றன.

இருந்தும், எத்தனை பேர் தமக்கு இழைக்கப்படும் அநீதிகளுக்கு எதிராக கிளர்ந்து எழுகிறார்கள் என்பது கேள்விக் குறியாகவே இருக்கின்றது. ஏதோ ஒரு விதத்தில் ஏற்படும் பயமும், தயக்கமும் அநீதிக்குட்பட்டவர்களின் உணர்வுகளை மரக்கச் செய்து விடுகின்றன. அல்லது மௌனிக்க வைத்து விடுகின்றன. என்றே சொல்ல வேண்டும். உண்மையில் எப்பொழுதும் அநீதி இழைப்பவர்கள் தான் அச்சமுறவேண்டும். ஆனால் இங்கே மாறாக அநீதிக்குட்படுபர்களே அச்சமுறுகின்றார்கள்.

காலங்காலமாய் பெண் இப்படித்தான் இருப்பதற்குப் பழக்கப்பட்டிருக்கின்றாள். அநீதிக்கெதிராக குரல்கொடுப்பது அல்லது நடவடிக்கை எடுப்பது என்பது பெண்ணுக்கு அவமானம், களங்கம் என்று அன்றைய காலம் போதித்தது. ஆகவே, அன்றைய பெண் எப்படி வாழ்ந்தாள், அந்தக் கருத்தும், ஆழமான வழி நடத்தலும் இன்றும் சில இடங்களில் ஊறி இருப்பதை நாம் காண்கின்றோம். இவை களையப்பட வேண்டிய கருத்துக்களாக இருக்கின்றன.

சிறிலங்காவின் தேச வழமைச்சட்டம் பெண்களுக்கு மனத்துணிவை ஏற்படுத்துவதாக இல்லை. சட்டம் தெரியாதவர்கள் என்பவர்களைவிட சட்டம் பற்றி முழுமையான தெளிவிருந்தும் முன்வராதவர்கள் தான் அதிகம்.

சமூக மட்டங்களில் இன்னமும் துன்புறுத்தப்படும், ஏமாற்றப்படும், அவதிக்கப்படும் பெண்கள் இருக்கத்தான் செய்கின்றார்கள். இவர்கள் எல்லோருமே இந்த அநீதிகளை எதிர்த்துப் போராட முன் வருகின்றார்களா என்றால் இல்லை என்றே சொல்ல முடியும்.

ஏன் இவர்கள் இப்படி ஒதுங்கிப் போய் விடுகின்றார்கள் என்று ஆராய்ந்து பார்த்தால் அவமானம் எதிர்காலம் பாதிக்கப்படும் என்ற பயம் என்ன செய்வது பெண் என்றால் இதெல்லாம் சகஜம் என நினைக்கும் மனோபாவம் என்பவையே காரணங்களாக அமைகின்றதை அறிய முடிகின்றது.

இதன் மூலம் அநீதி இழைப்பவர்கள் தப்பிக் கொள்ள பாதிக்கப்பட்டவர்கள் மன உளைச் சலுடனும், மாற முடியாத துன்பத்துடனும் வாழ நேரிடுகிறது. மேலும், அநீதி இழைப்பவர்கள் மீண்டும் மீண்டும் இதே அநீதியை இவர்களுக்கோ, அல்லது இன்னும் பலருக்கோ இழைக்கும் மனத்துணிவும் இதன்மூலம் ஏற்படுத்திக் கொடுக்கப்படுகின்றது. தவறு செய்வது மட்டுமல்ல, தவறு செய்யப்படுவதை வெறுமனே அனுமதித்திருப்பதும் மாபெரும் தவறாகிறது.

தவறிழைப்பவர்களை மன்னித்துவிடுகிறோம். அல்லது அலட்சியம் செய்துவிடுகின்றோம். இதனால் தவறிழைப்பவர்கள் மனச்சாட்சியின் உறுத்தலால் திருந்திக் கொள்வார்கள் என்பது எல்லாம் முழுமையான உண்மையல்ல. மன்னிப்பது பெருந்தன்மையை வெளிப்படுத்துவது என்று கருதப்பட்டாலும் கூட, இது எல்லா அநீதிகளையும் திருத்தி நல்லவர்களாக்கும் என்று கூறிவிட முடியாது.

ஆகவே, பெண்கள் தமக்கு இழைக்கப்படும் அநீதிகளுக்கு எதிராக கிளர்ந்தெழவேண்டியது போராட வேண்டியது காலத்தின் தேவையாகின்றது. இந்தக் கிளர்ச்சி அல்லது போராடும் மனப்பான்மை தான் பெண்களின் முன்னேற்றங்களுக்கு உந்துதலாக அமையும்.

## கைம் பெண்களுக்கும் மனசு உண்டு



நாம் வாழ்ந்து கொண்டிருப்பது கணினி யுகம் என்றாலும் பலர் இன்னும் பழைய காலத்தில் இருப்பது கவலைக்குரிய விடயமாகும். காலம் கடந்தாலும் காட்சிகள் மாறினாலும் சில விடயங்களுக்கு மனிதர்கள் மாறவில்லை. இதேபோல செய்யும் எல்லாக் காரியங்களுக்கும் நல்ல நேரம் பார்த்து செய்கின்றனர். நல்ல காரியங்களுக்குப் போகும் போது கைம்பெண்ணைச் சந்தித்தாலோ அல்லது கைம் பெண் நல்ல காரியங்களின்போது முன் நின்றாலும் ராசியில்லை என்று கருதுகின்றனர். ஆனாலும் அப் பெண்ணிற்குள் ஒரு மனசு உண்டு. என்பதை யாரும் உணர்வதில்லை. கணவன் பூவும், பொட்டும் இல்லாமல் விதவை என்ற பட்டத்தோடு மூலைக்குள் ஒடுக்கி விடுகிறார்கள். சிலர் சகுனங்கள் பார்க்கின்றனர். இவற்றை இல்லாது ஒழித்து ஒரு கைம்பெண் தனித்து வாழ்தல் சில வேளைகளில் சிரமமாக இருப்பதனால் தனக்கென துணையைத் தேடிக் கொள்ளல்வேண்டும். அவர்களுக்கும் உணர்வுகள் உண்டு. சமுதாயத்திலும் இவர்கள் வாழ்ந்து காட்ட வேண்டும்.

மகளிர்க்கென சர்வதேச ரீதியில் மகளிர் தினம் கொண்டாடப்படுகின்றது. தனித்து வாழும் பெண்ணாக இருந்தால் சுய தொழில் மூலம் வருமானம் ஈட்டிக் கொள்ளலாம். பெண் கள் தமக்கு இழைக்கப்படும் கொடுமைகளுக்கு எல்லாம் களத்தில் இறங்கி சுயமாக ஒரு தீர்வை எடுத்து சமுதாயத்தில் நீங்களும் உயர்ந்த பெண்ணாக மாறலாம்.

சா.ஜிந்துஜா கோண்டாவில்.

## அவளை விட்டு விடுங்கள்!

ஓ... சமுதாயமே!
இனியும் அவளை
வாழாவெட்டி என்று கூறி
வதைக்காதீர்கள்!
மங்களகரமான உங்கள் சடங்குகளிலும்
சம்பிரதாயங்களிலும்
முன்னின்று செய்யவிரும்பும்
அவள் ஆசைக்கும் உணர்வுக்கும்
முடிச்சுப் போடாதீர்கள்!
காலம் செய்த கோலத்தால்
தன் கணவனை இழந்து
காயம்பட்டு நிற்கும் அவள் கைகளில்
வெள்ளைப் புடவையையும்
'விதவை' எனும் வேதனைப் பட்டத்தையும்
வேண்டுமென்றே திணிக்காதீர்கள்!
அவளின் முயற்சிக்கும்
தன்னம்பிக்கைக்கும் தடையாயுள்ள
ஒரு போலி மரபு சார்ந்த
உங்கள் கட்டுப்பாடுகளையும்
அடிமைத் தன எண்ணங்களையும் அகற்றி
புதியதோர் வாழ்வு காணப் புறப்பட...
அவளை அனுமதியுங்கள்
எல்லோரையும் போலவே
அவளுக்கென்றொரு உள்ளமும்
அதில் அளவில்லா எண்ணங்களும்
எதிர்பார்ப்புகளும் நிறைந்து கிடக்கிறது
இதனால் தான்
[illegible] சொல்கிறேன்
அவளை விட்டு விடுங்கள்!



குப்பிளான் செ.ரவிசாந்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரம்யன்

அசை போட ஒரு விடயம் 57

# சிரிப்பதும் ஒரு யோகக்கலைதான்



உள்ளத்துக்கு உற்சாகத்தையும் உடலுக்கு விறுவிறுப்பையும் உடனடியாக தருவதும் உணரச் செய்வதுமான ஒருமருந்து இயற்கையாகவே சகல மனிதரிடமும் காணப்படுகிறது. அதனை பயன்படுத்திக் கொள்பவர்கள் குறைவு.

''வாய்விட்டுச் சிரித்தால் நோய் விட்டுப் போகும்'' என்பது பழமொழி.

உலகம் முழுவதும் சிரிப்பின் மகிமையை பறை சாற்றி அதனை மக்கள் முறையாக பயன்படுத்திக் கொள்ள வழிசமைப்பதில் சிலர் இறங்கி இருக்கிறார்கள். இவர்களில் மதான் கட்டாரி என்ற இந்திய வைத்தியர் முக்கியமானவர். சிரிப்பு யோகா நிறுவனத்தின் நிறுவுனரான கட்டாரி உலகம் முழுவதும் சென்று சிரிப்பு நிகழ்ச்சிகளை நடத்தி வருகிறார். உலகப் பிரமுகர்கள் பலர் இந்த நிறுவனத்தினால் ஈர்க்கப்பட்டுள்ளார்கள். தற்பொழுது தென்னிந்திய பெருநகர்களில் ஒன்றான பெங்களூரில் சிரிப்பு பல்கலைக்கழகம் ஒன்றை தோற்றுவிப்பதில் அவர் இறங்கியுள்ளார். தன் பெயரைக் குறிப்பிட விரும்பாத தொழில் அதிபர் ஒருவர் இதற்கென 250,000 டொலரை வழங்கியுள்ளாராம். இன்னும் மூன்று மாதங்களில் கட்டட வேலைகள் ஆரம்பமாகி விடும். 2013 ஆம் ஆண்டின் இறுதி அளவில் பல்கலை இயங்கத் தொடங்கிவிடும். சிரிப்பு யோகாவுக்கென உலகளாவிய சமுதாயக் கூடங்களை இங்கே அமைக்க அவர் முடிவு செய்திருக்கிறார்.

சிரிப்பு தொடர்பான கற்கை நெறிகளை நடத்துவது, விரிவுரைகள், செயன்முறை நிகழ்வுகளை நடத்துவது மட்டுமன்றி சிரிப்பின் மருத்துவ மற்றும் ஆரோக்கிய குணங்கள் தொடர்பான மருத்துவ ஆய்வுகளை நடத்துவது எல்லாம் இங்கு இடம்பெறுமாம்.

சிரிப்பு தொடர்பான ஆய்வுகளில் அது மூளையை சிறப்பாக ஆரோக்கிய வாழ்வினை நோக்கி நகர்த்துவதற்கு உதவி புரியும். என்டோர்பின்ஸ் என்ற மூளை இரசாயனத்தை சுரக்கச் செய்கின்றது என்று கண்டறியப்பட்டுள்ளது.

நாம் செய்யக்கூடிய மிகவும் சிறந்த வேலை-ஆரோக்கியமான வேலை சிரிப்பதுதான் என்கிறார் 58 வயதான கட்டாரி. இவரைப் பின்பற்றுபவர்கள் இந்தியாவிலும் வேறு நாடுகளிலும் நூற்றுக்கணக்கான சிரிப்புக் கழகங்களை ஆரம்பித்திருக்கிறார்கள்.

பாடசாலைகள், சிறைச்சாலைகள், மருத்துவமனைகள், முதியோர் இல்லங்கள் போன்றவற்றில் சிரிப்பு சொற்பொழிவுகளையும் செயன்முறை வகுப்புகளையும் நடத்திவரும் மதான் கட்டார், சிரிப்பு யோகாவானது ஒரு நாட்டின் சுகாதாரத் துறையின் செலவினங்களை எவ்வளவு தூரம் குறைக்கவல்லது என்பது குறித்து ஒருமுறை அமெரிக்க செனட் சபை குழுவொன்றின் முன் சாட்சியமளித்துள்ளார்.

மதான் கட்டாரி ஒரு பயிற்சி பெற்ற தகுதிச் சான்று பெற்ற மருத்துவராவார். ஒரு முறை மருத்துவ சஞ்சிகையொன்றில் மனித ஆரோக்கியத்துக்கு சிரிப்பின் பயன்பாடு குறித்த கட்டுரையொன்றை படிக்க நேர்ந்தது. 1995 ஆம் ஆண்டுவாக்கில் இதனை நடைமுறையில் பரீட்சித்துப் பார்க்க முடிவு செய்தார். அதன் பின் ஆங்காங்கே சிரிப்புச் சங்கங்களை தோற்றுவிக்கத் தொடங்கினார். முதன் முதலில் பம்பாயில் ஒரு சங்கத்தை அவர் நிறுவினார். அதில் நால்வர் இருந்தார்கள். நால்வரும் வட்டமாக நின்றுகொண்டு ''கோவேறு கழுதைகளைப் போல'' சிரித்தார்கள் என்று நினைவு கூருகிறார் கட்டாரி. உறுப்பினர் எண்ணிக்கை விரைவில் 50 ஆக அதிகரித்தது. நகைச்சுவை சம்பவங்களை நினைவு கூர்ந்து சிரிக்க வைக்க முயல்வதில் போதிய அளவு துடிப்பு இருப்பதாகத் தெரியவில்லை. மேலும் போலியான சிரிப்புக்கும் உண்மையான சிரிப்புக்கு மிடையில் உடலினால் வித்தியாசம் உணர முடியவில்லை. இரண்டுமே மகிழ்ச்சியையும் குணமாக்கும் இரசாயனங்களையும் சுரப்பதாக கண்டறிந்தார்.

எதுவான போதிலும் போலிச் சிரிப்பை ஆரம்பித்து சில நிமிடங்களில் உண்மைச் சிரிப்பாக அது மாறிவிடுகிறது. முயற்சித்துப் பாருங்கள் என்பது கட்டாரியின் யோசனை.

எந்தக் காரணமுமின்றி ஒரு நிமிடம் என்னுடன் சேர்ந்து சிரியுங்கள் என்று தம்மிடம் வந்தவர்களிடம் கேட்டுக் கொண்டார். ஒரு நிமிடம் பத்து நிமிடமென்று தொடர்ந்தது. இவ்வாறுதான் சிரிப்பு யோகா முறை ஆரம்பமாயிற்று.

சிரிப்பு என்பது சமூகத்துடனான ஒரு தொடர்பு-ஓர் இணைப்பு-பரிகாசத்தை விட இது முக்கியத்துவம் பெறுகிறது என்கிறார் அமெரிக்க மாயோ மருத்துவ நிலையத்தைச் சேர்ந்த அமித்சூத் எனும் மருத்துவர்.

நோய் பாதிப்பிலிருந்து அதிக பாதுகாப்பு, சகித்துக் கொள்ளும் திறமை, மன அழுத்தம் குறைதல், உணவு செமிபாடு வதை மேல் ஓங்கச் செய்தல் முதலிய நன்மைகள் சிரிப்பின் மூலம் கிடைக்கும் என்பது கண்டறியப்பட்டுள்ளது என்கிறார் அவர்.

இந்தியாவில் பல பொது மைதானங்களில் மனிதர்கள் ஒன்றாகக் கூடி நின்று சிரித்து மகிழ்வதை இந்த நாள்களில் காணலாம்.

புதுடில்லியில் இவ்வாறு சிரிப்பு நிகழ்வுகளில் கலந்து கொள்பவரான 39 வயது திருமதி லிஸாசிங் என்பவர் கூறுகிறார். அது மனதை இலகுவாக்குகின்றது. காலையில் நான் சிரித்தேன் என்றால் நாள் முழுவதும் நன்றாகவே இருக்கும் என்றும் சிரிப்பின் முழு நன்மையையும் பெற வேண்டுமானால் ஒருவர் ஒவ்வொரு நாளும் 15 இல் இருந்து 20 நிமிட நேரம் வரை சிரிக்க வேண்டும் என்கிறார் கட்டாரி.

அடி வயிற்றிலுள்ள தசைகள், சிரிக்கும் போது இயங்குவதன் மூலம் என்டோர்பின் என்ற திரவம் சுரப்பதற்கு உதவுகிறது. இதுவே ஓட்டம் போன்ற உடற்பயிற்சியின் போதும் ஏற்படுகின்றது என்கிறார்கள் ஆய்வாளர்கள்.

ஒரு சில நிமிடங்கள் ஒரு நகைச்சுவைப் படக்காட்சியைப் பார்த்துச் சிரிப்பது போதுமானதல்ல - சிரிப்பு சற்று நேரம் தொடரவேண்டும். அதன் முழுப்பயனையும் பெறுவதற்கு என்கிறார் சிரிப்பு யோகாவின் குரு என்றழைக்கப்படுகின்ற மதான் கட்டாரி.

பஞ்சாப்பிலுள்ள ஒரு விவசாயக் குடும்பத்தில் 14 பிள்ளைகளில் இளையவர் இந்த கட்டாரி. 6 பிள்ளைகள் மருத்துவத்துக்கு வெகு தூரம் செல்ல வேண்டி இருந்ததால் சிறு வயதிலே இறந்து விட்டார்கள். கட்டாரியை எப்படியும் ஒரு டாக்டர் ஆக்கி விட வேண்டும் என்பது தாயாரின் ஆசையாக இருந்தது. தனது தங்க வளையல்களை அடகு வைத்து கட்டாரியை படிக்க வைத்தார். அவரும் மருத்துவம் படித்து பட்டம் பெற்றார். ஆனால் அவருக்கு நடிப்பு போன்ற கலைத்துறையிலே நாட்டம் இருந்தது. அதனால் குடும்பம் ஏமாற்றம் அடைந்தது. ஆனால் இப்போது அவரது புகழ் ஓங்கி சிரிப்பு யோகாவுக்கு பெரும் மவுசு ஏற்பட்டிருப்பது அவர்களுக்கு மகிழ்ச்சியையும் பெருமையையும் சேர்த்துள்ளது.

மற்றவர்களை சிரிக்க வைப்பதில் கட்டாரி வல்லவர். அண்மையில் புதுடில்லியில் ஒரு வைபவத்தின் போது அவர் தமது கைகள் இரண்டையும் விரித்து ''ஹஹ்ஹா..... ஹொஹ்ஹோ'' என்று தம்பாட்டுக்கு சிரித்தா. சற்று நேரத்தில் அந்த அறையில் இருந்த அனைவரும் வாய்விட்டு சிரிக்க ஆரம்பித்தார்கள். அவர் சொல்கிறார் கொட்டாவியைப் போல சிரிப்பும் பரவக் கூடியது தான் என்று. மூச்சுப் பயிற்சி, மற்றும் கைகால்களை விரித்துபயிற்சி செய்வதை இதனோடு இணைத்துக்கொள்ள வேண்டும் என்கிறார்.

வாழ்க்கையை எதிர்கொள்வதற்கு நாம் சிரிக்க வேண்டும் -இல்லை என்றால் அது மிகக் கடினமாகி விடும் என்று எச்சரிக்கும் கட்டாரி, சிரிக்கும் போது நீங்கள் மகிழ்ச்சியாக இருக்கிறீர்கள், அந்தக் கணத்தில் நீங்கள் வாழ்க்கையை அனுபவிக்கிறீர்கள்.

## திரை விமர்சனம்

# நீர்ப்பறவை

(10 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இந்தியாவின் சில இடங்களில் கடந்த சில வருடங்களுக்கு முன்பு தங்களது கணவர்களின் உடலை வீட்டிலேயே வைத்திருந்து மீண்டும் அவர் இந்த வீட்டிலேயே நிச்சயம் உயிர்த்தெழுவார் என்று பிரார்த்தனை செய்த கிறிஸ்தவப் பெண்கள் பற்றிய தகவல்கள் வெளிவந்திருந்தன. எனினும் அப்படியே அதை வெளிப்படையாக சொல்லியிருந்தால் அது கிறிஸ்தவ மதத்தின் மீதான விமர்சனமாகிவிடும் என்பதால் இயக்குநர் நயமாக இதனைத் தவிர்த்திருக்கிறார்.

வழக்கம்போல சரண்யா நடிப்பைக் கொட்டியிருக்கிறார். மகனுக்கு ''கொஞ்சமா குடிடா'' என்று சொல்லி பணத்தைக் கொடுப்பதில் தொடங்கி.. அவனை வைத்தியசாலையில் கொண்டு வந்து சேர்ப்பத்துவிட்டு அங்கிருக்கும் ஊழியர்களிடம் தனியாக பணத்தைக் கொடுத்து சாராயம் வாங்கித் தரச் சொல்லும் வரையிலும் வழக்கமான அம்மாக்களின் பிரதிநிதியாக தன்னை மீண்டும் ஒரு முறை பிரகடனப்படுத்திக் கொண்டிருக்கிறார் சரண்யா பொன்வண்ணன். இவருக்கு போட்டியாக நடிப்பில் வெளுத்துக் கட்டியிருக்கிறார் வடிவுக்கரசி..ஊரையே அழைத்து சாராயத்தைப் புகட்டிக் கெடுத்துக் கொண்டிருப்பவர், தனது சொந்த மகனை அந்த இடத்தில் பார்த்தவுடன் பதற்றத்துடன் ''இங்கேயெல்லாம் வரக் கூடாதுப்பா..'' என்று சொல்லி விரட்டுவது ஒரு அழகான முரண்பாடு...

சமுத்திரக்கனியின் கதாபாத்திரம் படத்தின் மையமான கருத்தைச் சுமந்து கொண்டிருக்கிறது..! புதிய படகின் வெள்ளோட்டத்தின் பூஜையை மும்மத கலப்போடு சமுத்திரக் கனியே செய்வது போன்று காட்சியமைத்து நாம் எந்த மார்க்கத்தில் சென்றாலும், அந்த மார்க்கத்தின் துணை உண்டு என்பதைச் சொல்லாமல் சொல்லியிருக்கும் இயக்குநரைப் பாராட்டாமல் இருக்கமுடியவில்லை.

அல்லக்கை அடிடாக் பாண்டி, தம்பி இராமையா இருவரும் படத்தை தொய்வு விழாமல் கொண்டு செல்ல சில இடங்களில் உதவியிருக்கிறார்கள். படத்தில் இயக்குநருக்கு அடுத்து குறிப்பிட்டுச் சொல்ல வேண்டியது பாலசுப்பிரமணியத்தின் ஒளிப்பதிவைத்தான்..

முதல் காட்சியில் இருந்து இறுதிவரையிலும் அந்தக் கடற்பிரதேசம் முழுவதையும் தனது 'கமெராவுக்குள்' தப்ப [illegible] கடலுக்குள் [illegible] சொல்லும் காட்சியில் கமெராவின் கோணமும், அழகும் அற்புதம்...! பாடல் காட்சிகளையும் இயற்கை ஒளியிலேயே மிகக் குறைவான செயற்கை ஏற்பாடுகளுடன் எடுத்திருக்கிறார் ஒளிப்பதிவாளர்.. படத்தின் பிற்பாதியில் மிகப் பெரிய பலமே ஒளிப்பதிவுதான்.

கிறிஸ்தவ வார்த்தைகளை கோர்த்து வைரமுத்து போட்டிருக்கும் வரிகளை சத்தங்களுக்குள் அனுமதிக்காமல் கொஞ்சமாக இசையில் இழையவிட்டிருக்கிறார் ரகுநந்தன். பின்னணி இசையில் ஒரு சில இடங்களில் அடடே என்று சொல்லவும் வைத்திருக்கிறார்.

மீனவனாக இல்லாதவனை கடலுக்குள் அனுமதிக்க மாட்டோம் என்ற மீனவக் கலாசாரத்தை இந்தப் படம் அழுத்தமாக பதிவு செய்திருக்கிறது. குப்பம், குப்பமாக ஒரு ஊர் போன்று கூட்டத்தை வைத்திருந்து அதன் மூலமே மீனவ சமுதாயம் வளர்ந்துவரும் நிலையில் அவர்களின் இந்த வாழ்க்கை முறை நிச்சயமாக பலருக்கும் அதிர்ச்சிதான்..! கடலுக்குள் செல்பவனின் உயிருக்குஉத்தரவாதமில்லை என்று சொல்லப்பட்டிருக்கும் சூழலில், விஷ்ணுவை கடலுக்குள் இறங்க எதிர்ப்புத் தெரிவிக்கும் மீனவர்களையும் காட்டியிருப்பது படத்தின் நடுநிலையை உயர்த்தியிருக்கிறது.

இலங்கைக் கடற்படையால் நிதமும் மரணவாழ்வுக்குள் தத்தளிக்கும் மீனவர்களின் வாழ்வியலை ''அரசியல் நீக்கம்'' செய்யப்பட்ட படைப்பாக திரையில் ஒளிரவிட்டுள்ளது ''நீர்ப்பறவை''.

★★★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோபுர தரிசனத்தின் கோலம்

**பெருமாள் கோயிலில் பெரிய சகடையொன்றிருந்தது. வாகனத்துடன் சுவாமியை இந்தச் சகடையில் வைத்து இழுத்து வீதிவலம் வருவதுண்டு. வருடாந்த உற்சவத்தின்போது ஏழாந்திருவிழாவான கண்ணன் வெண்ணெய் உண்ணும் பாவனையில் அலங்காரம் செய்யப்பட்டு முத்துச்சப்பரத்தில் வீதி உலா வருவதும் இந்தச் சகடையில் தான். இராவணனும் முன்பு இதில் நின்று ஸ்ரீ இராமனுடன் போர் புரிந்திருக்க வேண்டும்..............**

■ எஸ்.எம்.கோபாலரத்தினம்

கோபுர தரிசனம் கோடி புண்ணியம்'' என்று சொல்வார்கள். கோபுர தரிசனம் என்ற தலைப்பில் உரைச்சித்திரம் ஒன்று இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தமிழ் சேவையில் ஒலிபரப்பத் தொடங்கிய காலம் வண்ணை ஸ்ரீ வேங்கடேச வரதராஜப்பெருமாள் கோயில் பற்றி எழுதுமாறு அப்போது தமிழ்ச் சேவைப் பணிப்பாளராக இருந்த வி.ஏ.திருஞானசுந்தரம் கேட்டிருந்தார்.

திருஞானம் அவரது மூத்த தமையன் சிவஞான சுந்தரம் யாழ்ப்பாணம் வரும்போது எங்கள் வீட்டில் தங்கிச் சென்றதுண்டு. வீரகேசரியில் நான் ஆசிரியப் பகுதியில் வேலை பார்த்தபோது எனக்குப் பின் டேவிட்ராஜுவும் பாஸ்பொன்னையாவும் வந்து சேர்ந்தனர். இதன் பின் பெருமாளும் திருஞானசுந்தரமும் வந்தனர். கரவெட்டிதான் திருஞானசுந்தரத்தின் சொந்த ஊர்! மூத்த அண்ணரின் வழிகாட்டலில் கொழும்பில் அவர் வீட்டிலேயே வாழ்ந்து வருபவர். காப்புறுதிக் கூட்டுத்தாபனத்திலும் பணியாற்றிய திருஞானம், கூட்டுத்தாபனத்தின் யாழ்ப்பாணக் கிளை அலுவலகத்தில் பணியாற்றிய ஒரு பெண்ணை மணந்து கொள்வதற்கு ஏற்பாடுகளையும் செய்த பின் அங்கு வேலை செய்த நண்பர்களுடன் ஒரு நாள் மாலை திடீரென வீட்டுக்கு வந்தார். நாளை திருமணம் என்றார். இரு நண்பர்களும் அங்கு வேலை செய்பவர்கள். மூதறிஞர் சொக்கனின் இல்லத்தைக் கடந்து மணப்பெண் வீடு இருந்தது. திருமணப் பதிவு இங்கு நடந்தது. நானும் ஒரு சாட்சி. சமய சம்பிரதாயக் கல்யாணம் நாயன்மார்கட்டு வெய்யில் உகந்த பிள்ளையார் கோயிலில் நடந்தது. மனைவி இரு பெண் பிள்ளைகளுடன் நான் கலந்து கொண்டேன். கல்யாணத்தில் தாய், தகப்பன் நிலையில் நாங்கள் தாரைவார்த்துக் கொடுத்தோம். இதேபோல் சி.பெருமாளின் திருமணத்தையும் விடிகாலையில் நடத்தி வைத்தோம். நந்தாவில் அம்மன் கோயிலில் இன்னுமொரு கலப்புத் திருமணத்தை நடத்தி மாப்பிள்ளையின் நண்பர்கள் என் வீட்டில் இரவு விருந்தில் உணவருந்துகையில் அவரின் உறவினர் படையாக வரவும் நண்பர்கள் ஓடி மறைந்து விட்டனர்! கலப்புத் திருமணம் செய்த குடும்பம் இப்போது பெரிய குடும்பமாக மதுரையில் வாழ்கின்றது. பெருமாளின் மகன் திருமணம் சென்ற வருடம் கொக்குவிலில் சிறப்பாக நடந்து சிறப்பாக வாழ்கிறார்கள். திருஞானம் பிரிந்து வாழ்கிறார். காரணம் தெரியாது.

திருஞானம் வீரகேசரியில் சேர்ந்த சில மாதங்களின் பின் ஒரு நாள் காலை அவரின் மூத்த அண்ணர் சிவஞானசுந்தரம் அலுவலகம் வந்து திருஞானத்தைக் கடும் வயிற்று வலி காரணமாக கலைமான் ஆஸ்பத்திரியில் அனுமதித்திருப்பதாகச் சொன்னார். உடனே அங்கு சென்று பார்த்தேன். மயக்கமருந்தில் உறங்கிக் கொண்டிருந்தார். மாலையில் வேலை முடிந்த பின்னரும் திருவைப் பார்க்கப் போயிருந்தேன். படுக்கையில் தானிருந்தார்.

அண்ணர் சிவஞானம் மிகக் கவலைப்பட்டுப் பேசிக்கொண்டிருந்தார். தனது வீட்டில் பிள்ளைகளுக்கும் சுகம் இல்லையென்றும் திருஞானத்துடன் இரவு யாராவது தங்கியிருக்க வேண்டுமென்றும் உதவிக்கு யாரும் இல்லையென்றும் கவலைப்பட்டார். திருஞானத்துடன் நான் இரவு தங்கினேன். அது ஒரு தனி அறை. அவர் படுத்திருந்த கட்டிலில்தான் ஒரு வருடத்துக்கு முன் எனது மாமா (மனைவியின் தகப்பன் அப்பொழுது நான் மணம் செய்திருக்கவில்லை) படுத்திருந்து உயிர்பிரிந்தார். திருஞானம் மயக்கமருந்தில் உறக்கம். நான் தனியாகத் துணைக்கு விழித்திருந்தேன்! இந்தக் கட்டிலில் தான் டிரோயின் (எனது மச்சான் ஆனவர்) அப்பா திலகர் சுகவீனமுற்று மரணமானபோது படுத்திருந்தார் என்று நான் திருஞானத்துக்கு விடிந்த பின்னரும்கூட சொல்லவில்லை.

பல நினைவூட்டல்களின் பின் 'கோபுர தரிசனம்' நிகழ்ச்சிக்கு உரைச்சித்திரம் எழுதி அனுப்பினேன். யாழ்ப்பாணத்துக்கும் புதிதாக வந்த ஒருவர் வண்.வேங்கடேச வரதராஜப்பெருமாள் கோயிலுக்குத் தரிசிக்க வந்தார். தேரடியில் நின்று பெருமானைச் சேவித்துக்கொண்டு நிற்கும் ஆஞ்சநேயர் சந்நிதியிலிருந்து அவரைக் கோயிலுக்குள் அழைத்துச் சென்று ஒவ்வொரு சந்நிதியாக விளக்கம் சொல்லித் தரிசிப்பதாக எழுதியிருந்தேன். இவ்வாறு அவருக்கு கோயில் வரலாற்றையும் எடுத்துச் சொல்வதாக அந்தச் சித்திரம் அமைந்திருந்தது. இந்த நிகழ்ச்சி ஒரு மணிநேர ஒலிபரப்பாகும். கோயிலின் இராஜகோபுர கும்பாபிஷேகத்தன்று இந்த நிகழ்ச்சி ஒலிபரப்பானது. இதன் பின்பு கோயிலுக்கு வந்த இந்த நிகழ்ச்சித் தயாரிப்பாளர் சர்மா அவர்கள், நான் எழுதிய பிரதி சிறப்பாக இருந்ததாகவும் அதில் தாம் எதுவும் செய்யவேண்டிய அவசியம் ஏற்படவில்லையென்றும் பாராட்டுத் தெரிவித்தார். இதன் ஒலிப்பதிவுப் பிரதியொன்று தருவதாக திருஞானம் சொல்லியிருந்தார். ஆனால் அதைத் தருவதற்கு மறந்துவிட்டார், தரவில்லை! பலதடவைகள் மறு ஒலிபரப்புச் செய்யப்பட்டபோதிலும் அறங்காவலர்களோ, ஆதீன மகாசபையைச் சேர்ந்தவர்களோ அந்த நிகழ்ச்சியைக் கேட்டதாகச் சொல்லவுமில்லை, காட்டிக்கொள்ளவுமில்லை. ஆயுள்வேத வைத்தியர் பரமேஸ்வரி என்பவர் நிகழ்ச்சியை நான் கேட்டுக் கொண்டிருந்த சமயம் கேட்டு முடிந்ததும் கடைசியிலே எழுதியவர் என்று என் பெயரை அறிவித்த போது ''இதை நீங்களா எழுதினீங்கள்?'' என்று ஆச்சரியத்துடன் கேட்டார்.

நீராழி வண்ணையடி நினைப்போர் வாழி
நிறைமொழியோர் பசுநிரைகள் நிதமும் வாழி
பேராழி மண்ணுலகில் பெருகி வாழி
பிறங்கு வண்ணை நகர் வழி, புலவர் வாழி
சீராழி சங்குகதை சிலை வாழ வாழி
சீரிய கற்புடை மை அறம் சிறந்து வாழி
வாராழி சூழ் இலங்கை வாழ் பால்
வண்ணை வாழ் வேங்கடேஸ்வரன்
தாழ் வாழி! வாழியவே!!

என்ற பண்டிதர் நெ.வை.செல்லையா என்ற பெருமகனார் பாடியிருந்த வாழியுடன் நான் உரைச்சித்திரத்தைத் தொடங்கியிருந்தேன்.

இராஜகோபுர கும்பாபிஷேகம் நடந்த இரவு தேரடியில் ஆஞ்சநேயர் சந்நிதிக்கு நேரே மேடையமைத்து இசை நிகழ்ச்சியொன்றை ஏற்பாடு செய்திருந்தேன். இராஜ



## 32 அந்த நாள் ஞாபகம்..

கோபுரம் அமைப்பதற்குப் பொறுப்பாக இருந்து நிறைவேற்றிய அறங்காவலர் க.பழனிச்சாமிச் செட்டியார் அந்த வருடம் அறங்காவலராக இருந்த ஓய்வுபெற்ற 'போஸ்ட் மாஸ்டர்' கோ.கிருஷ்ணசாமி மற்றும் அறங்காவலர்களின் அனுசரணையுடன் இந்த இசைநிகழ்ச்சியை ஏற்பாடு செய்திருந்தேன். நண்பர் ஈழத்து சீர்காழி வ.ஆர்.ஸ்ரீகிருஷ்ணமூர்த்தியின் மெல்லிசைப் பாடலுடன் ஆரம்பமான இந்த நிகழ்ச்சியில் கர்நாடக சங்கீத வித்துவான் நண்பர் இராம் குமாரசாமியின் பாட்டும், வில்லிசை வேந்தன் கலாவிநோதன் கே.என்.கணபதிப் பிள்ளை (சின்னமணி) குழுவினரின் வில்லிசை விருந்தும் இடம்பெற்றன. கோயில் மண்டபத்திலிருந்தும் முன் வீதியிலிருந்தும் தெற்கு வீதியில் கன்னாதிட்டி வீதியிலிருந்தும் மக்கள் நிகழ்ச்சியைப் பார்க்கவும், கேட்கவும் மேடையமைப்பு வசதியாக இருந்தது. நல்ல கூட்டம்!

'கோபுர தரிசனம்' உரைச்சித்திரம் ஒலிபரப்பாகி பல நாள்களின் பின் ஒரு நாள் காலை கோயிலுக்குத் தரிசனத்துக்காகப் போயிருந்தேன். தரிசனம் முடிந்த பின் களஞ்சியத்திலிருந்து கணக்குகளைச் சரி பார்த்துக் கொண்டிருந்த முன்னாள் அறங்காவலரும், ஓய்வுபெற்ற 'போஸ்ட் மாஸ்டரும்', என்மீது அன்பு கொண்டவருமான கோ.கிருஷ்ணசாமிச் செட்டியார் என்னைப் பார்த்ததும் அழைத்தார். ''உன்னைக் காணவே முடியவில்லை'' என்று ஆரம்பித்த பேச்சிலிருந்து பல விடயங்களும் நீடித்தது. ''உன்னுடைய 'ரேடியோ' நிகழ்ச்சி ஒலிப்பதிவு செய்த ஒரு 'கஸட்'டை யாரோ ஒருவர் அனுப்பியிருக்கிறார். போட்டுப் பார்ப்போமா?'' என்று கேட்டார். எனக்கு [illegible] 'கஸட்'டை வைத்து அனுப்பப்பட்டிருந்த உறையின் மேல் 'பெருமாள் கோயில்'' என்று எழுதப்பட்டிருந்தது. அருகே ''சொக்கன்'' என்றும் எழுதியிருந்தது. இதைப் பார்த்ததும் நான் எழுதியதை சொக்கன் என்று போட்டிருப்பது அவரை அவமானப்படுத்துவது போலாகும் என்று சொன்னேன். அனுப்பியவர் இப்படி எழுதியிருக்கமாட்டார். 'கஸட்' ஒலிபரப்பாவதை இருவரும் கவனமாகக் கேட்டபடி நின்றோம். அழகான நாதஸ்வர இசை வெளிவந்தது. பத்மநாதனின் இசையாக இருக்க வேண்டும். நன்றாகத் தானிருந்தது. என்னை நிமிர்ந்து பார்த்து (அவர் என்னைவிட நல்ல உயரம்) இப்படித்தான் இந்த 'உலகம்' என்று பேச்சை முடித்துக்கொண்டார். நானும் வெளியேறினேன். அவர்களின் மனோநிலையும் தெரிந்தது!

பெருமாள் கோயிலில் பெரிய சகடையொன் றிருந்தது. வாகனத்துடன் சுவாமியை இந்தச் சகடையில் வைத்து இழுத்து வீதிவலம் வருவதுண்டு. வருடாந்த உற்சவத்தின்போது ஏழாந்திருவிழாவான கண்ணன் வெண்ணெய் உண்ணும் பாவனையில் அலங்காரம் செய்யப்பட்டு முத்துச்சப்பரத்தில் வீதி உலா வருவதும் இந்தச் சகடையில் தான். இராவணனும் முன்பு இதில் நின்று ஸ்ரீ இராமனுடன் போர் புரிந்திருக்க வேண்டும். அதற்கு வசதியாகச் சகடையின் மேல் பகுதியைத் தாங்கி நிற்கும் வைரமான குறுக்குச் சட்டத்தின் கீழ்ப் பாகத்தின் இரண்டு பக்கத்திலும் கயிறோ வேறு எதுவோ போடக்கூடிய மாதிரி இடை வெளி விடப்பட்டிருந்த போதிலும், அந்த இடை வெளியை நிரப்பக்கூடிய இரண்டு கட்டைகள் 'ஸ்குறூ' ஆணிகளினால் பொருத்தப்பட்டிருந்தன. இதன் கீழ்ப் பாகத்திலும், இரு பக்கங்களிலும் பனம் சிலாகைகள் அழகாகச் செதுக்கிப் பொருத்தப்பட்டிருந்தன. வெளி மண்டபத்தின் தென் பகுதியில் இந்தச் சகடை நிறுத்தப்பட்டிருக்கும். இதில் சிறுவர்கள், வாலிபர்கள் ஏறி இறங்குவதும், ஒளித்து விளையாடுவதும் வழக்கம். ஒரு நாள் நான் பொருத்தப்பட்டிருந்த அந்தப் பனம் சிலாகைகள் மீது நிமிர்ந்து படுத்திருந்தேன். அண்ணன் மற்றுமிருவருடன் விளையாடிக்கொண்டிருந்தார். சகடையின் மேல் பக்கத்தில் ஏறி உட்காருவதற்கு அண்ணன் உன்னியபோது அந்தக் கட்டை கழன்று என் நெற்றியின் மேல் விழுந்தது. கட்டையில் நீட்டிக்கொண்டிருந்த 'ஸ்குறூ' ஆணி என் நெற்றியில் குத்தி இரத்தம் பெருகியது. அந்த ஆணி குத்திய இடம் இன்றும் என் நெற்றியின் நடுவில் அழியாத அடையாளமாக சகடையையும் பெருமாள் கோயில் மண்டபத்தையும் நினைவூட்டிக்கொண்டிருக்கிறது. அந்தச் சகடை இன்று இல்லை. அப்பொழுது எனக்கு ஐந்து, ஆறு வயதாக இருக்க வேண்டும்.

நண்பன் ஸ்ரீரங்கநாதனின் வீட்டுக்கு எதிரிலிருந்த அப்பாவுச் செட்டியார் வளவில் ஒரு வீட்டில் வாடகைக்கு இருந்தோம். ஸ்ரீரங்கனின் மூத்த அண்ணர் சிவானந்தன் தனது அறையில் முதலுதவிப் பெட்டியில் அத்தியாவசிய மருந்துகள் வைத்திருப்பார். இரத்தம் பெருகியதுமே அண்ணன் கோயில் கிணற்றுத் தண்ணீரில் கழுவிய போதும் இரத்தம் நிற்கவில்லை. சிவா அண்ணர் மருந்து போட்டு, 'பிளாஸ்டரும்' ஒட்டிவிட்டார். இரத்தம் வடிந்து கொண்டிருந்தது. வழமைபோல் அண்ணனுக்குத்தான் தண்டனை.


தென்னிந்தியாவிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு அழைத்து வரப்பட்டவர்களில் தெலுங்கைத் தாய்மொழியாகவும் வீட்டுமொழியாகவும் பேசியவர்கள் மட்டுமல்ல கும்பகோணம், திருநாகேஸ்வரம், தஞ்சாவூர், மதுரை போன்ற ஊர்களிலிருந்து தமிழைத் தாய்மொழியாகக் கொண்டவர்களும் இருந்தனர். இவர்களில் வைஷ்ணவர்கள் மட்டுமல்ல சிவனை வணங்கும் சிவனடியார்களும் இருந்தனர். இவர்களில் புலமையுடையவர்களும் வந்தனர். இந்தப் பரம்பரையில் யாழ்ப்பாணத்தில் 1878 ஆம் ஆண்டில் பிறந்தவர்தான் பண்டிதர் நெ.வை.செல்லையா.

(நினைவுகள் நீளும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புற உலகின் இயல்புகள்

## ந.சத்தியபாலன் கவிதைகள்



ந.மயூரரூபன்

ந.சத்தியபாலன், இவரது கவிதைத் தொகுதி "இப்படியாயிற்று நூற்றியோராவது தடவையும்". சமகால வாழ்வும் அதன் சிதைவும் இவரது கவிதைகள். அடிக்கடி குறிப்பிடுவது போல "கவிதை ஒரு மன நிகழ்வு" என்பது இங்கும் நிகழ்ந்து விடுகிறது. ஏனெனில் அதுதான் கவிதையின் இயல்பு.

ஒவ்வொருவரின் மனநிகழ்வுகளும் தனித்துவமானவை. அவை மொழிதலின் வழி கவிதையாகின்றன. சொற்களும் மனமும் கவிதையால் கட்டமைந்து கொள்கின்றன.

பொது வாழ்வின் இருப்பென்பது பலருக்குப் பொதுவான அனுபவங்களைக் கொடுத்தபோதும் ஒவ்வொருவரின் மனமும் ஒவ்வொரு பிரதிபலிப்புகளைக் கொடுக்கின்றன. அனுபவப் பதிவிகள் எம்மைச் சுற்றி அலைவுறுகின்றன.

மொழி புரிகிறது, ஆனால் இலக்கியத்தை அதன் தளத்தில் புரிந்து கொள்ள நாம் முயல்வதேயில்லை.

உண்மையில் எமது வாசிப்புக் கொண்டிருக்கும் முன்முடிவுகளும் அர்த்தம் கண்டுபிடிக்கும் முயற்சிகளும் எம்மைக் கவிதைகளுடன் தோற்றுப் போகச் செய்கின்றன. கவிதைகளில், அவை தரும் அனுபவங்களை அல்லது மனங்கொள்ளும் அருட்டல்களை அல்லது அவை கொண்டிருக்கும் காலப் புள்ளிகளைக் நெருக்கமாய் உணரும் இடத்தினை நாம் அடைய வேண்டும்.

*"யன்னல் வழி வீசிய காற்றும்*
*காட்சித் தரிசனங்களும்*
*திட்டமிட்டுப் பெற்றவையல்ல"*
(இரண்டு பேர்)

இது போல் சத்தியபாலனின் கவிதைகளும், வாழ்க்கையில் சோகத்தையும் நேயத்தையும் அதன் இயல்பிலேயே சுமந்துவருகின்றன.

சமூகவியல் கருத்துருவங்களின் ஆதிக்கம் இவரது கவிதைகளில் அதிகம் விரவிக் காணப்படுகின்றன. சமூகம் பற்றிய நுண்ணியதும் கூரியதுமான பார்வை தரும் சொற்களின் கவிதைகள் பல.

*"நரை காட்டிய நிலைக்கண்ணாடி*
*முன்*
*உடைந்து துகள்களாயிற்று*
*எனது பிம்பம்*
*கண்களோடு கரைந்தது*
*கனவின் கடைசிச்சாயலும்..."*
(ஒரு பின்மாலைப் பொழுதில்)

ஒரு படைப்பு, புற உலகின் அரசியல், சமூகவியல், வரலாற்றுண்மைகளை ஒதுக்கிச் செல்ல முடியாது. அது சாத்தியமுமில்லை. ஜோர்ஜ் லூக்காசின் சிந்தனையுடன் இவரது கவிதைகளை அணுகிப் பார்ப்பது பொருத்தமுடையது.

'புற உலகச் சிந்தனைகளின் வடிவமே படைப்புகளை நிர்ணயிக்கிறது'

இது வர்க்க அடிப்படையிலான கூற்றாக அமைந்தபோதும் அதன் அடிப்படை தரும் புற உலகின் சத்தியங்கள் சத்தியபாலனின் கவிதைகளை நிர்ணயித்து விடுகின்றன.

*"இறுகு*
*ஈரம் துடைத்தெழு*
*சலனந் துறந்து கல்லாகு*
*..............................."*
(பிழைக்கத் தெரிந்தவன் நீ)

"சத்தியபாலனின் கவிதைகள் தனிமனித (சமூக), உறவுகள், இனத்துவ நெருக்கீடுகள் சார்ந்த அரசியலுடன் அதிகம் தொடர்புபட்டுள்ளன. அவை மனிதர்களைக் கொத்தி வீசி சுண்ணாம்புக் காளவாயிலிட்டுச் சுடுகின்றன." என இவரது தொகுதியின் பின்னுரையில் பா.அகிலன் குறிப்பிடுவதையும் இங்கு இணைத்துப் பார்க்க முடியும்.

*"கேட்டதுண்டா நீங்கள்*
*மெலிதாய்க் கசிந்து கொண்டிருக்*
*கும்*
*வெற்றிடங்களின் துயரிசையை..."*
(முடிவிலியான ஒரு துயரிசை குறித்து)

சத்தியபாலனின் மனது இப்படிப்பட்டது. சக மனிதனின் - மனிதர்களின் வலியைச் சோகத்துடன் வெறித்துப் பார்க்கும் கவிதைகள் இவருடையவை. சோகந்தரும் ஏதுஞ் செய்ய முடியா உறைநிலை எங்கும் படிந்துகொண்டிருக்கின்றன.

புற உலகச் சூழலின் இயல்பு இவரின் வார்த்தைகளின் வழி அச்சூழலின் நெடியை, பயங்கரத்தை, அவலத்தை கூர்மையாக வாசிப்பு மனங்களில் தைத்துச் செல்கின்றன.

*"குயிலின் குரலில்*
*புகைக்கின்ற தாகத்தின் நெடி"*
*"கோரப்பற்கள் துருத்திய*
*வாயொடு*
*குதித்தாடத் தொடங்கியது இருள்"*
(கைத்து)

*"சூடேறி உருகிய மூளை*
*மஞ்சள் திரவமாய்*
*மண்டபத்தில்*
*பரவலாயிற்று"*
(நினைவு)

சமகாலக் கவிஞர்களில் மிகக் கவனங்கொள்ளத்தக்க கவிஞர்களில் ந.சத்தியபாலனும் ஒருவர். இவரது கவிதைகளுக்கான சொற்கள் அதன் உணர்வுத்தளத்தைச் சரியான திசையில் புரட்டிப் போடுகின்றன. தனக்கான உள்மொழி (பேசாமொழி) இவரது கவிதை வெளிகளில் அதிக வீச்சுடைய தாக்கத்தைக் கொண்டுள்ளன.

புற உலகின் இயல்பை இவரது கவிதைகளை உற்பவிக்கச் செய்கின்றன எனச் சொல்லமுடிகிறது. * * *



## கடுகதியில் வந்துவிடு 'கல்லே!'

மனச்சாட்சியையும் மனிதநேயத்தையும்
தொலைத்துவிட்டப் பாழ்பட்ட உலகம்
அழிந்தால்தான் என்ன?
ஏன் மனிதா! ஏன் திணறுகிறாய்
அழிவை எண்ணி?
பாவபூமிதானே நீ வாழும் கிரகம்
பாழாய்ப் போகட்டுமே
இன்னுமேன் இதன் நிலைத்திருப்பை விரும்புகிறாய்?
மேலும் மேலும் பாவங்கள் செய்து
இப்பூமிப் பந்தின் பாவச்சுமையை பெருக்குவதற்கா?
மனிதா பாவச்சகதிக்குள் சிக்கித் தவிக்கும் நீ
ஏன் இயற்கையின் நியாயத் தீர்ப்புக்குப்
பயப்படுகிறாய்?
அழிந்து போ
அப்போதுதான் உன் பாவங்கள் நீங்கி
[illegible]
[illegible]
ஒரு புதுவுலகம் தோன்றட்டும்
வேண்டாம் வேண்டாம்
இவ்வளவும் போதும்- ஏனென்றால்
அங்கும் நீ மறுபிறப்பெடுத்து
ஆதாம் ஏவாளாய்
பாவத்துக்கு விதை போடுவாய்
கடல் சூழ் பேரலையே
ஏன் நீ இப்புவியை மிஞ்சவிட்டாய்?
கல்லே நீ கணமும் தாமதியாது
கடுகதியில் வந்து விடு
பொல்லாத இவ்வுலகை
பொடிப்பொடியாகத் தகர்த்துவிடு
பாவி மனிதா
இனி வேறு எந்தக் கிரகத்திலும்
பிறந்துவிடாதே அங்கும் வந்து நீ
பாவக்கொடி நாட்டாதே
கல்லே நீ கடுகதியில் வந்துவிடு
கச்சிதமாய் உன்கணக்கை முடித்துவிடு!

- யாழ்.வதிவிவாசன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அப்பா எங்கே?

சி.பகீரதி

மழை கொட்டிக்கொண்டிருந்தது எங்கும் ஒரே குளிர்மயம். அந்த நேரத்தில் விழிப்பாக இருப்பவர் என்று யாரையும் கூறிவிட முடியாதுவினையில் அந்தளவுக்கு மழையும் குளிரும் சம ஆதிக்கம் செலுத்திக் கொண்டிருந்தன. ஆனால் அவளுக்குமட்டும் தூக்கம் வரவில்லை. புரண்டு புரண்டு படுத்தாள். அருகில் அந்தக் குழந்தை நிம்மதியாக தூங்கிக்கொண்டிருந்தது. இருட்டிலும் அவன் தூங்கும் அழகை அவளால் இரசிக்க முடிந்தது. பெற்ற தாயல்லவா?

அந்த அழகில் அவள் மூழ்கியிருந்தாலும் அவளது வாழ்க்கைப் புத்தகத்தில் சில பக்கங்கள் தொலைந்து போயிருந்ததை அந்த மழலையின் கண்கள் உணர்த்திக்கொண்டிருந்தன. அவன் வளர்ந்ததும் தன்னைக் கேட்கப் போகும் கேள்வியை அவள் எப்போதோ அறிந்துவிட்டாள் ஆனால் இன்றுவரை அவள் அக்கேள்விக்குரிய விடையைத் தேடிப் பெற முடியவில்லை. மறுநாள் திங்கட்கிழமை என்பதால் காலையில் சீக்கிரமாய் எழுந்துகொள்ள வேண்டிய கட்டாயத்திலிருந்த போதும் அவளது கண்கள் உறங்க மறுத்தன.

அன்றுபகல் வீட்டில் நடந்த சம்பவம் அவளைப் பெரிதும் மனக் குழப்பத்துக்கு உள்ளாக்கிவிட்டது. பெற்றோரின் கட்டுப்பாட்டிலேயே வளர்ந்தவள் என்றபடியால் அவர்கள் சொல்லும் அனைத்திற்கும் உடன்பாடாக வேண்டுமா என்று அவள் நினைத்தது தான் முதல் தடவை.

அவளுக்கான மறுமணப் பேச்சு அவளுக்குச் சிறிதும் உடன்பாடில்லை. அது தேவையற்றது என்றே கருதினாள். பொறுப்பான தாயாக இருப்பதே தன் கடமை என்று வாழ்ந்து கொண்டு இருப்பவளை மறுபடியும் மனைவியாக வாழவைக்க அவளது வீட்டில் ஆயத்தங்கள் நடந்துகொண்டிருந்தன.

அகல்யாவுக்கு அப்போது வயது இருபத்தைந்தை எட்டியிருந்தது. தனியார் நிறுவனமொன்றில் பணிபுரிந்தாள். தந்தை கதிர்காமர் ஒரு ஓய்வூதியர் அவரை முதுமை அவ்வளவாக எட்டியிராதபோதும் நோய்களின் ஆதிக்கத்தில் தோற்றத்தில் முதியவராக இருந்தார். அகல்யா ஒரே மகள். தன் மகளுக்கு திருமணத்தை செய்து வைப்பதில் விருப்பம்கொண்டிருந்தார். ஆனால் மகளிடம் எப்படி திருமணப் பேச்சைத் தொடக்குவது என்று தெரியாமல் தன் ஆதங்கத்தை மனைவி பார்வதியிடமே கூறிக் கொண்டிருந்தார்.

நாள்கள் நகர நகர மகளுக்குத் தெரியாமலே மாப்பிள்ளை பார்க்கும் படலம் ஆரம்பமாகி இருந்தது. ஜாதகப் பொருத்தத்தில் மிகுந்த நம்பிக்கை கொண்டிருந்ததமையால் அவ்வளவு சீக்கிரமாய் மணமகனைக் கண்டு பிடிக்கமுடியவில்லை. கூடிய விரைவில் மகளின் திருமணத்தைக் காண வேண்டும் என்று அவர் விரும்பிய போதும் மணமகன் தேடும் விடயத்தில் நிதானமாகவே இருந்தார்.

இந்த விடயம் அகல்யாவுக்குத் தெரியவரவே அவள் எந்த ஆட்சேபனையும் தெரிவிக்கவில்லை. இதுவே பெருவெற்றி என அவர் எண்ணினார். ஆனால் அவள் ஒரு நிபந்தனையை மட்டும் தெரிவித்தாள். ''அப்பா, நீங்கள் யாரை எனக்கு மணமகனாக தெரிவு செய்தாலும் எனக்கு முழுசம்மதம். ஆனால் நான் உங்களுடனேயே இருக்க விரும்புகின்றேன். உங்களை பராமரிக்க வேண்டிய பொறுப்பு எனக்கு உள்ளது. இந்த விடயத்துக்கு உடன்பாடுள்ளவராக இருக்க வேண்டும் என்றாள். தன் மகளின் எண்ணத்தை நினைத்து உருகிப்போனார் அவளை நினைக்க அவருக்கு மிகவும் பெருமையாக இருந்தது. அவர் தீவிர முயற்சியில் இறங்கினார்.

சந்துருவின் ஜாதகம் அகல்யாவின் ஜாதகத்துடன் பொருந்தியது சந்துருவும் யாழ்ப்பாணத்தில் வசிப்பவன். அரச நிறுவனமொன்றில் பணிபுரிகின்றான். தங்கை இறந்த பிறகு குடும்பப் பொறுப்பை சுமந்தவன் தந்தைக்கு திருமணம் செய்து வைத்துவிட்டான் அகல்யாவின் நிபந்தனையை கூறியபோது அதை ஏற்றுக்கொண்டுவிட்டான். அவனது தந்தையின் பராமரிப்பில் தாய் இருந்ததுமே அவன் உடன்பட்டமைக்குக் காரணம்.

திருமண ஏற்பாடுகள் விமரிசையாக நடந்தன கதிர்காமர் நிம்மதிப்பெருமூச்சு விட்டார் திருமணம் முடிந்தது. இருவரும் வாழ்க்கையை ஆரம்பித்தார்கள். மனப்பொருத்தம் அவர்களுக்குள் நன்றாகவே அமைந்திருந்தது. ஒரு வருடம் கடந்தது சந்துருவிற்கு வேலை நிமித்தம் கிளிநொச்சிக்கு இடமாற்றம் கிடைத்தது அதனால் அவன் வன்னிப் பெருநிலப்பரப்பிற்குப் போக வேண்டி இருந்தது. அதே நேரத்தில் அகல்யா கருவுற்றிருந்தாள்.

சந்துருவுக்கு பொறுப்பான பதவி என்பதால் அடிக்கடி யாழ்ப்பாணத்துக்கு வந்து போக முடியவில்லை. பலதடவைகள் யுத்த அரக்கனின் இறுக்கமான பிடிக்குள் சிக்கித்தவித்து உறவுகளைத் தொலைத்து உடைமைகளை இழந்து இனியும் இப்படியொன்று நிகழ்ந்தால் தாங்கிக்கொள்வோமா என்ற சந்தேகத்துடன் வாழ்ந்து கொண்டிருந்த ஈழத் தமிழர்கள் வாழ்வில் வந்து விழுந்தது பேரிடி. அவர்கள் ஏற்கனவே மனதளவில் மரித்துப் போயிருந்தார்கள் மனபலமே இல்லாதபோது உடல் பலத்தால் மட்டும் என்ன [illegible] விட முடியும்? எந்தப் பிரச்சினைக்கும் காலம் தீர்வு சொல்லும் என்பார்கள் ஆனால் இப்போது அக் ''காலமே'' மாறிவிட்டதே விதம் விதமாக நவீனரக ஆயுதங்களையும் யுத்த தந்திரங்களையும் அல்லவா அள்ளிக்கொண்டிருக்கின்றது!! யாழ்ப்பாணத்துக்கு கிளிநொச்சிக்குமான தொடர்பு துண்டிக்கப்பட்டது. அகல்யா மிகவும் உடைந்து போனாள் குழந்தை பிறந்த செய்தியைக் கூட சந்துருவிற்குத் தெரிவிக்க அந்த நிலை இன்று வருவான் நாளை வருவான் என்று அவள் காத்திருந்தாள். எந்தப் பயனும் இல்லாமல் ஏற்கனவாகிப்போனது.

நாட்கள் வாரங்களாகி, வாரங்கள் மாதங்களாகி, மாதங்கள் வருடங்களைத் தொட்டன. எத்தனையோ இடங்களுக்குச் சென்று எத்தனையோ பேரிடம் முறையிட்டும் அவளால் அவனைக் கண்டுபிடிக்கமுடியவில்லை. சந்துருவை ஒரு தடவை முகாமில் கண்டதாக சுந்தரமூர்த்தி வாத்தியார் சொன்னபோது, அவளுக்குப் புத்துயிர் பிறந்தது. அவனை எப்படியாவது கண்டுவிட வேண்டுமென்று அகல்யாவும், கதிர்காமரும் செய்யாத முயற்சிகளே இல்லை. ஆனால் எதுவும் கைகூடவில்லை.

''மகன் கௌதமுக்கு மூன்று வயதாகிவிட்டது. அப்பா முகமே தெரியாது. அவன் அம்மா என்று சொல்வதைவிட அப்பா என்று சொல்லுவதுதான் அதிகம் என்று பார்வதி அடிக்கடி சொல்லிக் கவலைப்படுவாள்.''

ஏறத்தாழ எல்லோருமே நம்பிக்கையை இழந்துவிட்டார்கள். தனது கண் முன்னே மகளின் வாழ்க்கை இப்படி ஆனதைக் கண்டு கண்ணீர் விடாத நாளே இல்லை. பெற்றோரின் உள்ளம் வாடிவிடக்கூடாது என்பதற்காக அகல்யா கவலையை வெளிக்காட்டிக் கொள்வதில்லை. எனவே அவளுக்கு இன்னுமொரு துணையை ஏற்படுத்திக் கொடுக்கலாமென விரும்பினார்கள். [illegible] வழங்க அதுதான் சிறந்த வழி என எண்ணினார்கள். அது தொடர்பாகத் தான் அன்று பகல் அவளுடன் கதைத்திருந்தார்கள்.

பொழுது விடிந்தது. அகல்யா வேலைக்குச் சென்றுவிட்டாள். கதிர்காமர் வாசற்படியில் இருந்து பேப்பர் படித்துக்கொண்டிருந்தார். வீட்டுவாசலில் ஒரு சைக்கிள் வந்து நின்றது. கனகலிங்கத்தார் சைக்கிளிலிருந்து இறங்கி உள்ளே வந்தார். இருவரும் சொந்தக்காரர்கள்.

''என்ன கதிர்காமு! கண்டு கனகாலமாச்சு! தம்பி காசு அனுப்பியிருக்கிறானாம். அதான் எடுக்கப் போறன். போறவழியில உன்னையும் பாத்திட்டுப் போகலாமெண்டு வந்தன். என்று சொல்லி முடித்தார்.

''ஓம் கனகு! வீட்ட விட்டு வெளிக்கிடுறதுகுறைவு இண்டைக்கு என்ன புதினம்? ''கனகாலமா இங்காலுப் பக்கம் வரமாட்டியே'' என்றார் கதிர்காமர்.

இதற்குள் கோயிலுக்குப் போயிருந்த பார்வதியும் பேரனுடன் வந்து சேர்ந்தாள். ''உன்னட்டை ஒரு முக்கியமான விசயமாத் தான் வந்தன். அகல்யா ஏதாவது மாப்பிள்ளை பாத்தியளா?என்ர மனிசிதான் சொன்னாள் அகல்யாவுக்குக் கல்யாணம் செய்துவைக்கப் போறதா பேசினமாம் எண்டு.

''ஓம் அப்பிடித்தான் கனகு! யோசிச்சம். ஆனால் அவளுக்கு விருப்பமில்லை. அவளுக்கு விருப்பமில்லாம நாங்க ஏதும் செய்யவும் ஏலாது. அதான் என்ன செய்யிறதெண்டு தெரியலே.

''ஒண்டுக்கும் யோசிக்காதை, என்குத் தெரிஞ்ச ஒரு பொடியன் இருக்கிறான். அவனுக்கு முப்பத்திநாலு வயசாகுது. என்ர மகனின்ரை சிநேகிதப் பொடியன்தான் லண்டனில இருக்கிறான்.

என்ர மகன் அகல்யாவைப் பற்றி அவனுக்குச் சொல்லியிருக்கின்றான். அவனும் சம்மதம் எண்டிட்டானாம். ஜாதகத்தைத் தந்தா பாக்கலாம். ஒண்டும் அவசரமில்லை. நீங்க யோசிச்சுச் சொல்லுங்க, நான் வாறன் என்று கிளம்பிவிட்டார்.

கதிர்காமருக்கு யோசனையாக இருந்தது. ஆனால் அவருக்கு கனகலிங்கத்தார் மீது நம்பிக்கை இருந்தது. அவர் செய்துவைத்த திருமணம் எதுவும் பிழைத்ததாக இல்லை. பெண்பிள்ளை இல்லாத காரணத்தால் அகல்யாவைத்தன் சொந்த மகள் போலவே கருதி வந்தார். ஆனாலும் தங்களை விட்டிட்டு லண்டன் போக அகல்யா நிச்சயமாகச் சம்மதிக்கமாட்டாள். ஆனால் இடமாற்றம் எத்தனையோ பேரின் வாழ்க்கையை மாற்றியிருக்கின்றது. இது அவளுக்கும் ஒரு மனமாற்றத்தைக் கொடுக்கலாம் எனக் கருதினார். ஆனால் இதுதொடர்பாக அகல்யாவிடம் எப்படிக் கதைப்பது? என்பது தான் அவர் பிரச்சினை. நல்ல சந்தர்ப்பம் எனக் காத்திருந்து நேரத்தை வீணடிக்கவும் விருப்பமில்லை.

அன்று, ஞாயிற்றுக்கிழமை அகல்யா வீட்டில் இருந்தாள். அவளிடம் அந்த விடயத்தைப் பற்றிச் சொன்னார். அவள் எதுவுமே பேசாது எழுந்து, உள்ளே சென்றுவிட்டாள். அவளது மௌனத்தின் அர்த்தம் விளங்கவில்லை. எனினும் வழமையாக இந்தப் பேச்சைத் தொடங்கியபோதே பிடிவாதமாக மறுக்கும் அவள் இன்று எதுவும் பேசாதது அவருக்கு வியப்பாகவே அமைந்தது. சில நாட்களுக்கு அந்தப் பேச்சை ஒத்திவைத்தார்.

ஒரு வாரம் கழிந்தது. அன்று பார்வதி கூறியது, அவரது முயற்சியைத் தவிடுபொடியாக்கியது போல் இருந்தது. அவர் ஒத்திவைத்த விடயத்தை முற்றுமுழுதாகக் கைவிட வேண்டியதாயிற்று. சட்டபூர்வமாக விவாகரத்து பெறாமல் மறுமணம் செய்வது எந்தளவுக்குச் சாதகமாக அமையும் என்று கூறமுடியாது என சுந்தரமூர்த்தி வாத்தியார் சொன்னதாகப் பார்வதி கூறினாள். அகல்யா அந்த நேரம் வீட்டில் இருந்தபடியால் அவர் மேற்கொண்டு எதுவும் கேட்கவில்லை. ஆனால் பார்வதி சொன்னது அகல்யாவின் காதில் கேட்டது. எனினும் பார்வதி சொன்னதில் உள்ள உண்மையை அவரால் புரிந்துகொள்ள முடிந்தது. இதுவரையில் தான் அதுபற்றி எண்ணாததை நினைத்து வருந்தினார். விவாகரத்துப் பெறுவது எந்தளவுக்குச் சாத்தியமென்பது கேள்விக்குறியாக அமைந்தது. அப்போ அகல்யாவின் வாழ்க்கை!!!..

ஏறத்தாழ எல்லோருமே நம்பிக்கையை இழந்துவிட்டார்கள். தனது கண் முன்னே மகளின் வாழ்க்கை இப்படி ஆனதைக் கண்டு கண்ணீர் விடாத நாளே இல்லை.




''தாத்தா என்று தேடி வந்து கௌதம் மடியில் அமர்ந்தான். அவர் அள்ளி அணைத்து முத்தமிட்டார். தனது காலத்துக்குப் பிறகு அகல்யாவுக்கும் கௌதமிற்கும் பாதுகாப்பளிப்பது யார்? என்பதே அவரது கவலை. எல்லோரையும் பொறுத்தவரையில் அவளது முழுப்பெயரிலேயே சந்துரு வாழ்ந்துகொண்டிருக்கிறான். அதை மாற்றியமைக்கத்தான் அவர்கள் எண்ணுகிறார்கள். கௌதம் வளர்ந்து அப்பா எங்கே எனக்கேட்டால் என்ன பதில் சொல்வாள். வருவார் என்றா வரமாட்டார் என்றா? அவளால் யோசிக்கவே முடியவில்லை. இருப்பினும் உள்ளத்தின் ஒரு மூலையில் துளிர்விட்ட ஒரு நம்பிக்கையில் அவன் திரும்பி வருவான் என்ற உறுதியுடன் நெற்றி நிறைந்த குங்குமத்துடன் அவள் காத்திருக்கின்றாள் குழந்தையுடன் ......

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# விலகலும் நெருக்கடியும்



டிலீப்

இலங்கையின் பொன் வசந்தமாக மிளிர்ந்த அந்தக் குள்ளமானவன் விடை பெறுகின்றான். அணியை விட்டு வெளியேறவில்லையாயினும், இலங்கை கிரிக்கெட் அணி நட்சத்திரமாக மிளிரக் காரணமானவன். தனக்கென்று ஒரு துடுப்பாட்ட தரத்தினைக் கொண்டிருந்தவன் அவன்.

இலங்கை அணி இறுதி ஆட்டத்துக்கு இரண்டு தடவைகள் நுழைந்தது. இதற்கு இவன் காரணம். இருந்தும் கிண்ணத்தை வென்று கொடுக்க முடியவில்லை. அணித் தலைமையை விட்டு வெளியேறுவது திண்ணம். இலங்கையை மீண்டும் நெருக்கடிக்குள் மாட்டி விட்டுள்ளான் மஹேல.

இலங்கை அணியில் 1997/ 1998 ஆம் ஆண்டு பருவகாலத்தில் இடம்பிடித்தார் மஹேல. உயரம் குள்ளம். கடுகு சிறிதானாலும் காரம் பெரிது. துடுப்பாட்டத்தில் சாதித்துக் காட்டினான். சுழல் பந்து வீச்சுக்கு 'ஸ்லிப்' திசையில் பந்தை மெதுவாகதட்டி விட்டு ஓட்டம் எடுக்கும் 'ஸ்ரைல்' மஹேலவுக்கு தனித்துவமானது.

அணியில் அறிமுகமான காலத்தில் இடம் தக்க வைப்பதற்கு போராட்டம். அணியில் நிரந்தர இடம் கிடைத்த காலத்தில் இலங்கை ரசிகர்களின் ஒட்டு மொத்த வெறுப்பையும் சம்பாதித்தான். 2003 ஆம் ஆண்டு உலகக் கிண்ணத் தொடரில் 9 ஆட்டங்களில் விளையாடி வெறும் 23 ஓட்டங்களையே மஹேல பெற்றான்.

இருந்தும் தொடர்ந்த போராட்டத்தால் அணியில் மிளிரத் தொடங்கினான். அணியில் நம்பிக்கை துடுப்பாட்ட வீரராக அசத்த தொடங்கினான். 2005 ஆம் ஆண்டு இந்தியத் தொடரில் தொடர்ந்தது படுதோல்வி. அத்தபத்துவிடம் இருந்து அறுத்தெடுக்கப்பட்டது அணித்தலைமை. வழங்கப்பட்டது மஹேலவுக்கு.

இலங்கை கிரிக்கெட் மீண்டும் உலகின் பார்வையைத் தன்பக்கம் திருப்பியது. அணியை சிறப்பாக வழிநடத்தி சாதனைகள் பல புரிந்தான். 2007 உலகக் கிண்ண இறுதியாட்டம் வரையில் இலங்கை சென்றது. இது இவனது தனிப்பட்ட அணித் தலைமை வியூகமே காரணம். இருந்தும் இயற்கையின் சதியால் கிண்ணத்தை தவறவிட்டான். 2008 ஆம் ஆண்டின் இறுதிக்காலப் பகுதியில் இந்தியாவுடனான தொடரில் இலங்கை தொடர் தோல்வி. மஹேலவின் ஆட்டமும் சிறப்பிக்கவில்லை.

இதனால் அணித்தலைமையை விட்டு விலகினான். சங்காவின் கைகளுக்கு அது சென்றது. இலங்கையின் அணித் தலைமைக்கும் மஹேலவுக்கும் நெருக்கம் அதிகம். அதனால்தான் விட்டுச் சென்ற தலைமைப் பதவி மீண்டும் தேடி வந்தது.

2011 ஆம் ஆண்டு உலகக் கிண்ண இறுதியாட்டத்தில் இலங்கை தோல்வி. இதனால் சங்கா பதவி விலகல். அணித் தலைவராக டில்ஷான் பொறுப்பெடுப்பு. இருந்தும் இலங்கையின் நட்சத்திர அந்தஸ்தை கேள்விக்குட்படுத்தியது அவரது தலைமை.

இலங்கையை வழிநடத்தும் தலைமைக்கு இளையவர்கள் யாரும் தகுதியானவர்கள் இல்லை. இதனால்தான் தலைமைப் பதவிக்கென்றே தனித்துவமான மஹேலவை மீண்டும் தலைவராக முன்னெடுக்கப்பட்டன முயற்சிகள். சம்மதித்தான் அணித் தலைமைக்கு. சாதித்தான் மீண்டும்.

தொடர் தோல்விகளால் முடங்கியிருந்த இலங்கை அணியை, கடந்த ஜனவரியில் மீண்டும் மீட்டுக் கொண்டு வந்தான். சீ.பி கிண்ணத் தொடரில் இந்திய அசுரர்களை அடக்கி இறுதி வரை சென்று ஆஸ்திரேலிய அணியை அதன் சொந்த மண்ணில் வீழ்த்தத் தவறினர். இருந்தும் இலங்கை மீளவும் எதிரணிகளுக்கு சிம்மசொப்பனமானது.

'ரி-20' உலகக் கிண்ணம். இவன் தலைமையில் இலங்கை இறுதியாட்டத்துக்குச் சென்றது. இறுதியாட்டத்துக்கும் இலங்கைக்கும் முன்ஜென்ம கோபம். அதனால் இந்த இறுதி ஆட்டத்திலும் தோற்று வந்தது இலங்கை. இதனால் 'ரி-20'யுடன் கோபித்துக் கொண்டு கொடுத்து விட்டான் அணித் தலைமையை.

இறுதியாய் டெஸ்ட், ஒரு நாள் தொடரின் அணித் தலைமையையும் விட்டு விலகப் போவதாக சொல்லி விட்டான். இவன் தலைமைக்கென்றே பிறந்ததால் இலங்கை அணி இவ்வளவு காலமும் சாதித்தது எவ்வளவோ ?

புதிய தலைமைக்கு மத்தியூஸ் வரவுள்ளதாக தகவல். தலைமைக்கு முதல் கலப்புத் தமிழன். மஹேலவின் வழியில் சாதனை படைப்பாரா ? டில்ஷான் வழியில் சொதப்புவாரா ? மஹேல அணியை விட்டு வெளியேறாத வரையில், புதுத் தலைமைக்கு வழிகாட்டியாக அமைய வேண்டும். இலங்கை விட்ட இடத்தை மெல்லத் தொட்டு வருகின்றது. புதுத் தலைமை சரியான பாதையில் சென்றால் இலங்கை மீண்டும் முன்னிலை பெறும்.

# சமூக சீர்திருத்தம்

சீர்கெட்ட சீர்கெடும்
சமுதாயம் கண்ணுக்குள்ளே
வேர்விட்டு வளர்வதைத்தான்
வரைந்துகாட்ட முனைந்துவிட்டேன்
பார்கெட்டுப் போகுதையோ!
யாரிடந்தான் சொல்லிடுவேன்
நேர் தொட்டு வாழநாங்கள்
விரும்பினாலும் முடிகிறதா?
உளவுபார்த்துத் தக்கதொரு
தருணத்திலே மறைந்து சென்று
களவு செய்து கொலை புரியும்
கொள்ளையர்கள் வாழும்போது
நல்லவர்கள் என்ன செய்வர்?
அழுதழுது கண்ணீராய்
நிற்பவர்கள் சமூகத்திலே

லட்சோப லட்சமாவர்
கள்ளிலே தோய்ந்துகாம
உணர்விலே தத்தளித்துப்
பண்ணிலே தாளம் தப்பும்
பரிகாசப் பேர்வழியாய்
விண்ணிலே இறைவனுக்கு
வடுத்தேடி வாழ்கிறார்கள்
மண்ணிலே நல்லவரின்
மானத்தை வாங்குகிறார்கள்

இது மட்டுமா காணுகிறேன்
இன்னும்பல இருக்குதையோ!
எதுமட்டும் என்று எனைக்
கேட்கவேண்டாம் சொல்லுகிறேன்
குருநிந்தை ஐயோ எங்கள்
பண்பாட்டுக் குதவிடுமா
பெருநிந்தை இதைத் தவிர
வெட்கம் வேறு என்ன உண்டு

கொலை களவு கள்காமம்
குருநிந்தை என்று பல
நிலைகொண்டு இருக்கையிலே
நல்லவர்கள் என்ன செய்வர்?
ஈரேழு இன்னும் பல
ஈரேழு ஈரேழு
ஈரேழு தலைமுறையாய்
இது நடந்து வருகுதையோ!

இளைஞர்களும் நடுத்தரத்து
வயதினரும் வளர்ந்து வரும்
சிறுவர்களும் இதில் விழுந்து
சிரிக்கிறார்கள் மகிழ்கிறார்கள்
அதனால்தான் விஷ்ணுவந்தார்
புத்தர் வந்தார் யேசுவந்தார்
அவர்கள் பின்தான்
நபிகள் வந்தார்
எதுவுமிங்கு பலிக்கவில்லை

பின்னிங்கு வள்ளுவரும்
சோக்கிறட்டீஸ் போன்றவரும்
தம்மாலிங்கு முடியுமென்றார்
முடியவில்லை இந்த நிலையில்
இதற்கு மாற்று மருந்தில்லையா
என்றெல்லாம் அழுதுகொட்டித்
தம்மை ஆற்றுப் படுத்திடாது
தவிப்போரைக் காணுகிறோம்
வழியொன்று பிறந்திடாதா?

நவாலியூர் நா.செல்லத்துரை, (நவாலியூரான்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இங்கும் அங்கும் ஒரே மாதிரி

"இதற்கான காரணம் நாட்டில் நிலவும் பிரச்சினைகளே என்றும், அவையெல்லாம் தீர்க்கப்பட்டு அமைதி திரும்பியதும் அந்த உரிமைகளை, ஜனாதிபதியின் உரிமைகளில் இருந்து அகற்றிவிடுவதாகவும் உறுதி கூறினார். இதை நம்பவோ ஏற்றுக்கொள்ளவோ எவரும் தயாராக இல்லை. முர்ஸி பேச்சுவார்த்தைக்கு அழைத்ததையும் மறுத்து விடாப்பிடியாகச் சதுக்கத்தை ஆக்கிரமித்து அமைதியான முறையில் போராட்டத்தைத் தொடர்ந்தார்கள்.




ஜெரா

கடந்த வருடமளவில் பேரெழுச்சியை ஏற்படுத்தியிருந்த மத்திய கிழக்குப் பிராந்தியம் மறுபடியும் சலசலப்புக்குள்ளாகியிருக்கின்றது. சிரியாவின் குழப்பம் ஈழம் போல நீடித்துக் கொண்டிருப்பதால் அது உலகத்தின் கவனத்தில் இருந்து விலகிக் கொண்டுள்ளது. அண்மையில் பலஸ்தீனம் பெரும் பேசுபொருள் ஆகியிருக்கின்ற படியாலும் மத்திய கிழக்கில் வீசிய அரபு வசந்தத்தின் விளைவுகளை ஆராய முடியாத சூழல் உருவாகியிருக்கின்றது. அரபு வசந்தம் வீசிய நாடுகளில் நிகழ்ந்த ஆட்சி மாற்றங்களும், அரசியல் மாற்றங்களும் இப்போது எத்தகைய நிலையை அடைந்திருக்கின்றன? என்ற கேள்விக்கு அங்கிருந்து கிடைக்கும் பதில் அதிர்வைத் தருவதாக அமைகின்றது. இந்த நூற்றாண்டிலும் மக்கள் புரட்சியை சாத்தியமாக்கிய எகிப்தின் நிலைமை எப்படி? அது சர்வாதிகாரத்தை நோக்கிப் பயணிக்கின்றதா? அல்லது இலங்கையை நினைவுபடுத்துகின்றதா?

**பலஸ்தீனம் கொதித்த நேரம்**

மத்திய கிழக்கு அரசியல் வானிலிருந்து ஹொஸ்னி முபாரக் மறைந்து சுமார் ஒரு வருடமாகிறது. சர்வாதிகாரி முபாரக்கை அரசுகட்டிலிலிருந்து விழுத்துவது எகிப்தியர்களுக்கு இலகுவாக இருக்கவில்லை. காரணம், முபாரக்கை அரசியல் வானில் தங்களது இராணுவ மற்றும் [illegible] உதவிகளால் நேரடியாகவும் மறைமுகமாகவும் பறக்கவைத்துக் கொண்டிருந்தது அமெரிக்க தான். ஆனாலும் முஸ்லிம் சகோதரர்கள் அமைப்பைச் சேர்ந்த முகம்மது முர்ஸி நாட்டிலிருந்த சகல அரசாங்க எதிர்ப்பாளர்களையும் ஒருமைப்படுத்தி முபாரக்கை நாட்டை விட்டே ஓட வைத்தார். எகிப்து எப்போதுமே மத்திய கிழக்கு நாடுகளின் அரசியல் பந்தாட்டத்தின் முக்கிய மைதானமாகவே இருந்துகொண்டிருக்கிறது. பூகோளரீதியாக அது இருக்கும் இடம் மட்டுமல்லாமல் மொழி, கலாசாரம், சரித்திரம் போன்றவையும் அதற்கு ஆதரவாக இருந்துகொண்டிருக்கின்றன. எனவே திடீரென்று அரசியல் வானில் தோன்றிய வெள்ளியான முர்ஸியை யாரும் இலேசானவர் என்று கருதவில்லை. என்றுமே நிலையின்றி இருக்கும் அந்தப் பிராந்திய அரசியலில் இவர் எப்படித் தனது திட்டங்களை வகுக்கப் போகிறார், நிறைவேற்றப் போகிறார் என்று உலகமே கவனித்துக்கொண்டிருந்தது. தனது பின்னணியில் இருக்கும் இஸ்லாமியச் சக்திகளின் கைப்பாவையாக இயங்கினால் அதன் விளைவுகள் பதவிக்கே ஆபத்தாக முடியும் என்று புரிந்துகொண்ட முர்ஸி, பதுங்கிவரும் பூனையாகவே அரசியலில் நடந்துகொண்டிருந்தார் சில வாரங்களுக்கு முதல்வரை.

**காசா இவருக்கு வாழ்வு கொடுத்தது**

காசா நகரிலிருந்து ஹமாஸ் இயக்கத்தினர் தமது எதிரிகளான இஸ்ரேலோடு மோத ஆரம்பிக்க மீண்டுமொருமுறை சூடுபிடித்தது மத்திய கிழக்கு அரசியல். வரவிருக்கும் தேர்தலில் வெற்றிபெறுவதற்காகத் தனது தைரியத்தைக் காட்ட வேண்டிய நிலையிலிருந்த இஸ்ரேலிய அதிபர் நெத்தன்யாகு இதுதான் சந்தர்ப்பம் என்று திருப்பித் தாக்கத்தொடங்கினார். அமெரிக்க ஜனாதிபதிப் பதவியை துரும்பளவு வித்தியாசத்தில் ஒரு வாரத்துக்கு முன்புதான் கைப்பற்றிக்கொண்ட ஒபாமாவுக்கோ இதில் தலையிட்டுத் தனது பெயரைக் கறைப்படுத்திக்கொள்ள இஷ்டமில்லை. பலஸ்தீனிய அதிபர் அப்பாஸுக்கோ, ஹமாஸ் இயக்கத்தின்மேல் அதிகாரம் கிடையாது. இந்த நிலைமை கட்டுப்பாடில்லாமல் போகத்தொடங்க, உலக அரசியல் சமாதானவாதிகள் அங்குமிங்கும் ஓடத்தொடங்கினர்.

முபாரக்கின் பின் முர்ஸி என்ன செய்தார்?

இந்த நிலையில் தான் உலக அரசியல் அரங்கில் தனது பலத்தை காட்ட வெளிவந்தார் முர்ஸி. தீவிரவாதிகளென்று உலகத்தில் கணக்கிடப்படும் ஹமாஸ் இயக்கத்தினர் காஸா நகரில் ஜனநாயக ரீதியான தேர்தலில் வெற்றிபெற்று அரசியல் நடத்தி வருவது பலஸ்தீனியத் தலைவர் முகமத் அப்பாஸுக்குக் எரிச்சலாக இருந்தாலும் அதை ஏற்றுக்கொள்வதைத் தவிர வேறு வழியில்லை. ஆனால் ஹமாஸோ, அப்பாஸுக்கு அடங்குவதில்லை. அவர்களது அடித்தளம் எகிப்தில் தான் இருந்தது. எனவே முர்ஸியின் பேச்சை அவர்கள் ஏற்பது அவசியமானதாக இருந்தது. இதைத் தந்திரோபாயமாகப் பயன்படுத்திய முர்ஸி ஒரு சமாதானவாதியாகி வெடித்தெழுந்து மோசமாகிக்கொண்டிருந்த பிரச்சினையைத் தடுத்து நிறுத்தினார். மத்திய கிழக்கு நாடுகள் ஆசுவாசமாக மூச்சு விடத்தொடங்கின.

இதை படிக்கும் போது இலங்கையை நினைவுபடுத்திக் கொள்ளுங்கள்

ஆனால் சமாதானம் பேசிக்கொண்டிருந்த அதே சமயத்தில் இவர் தனது கட்சியினருடன் சேர்ந்து புதிய அரசியலமைப்பு ஒன்றை எகிப்துக்காக அமைத்துக் கொண்டிருந்தார். பலஸ்தீனியப் பிரச்சினைகளின் சந்தடிக்குள் எகிப்தியர்கள் இந்த 234 பகுதிகளைக்கொண்ட அமைப்பை உன்னிப்பாகக் கவனிக்கமாட்டார்கள் என்று இவர் மனப்பால் குடித்தாரோ என்னவோ. சர்வாதிகாரிகளை அடுத்தடுத்துக் கண்டு அரசியல் தலைவர்களைப் பற்றி நன்றாகவே கற்றுக்கொண்ட பொது மக்கள் முர்சியின் அரசியலமைப்பில் [illegible] சர்வாதிகார எண்ணங்களைப் புரிந்துகொண்டு கிளர்ந்து எழுந்தார்கள், மீண்டும் தஹ்ரிர் சதுக்கத்தில். புதிய அரசியலமைப்பு, ஜனாதிபதி இரண்டு தடவைகள் மட்டுமே ஆட்சியைப் பெறமுடியும் போன்ற வரவேற்கத்தக்க கட்டுப்பாடுகளைக் கொண்டிருந்தாலும், அரசின் மீது எதிர்ப்புத் தெரிவிப்பவர்களை இராணுவ நீதிமன்றத்தில் விசாரிக்க அனுமதிக்கவும், நாட்டின் உயர் நீதிமன்ற நீதிபதிகளின் முடிவுகளில் ஜனாதிபதி தலையிடவும் அனுமதித்திருந்தது. (கிட்டத்தட்ட நம்ம நாடு மாதிரி. உதாரணங்களை செய்திகளைப் படித்துத் தெரிந்து கொள்ளுங்களன்) அதைத்தவிர இஸ்லாமியக் கோட்பாடுகளும் சமூக வாழ்க்கையின் பல பகுதிகளிலும் புகுத்தப்பட்டிருந்தது. உதாரணமாக தலைநகரான கெய்ரோ நகர் ஒரு இருபத்து நான்கு மணிகளும் இயங்கும் நகராகமாறியிருப்பதைக் கலாசாரக் காரணங்களுக்காக அனுமதிக்கக் கூடாது, போன்ற வரிகளைக் கொண்டிருந்தது புதிய அரசியலமைப்புச் சட்டத்துக்கான மாதிரி. அத்துடன் பெண்களின் உரிமைகளிலும் கலாசாரக் காரணங்கள் காட்டிக் கட்டுப்பாடுகள் இடப்பட்டிருந்தன.

**மீண்டும் மீண்டும் போராடு விடுதலை பெறு**

இதற்கான காரணம் நாட்டில் நிலவும் பிரச்சினைகளே என்றும், அவையெல்லாம் தீர்க்கப்பட்டு அமைதி திரும்பியதும் அந்த உரிமைகளை, ஜனாதிபதியின் உரிமைகளில் இருந்து அகற்றிவிடுவதாகவும் உறுதி கூறினார். இதை நம்பவோ ஏற்றுக்கொள்ளவோ எவரும் தயாராக இல்லை. முர்ஸி பேச்சுவார்த்தைக்கு அழைத்ததையும் மறுத்து விடாப்பிடியாகச் சதுக்கத்தை ஆக்கிரமித்து அமைதியான முறையில் போராட்டத்தைத் தொடர்ந்தார்கள். இராணுவத்தின் எச்சரிக்கைகளையும் அடிக்கடி முர்ஸியின் ஆதரவாளர்களால் தாக்கப்பட்டதை

(சூரியகாந்தி 23 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செய்யுங்கள் அல்லது விலகுங்கள்

"எலும்பில்லாத நாக்கால் எதையும் சொல்லலாம் என்பதற்காக தமது முள்ளந்தண்டுகளையும் தியேட்டரில் அடகு வைத்து விட்டு மாணவர்களின் விடுதலையைப் பாழடிக்கக் கூடாது. மாணவர் விடுதலைக்காக தங்களால் குரல் கொடுக்க முடியா விட்டாலும் தொந்தரவு செய்யாமல் இருக்க வேண்டும்.




■ தில்லாலங்கடி

பலாலி வீதியில் பரமேஸ்வராச் சந்திக்கு அருகில் ஒரே கூட்டம். பலர் அந்தக் கூட்டத்தை வேடிக்கை பார்த்து விட்டு கல்கின்றனர். பலரும் பலவாறு பேசிக் கொண்டே தமது அலுவல்களைப் பார்க்கச் சென்று கொண்டிருக்கின்றனர். 'உந்த கம்பஸ் பொடியளுக்கு வேற வேலையில்லை. குடிச்சுப் போட்டு ரோட்டுல அடிபட்டு கிடக்கிறாங்கள்', 'இவங்கள் ஏதாவது பெட்டைப் பிரச்சினையில தங்களுக்குள்ள அடிபட்டிருப்பாங்கள்'

இந்த சம்பாஷனைகளுடன் அங்கு நின்றவர்கள் அந்தக் கூட்டத்தை விட்டு வெளியேறிக் கொண்டிருக்கின்றனர். தலையில் ரத்தம் ஒழுக சுயநினைவில்லாமல் ஒரு 25 வயது மதிக்கதக்க இளைஞன் விழுந்து கிடக்கிறான். எவரும் தூக்க முன்வரவில்லை.

இருப்பினும் அந்தக் கூட்டத்துக்குள்ளும் ஒரு வயதானவர் அந்த இளைஞனை தனியே சிரமப்பட்டு தூக்கி அருகிலுள்ள வைத்தியசாலைக்குக் கொண்டு செல்கிறார். அவர் தூக்கிச் செல்லும் போதும், குடிச்சுப் போட்டு ரோட்டில அடிபட்டு கிடக்கிறவங்களை அப்படியே விட்டாத் தான் திருந்துவாங்கள் என்று கூட்டத்திலிருந்தவர்கள் திருவாய் மலர்ந்தருளினர்.

வைத்தியசாலையில் சிகிச்சை முடிந்த பின்னர் அந்த இளைஞன் சுயநினைவுக்கு திரும்பிய பின்னர், நாய் குறுக்கால போனதாலதான் மோஸ்மோ போய் அடிபட்டு விழுந்ததாய் சொல்கின்றான்.

இறந்தவர்களின் நினைவை உரிமையோடு அனுஷ்டிக்க முற்பட்டமையாழ். பல்கலைக் கழக மாணவர்களை இராணுவத்தினர் வேட்டையாடினர். அதற்கும் அசராத மாணவர்கள் மறு நாள் பல்கலைக்கழக நிர்வாகத்தின் மௌனத்தையும், இராணுவத்தினரின் அத்துமீறலையும் கண்டித்து ஆர்ப்பாட்டம் நடத்தினர். இது பாதுகாப்பு படைக்கு வயிற்றில் புகைச்சலை கிளப்பியது. மீண்டும் பிடுக்குடன் பல்கலைக் கழகம் அடுத்த போராட்டத்துக்கு வித்திடுகின்றது என்று கருதி மாணவர்களை மடக்க நினைத்தது. இதனால் சோடிக்கப்பட்ட குற்றச்சாட்டுகளை அரங்கேற்றியாழ். பல்கலைக் கழக மாணவர்கள் நால்வரை பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்தது.

கைது செய்யப்பட்ட மாணவர்களை விடுவிக்கும் வரையில் காலவரையற்ற பகிஷ்கரிப்பை பல்கலைக்கழக மாணவர்கள் முன்னெடுத்தனர். பல்கலைக் கழக மாணவர்களுக்கு ஆதரவாக தாயகத்திலும், சர்வதேசத்திலும் தொடர்ச்சியாக பல குரல்கள் ஒலிக்கத் தொடங்கியுள்ளன. இந்தக் குரல்கள் ஆட்சியாளர்களின், படைத்தரப்பினரின் சோடிக்கப்பட்ட குற்றச்சாட்டுக்களுக்கும் சாட்டை கொடுக்கத் தொடங்கியுள்ளன.

இதேவேளை பல்கலைக் கழக மாணவர்களின் விடுதலையை வலியுறுத்தாத அரசின் கைக் கூலிகள் பல்கலைக்கழகம் மூடப்பட்டதற்கு தமது நீலிக் கண்ணீரினால் கண்டனம் தெரிவிக்கின்றனர். பல்கலைக்கழகத்தை மூடவைத்து மாணவர்களின் கல்வியை பாழடித்து வருவதாக தெரிவிக்கின்றனர். ஆனால் கைது செய்யப்பட்ட 4 மாணவர்களையும் விடுவிக்க எந்தக் குரலையும் கொடுக்காது மாணவர்கள் கைது செய்யப்பட்டதை நியாயப்படுத்துகின்றனர். விசாரணைகள் எதுவுமின்றி தம்பாட்டில் தீர்ப்பை சொல்லி அதற்கமைய மாணவர்களின் கைதை நியாயப்படுத்துவது மாத்திரமல்லாமல் அவர்களது விடுதலையையும் இல்லாமல் செய்கின்றனர்.

பிரதம நீதியரசரே இன்று நீதி கோரிப் போராடும் நிலையில், பல்கலைக்கழக மாணவர்களை விடுவிப்பதற்கு சகல மாணவர்களும் இணைந்து பல்கலைக்கழகத்தை பகிஷ்கரித்தாலும் கைது செய்யப்பட்ட மாணவர்களது விடுதலை சந்தேகமே. இந்த நிலையில் மாணவர்கள் பல்கலைக் கழகத்தை பகிஷ்கரித்து தங்களது போராட்டத்தை முன்னெடுக்காவிட்டால் கைது செய்யப்பட்ட மாணவர்களது கதி அதோ கதி தான்.

தமிழ் மக்களின் ஏக பிரதிநிதிகள் விடுதலைப் புலிகள் இல்லையென்று சொன்னவர் - இன்று வட மாகாணத்தின் ஏக கல்வி வியாபாரச் சிகரமென்று கூப்பாடு போடுவர், முகாமுக்குள் இருந்த படையினர் வீதிக்கு அனுப்பியது போல் தற்போது பல்கலைக் கழக மாணவர் மீது பழியைப் போடுகின்றார். அத்துடன் பல்கலைக்கழகத்துக்குள் சிலர் தமது சுயலாப அரசியலுக்கு பயன்படுத்துவதாகவும் அழுகின்றார்.

முதலில் இங்கு முகாம்களை அமைத்து படையினர் தங்குவதற்கு அனுமதி கொடுத்தது யார்? அதனை விட மாவீரர் தினமன்று ஈகச்சுடர் ஏற்றப்படுவதற்கு முன்பதாகவே பல்கலைக்கழகத்துக்குள் படையினர் ஏன் நுழைந்தார்கள் ? இல்லை அவர்கள் பல்கலைக்கழகத்துக்குள் அத்துமீறி நுழைந்தது தொடர்பில் மேற்படி கல்வி வியாபாரியால் ஏதாவது கேள்வியெழுப்ப முடிந்ததா ?

எலும்பில்லாத நாக்கால் எதையும் சொல்லலாம் என்பதற்காக தமது முள்ளந்தண்டுகளையும் தியேட்டரில் அடகு வைத்து விட்டு மாணவர்களின் விடுதலையைப் பாழடிக்கக் கூடாது. மாணவர் விடுதலைக்காக தங்களால் குரல் கொடுக்க முடியா விட்டாலும் தொந்தரவு செய்யாமல் இருக்க வேண்டும்.

தமிழீழ விடுதலைப் புலிகள் இல்லாததால் தாம் எதையும் சொல்லாம் என்று நினைத்து மழைக்காலத்துப் பனியில் சிலர் உளறித் திரிகின்றனர். தமிழீழ விடுதலைப் புலிகளின் முதல் போராளி சங்கர் இல்லை என்று கூப்பாடு போடுகின்றனர். இறைகுமாரன், உமைகுமாரன் என்று இரு புலிப் போராளிகள் புளொட்டால் சுட்டுக் கொல்லப்பட்டதாக புருடாக் கதை விடுகின்றனர். அரசின் எச்சில் துண்டுகளை நக்குவதற்காக தமிழீழத்தின் வரலாறுகளையும் மாற்றத் தயாராக இருக்கின்றனர் இந்தப் பனியர்கள்.

இறந்தவர்களுக்காக நினைவேந்தல் செய்வதற்கு நவம்பர் 27 ஆம் திகதி மட்டும்தான் நாளா என்று எதிர்க் கேள்விகள் கேட்கின்றனர். இந்தப் பல்கலைக் கழக மாணவர்கள், இறுதிப் போரில் கண்மூடித்தனமாக கொன்றொழிக்கப்பட்ட மக்களின் நினைவாக மே மாதமும் நினைவேந்தலைச் செய்தார்கள். அந்த நினைவேந்தலை இந்தப் பனியர்கள் மறந்து விட்டார்கள் போலும்.

மே மாதம் அனுஷ்டிக்கப்பட்ட நினைவேந்தலையும் தடுப்பதற்கு படைப் புலனாய்வாளர்கள் தலை கீழாக முயற்சித்தனர். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியச் செயலாளர் தர்ஷானந் மீது தாக்குதல் நடத்தியும் பார்த்தனர். எதுவுமே பலிக்கவில்லை. அன்றும் இறந்தவர்களின் நினைவாக நினைவேந்தல் செய்வதற்கு அனுமதிப்பதற்கு இந்த ஆட்சித் தரப்புக்கு மனம் வரவில்லை.

தமிழ் மாணவர்களின் கல்வியை சீரழிக்கும் அரசிடமிருந்து தமது கல்வியைப் பாதுகாத்தும், தமது மாணவர்களை பாதுகாத்தும் கொண்டு செல்ல வேண்டிய கட்டாயத்தில் மாணவர்கள் இருக்கின்றனர். இதற்கு துணை நிற்கவேண்டிய பல்கலைக்கழக நிர்வாகம், தமது ஆட்சிக் கதிரைகளுக்காக அரசின் பக்கம் நிற்கின்றது.

இந்த இடியப்ப சிக்கலிருந்து மாணவர்கள் வெல்வதற்கு குரல் கொடுக்காவிட்டாலும் பரவாயில்லை. குரல் கொடுப்பவர்களை காட்டிக் கொடுக்காமல் இருங்கள்.

★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீரம் உறங்கியது - விவேகம் விழித்தது

■ போகநாதன்




அண்மைக்காலமாகப் பத்தி எழுத்துக்கள், கட்டுரைகள், விமர்சனங்கள் என்று பலவகைகளிலும் தமிழ் தேசியக் கூட்டமைப்பும், குறிப்பாக சம்பந்தனின் தலைமையும் விமர்சனங்களுக்குள்ளாவதைக் காணமுடிகிறது.

1.எங்கு சென்றாலும் இறுதியில் தீர்வை உள்நாட்டிலேயே பெறவேண்டும். அதற்காக இங்குள்ள முற்போக்கு சக்திகளுடன் இணையமுடியவில்லை.

2.இந்தியாவை நம்புகிறார்கள். சர்வதேசத்துடன் முறையான உறவைப் பேணவில்லை.

3.தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அங்கத்துவ கட்சிகளிடையே பிளவு.

இவ்வாறான விடயங்களை நிதானமாக ஆராய்ந்தால் எதிர்வரும் மாகாணசபை தேர்தலுக்கு முன்பாக இதுபோன்ற விமர்சனங்களும் இது தொடர்பான மேலும் பல நடவடிக்கைகளும் விரிவடையும் என்பதை உறுதியாக நம்பலாம். இங்கே பல்வேறு வகையான அரசியல் சுயநலன்களே காரணங்களாக அமைகின்றன.

1.தீவிர தேசியம் பேசுகின்ற சக்திகள் தங்களது பாதையில் தெளிவில்லாத போதும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை பலவீனப்படுத்துவதற்காகவே செயல்படுகிறார்கள்.

2.தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்ற வகையில் கூட்டும் மக்கள் ஆதரவை பெற வாய்ப்புள்ள கட்சிகள் சந்தர்ப்பம் உள்ளபோதே தமது கட்சிகளை வளர்த்துக் கொள்ளத் தீவிர ஆர்வம் காட்டுகின்றனர்.

3.தமிழ்த் தேசியம் என்று ஒன்றில்லை என்று கருதும் அரசு மிகவும் தெளிவாக தனது எதிரி யார் என்பதனைப் புரிந்துகொண்டு அந்த எதிரிக்கெதிராகப் போராடுபவர்களுக்கு ஆதரவு வழங்குகிறார்கள்.

இவை யாவும் இயல்பான விடயங்களே. தமிழ் மக்களது அரசியல் வரலாற்றில் இவை புதுமையானவையல்ல.

நந்திக் கடலோரத்தில் தமிழனின் வீரம் உறங்கியது. தமிழினம் அழிந்து விடவில்லை. தமிழனின் விவேகம் சம்பந்தன் என்ற தலைமையில் விழித்தெழுந்தது. கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் எதிர்த்து களமிறங்கியவர்கள், இறக்கப்பட்டவர்களுக்கு தமிழ் மக்கள் வழங்கிய தீர்ப்பும், கிழக்கு மாகாணசபைத் தேர்தல் முடிவுகளும் உண்மை நிலையை தெளிவுபடுத்தக் கூடியவை.

இன்று அரசோ, அரசின் சார்பாக செயல்படும் தமிழ் குழுக்களோ, தமிழினத்தின் நலன்களுக்குப் பாதகமாகச் செயற்படுவது வெளிப்படையானது. ஆனால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அங்கத்துவ கட்சிகளாக, நாடாளுமன்ற உறுப்பினர்களாக உள்ளவர்கள் தலைமைக்கு மாறாக முன்வைக்கும் விமர்சனங்களை தமிழ் மக்கள் அங்கீகரிப்பார்களா? என்பதனை கடந்தகால வரலாற்றில் இருந்து புரிந்துகொள்ள முயல்வது பயனுள்ளதாகும். ★

# பேய்கள் பின்தொடர்...

(சூரியகாந்தி 1ஆம் பக்கத் தொடர்ச்சி)



கட்டடக்காடுகளை எழுப்பி விடுவதால் மாத்திரம் மக்களின் வாழ்வு வளம் பெற்றுவிட்டதாக அர்த்தமாகாது. அவர்களின் வாழ்வு எந்தவித இடருமின்றி அதன் பாட்டிலேயே அமைவதற்கான ஏது நிலைகள் வன்னியில் இல்லை. வாழ்வை வளமாக்கும் எந்தவொரு முயற்சியில் இறங்கினாலும், படைத்தரப்பின் குறுக்கீடு தொடரவே செய்கிறது. கவரில் பட்டதாக மீண்டும் பூச்சியப் புள்ளிக்கே அவர்களது வாழ்வு திரும்பவேண்டியிருக்கிறது.

குடும்பப் பாரச் சிலுவைகளை சுமக்க வேண்டிய ஆண்களில் பெரும்பாலானோரை போர் தின்றுவிட்டது. இன்னும் பலரின் அங்கங்களை அது எடுத்துக் கொண்டதால், ஊன்றுகோலோடும், சக்கர வண்டில்களிலுமே இன்னும் சில ஆண்களின் வாழ்க்கை பிறரின் துணை கொண்டு நகர வேண்டியிருக்கிறது.

இத்தகைய குடும்பச் சூழல் வந்து சேரும் நிலையில் குடும்பச் சிலுவையை பெண்களே சுமக்க வேண்டியிருக்கிறது. தலையில் "இயக்கத்தில் இருந்து வந்தவள்" என்ற ஊரின் கேலிச் சொற்கள் முள்முடியாகி, இரத்தத்தை சொட்ட வைக்க குடும்பப் பாரச் சிலுவையை தோளில் தூக்கி வைத்தனர் இந்தப் பெண்கள். ஆனால் எந்தத் திசையை நோக்கிப் பயணிப்பது என்று அவர்களுக்குத் தெரியவில்லை.

இந்தச் சமயத்தில் தான் படைத் தரப்புக்கு பெண்களைத் திரட்டும் பணியை அரசு காதும் காதும் வைத்தது போல் தொடங்கியிருந்தது. பகிரங்க விண்ணப்பத்தினூடாக அதிலிருந்து உரியவர்களைத் தெரிவு செய்வதே இதுவரை கடைப்பிடிக்கப்பட்டு வந்த மரபார்ந்த முறை. ஆனால் தமிழ்ப் பெண்களை படைத்தரப்புக்குள் உள்வாங்கிவிட வேண்டும் என்ற உள் நோக்கோடு அந்த மரபை பகிஷ்கரிப்பாக மிதித்தது அரசு.

"பிரித்" ஓதி, குடும்பங்களிடம் இருந்து பெண்களை பிரித்தெடுத்தனர். பெற்றோரே மனமுவந்து தம் பெண் பிள்ளைகளை படையில் சேர்த்ததாக பறைசாற்றினர். ஆனால் வறுமையும், தொழில் தேட வேண்டிய நிர்ப்பந்தமுமே இத்தகைய படுகுழியில் தங்கள் பிள்ளைகளை தாங்களே தள்ளவேண்டிய நிலையை ஏற்படுத்தியதாக பெற்றோர்கள் இப்போது கதறுகிறார்கள்.

படைக்குப் போன பெண்களில் சிலர் அடுத்து வந்த நாள்களிலேயே மீண்டும் திரும்பி வந்தனர். அவர்களின் கண்களில் ஒருவித பயம் ஒட்டியிருந்தது. அதன் பின்னர் ஏனைய பெண்கள் வீட்டுக்குச் செல்லப்போவதாக கேட்டுள்ளனர். ஆனால் இப்படியே விட்டால் கடைசியில் இணைந்தவர்கள் எல்லோருமே போய் விடுவார்கள் என்பதால் அனுமதி மறுக்கப்பட்டது.

இந்த நிலையில் தான் மனநலம் பாதிக்கப்பட்ட நிலையில் படைக்குச் சேர்ந்த 13 பெண்கள் மருத்துவமனையில் தனிப்பிரிவில் அனுமதிக்கப்பட்டனர். அவர்கள் தங்களை பேய் பிடித்திருப்பதாக சொல்லிக்கொண்டனர். இன்னும் சிலர் ஒருபடி மேலே போய் 'கலையாடவும்' தொடங்கினர். பிரித் நூலுக்கும், பூசாரிகளின் மந்திரங்களுக்கும் அந்தப் பேய்கள் கட்டுப்பட்டதாகத் தெரியவில்லை. அவை இனத்தின் மானத்தை அடகுவைத்து விட்டதாக எழுந்த குற்ற உணர்ச்சியில் உருவாகிய பேய்கள். எல்லாப் பேய்களும் இரத்தம் குடிப்பவை அல்ல. நல்லதைச் செய்யும் பேய்களும் உண்டு. இந்தப் பெண்களுக்கு அவர்களின் தவறை தொடராதிருக்க பேய்கள் இன்னும் வரலாம்.

# அங்கும் இங்கும்...


(சூரியகாந்தி 21 ஆம் பக்கத் தொடர்ச்சி)

...ம் தாங்கிக்கொண்டு நடத்திய போராட்டம் இறுதியில் பலன் தந்திருக்கிறது, சில நாள்களுக்கு முன்பு. சர்வாதிகாரத்தனமான அதிகாரங்களை ஜனாதிபதிக்குக் கொடுக்கும் உரிமைகளை அரசியல் சாசனத்தில் இருந்து விலக்கிவிட்டார்கள் இஸ்லாமிய சகோதரர் கட்சியினர். ஆனாலும் இன்னும் பல விடயங்களில் மாற்றங்கள் கோரப்படுகிறது.

### குழப்பங்களும் இனிதே காத்திருக்கின்றன

இந்தக் கட்டுரை எழுதிக்கொண்டிருக்கும்போது எகிப்தின் எதிர்க்கட்சியினர் இன்னொரு பிரச்சினையில் தங்களுக்குள் பிரிவுபட்டிருக்கிறார்கள். இந்த அரசியல் சாசனத்தை மக்கள் அங்கீகரிக்கிறார்களா என்பதை [illegible] கான வாக்கெடுப்பு [illegible] இந்தக் குழப்பம் ஏற்பட்டுள்ளது. இந்தத் தேர்தலை முழுவதுமாகப் புறக்கணித்துக் கொண்டு ஆர்ப்பாட்டப் போராட்டங்களைத் தொடரவேண்டும் என்று ஒரு பகுதியும், போராட்டங்களை நடத்தினாலும் வாக்கு நிலையங்களுக்குச் சென்று அரசியல் சாசனத்துக்கு எதிராக வாக்களிக்கும்படி மக்களைக் கேட்டுக்கொள்ள வேண்டும் என்று இன்னொரு பகுதியும் வாதாடிக்கொண்டிருக்கின்றன. அதே சமயம் இந்தப் போராட்டங்களாலும், நீதிபதிகளின் அரசுக்கு எதிரான வேலை நிறுத்தத்தாலும் நாடு முழுவதும் தேர்[illegible]த்தில் நடத்த முடியா[illegible]ட்டு தேர்தல் குழுவினர் வாக்கெடுப்பு நாள்களை இரண்டாகப் பிரித்திருக்கிறார்கள். எகிப்து கொதித்துக் கொண்டிருக்கிறது. பல வருடங்களாக இஸ்லாமிய உலகத்தில் சமூக இயக்கங்கள் மூலம் நல்ல பெயர் வாங்கிய இஸ்லாமியச் சகோதரர் இயக்கத்துக்கு வந்திருக்கும் முதலாவது அரசியல் சோதனை இது என்பதால் இதை எகிப்தில் எப்படிச் சமாளிக்கப்போகிறார்கள் என்று உலகமே கவனித்துக்கொண்டிருக்கிறது. இந்தக் கட்டுரையில் வரும் விடயங்கள் இலங்கைக்கும் பொருத்தமானவை. ஆனால் மீண்டும் மீண்டும் போராடு-விடுதலை பெறு என்ற தலைப்பின் கீழ் வரும் விடயத்தை மட்டும், வாசிப்பவர்கள் கனவில் கூட நினைத்துப் பார்க்க கூடாது. நினைத்தால் நீங்கள் ஏதோ வாதிகள். ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஜனநாயகத்தின் பேரால் உலகில் இடம்பெறும் எதிர்மறை போக்குகள்

- உலகப் பிரகடனத்திலுள்ள அடிப்படை மனித உரிமைகள்
- பான் கீ மூன் சுட்டிக் காட்டும் முக்கிய விடயங்கள்
- வடகொரியாவின் சர்ச்சைக்குரிய ஏவுகணை சோதனை
- யுனெஸ்கோ விருது பெறும் பிஷப் டூட்டு

உலக நடப்புகள் ஒரு பார்வை

■ ரெங்கன்

எந்த ஒரு மனிதனும் விசாரணைக்கு உட்படுத்தப்படும் போது, அந்த மனிதன் சொல்ல விரும்பும் கருத்து செவிமடுக்கப்பட வேண்டும், அதனைப் புறந்தள்ளி விட முடியாது.

இது ஐ.நா.மனித உரிமைகள் தொடர்பான உலகப் பிரகடனத்தில் இடம்பெற்றுள்ள அடிப்படை உரிமைகளில் ஒன்றாகும்.

அண்மையில் உலக மனித உரிமைகள் தினத்தை முன்னிட்டு ஐ.நா செயலாளர் நாயகம் பான் கீ மூன் வெளியிட்ட கருத்துரையில் இதனை சுட்டிக் காட்டியுள்ளனர்.

இலங்கை போன்ற பலநாடுகளில் இன்று தலைதூக்கியுள்ள ஜனநாயகத்துக்கு மாறான பல விடயங்களை மனதில் வைத்துக் கொண்டே செயலாளர் நாயகம் இந்தக் கருத்தை வெளியிட்டுள்ளார் என்று கருத்துரை முடிகிறது. எந்த ஒரு மனிதனும் தாம் சொல்வது (விசாரணைகளின் போது) கேட்கப்பட வேண்டும் என்பதற்கு உரிமை பெற்றிருக்கிறார். இந்த உரிமையானது மனித உரிமைக்கான உலக பிரகடனத்தில் இடம் பெற்றுள்ளது. மற்றும் சர்வதேச சட்டத்திலும் இது முழுமையாக இணைக்கப்பட்டுள்ளது. சிவில் மற்றும் அரசியல் தொடர்பான சர்வதேச ஒப்பந்தத்தின் 25 அத்தியாயத்திலும் இது விசேஷமாக சேர்க்கப்பட்டுள்ளது.

**பெண்கள் புறக்கணிப்பு**

பெண்கள் எங்கும் எல்லா சந்தர்ப்பங்களிலும் வாக்களிப்பதற்கு உரிமை பெற்றிருக்கிறார்கள். ஆனால் பெருமளவில் நாடாளுமன்றங்களிலும், அமைதி முயற்சிகளிலும் உயர்தர அரச பதவிகளிலும், கூட்டுறவு சபைகளிலும் இன்றும் தீர்மானம் எடுக்கும் வேறு அமைப்புகளிலும் குறைந்த அளவிலேயே பிரதிநிதித்துவம் அளிக்கப்பட்டுள்ளார்கள். உள்ளூர் ஆதிவாசிமக்கள் அடிக்கடி இம்மாதிரி பாரபட்சத்துக்கு உள்ளாகி வருகிறார்கள். அவர்களின் உத்தரவாதமளிக்கப்பட்ட இந்த உரிமையை முழுமையாக அனுபவிக்க முடியாமல் மறுக்கப்படுகிறார்கள் அல்லது அவர்களின் சுற்றுச்சூழல் அதனை அனுபவிக்க முடியாமல் தடுத்து விடுகின்றது.

**சிறுபான்மை இனத்தவர்**

சமயப் பிரிவினர், இனரீதியான சிறுபான்மையினர், மற்றும் வலுவிழந்தவர்கள் அல்லது பால்நிலை மாற்றமுள்ளவர்கள் அல்லது மாற்று அரசியல் கருத்துடையவர்கள் எல்லாம் முக்கிய நிறுவனங்களின் செயற்பாடுகளில் பங்கு கொள்வதிலிருந்து தடுக்கப்படுகிறார்கள். இம்மாதிரி பொது நிறுவனங்கள் மற்றும் பொதுக் கருத்து பரிமாற்றங்களில் சமுதாயத்தின் சகல பிரிவினரும் பிரதிநிதித்துவம் பெறவேண்டும்.

உலகின் பலபாகங்களில் பெரும்பாடுபட்டு வென்றெடுக்கப்பட்ட ஜனநாயக ஆட்சி முறைகளுக்கு பெரும் அச்சுறுத்தல்கள் ஏற்பட்டிருப்பதைப் பார்க்கின்றோம். சில நாடுகளில் சிவில் சமுதாயப் பிரிவுகள் தடைகளுக்கும் பெரும் அழுத்தங்களுக்கும் உள்ளாகி வருகிறார்கள்.

சிவில் நிறுவனங்களை குறிப்பாக குறிவைத்து சட்டங்கள் இயற்றப்பட்டுள்ளன. அதனால் அவை எந்த வகையிலும் செயற்பட முடியாத நிலைமை தோற்றுவிக்கப்பட்டுள்ளது. ஜனநாயத்துக்காக போராடும் வீரர்கள் எதிர்மறையான புதிய நிலைமைகளை எதிர்கொள்ள நேர்ந்துள்ளது. இந்த பின்னடைவான நிலைமையானது எல்லோரையும் ஆழ்ந்த [illegible] செய்துள்ளது.

எந்த ஒரு நாட்டினாலும் தனது நாட்டு மக்கள் அனைவருமே பொது விடயங்களில் பங்கேற்பதை உறுதிப்படுத்துவதில் இன்னமும் வெற்றி காணப்படவில்லை.

என்று பான் கீ மூன் கவலை தெரிவித்துள்ளார்.

**வடகொரியாவின் வெற்றிகரமான ஏவுகணைச் சோதனை**

பல உலக நாடுகள் குறிப்பாக அமெரிக்காவின் கடும் எதிர்ப்பையும் மீறி வடகொரியா தனது தொலைதூர ஏவுகணைச் சோதனையை வெற்றிகரமாக நடத்தி முடித்துள்ளது.

வடகொரியாவின் முன்னாள் ஆட்சியாளரின் முதலாவது இறந்த நினைவு தினத்துக்கு முன்னதாக இந்த சோதனையை நடத்தி அவர் கனவை நனவாக்கியிருக்கிறார்கள் இன்றைய வடகொரிய தலைவர்கள்.

அமெரிக்கா உட்பட [illegible] வல்லரசு நாடுகள் [illegible] எதிர்த்துள்ள நிலையில் சீனாவும் தன் கவலையை வெளியிட்டுள்ளது. வடகொரியா ஏவுகணை சோதனையை நடத்தி முடித்துள்ள அதேவேளை இது பற்றி ஆராய்வதற்காக ஐ.நா பாதுகாப்பு சபை அவசரமாக கூடியது. வடகொரியாவின் கண்டம் விட்டுக்கண்டம் பாயும் ஏவுகணை மற்றும் அணு ஆயுத சோதனைகளுக்கு எதிராக பாதுகாப்பு சபை ஒன்றுக்கு பின் ஒன்றாக பல பொருளாதார தடைகளை விதித்துள்ள போதிலும் எதுவித பயனும் இதுவரை ஏற்படவில்லை.

வடகொரியாவை பொறுத்தவரை இந்த சோதனை சர்வதேச மட்டத்தில் தடைசெய்யப்பட்டதொன்றல்ல. விண் வெளியில் விஞ்ஞான ஆய்வுக்கான கலம் ஒன்றை நிலை நிறுத்துவதற்கான ஆராய்ச்சியே என்று கூறிக்கொள்கின்றது. இந்த சோதனை அதன் முழு நோக்கத்தையும் எட்டியுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

**யு.எஸ்,ஐரோப்பாவை மிஞ்சிவிடும் ஆசியா**

2030 ஆம் ஆண்டளவில் பொருளாதாரத்தில் அமெரிக்கா, ஐரோப்பிய நாடுகளை பின்தள்ளி விட்டு ஆசியா முன்னேறிவிடும். அமெரிக்க புலனாய்வு அமைப்பு [illegible] டுள்ளது.

இருபதாண்டுகளில் அமெரிக்காவை பின் தள்ளி விட்டு உலகின் மிகப்பெரிய பொருளாதார நாடாக சீனா வளர்ந்துவிடும் என்கிறது அந்த எதிர்வுகூறும் அறிக்கை. அமெரிக்காவைப் போல ஒரு சூப்பர் வல்லரசாக சீனா வளர்ந்துவிடும் என்று கூறமுடியாவிட்டாலும் பொருளாதாரத்தில் அமெரிக்கா, ஐரோப்பா போன்ற நாடுகளை அது மிஞ்சிவிடும் என்று கூறும் அவ்வறிக்கை மெதுவான வளர்ச்சி, வாழ்க்கைத்தரம் வீழ்ச்சியுறுதல் போன்றவற்றுடன் வயதானவர்களின் எண்ணிக்கை அதிகரிப்பும் வளர்ந்த நாடுகளில் ஒரு பிரச்சினையாக இருக்கும் என்கின்றது.

**மண்டேலாவின் பிரகாசம் மங்கி வருகிறது.**

தமது வயதான கணவரின் பிரகாசம் மங்கி வருகிறது என்று தென்னாபிரிக்காவின் விடுதலை வீரரும் சரித்திர புருஷரும் நோபல் பரிசு பெற்றவருமான நெல்சன்மண்டேலாவின் மனைவி கிரேஸ் மண்டேலா கூறியிருக்கிறார். தென்னாபிரிக்க மருத்துவமனையொன்றில் மேலும் பல உடல் சோதனைக்காக தங்கியிருக்கும் மண்டேலாவுக்கு இப்போது 94 வயதாகின்றது. திருமதி மண்டேலா தம் கணவரின் உடல்நிலை பற்றி விரிவாக ஒன்றும் சொல்லாது போனாலும் வயது முதிர்ந்து கொண்டிருக்கும் அவரை பார்ப்பதற்கு வேதனையாக இருக்கிறது என்று கவலையுடன் தொலைக்காட்சி பேட்டியொன்றில் கூறினார். தென்னாபிரிக்க அரச அதிகாரிகள் அவர் சௌக்கியமாக இருப்பதாகவும் அஞ்சும்படி ஒன்றுமில்லையென்றும் கூறினார்கள். ஆனால் பிரிட்டோரிய மருத்துவ மனையில் இருந்து அவர் எப்போது விடுவிக்கப்படுவார் என்பதைக்கூற அவர்கள் மறுத்து விட்டார்கள்.

**அமெரிக்காவின் இரகசிய விண்வெளி ஓடம்**

இரகசிய விண்வெளிஓடம் ஒன்றை வரும் செவ்வாய்க்கிழமை விண்ணில் செலுத்தவிருப்பதாக தகவல் கசிந்துள்ளது. விமானிகள் இல்லாத இந்த இராணுவ விமானம் ஏற்கனவே ஓய்வு பெற்றுவிட்ட ஷட்டில் ஏவுகணையைப் போல பூமிக்கு தகவல்களையும் விண்பொருள்களையும் அனுப்பி வைப்பதோடு 270 நாள்களுக்கு மேல் விண்வெளியில் வலம் வரும்.

**ஆர்ச் பிஷப் டூட்டுவுக்கு மனித உரிமைகளுக்கான யுனஸ்கோ விருது**

ஆர்ச் பிஷப் டெஸ்மொண்ட் டூட்டுவுக்கு மனித உரிமைக்கான யுனெஸ்கோ மற்றும் பில்பாவோ விருது வழங்கப்பட்டுள்ளது. தேசிய , பிராந்திய மற்றும் சர்வதேச மட்டத்தில் மனித உரிமையின் உலகளாவிய கலாசாரத்துக்காக பாடுபட்டமைக்காக இந்த விருது அவருக்கு வழங்கப்பட்டுள்ளது. புதிய தென்னாபிரிக்க தேசத்தை இனவாத மற்ற நாடாக கட்டியெழுப்புவதற்கும் உண்மை மற்றும் மீள் நல்லிணக்க ஆணைக்குழுவின் தலைவராக இருந்து தேசத்தைக் கட்டியெழுப்புவதற்கும் அவர் வழங்கியிருந்த பங்களிப்புக்காக இந்த விருது வழங்கப்படுவதாக நடுவர்கள் அறிவித்தனர். இவரது இந்தப் பணியானது மோதல்கள் இடம்பெற்று வரும் பல நாடுகளுக்கு முன்மாதிரியாக எடுத்துக்கொள்ளப்படுகின்றது.

பிஷப் டூட்டுவின் சார்பில் விருதினைப் பெற்றுக் கொள்வதற்காக அவரது புத்திரி பாரிஸிலுள்ள ஐ.நா. கலாசார பணிமனையில் சமுகமளித்திருந்தார்.

யுனெஸ்கோ/பில்பாவோ விருது 2008 ஆம் ஆண்டு ஸ்பெயினிலுள்ள பில்பாவோ நகரிலிருந்து கிடைக்கப்பெற்ற நன்கொடையொன்றையடுத்து இந்த விருது உருவாக்கப்பட்டது. 30,000 டொலருக்கான ஒரு காசோலை, ஒரு புலமைப் பரிசில் மற்றும் வெங்கலத்திலான வெற்றிச் சின்னம் முதலியனவை சிறந்த விருதில் அடங்கும்.

**உடலுக்கு வெளியில் குடலும் சுரலும்**

பிறந்ததிலிருந்து இரண்டரை வருடங்கள் மருத்துவமனையிலேயே கழித்த பின்னர் அந்த சிறுமி தன் பெற்றோருடன் கிறிஸ்மஸ் பண்டிகையைக் கொண்டாடுவதற்காக அண்மையில் தன் வீட்டுக்கு அழைத்துவரப்பட்டாள்.

அடவின் வில்லெட் என்ற அந்தச் சிறுமி பிறக்கும் போது அவளுடைய சுரலும் குடல்களும் உடலுக்கு வெளியிலேயே இருந்துள்ளன. இந்த நிலைமையைச் சரிசெய்வதற்கு மருத்துவர்கள் மாதத்துக்கு ஒன்று என்ற வகையில் 28 அறுவைச் சிகிச்சைகளை செய்திருக்கிறார்கள். இந்த கடுமையான சிகிச்சையைத் தாங்கிக் கொண்டு அவள் உயிருடன் இருந்துள்ளாள். அமெரிக்காவில் டெக்ஸாஸிலுள்ள குழந்தைகள் மருத்துவ மனையில் இந்த சிகிச்சை நடைபெற்றது. மருத்துவமனையிலிருந்து முதல் தடவையாக தன் குழந்தையைக் கையில் ஏந்திக் கொண்டு அதன் தாயாரான செரபினா சொவல் லொஸ் வெளியில் சென்ற போது கடந்த செவ்வாயன்று உணர்ச்சிப்பெருக்கில் தோய்ந்து போனார்.


இம்மாதிரி நிலைமை 10 ஆயிரத்தில் ஒருவருக்கே ஏற்படுவதுண்டு. அவள் வயிற்றில் இருந்த போதே இதைக் கண்டுபிடித்து விட்ட டாக்டர்கள், அதற்காக காத்திருந்துள்ளார்கள். ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன் விளம்பர தொடர்புகளுக்கு

உதயன்

☎ 0215671111
advt@uthayan.com





**Australian Government**

**அவுஸ்திரேலியாவுக்கு வீசா இல்லாமல் படகுமூலம் நீங்கள் பயணம் செய்தால்**

- உங்களது விண்ணப்பம் அவுஸ்திரேலியாவில் பரிசீலிக்கப்படாது போகலாம்.
- எனவே, நீங்கள் நவுறு, பப்புவா நியூகினி போன்ற வேறொரு நாட்டிற்கு இடமாற்றம் செய்ய வேண்டிய நிலை ஏற்படலாம்.
- இலங்கையிலுள்ள உங்களது குடும்பத்தினருக்கு அனுப்பவென நவுறுவிலோ அல்லது பப்புவா நியூகினியிலோ நீங்கள் பணத்தைச் சம்பாதிக்க முடியாது.
- விசேட மனிதாபிமான திட்டத்தின் அடிப்படையில் உங்களது குடும்பத்தை உங்களுடன் இணைத்துக்கொள்ளவென உங்களால் விண்ணப்பிக்க முடியாது.

மேலதிகத் தகவல்களை www.youtube.com/user/notopeoplesmuggling என்ற முகவரியில் 'ஆட்கடத்தலுக்கு மறுப்பு' என்ற யூ டியூப் அலைவரிசை மூலம் பெற்றுக்கொள்ள முடியும்.



# அசலைப் போல் வேறெதுவும் பொருந்துவதில்லை



**உங்கள் மோட்டார் சைக்கிள்களுக்கும் முச்சக்கரவண்டிகளுக்கும்**

**அசல் பஜாஜ் உதிரிப்பாகங்கள்**

**மட்டுமே பொருத்திக்கொள்ளுங்கள்.**

உங்கள் மோட்டார் சைக்கிள் மற்றும் முச்சக்கரவண்டியின் நீண்ட தூர ஓட்டத்திற்கு அசல் உதிரிப்பாகங்களை மட்டும் பாவிப்பதே மிகப் பொருத்தமானதாக அமையும். அதன் நீடித்த உழைப்பு உங்கள் மனதிற்கு மிகப்பெரியதொரு நிம்மதியைத் தருவதுடன் அவற்றை அடிக்கடி மாற்றுவதற்கு அவசியமில்லாததால் சிக்கனமாகவும் அமையும்.

**டேவிட் பீரிஸ் மோட்டார் கம்பனி லிமிட்டட்**

நிறுவன பதிவு இலக்கம்: PB270

75, ஹைட் பார்க் கோணர், கொழும்பு 02. தொ.பே: 011-4700600 மின்னஞ்சல்: info@dpmco.com இணையத்தளம்: www.dpmco.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1717 FOLLOW US ON www.mobitel.lk

# நத்தார் பண்டிகைகாலத்தில் மிகவும் குறைந்த IDD கட்டணம்

கீழுள்ள கட்டணங்கள் செக்கன் அடிப்படையில் அறிவிடப்படும்

| நாடு | கட்டணம் (நிமி. ஒன்றுக்கு) | நாடு | கட்டணம் (நிமி. ஒன்றுக்கு) |
| --- | --- | --- | --- |
| அவுஸ்திரேலியா | ரூ. 1.80 | ஐக்கிய அரபு இராச்சியம் | ரூ. 14.00 |
| கனடா | ரூ. 1.00 | ஐக்கிய இராச்சியம் | ரூ. 1.00 |
| சவூதி அரேபியா | ரூ. 7.50 | ஐக்கிய அமெரிக்கா | ரூ. 1.00 |

இச் சலுகை 2012 டிசெம்பர் 1-31 வரை மட்டுமே செல்லுபடியாகும்.

விபரங்களுக்கு 433 இனை அழைக்கவும்.

இக்கட்டணங்கள் IDD Buddy மூலம் மாத்திரமே: உதாரணம்: 100 <தேச குறியீடு> <அழைப்பவரின் இலக்கம்>

மேற்கூறிய கட்டணங்கள் நிலையான தொலைபேசிகளுக்கு மாத்திரமே.

அரச வரிகள் மற்றும் தீர்வைகளுக்கு உட்பட்டது. *நிபந்தனைகளுக்கு உட்பட்டது.

Sri Lanka Telecom Mobitel We Care. Always.

TRIAD 27008



இந்த பண்டிகைக்காலத்தில் தேவையற்ற விதத்தில் செலவாகும் மின் கட்டணத்தை குறைத்துக் கொள்ள மிகச் சிறந்த தீர்வு...

# மின் கட்டணத்தினை குறைக்கும் புரட்சிகரமான

## இன்டலிஜன்ட் பவர் சேவர்

மின்சார கட்டணத்தினை குறைக்கும் நோக்கில் நீங்கள் எந்தளவு சிக்கனமாக மின்சாரத்தினை பாவித்த போதிலும் மாத இறுதியில் மின்சார கட்டணம் பாரிய தொகையாக இருப்பது உங்களுக்கு சிக்கலாக இருக்கின்றது. ஜேர்மனிய தொழில்நுட்பத்தில் வரும் இன்டலிஜன்ட் பவர் சேவர் உபகரணம் உங்களின் சாதாரண மாதாந்த மின்கட்டணத்தினை 20% - 30% இடைப்பட்ட அளவிற்கு குறைத்து உங்களின் மனதிற்கு பாரிய நிம்மதியை தரும்.

- மின் கட்டணத்தினை 30% த்தினால் குறைக்கும்
- மின் உபகரணங்கள் அதிகம் சூடாவதால் ஏற்படும் விளைவுகளை தவிர்த்தல்
- இலகுவாக பொருத்தலாம்
- மாறுபடாத நிலையான மின்பாய்ச்சலை பெற்றுக் கொள்ளல்
- சுற்றாடலுக்கு மாசற்றது

நாடெங்கிலும் உள்ள எமது விநியோக வலையமைப்பினூடாக பெற்றுக் கொள்ள முடியும். கொழும்பு, காலி, ஹோமாகம, ஹொரனை, யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, அம்பாறை, கண்டி, கொஹுவலை, குருநாகலை, மாத்தறை, நீர்கொழும்பு, வத்தளை

Sales Inquiry:
Ram Periyasamy (Manager-Sadaharitha Plantation-Jaffna Premier Center)
Mob: 0773 62 62 30 / 320, Main Street, Jaffna
(Oppo- David Pieris Motor Company)
Ram - 0773626230 - Rajesh - 0773550082
Anton - 0771173007
Shiyam - 0773721944 - Nirojan - 0772399803

Dealer /Distributor Wanted for Jaffna District : Call : QURAISH ON 0771 469468 for further details.

ஒரு வருட உத்தரவாதம்

Electri Sévo

விலை: ரூ. 5950/-

இறக்குமதி செய்து விநியோகிப்பவர் திரீ சிக்ஸ் (Three-Six) மார்வண்ஸ் (தனியார்) நிறுவனம். 6ஏ, அல்பேர்ட் பிளேஸ், கொழும்பு 03. பெக்ஸ்: 011 256 4001

www.splendor.lk




இப்போது

உங்களது


# எசட்லைன்

லீசிங் தவணைக் கட்டணத்தை அருகில் உள்ள மக்கள் வங்கி அல்லது சம்பத் வங்கி கிளையில் செலுத்தமுடியும்.





மக்கள் வங்கியின் பண வைப்புச் சீட்டில் காட்டப்பட்டிருக்கும் இடத்தில் உங்களது குறியீட்டு இலக்கத்தை குறிப்பிடுங்கள்




சம்பத் வங்கியின் பண வைப்புச் சீட்டில் காட்டப்பட்டிருக்கும் இடத்தில் கணக்கு இலக்கம் மற்றும் உங்களது குறியீட்டு இலக்கத்தை குறிப்பிடுங்கள்




உங்கள் குறியீட்டு இலக்கத்தை பண வைப்புச் சீட்டில் கணக்கு இலக்கத்தை குறிப்பிடும் இடத்தில் குறிப்பிடவும். உங்களது தொலைப்பேசி இலக்கத்தையும் அவ்விடத்தில் குறிப்பிடவும்.

எசட்லைன்

## எசட்லைன் லீசிங் கம்பனி லிமிட்டட்

இல.120 - 120 A பன்னிபிடிய வீதி, பத்தரமுல்லை தொ: 011 4700100 பெக்ஸ்: 011 4700101

www.assetline.lk ... PB 82 FLA/055 எனும் இலக்கத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

MACKSONS PAINTS WORLDWIDE

Multilac®
PREMIUM PAINTS






உணவு மற்றும் தங்குமிட வசதி இலவசம்

4 நாட்கள், 3 இரவுகள் சவாரி

கைச்செலவுக்கு 250 சிங்கப்பூர் டொலர்

கப்பல் மற்றும் விமானப் பயணச்சீட்டு இலவசம்

## வெற்றிப்பெற நீங்கள் செய்யவேண்டியது

மல்டிலெக் பிரீமியம் இமல்ஷன், மல்டிலெக் வெதர்காட், மல்டிலெக் வோட்டர் புரூவிங் சீலர், மல்டிலெக் நொன் பெலொவிங் எனமல் பிரிலியன்ட் வைட் பெயின்ட் அல்லது அறிமுகப்படுத்தப்பட்ட புத்தம் புதிய மல்டிலெக் ப்ளேட்டினம் பெயின்ற் வகைகளில் 4 லீற்றர்களைக் கொள்வனவு செய்யுங்கள்.
விற்பனை முகவரிடம் இருந்து பெற்ற பரிசுக்கூப்பனை நிரப்பி, மேலுறைகளுடன், மல்டிலெக் பெயின்ற் கொள்வனவு செய்த பற்றுச் சீட்டையும் இணைத்து இன்றே அனுப்பி வையுங்கள்.

மல்டிலெக் உல்லாசப் பயணக் கப்பல் சவாரி, த.பெ. இல.2024, கொழும்பு.

**மல்டிலெக் உல்லாசப் பயணக் கப்பல் சவாரி போட்டிக் காலம் நவம்பர் 01, 2012 முதல் ஜனவரி 15, 2013 வரை இடம்பெறும். வாராந்தம் மூன்று வெற்றியாளர்கள் தெரிவு செய்யப்படுவார்கள்.**



www.multilac.com
Hotline 0772 222555

லீற்றர் ரூபா 755/- முதல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அப்பிள் பழச்சாறு உடல் எடையை குறைக்குமாம்



அப்பிளானது உடலுக்கு நல்லது என்பதால் தினமும் ஒரு அப்பிள் சாப்பிட வேண்டும் என்று மருத்துவர்கள் கூறுகின்றனர்.

அதேபோல் அப்பிள் பழச்சாற்றால் ஆன வினிகரும் கூட உடலுக்கு மிகவும் சிறந்தது. மேலும் அது டயட் மேற்கொள்வோருக்கு ஒரு சிறந்த உணவுப் பொருள். ஆனால் ஒன்றை மட்டும் நினைவில் கொள்ள வேண்டும். அப்பிள் பழச் சாற்றால் ஆன வினிகர் ஒருவித அமிலத் தன்மையை கொண்டுள்ளதால், அதனை அளவுக்கு அதிகமாக சாப்பிட்டால் உடலுக்கு பாதிப்புத் தான் ஏற்படும். ஆகவே அதனை ஒரு நாளைக்கு 1-2 டீஸ்பூன், உணவுக்கு முன் சாப்பிட வேண்டும். அதிலும் அதனை சிறிது நீரில் கலந்து சாப்பிட வேண்டும். இதனை சாப்பிடுவதால் உடல் எடை குறைவதோடு, ஒரு சில நோய்களுக்கும் சிறந்தது.

அதிலும் உடலில் உள்ள அதிகமான கொழுப்பைக் கரைக்க அப்பிள் பழச்சாற்றால் ஆன வினிகர் மிகவும் சிறந்தது. இது உடலில் உள்ள கொழுப்பை மட்டும் கரைக்காமல், அடிக்கடி பசி ஏற்படுவதையும் தடை செய்கிறது. மேலும் வினிகரில் இருக்கும் பெக்டின் என்னும் பொருள் உடலில் இருக்கும் கொழுப்புகளை இணைத்து, உடலில் இருந்து வெளியேற்றுகிறது. அதனால் உடனே எடை குறைவது எந்த ஒரு பாதிப்பையும் ஏற்படுத்தாததாக உள்ளது. மேலும் அப்பிள் பழச் சாற்றாலான வினிகரின் சுவை பிடிக் காதவர்கள், அதில்வரும் மாத்திரைகளை சாப்பிடலாம். அது கூட விரைவில் உண்ணும் உணவுகளை செரித்துவிடும்.

மேலும் ஒரு சில ஆராய்ச்சியில் அப்பிள் பழச்சாற்றால் ஆன வினிகரை சாப்பிடுவதால், உடலில் உள்ள சர்க்கரையின் அளவானது குறைகிறது என்று நிரூபிக்கப்பட்டுள்ளது. மேலும் உடலில் உள்ள குளுக்கோஸ் அளவைக் குறைப்பதால், இது நீரிழிவு நோயாளிகளுக்கு மிகவும் சிறந்த மருந்து என்றே கூறலாம். அதுமட்டுமல்லாமல் இரவு சாப்பிடும் முன் இந்த சாற்றை குடிப்பதால் உடலில் உள்ள குளுக்கோஸின் அளவு காலையில் அதிகரிக்காமல் இருக்கும் என்றும் ஆய்வானது கூறுகிறது. ஆகவே இது ஒரு சிறந்த இயற்கையான மருத்துவ குணமுள்ள நீரிழிவு நோயாளிகளுக்கான மருந்து. இதனை அதிகம் குடித்தால் தொண்டையில் அரிப்பு ஏற்படும்.

அதுமட்டுமல்லாமல் இரத்த அழுத்தம் மற்றும் கொலஸ்ட்ரால் போன்ற பிரச்சினைகளுக்கும் மிகவும் சிறந்தது. இதனை வாரத்துக்கு 4-5 நாள்கள் சாப்பிட்டு வந்தால், இதய நோய் வராமல் தடுக்கலாம். மேலும் அதனை ஒரு நாளைக்கு அளவுக்கு அதிகமாக பயன்படுத்தினால், பற்களின் எனாமல் பாதிக்கப்படும்.

ஆகவே மேற்கூறியவாறு செய்து வந்தால், உடலில் உள்ள எடை குறைவதோடு, உடலானது ஆரோக்கியமாகவும் இருக்கும்.

# பதப்படுத்தப்பட்ட உணவுகள் புற்றுநோயை உண்டாக்குமா?

இன்றைய அவசரமான உலகில் எதையும் வீட்டில் சமைத்து உண்ணும் பழக்கமே குறைவாக உள்ளது. அதிலும் நேரத்தை செலவு பண்ணாமல் சேகரிக்க, பதப்படுத்தப்பட்ட உணவுகளை உண்ணுகின்றனர். அதிலும் பன்றிக் கறி, மாட்டிறைச்சி, கொத்துக்கறி, இஞ்சிபூண்டு கொண்டு செய்யப்பட்ட ஒரு சில உணவு வகைகள் மற்றும் கெட்டுப் போகாமல் இருக்க கெமிக்கல் கலந்த உணவுப் பொருள்கள் போன்றவற்றை வாங்கி சாப்பிடுகின்றனர். இவ்வாறு பதப்படுத்தப்பட்ட உணவுப் பொருள்களை உண்பதால் புற்றுநோய் ஏற்படும். அதிலும் ஒரு நாளைக்கு 150 கிராம் பதப்படுத்தப்பட்ட உணவுகளை உண்பது, 3-4 சிகரெட்களை பிடிப்பதற்கு சமமாகும் என்று மருத்துவர்கள் கூறுகின்றனர்.

உணவுகளானது கெட்டுப்போகாமல் இருக்க பதப்படுத்தப்பட்ட உணவுகளில் அதிகமாக கெமிக்கல்கள் பயன்படுத்துகின்றனர். அதிலும் முக்கியமாக நைட்ரைட் என்னும் பொருள் உணவுகளை கெட்டுப் போகாமல் நீண்ட நேரம் வைக்கிறது. மேலும் அத்தகைய உணவுகளில் கார்சினோஜென் எனப்படும் புற்றுநோயை உண்டாக்கும் பொருள் உள்ளது. அதுமட்டுமல்லாமல் அதிக உப்பும், கொழுப்பும் இருக்கிறது. அதன் காரணமாகவே பல நாடுகளில் பதப்படுத்தப்பட்ட உணவுகளுக்கு தடை விதிக்கின்றனர். ஆனால் ஒரு சில நாடுகளில் அவற்றுக்குத் தடை விதிக்கவில்லை. ஆகவே உடல் ஆரோக்கியமாக இருக்க பதப்படுத்தப்பட்ட உணவுகளை வாங்கி உண்பதை விட, சுத்தமான உணவுகளை தேர்ந்தெடுத்து உண்ண வேண்டும்.

பதப்படுத்தப்பட்ட உணவுகளால் பல வகையான புற்றுநோய்கள் வருகின்றன. அதில் அதிகமாக வரக்கூடியது கணையப் புற்றுநோய். இந்த நோய் வந்தால் கொஞ்சம் கொஞ்சமாக மனிதனைக் கொல்லும். இந்த நோய் வந்தால் ஆரம்பத்திலேயே கண்டுபிடிப்பது மிகவும் கடினம். சொல்லப்போனால் சிறிதளவு பதப்படுத்தப்பட்ட உணவுகளை உண்டாலே, அந்த நோய் வரும் அபாயம் உள்ளது. அதிலும் தற்போதைய ஆய்வில், இந்த உணவு உண்பவர்களுக்கு சிகரெட் படிப்பவர்களை விட அதிக அளவு கணைய புற்றுநோய் ஏற்படுகிறது என்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. மேலும் ஒரு சில உணவுகள் உடலில் கொழுப்புகளை சேர்த்து உடல் பருமனை அதிகரித்துவிடும் என்றும் கூறுகின்றனர்.

அதற்காக எந்த ஒரு பதப்படுத்தப்பட்ட உணவுகளையும் உண்ணக்கூடாது, அனைத்து உணவுகளும் புற்றுநோயை உண்டாக்கும் என்று சொல்லவில்லை. ஒரு சிலவற்றை உண்ணலாம், ஆனால் குறைந்த அளவே உண்ண வேண்டும். ஆகவே ஆரோக்கியமாக நீண்ட நாள்கள் வாழ வேண்டும் என்று ஆசைப்படுபவர்கள் சுத்தமான காய்கறி மற்றும் பழங்களை உண்ணலாம். மேலும் கடைகளில் உணவுப் பொருள்களை வாங்கும் போது நல்ல தரமுள்ள உணவுகளை, பதப்படுத்தாத உணவுகளை வாங்க வேண்டும். பதப்படுத்தப்பட்ட உணவுகளை வாங்கி உண்ண வேண்டும் என்றால் தினமும் 50 கிராம் அளவு மட்டும் போதுமானது.


VIDYASAGARA

தொழில் சார் பயிற்சியுடனான வெளிநாட்டு வேலைவாய்ப்பு

மத்திய கிழக்கு நாடுகளில் உள்ள பல்பொருள் அங்காடிகளில் (Supermarkets) காசாளர்களாகவும் பணியாளர்களாகவும் தொழில்புரிய எதிர்பார்க்கும் இளைஞர்களுக்கென மூன்று மாதகாலத் தொழிற்பயிற்சி நெறியினை எமது "வித்தியாசாகரா" நிறுவனமானது 2013 ஜனவரி மாதத்திலிருந்து வழங்கவுள்ளது.

இப்பயிற்சிக்கு விண்ணப்பிக்க விரும்பும் க.பொ.த (சா.த) பரீட்சையில் தாய்மொழி அல்லது கணிதம் அல்லது ஆங்கிலம் உட்பட 5 பாடங்களில் சித்தியெய்திய 18-30 வயதுக்குட்பட்ட ஆண் மற்றும் 21-30 வயதுக்குட்பட்ட பெண் இருபாலாரும் கீழே தரப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்பத்திரத்தைப் (A4 தாளில்) பூர்த்தி செய்து பின்வரும் முகவரிக்கு டிசம்பர் 23 திகதிக்கு முன்னர் கிடைக்கத்தக்கவாறு அனுப்பவேண்டும்.

விண்ணப்பங்களைப் பரிசீலித்துத் தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரிகள் பொது அறிவுப் பரீட்சைக்கும் நேர்முகத் தேர்வுக்கும் அழைக்கப்படுவர். அவற்றில் சித்திபெறுவோர் பயிற்சிநெறியில் இணைத்துக் கொள்ளப்படுவர். பயிற்சி நெறியை வெற்றிகரமாகப் பூர்த்திசெய்வோர் ஐக்கிய அரபு இராச்சியத்தில் அமைந்துள்ள எமது தொடர்பு நிறுவனங்களின் பல்பொருள் அங்காடிகளில் இருவருட ஒப்பந்தத்தின் அடிப்படையில் ஐக்கிய அரபு இராச்சிய பல்பொருள் அங்காடிகளுக்கு ஏற்புடைய சம்பளங்களின் அடிப்படையில் தொழிலில் அமர்த்தப்படுவர்.

தொழில் பயிற்சிக் கட்டணத்தின் ஒரு பகுதி (ரூபா 15,000) இலங்கையில் செலுத்தப்பட வேண்டும். மிகுதிக் கட்டணம் தொழில் வாய்ப்பினைப் பெற்ற பின்னர் தவணை அடிப்படையில் செலுத்த ஒழுங்கு செய்யப்படும். தொழிற் பயிற்சியின் போது மிகவும் அத்தியாவசியமானோருக்கு மாத்திரம் தங்குமிட வசதிகள் பெற்றுக் கொடுக்கப்படும். மேலதிக தகவல்களை நேர்முகப் பரீட்சையின் போது பெற்றுக் கொள்ளலாம்.

மாதிரி விண்ணப்பப் படிவம்:

1. முழுப் பெயர் : திரு/செல்வி ......
2. பிறந்த திகதி : ......
3. தற்போதைய வதிவிட முகவரி : ......
4. நிரந்தர முகவரி : ......
5. கிராம உத்தியோகத்தர் பிரிவு : ......
6. தொலைபேசி இலக்கம் (இருப்பின்) : ......
7. குடும்பத் தலைவர் பெயர் : (தந்தை/தாய்/வேறு) ......
8. க.பொ.த (சா.த) பரீட்சைப் பெறுபேறு:

| பாடம் | பெறுபேறு | பாடம் | பெறுபேறு |
|---|---|---|---|
| | | | |

9. உமது குடும்பம் பற்றிய வேறு ஏதேனும் தகவல்கள்:

திகதி

விண்ணப்பதாரியின் ஒப்பம்

SRI LANKA • SIERRA LEONE • CAMEROON • GHANA • BENIN • GUINEA • LIBERIA • TANZANIA • UK • USA • SPAIN • UAE • HONG KONG • THAILAND
INDONESIA • VIETNAM • JAPAN • OMAN • QATAR • BAHRAIN

விண்ணப்பங்கள் அனுப்பப் படவேண்டிய முகவரி:
Vidyasagara (Private) LTD
No. 105, St. Mary's Road, Colombo 15, Sri Lanka | Phone: 011 2540529 | Email: hr@vidyasagara.lk


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





பூனை மற்றும் இரவில் செயல் புரிகின்ற பிற விலங்குக் குடும்பத்தை சேர்ந்தவற்றினுடைய விழித் திரையின் பின்னணியில் டேப்டம் லுசிடம் எனப்படும் ஒரு படலம் உள்ளது.

விழித்திரையில் விழும் ஒளியைப் பிரதிபலிக்கும் ஆற்றல் வாய்ந்த சிறப்பு உயிரணுக்கள் இப்படலத்தில் உள்ளன. இந்தப் படலம்தான் இவ்விலங்குகளின் கண்கள் இருளில் ஒளிர்வதற்குக் காரணமாக அமைகிறது. இருளில் கிடைக்கும் சிறிதளவு ஒளியைச் சேகரிப்பதில் விலங்குகளுக்கு உதவுவதிலும் கூட இந்த டேப்டம் படலம்தான் உதவி புரிகிறது.

குழுவாக இருக்கும் எறும்புக் கூட்டத்தில் மூன்று வகை எறும்புகள் உள்ளன. இராணி எறும்பு, இறக்கைகளை உடைய ஆண் எறும்புகள், இறக்கைகளற்ற பெண் எறும்புகள் அல்லது வேலைக்கார எறும்புகள் என்பனவே அவை. வேலைக்கார எறும்புகளில் சில வேவு பார்க்கும் பணியும் செய்பவை. இந்த எறும்புகள் அங்குமிங்கும் சிதறி, உணவு தேடிக் கண்டு பிடிக்கும் பணி புரிபவை.

சர்க்கரை போன்ற உணவுப் பொருளைக் கண்டறிந்த எறும்பு உடன் தனது கூட்டுக்குத் திரும்பும். திரும்பும்போது தனது அடி வயிற்றிலிருந்து வாசனைப் பொருள் ஒன்றைத் தொடர்ந்து தரையில் விழச்செய்யும். இவ்வாசனைப் பொருளை நுகரும் பிற எறும்புகள் அவ்வழியே சென்று சர்க்கரை அல்லது உணவுப் பொருள்களைக் கண்டறிந்து கொள்கின்றனவாம்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கேற்வே கொலேஜ் மட்டுமே வழங்கும் கொன்வேர்ஷன் பாடநெறி

உங்களை Sri Lankan OLs செய்த பின் London ALs செய்யத் தயாராக்கும்.

International Teaching and Testing Institution of edexcel

உங்கள் பிள்ளை இந்த டிசம்பரில் Sri Lanka OL பரீட்சை எழுதுகின்றாரா?
அப்படியாயின் நான்கரை மாதங்கள் கொண்ட கொன்வேர்ஷன் பயிற்சிநெறி உங்கள் பிள்ளையை ஏனையவர்களைவிட சிறப்பாக 2013 ஜுன் மாதம் நடைபெறும் London AL பரீட்சைக்குத் தயாராக்கும்.

- 2013 மே London IGCSE பரீட்சைக்கு 5 பாடங்கள் English, Maths, Physics/Commerce, Chemistry/ Acounting & Biology/Economics
- இன்டர்நெஷனல் கம்பியூட்டர் ட்ரைவிங் லைசன்ஸ் (ICDL) தகுதி பெற விசேட கம்பியூட்டர் பயிற்சி நெறி.
- அக்சலரேட்டட் ஸ்கில்ஸ் அக்யுசிஷன் புரோகிராம் (ASAP) இப்பயிற்சி திட்டமானது தொழில்சார் திறமைகளை வளர்க்க உதவுவதோடு பாடசாலையில் அரிதாகக் காணப்படும், மென் திறமைகளை இனம் கண்டு வளர்க்கவும் உதவுகின்றது.

புலமைப்பரிசில்கள்

தேர்வுப் பரீட்சையில் அதி திறமையாக சித்தியடைவோருக்கும், விளையாட்டுத் துறையில் சாதித்தோர்களுக்கும் புலமைப்பரிசில்கள் வழங்கப்படும்

ஆரம்பம் – 9 ஜனவரி 2013

விரையுங்கள். இப்போதே பெயரைப் பதிவு செய்யலாம்

Gateway College

COLOMBO - 185, Koswatta Road, Rajagiriya.
Tel: +94 11 2888288 / 2888280 Fax: 011 2888282
Email : gis@gatewayworldwide.com

KANDY - No. 80, Wariyapola Sri Sumangala Mw, Asgiriya, Kandy.
Tel: 0 81 2200300 / 2200206 Fax: +94 81 2205604
E-mail: gkis@gatewayworldwide.com

NEGOMBO - No. 62, Negombo Road, Kurana, Negombo.
Tel: +94 31 2227772 / 2227722 Fax: 031-2227878
E-mail: gnis@gatewayworldwide.com

# கல்வித்துறையில் சாதனையை கொண்டாடுகிறது கேற்வே

★அதிக எண்ணிக்கையான எடெக்செல் ஹை அச்சிவ்வர்ஸ் விருதுகள்
★அதிக எண்ணிக்கையான உலகப் பரிசுகள்
★சர்வதேச GCSEயில் தலா 12 A நட்சத்திரப் பெறுபேறுகளுடன் இரு மாணவர்கள்
★சர்வதேச GCSEயில் இலங்கையின் அதிகூடிய நட்சத்திரப் பெறுபேறுகள்

மியூசியஸ் கல்லூரியின் கேட்போர் கூடத்தில் நடைபெற்ற வருடாந்த எடெக்செல் விருது வழங்கும் நிகழ்வில் 'கேட்வே' மாணவர்கள் சாதனை படைத்துள்ளார்கள். கடந்த வருட சாதனையைத் தொடர்ந்து இம்முறை இசுரி ரட்நாயக்க மற்றும் மினுரி தர்மசேன ஆகிய இரு மாணவிகளும் தலா 12 A நட்சத்திரப் பெறுபேறுகள் பெற்று பெருமை சேர்த்துள்ளார்கள். அத்துடன் நவிந்து சமரக்கொடி, விதுர அபேசேகர, சஷினி இத்தவெல ஆகிய மூன்று மாணவர்கள் தலா 11 A நட்சத்திரப் பெறுபேறுகளையும், தில்ஹார தென்னக்கோன் 10 A நட்சத்திரப் பெறுபேறுகளையும், தரிந்து மெண்டிஸ் 9 நட்சத்திரப் பெறுபேறுகளையும் பெற்று சாதனை படைத்துள்ளார்கள்.

அத்துடன் சஞ்சுலா வீரவர்தன, ரவீன் ஹத்தரசிங்க, டிலினி ஈரியகம, டியோன் நாணயக்கார, நத்தாலி லெனன், சீனத் பர்தவுஸ் ஆகியோர் தலா 8 A நட்சத்திரப் பெபேறுகளையும் சந்தலு 'ரியப்பெரும, தர்ஷன ஜயசுந்தர, பிரவீன் முத்துக்குமாரன, டெவோன் மல்லவாராச்சி, மகேஷா குலதுங்க ஆகியோர் தலா 7 A நட்சத்திரப் பெறுபேறுகளையும் ஏனைய மாணவர்கள் தலா 6 A, 5 A நட்சத்திரப் பெபேறுகளையும் பெற்றுள்ளனர்.

'கேற்வே' மாணவர்கள் தங்களது உயர்தரப் பரீட்சையிலும் சிறந்த பெறுபேறுகளைப் பெற்றுள்ளனர். திலின பண்டுவாவல, நிஸ்ரி நிஸார், ஆர்கில் பர்ஹாஸ், அப்ஸரா தென்னக்கோன் ஆகியோர் தலா 3 A பெறுபேறுகளையும் அப்ஸால் ஹாரூஸ் 4 A பெறுபேறுகளையும் பெற்றுள்ளனர். ஏராளமான மாணவர்கள் உலகப் பரிசுகளைப் பெற்றுள்ளனர். எடெக்செல் கீழ் இரண்டாம் நிலை பரீட்சைகளில் முதன் முறையாக 'கேற்வே'யின் சஜானா வீரவர்தன, நலீப் அஹமட் மஸார், நிர்மானி ரட்நாயக்க ஆகிய மூவரும் உலகளாவிய ரீதியில் கணிதத் துறையில் முதலாம் இடத்தையும், இஸ்ஹிரா பெர்னாண்டோ விஞ்ஞானத்தில் முதலாம் இடத்தையும் பெற்றுள்ளனர். கடந்த வருடம் ICT இல் உலகப் பரிசை வென்ற நவிந்து சமரக்கொடி இந்தமுறை ஆங்கில மொழியிலும் வர்த்தகத்திலும் மேலும் இரண்டு உலகப் பரிசுகளை வென்றுள்ளார். மனித உயிரியலில் உலகின் முதலாவது பெறுபேறுகளை ராஜித விக்கிரமவும், பிரவீன் முத்துக்குமாரன, மிஹிந்தா பஸ்நாயக்க ஆகிய இருவரும் சிங்களத்தில் முதலாம் இடத்தையும, சத்யா பெரேரா வியாபாரத் தொடர்பாடலிலும் தர்ஷன தும்போவிலகே உயர்தரக் கணக்கியலிலும் உலகப் பரிசுகளை வென்றுள்ளனர்.

இவ்வருடத்தின் சாதனைகளில் பிரதானமாகப் பல பாடங்களில் 100வீத சித்தியையும், ஏனையவற்றில் கிட்டத்தட்ட 100வீத சித்தியையும் குறிப்பிடலாம்.

## GCSE சர்வதேச விருதுகள்

கீழ்ப்பிரிவு, இரண்டாம் நிலை உலகப் பரிசு வெற்றியாளர்கள்




பவுடர் கோட்டட்
ரோலிங்ஸ் சட்டர்களும், ஸ்லோட்டட் அங்கிள்சும்




சிறந்த தரத்தில் பெற்றுக்கொள்ள

Nafis Industries (Pvt) Ltd.
26, Old kesbewa Road, Delkanda, Nugegoda.
Jaffna: 0775890125, 0755279488, 021 2240221




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரத்தத்தைச் சுத்தப்படுத்தும் காளான்



காளான் மழைக் காலங்களில் மக்கிப்போன பொருள்களின் மீது வளரும் ஒருவகை பூஞ்சையினமாகும். இயற்கையாய் வளரும் காளான்களில் சில விஷமுள்ளதாகவும், சில விஷமற்றதாகவும் வளரும். விஷக் காளான்கள் துர்நாற்றம் வீசக் கூடியதாகவும், அதிக வண்ண முடையதாகவும் இருக்கும்.

காளான் வளர்ப்பு சிறந்த வருவாய் ஈட்டித்தரும் எளிய தொழிலாக உள்ளது. இதனை பல இடங்களில் குடிசைத் தொழிலாக மேற்கொண்டு வருகின்றனர். காளான் மிகுந்த சுவையுள்ளது. மிகுந்த சத்துகள் கொண்டதாகவும் இருப்பதோடு மிகுந்த மருத்துவப் பயன் கொண்டதாக உள்ளது.

காளான் இதயத்தைக் காக்கும் அற்புத உணவாகும். காளான் இரத்தத்தில் கலந்துள்ள அதிகப்படியான கொழுப்பைக் கரைத்து இரத்தத்தைச் சுத்தப்படுத்தும் தன்மை கொண்டது. இதனால் உயர் இரத்த அழுத்தம் மற்றும் இரத்த நாளங்களின் உட்பரப்பில் உண்டாகும் கொழுப்பு அடைப்பையும் தடுக்கிறது.

காளானில் உள்ள லென்டைசின், எரிடினைன் என்ற வேதிப் பொருள்கள் இரத்தத்தில் கலந்துள்ள ட்ரை கிளிசரைடு பாஸ்போலிட் போன்றவற்றை வெகுவாகக் குறைக்கிறது.

இதில் எரிடினைன் கொழுப்புப் பொருள்களை எந்த வித பாதிப்பும் இல்லாமல் இரத்தத்தில் இருந்து வெளியேற்றி பிற திசுக்களுக்கு அனுப்பி உடலை சமன் செய்கிறது.

இவ்வாறு உடலில் அதிகம் தேவையில்லாமல் சேரும் கொழுப்பு கட்டுப்படுகிறது. இதனால் இரத்தம் சுத்தமடைவதுடன் இதயம் பலப்பட்டு நன்கு சீராக செயல்படுகிறது. இதயத்தை பாதுகாப்பதில் காளானின் பங்கு அதிகம்.

பொதுவாக உயர் இரத்த அழுத்தம் ஏற்படும் போது உட்புறச் செல்களில் பொட்டாசியத்தின் அளவு குறையும். வெளிப்புறச் செல்களில் உள்ள சோடியம், உட்புறமுள்ள பொட்டாசியத்திற்கு சமமாக இருக்கும்.

இரத்த அழுத்தத்தின் போது வெளிப்புறத்தில் சோடியம் அதிகரிப்பதால் சமநிலை மாறி உட்புறத்தில் பொட்டாசியத்தின் அளவு குறைகிறது. இதனால் இதயத்தின் செயல்பாடு மாறிவிடுகிறது.

இத்தகைய நிலையைச் சரிசெய்ய பொட்டாசியம் சத்து தேவை. அவை உணவுப்பொருள்களின் மூலம் கிடைப்பது சாலச் சிறந்தது. அந்த வகையில் பொட்டாசியம் சத்து அதிகம் உள்ள உணவு காளான்தான். 100 கிராம் காளானில் பொட்டாசியம் சத்து 44% மி.கி உள்ளது. சோடியம் 9 மி.கி உள்ளது. எனவே இதயத்தைக் காக்க சிறந்த உணவாக காளான் உள்ளது.

மேலும் காளானில் தாமிரச்சத்து உள்ளதாகவும் கண்டறியப்பட்டுள்ளது. தாமிரச்சத்து இரத்த நாளங்களில் ஏற்படும் பாதிப்பை சீர் செய்யும். காளான் மூட்டு வாதம் உடையவர்களுக்கு சிறந்த நிவாரணியாகும். மலட்டுத் தன்மை, பெண்களுக்கு உண்டாகும் கருப்பை நோய்கள் போன்றவற்றைக் குணப்படுத்துகிறது.

தினமும் காளான் சூப் அருந்துவதால் பெண்களுக்கு உண்டாகும் மார்பகப் புற்றுநோய் தடுக்கப் படுவதாக காளான் பற்றிய சமீபத்திய ஆராய்ச்சியில் கண்டுபிடித்துள்ளனர். 100 கிராம் காளானில் 35 சதவீதம் புரதச் சத்து உள்ளது.

மேலும் உடல் வளர்ச்சிக்குத் தேவையான அமினோ அமிலங்கள் உள்ளதால், குழந்தைகளின் உடல் வளர்ச்சிக்கு சிறந்த ஊட்ட சத்தாக அமைகிறது. எளிதில் ஜீரணமாகும் தன்மை கொண்டது.

கடும் காய்ச்சலால் பாதிக்கப்பட்டு உடல் இளைத்தவர்கள் தினமும் காளான் சூப் அருந்தி வந்தால் விரைவில் உடல் தேறும்.

காளானை முட்டைகோஸ், பச்சைப் பட்டாணியுடன் சேர்த்து சமைத்து அருந்தி வந்தால் வயிற்றுப் புண் குணமாகும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மிகப் பெரிய சர்வதேச நிதியின் சக்தி

ஒறிக்ஸ் குழும நிறுவனமானது உலகிலுள்ள பாரிய குத்தகைக் கம்பனியும் ஜப்பானின் இரண்டாவது பாரிய நிதிச் சேவை வழங்குனருமான ஜப்பான் ஒறிக்ஸ் கோர்ப்பரேஷனின் பக்கபலத்துடனேயே இயங்குகின்றது. அதுவே எங்கள் பலமும் சக்தியும் ஆகும்.

சிரேஷ்ட பிரஜைகளின் 12 மாத நிலையான வைப்புகளுக்கு +17.5% வட்டி
(வ.மொ.வ.வீ. 17.5%)

லங்கா ஒறிக்ஸ் பினான்ஸ்
(ஒரு LOLC குழுமக் கம்பனி)

லங்கா ஒறிக்ஸ் பினான்ஸ் பீ.எல்.சி
இல. 100/1 ஸ்ரீ ஜயவர்தனபுர மாவத்தை, ராஜகிரிய.
தொலைபேசி: 5880880, தொலைநகல்: 2865606
மின்னஞ்சல்: lofin@lankaorix.com
இணையத்தளம்: www.lankaorix.com

துரித அழைப்பு
0773815602


# ஏலக்காய் உடலுக்கு எவ்வளவோ நல்லது



சமையலில் வாசனைக்காக அனைத்து உணவுகளிலும் பயன்படுத்தும் ஒரு பொருள்தான் ஏலக்காய். அதிலும் இந்த ஏலக்காய் இந்திய உணவுகளிலேயே அதிகமாக பயன்படுத்தப்படும். சொல்லப்போனால், அந்த பொருள் பயன்படுத்தாத உணவுகளே இல்லை என்றே கூறலாம். மேலும் சிலர் அந்த ஏலக்காய் பிடிக்காது என்பதற்காக அதனை சேர்க்காமல் இருப்பர். ஏனெனில் மசாலா பொருளான ஏலக்காயை உணவில் சேர்ப்பதால் என்ன பயன் என்பது அவர்களுக்கு தெரியவில்லை மற்றும் பலருக்கும் தெரியாது. ஆகவே அதன் உண்மையான மருத்துவ குணம் என்னவென்று சற்று படித்து தெரிந்து கொள்ளுங்கள்.

★ ஏலக்காய் ஒரு மசாலாப் பொருள் என்பதால், அதை உணவில் சேர்க்கும் போது உடலில் இருக்கும் வயிற்றுத் தொல்லைகள் போன்றவற்றை சரி செய்யும். மேலும் உடலில் செரிமானமும் நன்கு நடைபெறும்.

★ ஆஸ்துமாவால் பாதிக்கப்பட்டவர்கள் அல்லது மூச்சுக் குழாயில் பிரச்சனை இருப்பவர்கள் அதனை சாப்பிட்டால் சரியாகிவிடும். அதிலும் ஏலக்காயை தேனுடன் கலந்து சாப்பிட்டால் தொண்டை வலி, இருமல் போன்றவை குணமாகும்.

★ ஏலக்காயின் முக்கியமான பயன் என்னவென்றால், சூரிய வெப்பத்தால், உடலில் வெப்பம் அதிகம் ஏற்படாமல் பார்த்துக் கொள்ளும். மேலும் பக்கவாதம் வராது. அதிலும் வெளியே செல்லும் போது ஏலக்காயை வாயில் போட்டு மென்று சென்றால், வெப்ப அலைகள் உடலை தாக்காமல் பார்த்துக் கொள்ளும்.

★ இந்தியாவில் சில இடங்களில் ஏலக்காய் பொடி மற்றும் சந்தனப் பொடியை பேஸ்ட் போல் செய்து, தலை வலிக்கும் போது தடவுவார்கள். மேலும் சிலர் குடிக்கும் டீயில் ஏலக்காய் சேர்த்து கொதிக்க வைத்து குடிப்பார்கள். இதனாலும் தலை வலி குறைந்துவிடும்.

★ ஆயுர்வேத கொள்கையின் படி, ஏலக்காய் உடலில் உள்ள மூன்று தோஷங்களான வாதம், பித்தம், கபம் போன்றவற்றிற்கு சிறந்தது. இவை உடலில் இந்த மூன்றையும் சமநிலையில் வைத்து, உடலை ஆரோக்கியமாக வைக்கிறது என்று சொல்லப்படுகிறது. ஆகவே இதனை உணவுடன் சேர்த்தால் நன்கு ஆரோக்கியமாக வாழலாம்.

மேலும் அதனை உண்பதால், நல்ல குரல் வளத்தையும் பெற முடியும். ஆகவே இனிமேலாவது ஏலக்காயை உணவில் சேர்த்துக் கொள்ளுங்கள். ஆரோக்கியத்துடன் வாழலாம்.


# சம்பத் வங்கியிலிருந்து 12 மாத நிலையான வைப்புகளுக்கு

அதி உயர் நம்பிக்கையானதும் பாதுகாப்புமான

15.5%

அதி உயர் வருடாந்த வட்டி

A.E.R- 15.5%

www.sampath.lk சம்பத் வங்கி விபரங்களுக்கு 0112 30 30 50

சம்பத் வங்கி
SampathBank



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன் விளம்பர தொடர்புகளுக்கு
☎ 0215671111
advt@uthayan.com









உலகின் மிக அரிதாகக் காணப்படும் கோடுகள் போடப்பட்ட முயல் இந்தோனேஷியா மழைக்காட்டில் உள்ளன.

இந்த முயல் இனம் கடந்த 35 வருட காலத்தில் மூன்று முறையே அவதானிக்கப்பட்டது. 1972 ஆம் ஆண்டு விஞ்ஞானி ஒருவர் இந்த முயலை கண்ட பின்னர் 2000 ஆம் ஆண்டில்தான் இறுதியாக புகைப்படம் எடுக்கப்பட்டது. அழிவின் விளிம்பில் இருக்கும் இந்த முயல் இனம் சுமத்திரா காட்டில் மாத்திரம் காணப்படுகின்றது.




## 31ம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



மண்ணில் 24 08 1924 — விண்ணில் 16 11 2012

பலாலி மத்தியைப் பிறப்பிடமாகவும்
யாழ். வண்ணார்பண்ணையை வசிப்பிடமாகவும் கொண்ட


**அமரர் காசிப்பிள்ளை செல்லையா (வாத்தியார்)**

எமது அன்புத் தந்தையாரின் மரணச் செய்தி அறிந்து ஓடோடி நேரில் வந்து ஆறுதல் கூறித் தேற்றிய உறவினர்கள், அயலவர்கள், நண்பர்கள் அனைவருக்கும் மற்றும் வெளிநாட்டில் இருந்தும் உள்ளூரில் இருந்தும் தந்தி தொலைபேசி மூலம் ஆறுதல் கூறியவர்களுக்கும் மலர்வளையம் வைத்தவர்களுக்கும், மாலைசூட்டி அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும், மரணச்சடங்கில் சகல வழிகளிலும் உதவி புரிந்த அனைவருக்கும் எமது இதயபூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம். **இன்று (16-12-2012) ஞாயிற்றுக்கிழமை** மு.ப 11.30 மணிமுதல் பகல் 2.30 மணிவரை கொழும்பு 13, விவேகானந்தா மேடு இல. 26ல் அமைந்துள்ள **கமலா மோடி மண்டபத்தில்** நடைபெறும் அன்னாரின் ஆத்ம சாந்திப்பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

Dr. செ. செந்தில்குமரன்
தொ.பே.இல. 0777-777583
0112-520101

மனைவி, பிள்ளைகள்
மருமக்கள், பேரப்பிள்ளைகள்
இல. 538/12B 3/7,
அளுத்மாவத்தை வீதி, கொழும்பு-15.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**இந்த பண்டிகைக்காலத்தில் இலட்சக்கணக்கான பணம் உங்களுக்கு திருப்பி தரப்படும்.**

உலகளவில் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஜப்பான் தொழில்நுட்பத்திலான HONDA Activa. HONDA Dio, HERO HONDA Pleasure இனை கொள்வனவு செய்து நீங்களும் "ஸ்கூட்டர் கேஷ் பேக்" சீட்டிழுப்பில் கலந்து கொள்ளுங்கள்.

**மாபெரும் இறுதிப்போட்டி வெற்றியாளருக்கு 1 மில்லியன் ரூபா**

**20 வெற்றியாளர்கள் 2 இலட்சம் வீதம்**

நீங்கள் செய்ய வேண்டியது ஸ்கூட்டரை கொள்வனவு செய்யும்போது கிடைக்கும் கூப்பனை நிரப்பி 011 2698150 என்ற இலக்கத்துக்கு ஃபெக்ஸ் செய்யவும்.

*conditions apply

Activa Rs.194,196+Vat | Dio Rs.187,054 +Vat | Pleasure Rs.174,018 +Vat

**இந்த சலுகை 2012 டிசெம்பர் மாதம் 10ம் திகதி முதல் 2013 ஜனவரி 31ம் திகதி வரை மாத்திரமே | உடன் அழைப்பு 0777 88 55 44**

HONDA

மோட்டார்.(தனியார்) நிறுவனம்.

பிரதான காரியாலயம்: 7/18/7, மருதானை வீதி, கொழும்பு 10. தொ: 011-7607200

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

☎ 0215671111
advt@uthayan.com
உதயன் விளம்பர தொடர்புகளுக்கு